சித்தர்கள் காட்டும் வாழ்வியல் கல்வி
திருமூலர் ஒரு சிறப்பு நோக்கு

இந்த ஆய்வேடு,
சென்னைப் பல்கலைக்கழகக் கல்வியியல் துறையின்
முனைவர் பட்டத்திற்காகச் சமர்ப்பிக்கப்படுகிறது

ஆய்வாளர்
இ.கோமதிநாயகம், எம்.ஏ., எம்.எட்.

நெறியாளர்
முனைவர் து. குமரன், எம்.ஏ., எம்.எட்., பிஎச்.டி.,
பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர்

கல்வியியல் துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை – 600 005
ஏப்ரல் 2005

மேற்பார்வையாளர் சான்றிதழ்

முனைவர் து. குமரன், எம்.ஏ. (பொருளியல்), எம்.ஏ. (உளவியல்)
எம்.ஏ. (சமூகவியல்), எம்.எட்., பிஎச்.டி., பி.ஜி.டி.சி.ஏ.,
பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர்,
கல்வியியல் துறை,
சென்னைப்பல்கலைக்கழகம்,
சென்னை – 600 005.

“சித்தர்கள் காட்டும் வாழ்வியல் கல்வி திருமூலர் ஒரு சிறப்பு நோக்கு” என்னும் தலைப்பில், **இ. கோமதிநாயகம்** வழங்கும் இந்த ஆய்வேடு, சென்னைப் பல்கலைக்கழகக் கல்வியியல் துறையில், பிஎச்.டி. பட்டத்திற்காக, பகுதிநேர ஆய்வாளராக என் மேற்பார்வையில் ஆய்வு மேற்கொண்டு உருவாக்கப்பெற்றது எனச் சான்றளிக்கப் படுகிறது. மேலும், இந்த ஆய்வேடு, இதற்குமுன் சென்னைப் பல்கலைக்கழகத்திலோ, வேறு பல்கலைக்கழகத்திலோ, வேறு எந்தப் பட்டத்திற்கும் சமர்ப்பிக்கப் பெறவில்லை எனவும் சான்றளிக்கப்படுகிறது.

29.04.2005

மேற்பார்வை மற்றும் நெறியாளர்

Dr. D. KUMARAN, M.A., M.Ed., Ph.D.,
PROFESSOR AND HEAD,
DEPARTMENT OF EDUCATION,
UNIVERSITY OF MADRAS
CHENNAI-600005.

ஆய்வாளர் உறுதிமொழி

இ. கோமதிநாயகம், எம்.ஏ., எம்.எட்.
ஆய்வாளர்,
கல்வியியல் துறை,
சென்னைப் பல்கலைக்கழகம்,
சென்னை – 600 005.

"சித்தர்கள் காட்டும் வாழ்வியல் கல்வி திருமூலர் ஒரு சிறப்பு நோக்கு" என்னும் தலைப்பில் சென்னைப் பல்கலைக்கழகத்தின் கல்வியியல் துறையில், பிஎச்.டி., பட்டத்திற்காக, இந்த ஆய்வேடு சமர்ப்பிக்கப்பெறுகின்றது.

இந்த ஆய்வேடு சென்னைப் பல்கலைக்கழகக் கல்வியியல் துறையில், பகுதிநேர ஆய்வாளராக இருந்து, பேராசிரியர் மற்றும் கல்வியியல் துறைத்தலைவர் முனைவர் து. **குமரன்,** எம்.ஏ. (பொருளியல்), எம்.ஏ. (உளவியல்), எம்.ஏ. (சமூகவியல்), எம்.எட்., பிஎச்.டி., பி.ஜி.டி.சி.ஏ. அவர்களின் மேற்பார்வையில் என் சொந்த முயற்சியில் உருவானதாகும். மேலும் இந்த ஆய்வேடு, இதற்குமுன் சென்னைப் பல்கலைக்கழகத்திலோ, வேறு பல்கலைக்கழகத்திலோ எந்த ஒரு பட்டத்திற்கும் சமர்ப்பிக்கப்பெறவில்லை எனவும் உறுதியளிக்கிறேன்.

ஆய்வாளர்

நன்றியுரை

"சித்தர்கள் காட்டும் வாழ்வியல் கல்வி திருமூலர் ஒரு சிறப்பு நோக்கு" என்னும் தலைப்பில் முனைவர் (பிஎச்.டி) பட்டத்திற்கு ஆய்வு செய்திட நான் முனைந்தபொழுது, அக்கருத்தை வரவேற்றுக் கருத்தூட்டம் நல்கி, முறையாகப் பதிவு செய்யத் தூண்டி, என்னைத் தம்முடைய ஆய்வாளராக ஏற்று நான் ஆய்வு தொடங்கிய காலந்தொட்டு, ஒவ்வொரு நிலையிலும் உற்றுநோக்கி நெறிப்படுத்தி நல்வழிகாட்டியவரும், இந்த ஆய்வின் மேற்பார்வையாளரும் ஓர் எடுத்துக்காட்டான ஆய்வு நெறியாளராகவும் விளங்கிடும் நயத்தகு நனிபண்பாளர், பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர் **முனைவர் து. குமரன்,** எம்.ஏ. (பொருளியல்), எம்.ஏ (உளவியல்), எம்.ஏ (சமூகவியல்), எம்.எட்., பிஎச்.டி., பி.ஜி.டி.சி.ஏ. அவர்களுக்கு என் நன்றி என்றென்றும் உரியதாகுக.

பகுதிநேர ஆய்வாளராக என்னை ஏற்று இணைத்துக்கொண்ட சென்னைப் பல்கலைக்கழகக் கல்வியியல் துறைக்கும், இந்தத் தலைப்பினையொட்டி, சீர்மிகு கருத்துகளையும் ஆய்வுச் சிந்தனைகளையும் தூண்டிய கல்வியியல் துறையின் முன்னாள் பேராசிரியப் பெருமக்கள் முனைவர் **பி.எஸ். பாலசுப்பிரமணியன்** அவர்களுக்கும், **முனைவர் டி. இராஜா கணேசன்** அவர்களுக்கும், **முனைவர் சிந்தியா பாண்டியன்** அவர்களுக்கும் என் உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பகுதிநேர ஆய்வாளராகப் பதிவு செய்திடவும் ஆய்வு மேற்கொள்ளவும் உளமொத்த இசைவினை வழங்கிய பள்ளிக்கல்வித்துறை இயக்குநர் அவர்கட்கும் உயர் அலுவலர்களுக்கும் பள்ளித் தலைமைக்கும் என் இனிய நன்றியை உரித்தாக்குகின்றேன்.

இந்த ஆய்வுக்குத் தேவையான நூல்கள் அளித்து என்னை ஊக்கப்படுத்திய **பேராசிரியர் திரு. வி. கணபதி** அவர்களுக்கும் என் நன்றி.

இந்த ஆய்வேடு செப்பமாக அமைய என்னுடன் ஓயாது உழைத்த கெழுதகை நண்பர் **திரு பூ. செயராமன்** அவர்கட்கும் என் உளங்கனிந்த நன்றி. மற்றுமுள அனைத்து நண்பர் குழாத்திற்கும் இருபால் ஆசிரியர் குழாத்திற்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆய்வு செய்யும் பொழுது நான் எடுத்துக் கொண்ட பல்வேறு பணியில் உறுதுணையாக நின்ற என் இல்லாள் **திருமதி உமாபார்வதி, மகன் பிரமநாதன்,** ஆகியோருக்கும் எனது நன்றி.

இ. கோமதிநாயகம்
ஆய்வாளர்

சுருக்க விளக்கம்

சுருக்கம்	விளக்கம்
அக.சி.	அகப்பேய்ச் சித்தர்.
அக.ஞா.	அகத்தியர் (ஞானப் பாடல்கள்).
அபி.சி.	அபிதான சிந்தாமணி.
அழு.சி.	அழுகண் சித்தர்.
இடை.சி.	இடைக்காட்டுச் சித்தர்.
உரை.	உரையாசிரியர்.
உரோ.சி.	உரோமமுனிச் சித்தர்.
உல. நீ.	உலகநீதி.
கஞ்.ம.சி.	கஞ்சமலைச் சித்தர்.
கடு.சி.	கடுவெளிச் சித்தர்.
கம்.ரா.	கம்பராமாயணம்.
கம். சட். மு.	கம்பளிச்சட்டை முனிச் சித்தர்.
கரு.சி.	கருவூர்ச் சித்தர்.
கல்.சி.	கல்லுளிச் சித்தர்.
கலி.தொ.	கலித்தொகை.
காக.பு.	காகபுசுண்டர்.
குத.சி.	குதம்பைச் சித்தர்.
கும.ச.	குமரேச சதகம்.
குறு.தொ.	குறுந்தொகை.
கொங்.சி.	கொங்கணச் சித்தர்.
கொ.வே.	கொன்றை வேந்தன்.
சட்.சி.	சட்டைமுனிச் சித்தர்.
சித். தரி.	சித்தாந்த தரிசனம்.
சிலம்பு.	சிலப்பதிகாரம்.
சிவ. ஞா. போ.	சிவஞானபோதம்.

சுருக்கம்	விளக்கம்
சிவ.வா.	சிவவாக்கியர்.
சுந்.சி.	சுந்தரானந்தச் சித்தர்.
தாயு.	தாயுமானவர்.
திரு.கு.	திருக்குறள்.
திரு.தே.	திருநாவுக்கரசர் தேவாரம்.
திரு.தொ.திரு.	திருத்தொண்டர் திருவந்தாதி.
திரு.மந்.	திருமந்திரம்.
திரு.மந்.சி.பா.	திருமந்திரச் சிறப்புப்பாயிரம்.
திரு.வா.	திருவாசகம்.
தொ.கா.	தொல்காப்பியம்.
நல். வ.	நல்வழி.
நற்.	நற்றிணை.
பட்.சி.	பட்டினத்துச் சித்தர்.
பதி.	பதிப்பாசிரியர்.
பாம்.பா.	பாம்பாட்டிச் சித்தர்.
பா.பா.	பாரதியார் பாடல்.
புறம்.	புறநானூறு.
பெரி. பு.	பெரியபுராணம்.
மணி.	மணிமேகலை.
மனு.மு.வா.	மனுமுறை கண்ட வாசகம்.
விளை.சி.	விளையாட்டுச் சித்தர்.
வெ.வே.	வெற்றி வேற்கை.

இயல் - ஒன்று

இயல் ஒன்று

ஆய்வின் வடிவம்

ஆய்வுத் தொடர்புடைய விளக்கம்

உலகத்தில் தோன்றிய உயிர்களுள் மக்கள் மட்டுமே வாழும் உயிர்கள். பிறவெல்லாம் இயங்கும் உயிர்கள். வாழப் பிறந்த மக்கள் வாழ்வாங்கு வாழ நெறிகள் பல உள்ளன. அத்தகு நெறிகளையே 'வாழும் நெறிகள்' அல்லது 'வாழ்வியல் கல்வி' எனச் சுட்டுகிறோம். இத்தகைய வாழ்வியல் கல்வியைச் சான்றோர் பலர் வகுத்துக் காட்டியுள்ளனர்.

வாழ்வியல் நெறிகளை வகுத்துரைத்தோருள் சித்தர்களும் சிறப்பிடம் பெறுகின்றனர். சித்தர்கள் மக்களாகப் பிறந்து, மக்கள் சக்தி மகத்தான சக்தி என மாநிலத்திற்கு அறிவுறுத்தி, மக்களின் மேம்பட்டவர்களாக வாழ்ந்தும் காட்டியவர்கள். இத்தகைய சித்தர்கள் காட்டும் வாழ்வியல் நெறிகள், மக்களாகப் பிறந்த நமக்குப் பேருதவியாக இருக்கும் என்ற மகத்தான குறிக்கோளின் அடிப்படையில் 'சித்தர்கள் காட்டும் வாழ்வியல் கல்வி திருமூலர் ஒரு சிறப்பு நோக்கு' என்னும் தலைப்பில் ஆய்வு மேற்கொள்ளப்பெறுகிறது.

ஆய்வின் தேவை

இன்றைய தனிமனிதரும் சமுதாயமும் வாழ்க்கைப் போராட்டத்தில் சிக்கித் தவிக்கின்றனர். பொருள் தேடும் போட்டியில் அறவுணர்வுகள் கைவிடப்பட்டுப் போட்டிகளால், பொறாமை கொண்டு பொய்யும் ஏமாற்றும் மலிவாகப் பொங்கும் சூழல் உள்ளது. பொதுநலம் புறக்கணிக்கப்பட்டு, தன்னலம் தலைதூக்கி உள்ளது. அறச் செயல்களைக்கூட வணிக

நோக்கில் காணும் அறவிலை வணிகர்கள் பெருகியுள்ளனர். உடல் நலத்தையும் உள நலத்தையும் கெடுத்துக் கொள்ளும் சிந்தனை, சொல், செயல் வெளிப்பாட்டுச் சமூகச்சூழல் பெருகி உள்ளது.

ஆன்மிகம்

பல தெய்வ வழிபாடு செய்தல், அதனால் பகையை வளர்த்துக் கொள்ளுதல், மூடநம்பிக்கைகளைக் கைக்கொள்ளுதல், போலிச் சடங்குகள் பால் பற்றுக் கொள்ளுதல், தெய்வத்தின் பெயரால் உயிர்ப் பலியிடுதல், ஆடம்பரமாகப் பூசைகளையும் விழாக்களையும் மேற்கொள்ளுதல், சமயத்தின் பெயரால் சமுதாயக் கட்டுப்பாடுகளை ஏற்படுத்துதல், மக்களின் அறியாமையைப் பயன்படுத்திப் போலித்தனமான சின்னங்களையும் வேடங்களையும் காட்டி மயக்குதல், உருவ வழிபாடு மற்றும் பொருந்தாத விரதங்கள் – பொய்யான சோதிடங்கள் முதலானவற்றை ஏற்றுப் பேணுதல், ஆன்மிக வழிநின்று அருளைப் பெருக்குவதற்குப் பதிலாகப் பொருள்தேடும் புன்மைப் போக்குகள் முதலானவை தலைதூக்க ஆரம்பித்துள்ளன.

தனிமனித வாழ்க்கை நெறிப் பிறழ்வுகள்

மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை முதலான பல ஆசைகளுக்கு ஆட்பட்டுத் துன்புறுதலும், புகை, கஞ்சா, மது போன்ற தீய பழக்கங்களை மேற்கொண்டு உடல்நலத்தைக் கெடுத்துக் கொள்ளுதலும், அருந்துதலிலும் பொருந்துதலிலும் அளவுக்கு அதிகமாக ஈடுபட்டு நோய் நொடிகளைத் தேடிக் கொள்ளுதலும், நோய் வந்துற்றபின் போலியான மருத்துவர்களை நம்பி கவர்ச்சியான மருந்துகளைப் போற்றி இறப்பைத் தழுவுதலும், பொய், களவு, வஞ்சம், ஏமாற்று, அடுத்துக் கெடுத்தல், புறங்கூறல், பிறன்மனை இச்சித்தல், பொருந்தாக் காமம் முதலான தனிமனித ஒழுக்கக்கேடுகளால் மனித மாண்பைத் தாழ்வுறச் செய்தலும், தன்னல விழைவு காரணமாகப் பொதுநலம் பேணாமையும், மனித நேயத்தை வளர்க்காமையும், மொழி, இனம், சாதி, செய்தொழில், சமயம் காரணமாக

தனிமனித வேற்றுமைகளை வளர்த்துக் கொள்ளுதலும், அதனால் போரும் பூசலும் மேற்கொள்ளுதலும் இன்னபிற குறைபாடுகளாலும் தனிமனித வாழ்க்கை தடுமாறிக் கொண்டிருக்கிறது.

சமுதாய வாழ்க்கைப் பிறழ்வுகள்

தனிமனிதர் பலர் சேர்ந்ததுதான் ஒரு குடும்பம். பல குடும்பத்தின் கூட்டமைப்புதான் ஒரு சமுதாயம். எனவே, தனிமனிதரின் நடத்தைக் கோலங்கள் சமுதாயத்திற்கும் பொருந்தும். ஆயினும் ஒரு தவறான பழக்கமோ, நம்பிக்கையோ ஒரு சமுதாயத்தின் வலிமையால் நடைமுறைப்படுத்தப்பட்டு, அவையே வழக்கமாகவும் மரபாகவும் மாறிவிடும். அத்தகைய சமுதாயச் சீர்கேடுகள் பல இன்று நிலவி வருகின்றன. அவை, தெய்வம் பலப்பல சொல்லிப் பகைத்தீயை வளர்த்தலும், சமயங்கள் கூறுகின்ற உண்மையான தத்துவங்களை அறியாமலிருத்தலும், சடங்குகளும் சம்பிரதாயங்களுமே சமயநெறி எனப் போற்றுதலும், மதத் தலைவர்களின் பெயராலும் வழிபாட்டுத் தலங்களின் பெயராலும் சமயச் சின்னங்களின் பெயராலும் பிணக்குகளை ஏற்படுத்திக்கொண்டு போராடுதலும், சமயங்களின் பெயரால் ஆடம்பரமான விழாக்கள், விருந்துகள், கேளிக்கை நிகழ்ச்சிகள் ஆகியவற்றை நிகழ்த்துதலும் அவற்றையும் பொருளீட்டும் ஒரு வணிக வாய்ப்பாகக் கருதிச் செயல்படுதலும், நவீனம் என்ற பெயரில் உணவுநெறி, உடலோம்பும்நெறி, விருந்தோம்பும் பண்பு, சுற்றம் தழுவுதல், சகிப்புத் தன்மை முதலான நம் பாரம்பரிய பண்பாட்டிற்கே உலைவைத்தலும், கொல்லா நெறியும் பொய் சொல்லா நெறியும் மனித சமுதாயத்திற்கு மட்டுமே உரியன என்பதை மறந்து மயங்குதலும், வாய்மையும் தூய்மையும் கொண்ட தொண்டுநெறியே தூயநெறி என்னும் மெய்ம்மையைப் புறந்தள்ளிப் பொதுத்தொண்டு என்ற பெயரில் தமது ஆசாபாசங்களுக்கு வழி வகுத்துக் கொள்ளுதலும், நீதி, நேர்மை, நியாயம் முதலான அறவுணர்வுகளுக்கு உரிய மாண்பினை

நிலைகுலையச் செய்தலும், ஆணாதிக்க உணர்வால் பெண்ணடிமை பேணல் முதலானவை சமுதாய வாழ்க்கைப் பிறழ்வுகளாகக் காணக்கிடக்கின்றன.

இத்தகைய வாழ்க்கை நெறிப் பிறழ்வுகள் இல்லாமல், வாழ வேண்டிய முறைப்படி வாழ்ந்து வளம்பல பெற்றிட, வாழ்வியல் கல்வியைப் புகட்டும் இலக்கியங்கள் பல தமிழ் மொழியில் உள்ளன. அவற்றுள் சித்தர்களும் சித்தர்களுள் முதன்மையானவருமான திருமூலரும் அருளியுள்ள பாடல்கள் வழங்கிடும் வாழ்வியல் கல்வி, வருங்காலச் சமுதாயத்திற்கு நல்வழிகாட்டும். ஆதலின், 'சித்தர்கள் காட்டும் வாழ்வியல் கல்வி – திருமூலர் ஒரு சிறப்பு நோக்கு' என்னும் இந்த ஆய்வு மேற்கொள்ளப் பெறுகிறது.

ஆய்வின் பொதுநோக்கங்கள்

1. சாதிவெறி, சமயவெறி, இனவெறி, மொழிவெறிகளினால் இவ்வுலகில் ஏற்படும் பூசல்கள் நீங்கி, ஒருமையுணர்வு தோன்றச் சித்தர்கள் கூறுவனவற்றை விளக்குதல்.

2. 'மக்களிடையே பிரிவினை பேசுதல், உண்மைக்கும் இயற்கைக்கும் மாறானது' என்ற சித்தர்கள் தத்துவம் நன்மை பயக்கும் என எடுத்துக் காட்டுதல்.

3. மத வெறுப்போ, அளவு கடந்த மத வெறியோ இல்லாது, மத சமரசத்தையே வலியுறுத்தும் சித்தர்கள் கோட்பாடு இன்றைய உலகிற்குப் பெரிதும் தேவை என்பதை விளக்குதல்.

4. 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்', 'மனித குலம் மனித இனம் ஒன்றே' என்னும் உயரிய கோட்பாடுகள் உலகில் தழைக்கச் சித்தர்கள் காட்டும் வாழ்வியற் கல்வி இளைய தலைமுறைகட்குப் பெரிதும் தேவை என்பதை வலியுறுத்துதல்.

5. தற்கால மனிதன் தன்னைப் பண்படுத்திக் கொள்ளப் பெரிதும் துணை செய்வன, சித்தர் கல்விமுறைகள் என்பதனை இளந்தலை முறையினருக்கு உணர்த்துதல்.

6. உடம்பை வளர்க்கும் உபாயங்களாகச் சித்தர் கல்வி கூறுதலை விளக்குதல்.

7. வடமொழி – தென்மொழிச் சண்டையை நீக்கச் சித்தர் கல்வி உதவும் என்பதை உணர்த்துதல்.

8. இக்கால மனிதர், வாழ்வியல் கோட்பாடுகளை வகுத்துக்கொள்ளப் பெரிதும் துணை செய்வன சித்தர் கல்வி என்பதை எடுத்துக்காட்டுதல்.

9. உடலைக் காத்து உயிரை வளர்க்கும் உபாயங்களைச் சித்தர் கல்வி அறிய உதவும் என்பதை உணர்த்துதல்.

10. சித்தர்கள் மனிதராய்ப் பிறந்து, மனித நிலையிலிருந்தும் மேம்பட்டவர்கள் என்பதைத் தெரிவித்தல்.

11. சித்தர்கள் மருத்துவ அறிஞர்களாகவும் ஆன்மிகப் புரட்சியாளர்களாகவும் சமுதாயச் சீர்திருத்தவாதிகளாகவும் விளங்கியவர்கள் என்பதை எடுத்துக்காட்டுதல்.

12. பொய், சூது, குடி, கொலை, விபச்சாரம் முதலான தீய ஒழுக்கங்களை விடுத்து, நல்லொழுக்கம் பேண வேண்டுமெனக் குரல் கொடுத்த சித்தர்நெறியை விளக்குதல்.

13. சித்தர் கொள்கைகளும் தத்துவங்களும் நாட்டில் பரவினால், மக்களுக்குள் அன்பும் ஒற்றுமையும் ஓங்கும் என வலியுறுத்தல்.

14. சித்தர்கள் மனித ஆற்றலின் மகத்துவத்தை, மன்பதைக்கு உணர்த்தியவர்கள் என்பதை விளக்குதல்.

15. மனிதனின் அடுத்த பரிணாம வளர்ச்சியைக் கண்டவர்கள் சித்தர்கள் என்பதை எடுத்துக்காட்டுதல்.

16. என் இனம், என் மொழி, என் மதம், என் நாடு என்ற குறுகிய கண்ணோட்டமின்றி, மனித குலம் முழுமைக்கும் நன்மை தரும் கருத்துகளைத் தந்தவர்கள் சித்தர்கள் என்பதை விளக்குதல்.

17. சித்தர்கள் தாம் அறிந்திருந்த சாகாக் கலை, உடல் அழியாநிலை, அண்ட வெளியில் சஞ்சரித்தல், இருந்த இடத்திலிருந்தே உலகத்தின் எந்த மூலையில் எது நடந்தாலும் அறிந்து கொள்ளும் ஆற்றல் முதலான சித்த ஆற்றலையும் அவற்றுக்கான பயிற்சியையும் இக்கால இளம் தலைமுறையினருக்கு விளக்குதல்.

18. உடலையும் உள்ளத்தையும் பேணும் நெறிகளுள், சுயகட்டுப்பாடே சிறந்த நெறி என்னும் சித்தர் கல்வியை யாவருக்கும் எடுத்துக் காட்டுதல்.

19. சித்தர்கள் பின்பற்றிய உடலோம்பும் முறைகளைக் கையாண்டால் உடலை வச்சிரம்போல் ஆக்கிக் கொள்ளலாம் என்பதை உணர்த்துதல்.

20. இந்தியநாடு பல்வகை மரபினரையும், இனத்தவரையும், மதத்தவரையும், மொழியினரையும் கொண்ட நாடு. எனினும் வேற்றுமையில் ஒற்றுமை என்னும் ஒருமைப்பாட்டு உணர்வோடு ஒன்றுபட்டு நிற்கின்றது. இதுபோன்ற நாடுகளில் சமய ஒற்றுமை, வகுப்பு ஒற்றுமை, இன ஒற்றுமை, மொழி ஒற்றுமை போன்றவை மிகவும் இன்றியமையாததாகின்றன. இந்நிலையில் சித்தர்கள் காட்டும் நெறிகள் எவ்வாறெல்லாம் உதவியாக இருக்க முடியும் என்பதை ஆய்ந்து அறிவுறுத்துதல்.

சிறப்பு நோக்கங்கள்

1. சித்தர்களுள் முதலாமவரும் முதன்மையானவரும் திருமூலர் ஆவார். ஆதலின் திருமூலர் காட்டும் வாழ்வியல் கல்வி சிறப்புடையது என விளக்குதல்.

2. திருமூலர், இல்வாழ்வில் கொள்ளத்தக்க நெறிகளையும் தள்ளத்தக்க செயல்களையும் எடுத்துக் கூறுவதால், அவருடைய நெறிகள் சிறப்புடையன என எடுத்துக்காட்டுதல்.

3. திருமூலர் இல்லற மேன்மையோடு துறவறச் சிறப்பையும் எடுத்துரைப்பதால் அக்கருத்துகளைச் சிறப்பாக எடுத்துரைத்தல்.

4. உலக இயக்கமும் மனித வாழ்க்கையும் ஒன்றோடு ஒன்று பின்னிப்பிணைந்துள்ள தன்மைகளை, திருமந்திரம் கூறுகிறது என்பதை விளக்குதல்.

5. பக்தர்கள், ஞானிகள், அரசர்கள், அந்தணர்கள், வணிகர்கள், வேளாளர்கள், ஆத்திகர், நாத்திகர் முதலான பல திறப்பட்டவருக்கும் நல்வழி காட்டுவதால் திருமந்திர வாழ்வியல் கல்வி சிறப்புப் பெறுகிறது என விளக்குதல்.

6. 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்', 'நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்', 'அன்பே சிவம்', 'நடமாடும் கோயில்களான மக்களுக்குச் செய்யும் தொண்டே, படமாடும் கோயிலான பரமனுக்கு உவப்பாகும்' என்பன போன்ற உலகப் பொதுநோக்குச் சிந்தனைகளைத் தந்தவர் திருமூலர் என்பதைப் பறைசாற்றுதல்.

7. படைப்பின் நோக்கம் பிறருக்கு உதவுதல், எளிய அறச்செயல்களை மேற்கொள்ளுதல் முதலான மனித நேயக் கருத்துகளைத் திருமூலர் வலியுறுத்துகிறார் என்பதை உணர்த்துதல்.

8. கொல்லாமை, புலால் மறுத்தல், அவா அறுத்தல், புறங்கூறாமை, வாய்மை பேணுதல் முதலான அறவுணர்வுகளைத் திருமூலர் கூறுமாறு விளக்குதல்.

9. இல்லறத்தான் விலக்குவதற்குரிய பரத்தையர் தொடர்பு, பிறன்மனை நயத்தல் ஆகியவற்றைத் திருமூலர் எவ்வாறு கண்டிக்கிறார் என்பதை யாவர்க்கும் விளங்கவைத்தல்.

10. 'அகத்தவம்' எனப் போற்றப்படும் அட்டாங்க யோகங்களையும் அவற்றின் பயன்கள், செய்முறைகள் ஆகியவற்றையும் முதன்முதலாகவும் சிறப்பாகவும் செந்தமிழில் கூறியவர் திருமூலர் என்பதைப் பறைசாற்றுதல்.

11. கேசரி யோகம், பரியங்க யோகம், அமுரி தாரணை, சந்திர யோகம், மந்திர யோகம் ஆகிய யோகங்கள் குறித்துத் திருமூலர் விளக்குமாறு எடுத்துரைத்தல்.

12. அட்டமா சித்திகள் பற்றியும் அவற்றை அடையும் மார்க்கங்கள் பற்றியும் திருமூலர் தருவனவற்றை இக்காலத்தவருக்கு எடுத்துக் கூறுதல்.

13. பிரம்மச்சரியம், கிரஹஸ்தம், வானப்பிரஸ்தம், துறவறம் என எந்நிலையில் இருப்போர்க்கும் ஏற்ற கருத்துகளைத் திருமூலர் கூறுமாறு எடுத்துரைத்தல்.

14. 'பிறவிக் கடலைக் கடக்க உதவிடும் பெரும் தெப்பம் திருமந்திரம்' என்பதை விளக்குதல்.

15. ஔவையாரின் கருத்தாகிய, 'திருக்குறள், நான்மறை, மூவர்தேவாரம், அகத்தியர் திரட்டு, மாணிக்கவாசகரின் திருக்கோவையார், திருவாசகம் ஆகியவற்றோடு ஒத்த சிறப்புடையது திருமந்திரம்' என்பதை மெய்ப்பித்தல்.

16. திருமந்திரம் வாழ்வியல் நூலாக மட்டுமல்லாமல் 'சிவமாய், சிவகதிக்கு வித்துமாய், அடியார்களுக்கு மேம்பட்ட பொருளுமாய் விளங்குகிறது' என்பதை மெய்ப்பித்தல்.

மேலும், இறைக் கோட்பாடு, உடலும் உடலோம்பலும், தனிமனித ஒழுகலாறுகள், சமுதாய ஒழுகலாறுகள் ஆகியவற்றைத் திருமூலர் கூறும் முறையில் விளக்குதல்.

இத்தகைய சிறந்த, வாழ்வியல் கல்வியை வடித்தெடுத்து வழங்குபவர் திருமூலர். இவை, இக்கால இளையோருக்கு வழிகாட்டுவன. ஆதலால், திருமூலர் காட்டும் வாழ்வியல் கல்வி, இந்த ஆய்வில் சிறப்பிடம் பெறுகின்றது.

ஆய்வு முறை

இந்த ஆய்வு, வரலாற்று அடிப்படையில் சித்தர்கள் வரலாறு மற்றும் சித்தர் பாடல்களையும், குறிப்பாக, திருமூலர் பற்றிக் கிடைக்கப்பெற்றுள்ள பிரதிகளையும், பிற படைப்புகளான உரை விளக்கங்களையும் துணையாகக் கொண்டு மேற்கொள்ளப்பெற்றுள்ளது.

ஆய்வு எல்லை

தமிழகச் சித்தர்கள் மற்றும் திருமூலர் காட்டும் வாழ்வியல் கல்விக் கருத்துகள் மட்டும் இந்த ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

ஆய்வு அறிக்கையின் வடிவமைப்பு

இயல் ஒன்று 'ஆய்வின் வடிவம்'. இதில் ஆய்வுத் தொடர்புடைய விளக்கம், ஆய்வின் தேவை, ஆய்வின் பொது நோக்கங்கள், ஆய்வின் சிறப்பு நோக்கங்கள், ஆய்வு முறை, ஆய்வு எல்லை, ஆய்வு அறிக்கையின் வடிவமைப்பு ஆகிய செய்திகள் இடம்பெற்றன.

இயல் இரண்டில் இந்த ஆய்வு சம்பந்தப்பட்ட சார்பு இலக்கியச் சுருக்கங்கள் **'சார்பு இலக்கியங்கள்'** என்ற தலைப்பில் தொகுத்து வழங்கப்பட்டுள்ளன.

இயல் மூன்றில் **வாழ்வியல் கல்வி என்றால் என்ன** என்பதைப் பற்றிய விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது.

இயல் நான்கில் '**சித்தர்கள் யார்?** எவர்?' என்பவை பற்றிய விளக்கமும், **சித்தர்கள் உலகில்** திருமூலரின் **தனிச்சிறப்பும், திருமந்திரம்** பற்றிய நூல்குறிப்பும் இடம் பெற்றுள்ளன.

இயல் ஐந்தில் '**சித்தர்கள் காட்டும்** வாழ்வியல் **கல்வி**' பற்றி விளக்கப்படுகிறது.

இயல் ஆறில் '**திருமூலர் காட்டும் வாழ்வியல் கல்வி**' பற்றிச் சிறப்பாக விளக்கப்படுகிறது.

இயல் ஏழில் **ஆய்வின் தொகுப்பும் ஆய்வின் முடிவுகளும் பயன்பாடுகளும்** எடுத்து இயம்பப்படுகின்றன.

ஆய்வறிக்கையின் இறுதிப் பகுதியாக நூற்பட்டியல் வழங்கப்பட்டுள்ளது.

இயல் - இரண்டு

இயல் இரண்டு

சார்பு இலக்கியங்கள்

'சித்தர்கள் காட்டும் வாழ்வியல் கல்வி – திருமூலர் ஒரு சிறப்பு நோக்கு' என்னும் இந்த ஆய்வுக்குள் புகுமுன், ஆய்வுக்கு உதவிய சார்பு இலக்கியங்களைப் பற்றிக் காண்பது இன்றியமையாததாகின்றது.

எண்பொருள வாகச் செலச்சொல்லித் தான்பிறர்வாய்
நுண்பொருள் காண்பது அறிவு (திரு. கு. 424)

என்னும் வள்ளுவப் பெருந்தகையின் வாக்குக்கு இணங்க, வாழ்வியல் கோட்பாடுகளை / நெறிகளை எந்தெந்த இலக்கியங்களிலிருந்து எடுத்து, வடித்து, தொகுத்து, யார்யார் வழங்கியுள்ளார்கள் என்பதைக் காண்பதும் இவ்வாய்வுக்குப் பெருந்துணையாகிறது.

இதிகாசங்கள், சங்க இலக்கியங்கள், காப்பியங்கள், புராண இலக்கியங்கள், பக்திப் பனுவல்கள், தற்கால இலக்கியங்கள் ஆகிய யாவற்றிலும் வாழ்வியல் சிந்தனை பற்றிய ஆய்வுகள் நிகழ்ந்துள்ளன. அவை பற்றியும், சித்தர்கள் பாடல்களிலும் திருமந்திரத்திலும் காணப்படுகின்ற வாழ்வியல் கோட்பாடுகளை / வாழ்க்கைக் கல்வியைப் பற்றிய ஆய்வு களையும், நூல்களையும் இப்பகுதியில் குறிப்பிடுவது ஆய்வாளரின் பெருங்கடமை யாகும்.

'வாழ்வியல்' என்பது ஒரு பொங்குமாகடல். அக்கடலிலிருந்து பொங்கி வழிந்து ஓடும் அருவி, சித்தர்கள் காட்டும் வாழ்வியல். அந்த அருவி வழிந்தோடிப் பெருகி வரும் ஆறு போன்றது திருமூலர் காட்டும் வாழ்வியல் நெறிகள்.

இராமநாதன் (1959) அவர்களால் தொகுத்து வழங்கப்பட்ட நூலில் பட்டினத்தார் பாடல்கள், பத்திரகிரியார் மெய்ஞ்ஞானப் புலம்பல், சிவவாக்கியர் பாடல்கள், பாம்பாட்டிச் சித்தர் பாடல், இடைக்காட்டுச் சித்தர் பாடல், அகப்பேய்ச் சித்தர் பாடல், குதம்பைச் சித்தர் பாடல், கடுவெளிச் சித்தர் பாடல், அழுகணிச் சித்தர் பாடல், கொங்கண நாயனார் வாலைக் கும்மி, பீருமுகம்மது ஞானரத்தினக் குறவஞ்சி, மதுரை வாலைசாமி ஞானக் கும்மி, சேஷயோகியார் ஞான ஏற்றம், கணபதிதாசர் நெஞ்சறி விளக்கம், அகஸ்தியர் ஞானம், திருவள்ளுவர் ஞானம், சட்டைமுனி ஞானம், திருமூல நாயனார் ஞானம், உரோமரிஷி ஞானம், சுப்பிரமணியர் ஞானம், வால்மீகர் சூத்திர ஞானம், நந்தீஸ்வரர் பூஜாவிதி, இராமதேவர் பூஜாவிதி, கருவூரார் பூஜாவிதி, கைலாயக் கம்பளிச் சட்டைமுனி நாயனார் ஞானப் பாடல்கள், காகபுசுண்டர் பாடல்கள், உபநிடதம், குறள், சூரியானந்தர் சூத்திரம், பூர்ணானந்தர் சிவயோக சாரம், இராமலிங்க சுவாமிகள் திருவருட்பாத் திரட்டு, ஞானசர நூல், சிவானந்த போதம், குருஞான சம்பந்த சுவாமிகள் சிவபோக சாரம், சொக்கநாதர் வெண்பா, அருணாசல குரு நிஜானந்த போதம், பட்டினத்தார் ஞானம், ஆகிய முப்பத்து ஐந்து தலைப்புகளில் சித்தர் பாடல்கள் தொகுத்தளிக்கப்படுகின்றன.

தேவையான பாடல்களுக்குச் சிறந்த அரும்பொருள் குறிப்பும் தரப்பட்டுள்ள இந்நூல், சித்தர் பாடல்களைப் படிப்போர்க்கும் படித்துத் துய்ப்போர்க்கும் ஆய்வோர்க்கும் சிறந்த நூலாகத் திகழ்கிறது.

'மனப்பிணி மருத்துவர்' என வருணிக்கப்படும் பட்டினத்தாரின் படைப்புகள் யாவும் முறையாகத் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. அதேபோல் பாம்பாட்டிச் சித்தர், இடைக்காட்டுச் சித்தர், காகபுசுண்டர் ஆகியோர் பாடல்கள் முழுமையாகத் தொகுக்கப்பட்டுள்ளன. இராமலிங்க சுவாமிகளுடைய திருவருட்பாத் திரட்டும் இந்நூலில் தரப்பட்டுள்ளது. பதினெண் சித்தர் பாடல்களையும் சித்தர்களாகக் கருதப்படுகின்றவர்களுடைய பாடல்களையும் ஒப்புநோக்கிக் காணவிழைவார்க்கும் இந்த நூல் ஓர் அரிய புதையலாக விளங்குகிறது.

திருமந்திரக் கட்டுரை திருவாவடுதுறை வெளியீடு (1962) என்னும் நூல், திருமந்திரம் காட்டும் வாழ்வியல் நெறியாகிய கர்ப்பக்கிரியை (கருத்தோற்றமும் வளர்ச்சியும்) என்பது பற்றி விளக்கியுரைக்கின்றது. ஆதலின் இப்பகுதி சார்பு நூல்களுள் ஒன்றாக எடுத்தாளப்படுகிறது.

கர்ப்பக்கிரியை என்னும் இத்தலைப்பு, திருமந்திரம் இரண்டாம் தந்திரத்தில் பதினான்காம் அதிகாரத்தது ஆகும்.

இக்கட்டுரை, கருப்பக் கால வரையறை, கருவறை வளர்ச்சி வேகம், கரு உருவாகும் காலம், கருவைக் காக்கும் முறை, உடல் வைத்தவாறு – உயிர் வைத்தவாறு, மடைவைத்த ஒன்பது வாய்தல் – ஆண்,பெண் கரு உருவாகும் விதம், அலியாகப் பிறக்கும் காரணம், குழந்தைகளின் ஆயுள் வரையறை, பிறக்கும் குழந்தை குறளாக, முடமாக, கூனாகப் பிறக்கும் காரணம் ஆகியவை பற்றித் திருமூலர் கூறுமாறு எடுத்துரைக்கின்றது.

குறைபாடுடைய குழந்தை பிறப்புக்கும் குழந்தைகளின் அங்க அமைப்புகளுக்கும் பெற்றோர் காரணமாவர் என்றும், எந்தெந்த அமைப்புக்குத் தாய் காரணம், எந்தெந்த அமைப்புக்குத் தந்தை காரணம், இருவரும் எதற்குக் காரணமானவர் என்றும் திருமந்திரம் கூறும் செய்திகளை இக்கட்டுரை விளக்குகின்றது.

மேலும், குழந்தை மந்தமாக, மூங்கையாக, பார்வைக் குறைபாடுடையதாகப் பிறக்கும் காரணங்களைத் திருமூலர் கூறுமாறு இக்கட்டுரை நூல் எடுத்துரைக்கின்றது.

இந்நூல் திருமூலரின் திருமந்திரப் பாடல்களை நன்கு விளக்குவதுடன், உரிய மேற்கோள்களுடன் தெளிவுரையும் தருகின்ற பயன்மிகு நூலாக உள்ளது.

சித்தர் பாடல்கள் பூம்புகார் பிரசுரம் (1975) என்னும் நூலில், குறிப்பிடப்படும் 32 சித்தர்களுள் வால்மீக சித்தர் என்பார், 'பதினெண்

சித்தர்களுக்குத் திறவுகோல்' என்று பாராட்டப்படுகிறார். இஃது இந்நூல் கூறும் புதிய செய்தியாகும்.

"புற இயற்கையையும் அக இயற்கையையும் ஒன்றாகக் கண்டு, உலகியல் கொள்கைக்கும் ஆன்மிகக் கொள்கைக்கும் பிணக்கு ஏற்படாமல், தவறான எண்ணத்தால் மாறுபாடும் வேறுபாடும் காணாமல், சீர்திருத்தம் செய்தவர்கள் சித்தர்களே."

"சித்தன் யோக நெறியிற் சென்று, ஆதாராதி முடிச்சுகளை யெல்லாம் சுழற்றி, அகண்டாகாரமான ஸஹஸ்ரார சிகரத்திலே, அருளம்மையோடு ஒன்றாய், ஆண்டவனோடு ஆண்டவனாய், ஸர்வ சித்திகளும் கைவரப் பெற்ற ஞான சித்தனாய், ஆனந்த நடராஜனைப் போல் அருட்செயல்கள் புரிந்து விளையாடுகிறான்; கண்ணனைப்போல் கருணா லீலைகள் செய்கிறான்."

மேற்காட்டிய செய்திகள் இந்தப் பதிப்பிலிருந்து சித்தர்களைப் பற்றி அறிந்து கொள்ளும் புதிய செய்திகளாகும்.

மேலும், இப்பதிப்பில் காரைச் சித்தர், தடங்கண் சித்தர் ஆகிய இரண்டு புரட்சிகரமான சித்தர்களின் பாடல்களையும் தொகுத்து வழங்கியுள்ளனர்.

இந்நூலின் பதிப்பாசிரியர், காரைச் சித்தரைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது, "அறிவிலே மட்டும் நம்பிக்கை கொள்ளாமல், உள்ளத்திலும் குருதியிலும் நம்பிக்கை கொண்ட காரைச் சித்தரின் பாடல்கள், மனத்தைக் கவர்வதற்குக் காரணம் கற்பனை அன்று. உண்மையின் உள்ளொளியே யாகும்" எனக் குறிப்பிடுகிறார்.

தடங்கண் சித்தரைப் பற்றிக் குறிப்பிடும்பொழுது, "மனத்தைப் புண்படுத்திக்கொண்டு சிந்திக்கின்ற தடங்கண் சித்தரின் பாடல்கள், மிக்க

அழுத்தமும் அழகும் கூடிய நெஞ்சப் புலம்பல்கள். உடல், உயிர், மனம் மூன்றையும் பேரின்பம், பேரொளி, பெருவலிமை, பெருவாழ்க்கை போற்றி ஐந்து தனிச் சிறப்புக்கு மாந்தன் தன்னையும், தம்மையும் மிஞ்சி மேல் எழ வேண்டும். ஐயம் தெளிந்து அறிவு கொளுத்தும் தடங்கண் சித்தருடன் நாம் என்று மனச் சான்றினை எழுப்பப் போகிறோம்'' என்ற பதிப்பாசிரியரின் கருத்துகள், இந்நூலைப் படிப்பவருக்கும் பெரிதும் உடன்பாடாகவே தோன்றுகிறது.

அருணாசலக் கவுண்டர் (1976) என்பாரின் கட்டுரையானது, சித்தர் மரபு, இராசேசுர சித்தர், நாதசித்தர், சித்தனும் முத்தனும், பதினெண் சித்தர், சித்தர் வல்லபம், திருமூலர், சிவவாக்கியர், பட்டினத்தார், பத்ரகிரியார், பிற்காலச் சித்தர்கள், பாம்பாட்டிச் சித்தர் ஆகிய தலைப்புகளைக் கொண்டுள்ளது.

இக்கட்டுரையில், தமிழ்ச் சித்தர் பரம்பரையானது திருமூலருடன் தொடங்குகிறது. இவரோடு சிவவாக்கியர், பட்டினத்தார், திருமாளிகைத் தேவர், கருவூராரையும் சேர்த்து, 'சித்தர் குழாத்தின் பஞ்சவர்' எனலாம் என்ற செய்தியோடு தொடங்கி, ''திருமூலர் அரசன் கடமையை அறிவுறுத்துகிறார்; நல்குரவை ஞாபகப்படுத்துவார்; சமயநெறி நில்லாத பிராமணரது பூணூலும் உச்சிக் குடுமியும் வெளிவேடமே என்கிறார். திருமூலர் அறம் போதிப்பவராக மாறி, மானிட வாழ்வின் நிலையாமையைக் கூறி, கொல்லாமை, புலால் மறுத்தலின் சிறப்பைப் பேசுவார்; ஒல்லும் வகையால் ஓவாது அறஞ்செய்தலை வலியுறுத்துவார்.''

''திருமந்திரத்திலே ஆலய வழிபாடு பற்றி இரண்டொரு குறிப்புகளே காணப்படுகின்றன. கோயில்களிலே பூசை முதலியன ஒழுங்காக நடைபெறுமாறு செய்வது அரசன் கடமை என்பார்.''

''திருமூலரின் மேதாவிலாசத்துக்குச் சான்று, பொருத்தமான எளிய சிறுசொற்கள் பாடலிலே சிறகடித்துப் பறக்கின்றன. சிந்தனையைக்

கிளருகின்றன. ஓசையும் பொருளும் இசையுமாறு உருவகக் கவிதைகளை உருவாக்கியிருப்பது பெரிய சாதனைதான்'' ஆகிய செய்திகளைக் கூறுகிறார்.

சிவவாக்கியர் பற்றிக் கூறும்பொழுது, ''சிவவாக்கியர் காலத்தால் திருமூலருக்குச் சற்றுப் பின் அல்லது சமகாலத்தவர் ஆதல் கூடும். சமயத் துறையிலே வேதாகமங்களின் ஆதிக்கத்தை எதிர்த்துப் புரட்சி செய்கிறார்; விக்கிரக ஆராதனையை நிந்தித்துப் பரிகசிக்கிறார்; ஆசார அனுட்டானங்களை ஆவேசமாய்ச் சாடுகிறார். இதனால் வைதீகர் இவரைப் புறக்கணித்ததிலே வியப்பில்லை! சிவபக்தியில் யாருக்கும் பின்தங்கியவர் அல்லர் என்றாலும் நம்பியாண்டார் நம்பி, இவர் பாடல்கலளத் திருமுறையில் சேர்க்கவில்லை'' என்று தெளிவுபடுத்துகிறார்.

பட்டினத்தார்பற்றி உரைக்கும் பொழுது, ''இவர் தான தருமம் செய்து, பரிவு, பச்சாதாபம், தயை அனைய நல்லுணர்வுகளை வளர்த்து, வாழ்வாங்கு வாழ வலியுறுத்துகிறார். இது மக்கள்பால் இவர் வைத்த பரிவுக்குச் சான்றாகிறது'' என்கிறார்.

ஒன்றென்றிரு, தெய்வம் உண்டென்றிரு, உயர்செல்வம் எல்லாம்
அன்றென்றிரு, பசித்தோர் முகம்பார், நல்லறமும் நட்பும்
நன்றென்றிரு, நடுநீங் காமலே நமக்கு இட்டபடி
என்றென்றிரு, மனமே உனக்கே உபதேசம் இதே!

(பட். சி. பொது. 20)

''குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தின் கீழ் 'நாம் இருவர் நமக்கொருவர், சிறு குடும்பமே சீரான வாழ்வு' என்றெல்லாம் பிரச்சாரம் நடைபெறுகிறது அல்லவா? இதைப் பட்டினத்தார் எப்படிச் சொல்வார்? 'புதல்வரைப் பெறுவீர்' எச்சரிக்கை என்பார்'' என்று விளக்குகிறார். மேலும், ''சித்தர்கள், பண்டிதர்கள் அல்லர்! பாமரரை மனத்தில்கொண்டே பாடியிருக்கிறார்கள். இவர் பாடல்களிலே காணப்படும் மெய்ப்பொருள்

காட்சியோ, சமய தத்துவமோ பாமரர்க்குப் புரியாது என்றாலும், இத்தனை காலமாக அப்பாடல்களைப் போற்றி அவர்கள் பாதுகாத்து வந்திருப்பது போற்றுதற்குரியது. பழகு தமிழையும் எளிய மொழி நடையையும் கையாண்டு, பாமரரைக் கருத்தில்கொண்டு பரிவுணர்ச்சியோடு பாடி, இலக்கிய வளர்ச்சிக்கு ஒரு புதிய வழியைக் காட்டியவர்கள் சித்தர்கள்தாம்! இவ்வழியைப் பின்பற்றிப் பின்னர் எழுந்தவைதான் குறவஞ்சி, பள்ளு, நொண்டி நாடகங்கள்.'' இவ்வாறு, இக்கட்டுரையின் மூலம் பல செய்திகளை அறிகிறோம்.

வரதராசனார் (1979) அவர்களின் நூல் திருக்குறளின் வாழ்வியல் சிந்தனைகளை வகுத்துக் காட்டுகிறது.

''உலகம் ஒரு குலம் என்பதே திருக்குறளின் உள்ளக்கிடக்கை. அதுவே உயிர்ப்பாய் ஒளிர்கிறது.''

''அன்புவழி வாழ்க்கை வளர்தல் வேண்டும். அவ்வழி வளரும் வாழ்க்கையே பண்பும் பயனும் உடையதாகும். பண்பும் பயனும் உடைய வாழ்க்கையே ஒரு கலை. அவ்வாழ்க்கைக் கலையே பிற கலைகளின் தாயகம்.''

''இந்நூற்கண் பல இடங்களில் பொதுமையும் மனத்தூய்மையும் மிளிர்கின்றன. இரண்டும் நூலின் நுரையீரல்கள் என்று கூறல் மிகையாகாது. இவை, 'உலகம் ஒரு குலம்' என்னும் உயிர்ப்பை இயக்குவன.'' இத்தகைய திரு.வி.க. அவர்களின் கருத்துகள் இந்நூலுக்கு அணி செய்கின்றன.

வாழ்க்கையின் அடிப்படையாகவும் பொதுவாகவும் உள்ள உண்மைகளைக் கண்டு எழுதியுள்ளமையால், பல்வேறு காலத்தவரும் அவற்றைப் போற்ற முடிகின்றது.

“ ‘காதலும் பொருளும் வாழ்க்கைப் படிகள். அறமே வாழ்க்கையின் உயர்நிலை’ என்று விளக்கும் நோக்கத்தால் காமத்துப்பால், பொருட்பால், அறத்துப்பால் என்று முறைமாற்றி இந்த நூல் எழுதப்பட்டுள்ளது” என்னும் மு.வ. அவர்களின் கருத்து பெரிதும் வரவேற்கத்தக்கது.

இந்நூலைப்பற்றி, திரு.வி.க. அவர்கள், “இந்நூல் ஒரு நன்னூல், புதுமைப் பொதுநூல்; உலகம் ஒரு குலமாகத் துணை செய்யும் நூல்” என்று கூறியுள்ளார். இக்கருத்து, பெரிதும் ஏற்றுப் போற்றுதற்குரிய கருத்தாகும். இந்நூல் தரும் இக்கருத்துகள் வாழ்வியல் கல்விக் கருத்துகளை உணர வழிகாட்டுகின்றன.

விசுவநாதம் (1980) என்பாரின் ‘குறள்காட்டும் வாழ்வு’ என்னும் கட்டுரையிலிருந்து ‘வாழ்வு பல வகை உண்டு. குறள் காட்டும் வாழ்வு ஒரு தனிவகை. அதை உலக மக்களுக்குக் காட்டியவர் திருவள்ளுவர்’ என்ற செய்தியை அறிய முடிகிறது.

மேலும், ‘எது மக்கள் வாழ்வு?’ என்று வினா எழுப்பிக்கொண்டு, “ஒருவரை ஒருவர் அடித்துத் துன்புறுத்தி வாழ்வது விலங்கு வாழ்வு. தன்னலங்கொண்டு உயரப் பறப்பது பறவை வாழ்வு. தீமை செய்தவருக்குத் தீமை செய்து வாழ்வது தேள், பாம்புகளின் வாழ்வு. தீமை செய்யாதவர்க்கும் தீமை செய்வது பேய்களின் வாழ்வு. தீமை செய்தவர்களை மன்னித்து விடுவது மட்டுமன்று, அவர்களுக்கு நன்மையைச் செய்தும் வாழ்வதே மக்கள் வாழ்வு எனக் குறள் கூறுகிறது” என்று விளக்குகிறார்.

இக்கட்டுரையில் வாழ்வுக்குப் பத்து உடைமைகள், ஒன்பது கட்டளைகள், பழிக்கு அஞ்சி வாழ்தல், விரும்பி வாழ நான்கு, வெறுத்து வாழ நான்கு, வழங்கி வாழ நான்கு, வாழ்வுக்கு வேண்டிய நட்பு, கற்றபடி நிற்றல், உள்ளத்தை உயர்த்தி வாழ், யார் பெரியார், நாநலம் என்னும் நலமுடைமை, தோற்றத்தைக் கண்டு மயங்காதே, பொருள் தேடும் வழி, வினைத்திட்பம், மேன்மையடைய வழி, செயல்திட்டம், மேலல்லார் மேலல்லர்,

சிதைவிடத்து ஒல்கார் உரவோர், மனிதனா - தெய்வமா என்னும் தலைப்புகளைக் கொண்டு குறள்காட்டும் வாழ்வியல் கல்வியை வகைப்படுத்தியுள்ளார். அவற்றுள்,

விரும்பி வாழ நான்கு

"நகை, ஈகை, இன்சொல், இகழாமை ஆகிய நான்கினையும் விரும்பிக் கைக்கொள். அது உன் வாழ்வை வளமாக்கும் என்பதே குறள்காட்டும் வாழ்வு. இந்நான்கை வரிசைப்படுத்தி இருப்பதிலும் ஒரு ஒழுங்கு தோன்றுகிறது. அவை நல்வாழ்வுக்கு எப்பொழுதும் இனிய முகத்தோடு இருத்தல் வேண்டும். முடியாவிடில் இயன்றவரை ஏதாவது கொடுத்துவிட வேண்டும். அதுவும் முடியாவிடில், அவர்களை இகழ்ந்து கூறாமலாவது இருக்க வேண்டும் என்பன குறள்காட்டும் வாழ்வு."

வெறுத்து வாழ நான்கு

"அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்சொல் என்பன அவை. பிறரைக் கண்டு பொறாமைப்படாதே! பிறர் பொருளின்மீது ஆசை வைக்காதே! எவர் மீதும் சினம் கொள்ளாதே! எப்போதும் கடும் சொற்களைச் சொல்லாதே! இந்நான்கும் நம் வாழ்வுக்கு மணம் வீசும் எனக் குறள் கூறுகிறது."

இவ்வாறு திருக்குறள் காட்டும் வாழ்வியல் நெறிகளை வகுத்தும் தொகுத்தும் உள் தலைப்புகள் இட்டும் எடுத்துக் கூறுகிறார்.

கலியபெருமாள் (1986) என்னும் ஆய்வாளர், திருமந்திரம் காட்டும் கொள்கைகளைத் திருமந்திரம் காட்டும் அறக் கொள்கைகள், சீர்திருத்தக் கொள்கைகள், சமுதாயக் கொள்கைகள் எனப் பகுத்துக் கொண்டுள்ளார். அவற்றுள், 1. அறம் செய்வான் திறம், 2. யாக்கை நிலையாமை, 3. செல்வம் நிலையாமை, 4. இளமை நிலையாமை, 5. உயிர்நிலையாமை, 6. கொல்லாமை, 7. புலால் மறுத்தல், 8. பிறன்மனை நயவாமை, 9. மகளிர் இழிவு, 10. நல்குரவு,

11. அன்புடைமை, 12. அன்பு செய்வாரை அறிவான் சிவன், 13. கேள்வி கேட்டமைதல், 14. கல்லாமை. 15. நடுவு நிலைமை. 16. கள்ளுண்ணாமை ஆகிய பதினாறும் திருமந்திரம் காட்டும் அறக் கொள்கைகள் எனப் பகுத்தும் திருமந்திரப் பாடல்களோடு பிற இலக்கிய மேற்கோள்களை இணைத்தும் விளக்கியுள்ளார்.

திருமூலரின் சீர்திருத்தக் கொள்கைகள் என, கீழ்க்காணும் ஆறனையும் எடுத்துக்காட்டுகிறார். 1. குலவேறுபாட்டைச் சாடுதல், 2. சாத்திரங்களைச் சாடுதல், 3. ஈகையின் மேன்மையை எடுத்துக் கூறுதல் (ஆகியவற்றின் வழியாக மூடப் பழக்கங்களைக் கடிதல்), 4. அன்புடையராக அமைய வேண்டுதல், 5. பேரானந்தம் எதுவெனக் கூறுதல், 6. ஆசையை நீக்க வேண்டுமெனல்.

அடுத்து, திருமந்திரம் காட்டும் சமுதாயக் கொள்கைகளாக, 1. கடவுள் பற்றிய கருத்துகள், 2. அரசன் கடமை – ஆட்சிமுறை, 3. வேதாகமங்கள், 4. அந்தணர் செய்யவேண்டுவன, 5. வேளாளர் கடமை, 6. சித்த – யோக நிலைகள், 7. நோய் – நோய்க்கு உரியோர் – நோய் நீக்கும் மருத்துவ முறைகள் முதலான சமுதாயத்திற்குத் தேவையானவை பற்றிய திருமந்திரக் கோட்பாடுகளைத் திருமந்திரப் பாடல்கள் வழி நின்று எடுத்து விளக்குகிறார்.

இந்த ஆய்வாளர், "திருமூலர், அறம் கூறும்பொழுது திருவள்ளுவர் போன்றும், சைவ சமயம் பற்றிக் கூறும்பொழுது சமயகுரவர் போன்றும், யோக நெறிகள், சித்த நெறிகள் பற்றிக் கூறும்பொழுது யோகியாகவும் சித்தராகவும் காட்சியளிக்கின்றார். மருத்துவம் பற்றிக் கூறும்பொழுது சித்த மருத்துவராகவும் 'சூனிய சம்பாஷனை' எனப்படும் மறைபொருள் கூற்றாகப் பாடியுள்ள பாக்களை நோக்கும் பொழுது ஒப்பற்ற தமிழ்ப் புலவராகவும் காட்சி தருகிறார்" என்று திருமூலர் பற்றிக் கூறியுள்ள கருத்து நினைந்து இன்புறத்தக்கது.

வசந்தா (1986) என்பாரின் 'சிவவாக்கியர் பாடல்கள்' பற்றிய ஆய்வில், 'சித்தர்' என்னும் சொல் தரும் ஆழமான பொருளை அறிய முடிகிறது. சித்து, சித்தி, சித்தம், சித்தர் ஆகிய சொற்களுக்கிடையே பொருள் தொடர்பு உள்ளது என்பதைப் பற்றியும் அறியமுடிகிறது.

சிவவாக்கியர் இறைவனைப் பற்றியதும், உயிருக்கும் உடலுக்கும் உள்ள தொடர்பு பற்றியதும், அறம் பற்றியும் உணர்த்துவனவாக உள்ள செய்திகளை இவர் தொகுத்து வழங்குகிறார்.

இறைவன் இயல்புகளைக் கூறவந்த சிவவாக்கியர், 'இறைவன் எங்கும் நிறைந்தவன்! அவன் அருவமாகவும் உள்ளான்! அவன் நுண்மையானவன்! அவன் பேராற்றல் உடையவன்! சமரச நோக்குடையவன்!' என்று கூறுவதாக இந்த ஆய்வேடு கூறுகிறது.

ஐந்தெழுத்தைப் பற்றிச் சிவவாக்கியர் கூறும் செய்திகளையும் இந்த ஆய்வேடு கூறுகின்றது. ஐந்தெழுத்தின் பொருள், ஐந்தெழுத்து மந்திரத்தின் பயன், அதன் வலிமை ஆகியவற்றைக் கூறுவதோடு, ஐந்தெழுத்தே சிவதீர்த்தம், ஐந்தெழுத்தே ஞானதீபம் என்னும் அரிய செய்திகளையும் உணர்த்துகின்றது.

சிவவாக்கியரின் வாழ்வியல் கருத்துகளைக் கூறவந்த இவர், 'அறம் இல்லாத பாவிகட்கு பரம் இல்லை' என்ற சிவவாக்கியர் கருத்துகளை எடுத்துக் கூறுகிறார்.

சாமி சிதம்பரனார் (1988) அவர்களின் நூல், சித்தர்களின் சிறப்பை எடுத்தியம்பும் நூல்களுள் சிறந்த தொன்றாகத் திகழ்கிறது. சித்தர்கள் பற்றிக் கூறுவதில் இஃதோர் ஆராய்ச்சி நூலாகத் திகழ்கிறது. இந்த நூல் கூறும் செய்திகளாவன:

"சித்தர்களின் கொள்கை – தத்துவம் – நாட்டிலே பரவினால், மக்களுக்குள் அன்பும் ஒற்றுமையும் வளரும் என்பதை நிலை நாட்டுதல்; மக்கள் சமுதாயம் – இனம் – ஒன்றே; மக்களிடையே பிரிவினை பேசுதல் –

உண்மைக்கு, இயற்கைக்கு மாறானது என்ற சித்தர்களின் தத்துவம் பரவினால், அது நாட்டுக்கும் மக்களுக்கும் நன்மை'' என்னும் உயரிய குறிக்கோள்களோடு இந்த ஆராய்ச்சி நூலை இயற்றியுள்ளார் நூலாசிரியர்.

'சித்தர்களின் சிறப்பு', 'சித்தர்களின் விஞ்ஞான ஆராய்ச்சி', 'சித்தர்களின் கொள்கை', 'பாம்பாட்டிச் சித்தர்', 'இடைக்காட்டுச் சித்தர்', 'அகப்பேய்ச் சித்தர்', 'குதம்பைச் சித்தர்', 'கடுவெளிச் சித்தர்', 'அகஸ்தியர் ஞானம்', 'அழுகணிச் சித்தர்', 'கொங்கணச் சித்தர்', 'வான்மிகர் ஞானம்', 'காகபுசுண்டர்', 'சிவவாக்கியர்', 'ஞான வெட்டியான்', 'ஔவை ஞானக் குறள்' ஆகிய 16 தலைப்புகளைக் கொண்டது இந்நூல்.

இந்நூலில் கூறப்படுகின்ற சித்தர்கள் பற்றிய கருத்துகள், 'பதினெண் சித்தர்கள் ஞானக் கோவை' என்னும் தொகுப்பு நூலில் உள்ள பாடல்களின் அடிப்படையில் விளக்கப் பெற்றுள்ளன.

இந்நூலாசிரியர், 'சித்தர்கள் யார்?' என்னும் வினாவையெழுப்பிக் கொண்டு அதுபற்றிய பல்வேறு கருத்துகளை ஆய்ந்து, இறுதியில் வெளியிடும் கருத்து, சித்தர்கள் பற்றிய ஒரு தெளிவான, இறுதியான, உறுதியான முடிவுக்கு வர வழிவகுக்கின்றது.

"சித்தர்கள் என்றால் அறிவு படைத்தவர்கள், அறிஞர்கள், மேதைகள், பேரறிவு படைத்தவர்கள், நுண்ணறிவு படைத்தவர்கள், விஞ்ஞானிகள், மெய்ஞ்ஞானிகள் என்று பொருள் சொல்லுவதே பொருத்தமாகும்."

இவ்வாறு சித்தர்கள் என்னும் சொல்லுக்கு இந்நூலாசிரியர் தரும் பொருள் விளக்கம், சித்தர்களின் அறிவையும் ஆற்றலையும் பறை சாற்றுவதாகவும் அமைந்துள்ளது.

''சித்தர்கள் சிறந்த மருத்துவர்கள்; இரசவாதம் செய்யும் முறைகளை எடுத்துக் கூறியவர்களான விஞ்ஞானிகள்; ஆன்மிகப்

புரட்சியாளர்கள்; மனிதகுலம் அனைத்தும் ஒரே இனம், ஒரே சாதி என்ற கொள்கையுடைய சமரச ஞானிகள்; மக்கள் யாவரும் ஒழுக்கம் தவறாமல் வாழவேண்டும் என்பதை வலியுறுத்தியவர்கள். பொய், சூது, கொலை, குடி, பரத்தமை முதலிய தீயொழுக்கங்களை வன்மையாகக் கண்டித்தவர்கள்; தீயொழுக்கங்களைக் கைவிட்டவர்களே யோகப் பயிற்சியில் வெற்றிபெற முடியும் என்பதை மெய்ப்பித்தவர்கள். சித்தர்கள் மிகச்சிறந்த மனிதாபிமானிகள்; பகுத்தறிவுவாதிகள்; தமக்கென வாழாப் பிறர்க்குரியாளர்கள். சித்தர்கள், மதவாதிகள் அல்லர்; வைதிகர்கள் அல்லர்; சுயநலம் கொண்டவர்களும் அல்லர். சித்தர் பாடல்கள் மனித சமுதாயத்தை நேசிக்கும்படியாகக் கூறுகின்றன'' முதலான பல கருத்துகளைச் சித்தர் பாடல்களைக் கொண்டே இந்நூலாசிரியர் விளக்குகின்றார்.

இராசாராம் (1989) என்பாரின், நூல் நான்கு இயல்களாக நடைபோடுகிறது. வாழ்க்கைக் கலை, மனையின் மாண்பு, பொருளியல் கோட்பாடு, பட்டினத்தார் புலம்பல், தாயுமானவரின் தன்மை முதலான பல கட்டுரைகளைக் கொண்டு விளங்குகிறது.

'குடும்ப வாழ்வு செம்மையாக இருந்தால்தான் நாடும் உலகமும் நன்மை எய்தும்' என்றும், 'புறப்பற்றும் அகப்பற்றும் நீக்கி, உலகோர் இன்பம் துய்த்து, நன்மை அடையத்தக்க வகையில் சமுதாயத்தில் வாழ்ந்து வரும் இல்லறத் துறவிகளையே வள்ளுவர் கூறுகிறார்' என்றும் விளக்குகிறார்.

மக்கட்பேற்றின் மாண்பு, வள்ளுவத்தோடு காந்தியத்தை ஒப்பிடுதல், வள்ளுவரின் பொருளியல் கோட்பாடு முதலியவற்றைத் திருக்குறளோடு மேலும் பல நூல்களையும் சான்றுகாட்டி ஒப்பிட்டு விளக்குகிறார்.

கள்ளுண்ணாமை, பிறனில் விழையாமை, பெண்வழிச் சேறல், வரைவின் மகளிர் முதலான திருக்குறள் கருத்துகளை, 'வேண்டா வினை' என்னும் தலைப்பின்கீழ் விளக்குகிறார்.

கல்வி, கல்லாமை, அறிவுடைமை பற்றிய அதிகாரங்களையும் குடும்ப வாழ்வோடு இணைத்துப் பார்த்து, குடும்பங்கள்தோறும் கல்வி மலர வேண்டியதன் தேவையை இந்நூல் விளக்கிச் செல்கிறது.

திருக்குறள் மனிதகுல வாழ்வுக்கு வழிகாட்டும் நூல் என்பதனைப் பல கோணத்தில் இந்நூல் படம் பிடித்துக் காட்டுகிறது.

பாரதி **(1989)** என்பவர் செய்துள்ள ஆய்வில், பட்டினத்தார் மூவர் இருந்ததாகக் குறிப்பிட்டுள்ளார். அவர்கள், 1. திருவெண்காட்டைச் சார்ந்த பதினோராம் திருமுறை பாடிய பட்டினத்தார், 2. காவிரிப்பூம்பட்டினத்தைச் சார்ந்த சித்தர் பட்டினத்தார், 3. பூரணமாலை, முதல்வன் முறையீடு முதலான பாடல்களை அருளிய பிற்காலப் பட்டினத்தார் ஆகிய மூவருமாவர்.

இவர்களுள், சித்தர் பட்டினத்தார் பற்றிய ஆய்வினை, திருமதி. பாரதி மேற்கொண்டுள்ளதால், இந்நூலும், இந்த ஆய்வுக்குச் சார்பு நூலாகின்றது.

சித்தர் பட்டினத்தார், கோயில் திரு அகவல், கச்சித்திரு அகவல், திரு ஏகம்பமாலை மற்றும் திருக்குற்றாலம், திருச்செங்காடு, திருவாரூர், திருக்காளத்தி, திருவையாறு, திருவொற்றியூர் முதலான திருத்தலங்களில் பாடிய தலப் பாடல்கள், பட்டினத்தாரின் அன்னையார் இறப்பின் பொழுது பாடிய பாடல்கள், உடற்கூற்று வண்ணம் ஆகிய நூல்கள் அனைத்தையும் அவர் தம் ஆய்வுக்கு எடுத்துக் கொண்டுள்ளார்.

சித்தர் பட்டினத்தாரின் கோயில் திருஅகவல், நிலையாமையைப் பற்றிக் கூறுகிறது. கச்சித் திருஅகவல், இறைவனின் அருட்திறத்தை விளக்குகின்றது.

திரு ஏகம்ப மாலை, மனித சமுதாயத்தில் நடைபெறும் நிகழ்வை இனம் பிரித்துக் கூறுகிறது.

திருத்தலப் பாடல்கள் யாவும் அவ்வவ் இறைவனின் திருவருளைப் பாடுகின்றன.

பட்டினத்தாரின் அன்னையார் இறப்பின்பொழுது அவர் பாடிய பாடல்கள் யாவும் அன்னையின் பெருமையை அகிலத்திற்கு உணர்த்துவனவாக அமைந்துள்ளன. மேலும் பட்டினத்தாருக்குத் தன் தாயின்மேல் உள்ள அன்பினைப் புலப்படுத்துவனவாகவும் உள்ளன.

உடற்கூற்று வண்ணம், மனிதன் பிறப்பு எடுத்ததிலிருந்து இறக்கும் வரை செய்கின்ற செயல்களையும் யாக்கை நிலையாமையையும் எடுத்துரைக்கின்றது.

பட்டினத்தார் பாடல்கள் மூலம், இறைவனின் கருணைச் சிறப்பு, மனித வாழ்க்கைக் கண்ணோட்டம், மனிதர் வாழ்வியல், மனித மனம், உடம்பின் இழிவு, நிலையாமை, காமத்தின் இழிதகைமை, இல்லறப்பெருமை, துறவோர் மேன்மை, வாழ்வோர்க்கு உரிய வாழ்வியல் அறவுரை முதலான வாழ்க்கை நோக்குகள், வாழ்வியல் கருத்துகள் பெறப்படுகின்றன.''

மேற்கண்ட யாவும், அந்த ஆய்வாளர் காட்டிய பட்டினத்தார் கூறும் வாழ்வியல் கருத்துகளாகும்.

கருவூர் கன்னல் (1992) என்பார், திருக்குறளை ஆய்வு செய்து, திருக்குறள் காட்டும் வாழ்வியல் சிந்தனைகளை வகுத்துக் காட்டுகிறார்.

இவர், 'வள்ளுவம் ஒரு வாழ்வியல் நூலே' என்பதை உலகுக்கு உணர்த்த வேண்டும் என்னும் குறிக்கோளோடு இந்த ஆய்வைச் செய்துள்ளார்; ஆய்வை நூலாக்கி வெளியிட்டுள்ளார்.

இந்நூலில், 'அழகும் அமைப்பும்' என்னும் பகுதியில், ''வள்ளுவரின் வாழ்வியல் சிந்தனைகள் மனித இனத்தின் மனக்கவலையை மாற்றி அமைதியாக வாழ அழைப்பு விடுக்கிறது. துன்பத்தை அழிக்கும் தூய

பாதையில் பயணம் செய்ய வழிகாட்டியாக வந்து நிற்கிறது. இடையறாத இன்பம் எய்த, தொண்டு செய்யத் தூண்டுகிறது'' முதலான கருத்துகளை வெளிப்படுத்துகிறார்.

இந்த நூல், ஐம்புல ஆட்சி, அன்பின் ஐந்திணை, இன்பத்துள் இன்பம், காதலில் மதம், பொய்யில் புனைவு, அகந்தை அழித்தல், துன்பத்தின் துறவு, தாய்மை உணர்வு, சான்றோர் வாழ்க்கை, துன்பத்தைத் தொலைக்கும் வழி, மனநோய்க்கு மருந்து, தீமைகளின் திருப்பணி, ஈத்துவக்கும் இன்பம், அல்லல் இல்லா வாழ்வு, உயிருக்கு ஊதியம் முதலான பல தலைப்புகளில் வள்ளுவரின் வாழ்வியல் சிந்தனையை வழங்குகிறது. 'திருக்குறளில் உளவியல்' என்னும் ஒரு பெருந்தலைப்பில் உளவியல் கருத்துகள் பலவற்றை இனங்கண்டு எடுத்தியம்புகின்றது.

இந்த நூலாசிரியர், வள்ளுவர் வழங்கும் வாழ்வியல் சிந்தனைகளைத் தொல்காப்பியம், சித்தர் பாடல்கள், சங்கத் தொகைப் பாடல்கள், பாரதியார், பாரதிதாசனார், கண்ணதாசன் ஆகியோர் பாடல்களோடு இயைத்து உணர்த்துகிறார்.

கோமதி (1993) என்பாரின் ஆய்வேடு, சிவவாக்கியரின் சீர்திருத்தக் கருத்துகளையும், சீர்திருத்தச் சிந்தனைகளையும் எடுத்துரைக்கிறது.

இந்த ஆய்வேடு, சிவவாக்கியரின் சமயச் சீர்திருத்தச் சிந்தனைகளாக உருவ வழிபாட்டை எதிர்த்தல், சாத்திர வழிபாட்டு முறையை எதிர்த்தல், பொருள் உணராது மந்திரம் ஓதுதலை எதிர்த்தல், வேத ஆகமங்களை எதிர்த்தல், சமயச் சடங்குகளை மறுத்தல், தேர்த் திருவிழாக்களைக் கண்டித்தல் ஆகியவற்றை எடுத்துரைக்கின்றது.

மேலும், பேய்ஓட்டுதல், புலால் மறுத்தல், உயிர்ப்பலியிடுதல் ஆகியவற்றை மூடநம்பிக்கைகள் எனக் சிவவாக்கியர் ஒதுக்குவதாக இந்த ஆய்விலிருந்து அறிய முடிகிறது.

சாதிப் பிரிவுகளைக் கண்டிப்பதோடு, இரசவாதிகள் என்று தம்மைக் கூறிக்கொள்ளும் போலித் துறவிகளையும், பெண்ணாசை கொண்ட துறவிகளையும் சிவவாக்கியர் கண்டிக்கிறார்.

மேலும், சிவவாக்கியர் பெண்ணின் பெருமையைப் போற்றுகின்றவர் என்பதையும், இல்லறத்தில் இருந்து கொண்டே இறைவனைக் காண முடியும் என்ற சிவவாக்கியரின் அரிய கருத்துகளையும் அறிய முடிகிறது.

செயப்பிரகாசு நாராயணன் (1994) என்பாரின், 'சித்தக்கலை' என்னும் கட்டுரையிலிருந்து சித்தர்களைப் பற்றியும் சித்தர்களின் சிறப்புகள் பற்றியும் அவர்களின் கோட்பாடு பற்றியும் யோகம், தியானம், ஆசனம் பற்றியும் தெரிந்துகொள்ள முடிகிறது.

சித்தர்கள்

"உலக ஞானத்திலும் பரம ஞானத்திலும் தேர்ந்து தெளிந்து, தாம் கண்ட உண்மைகளை உலகிற்கு வெளிப்படுத்தி, ஆன்றவிந்தடங்கிய இயற்கை விஞ்ஞானிகளே சித்தர்கள். பொதுமையான அன்பாலும் தன்னலமற்ற தொண்டாலும் மயக்கமற்ற அறிவாலும் பிரம்ம ஞானத்தை மட்டுமல்ல, பிரம்மத்தின் ஆற்றலையும் பெற்றவர்கள். ஏனைய ஆன்மிக ஞானிகள் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நிலைகளோடு அமைய, சித்தர்கள் மேற்கண்டவற்றோடு வாதம், வைத்தியம் ஆகியவற்றிலும் மேம்பட்டு, மானிட சேவையை மகேஸ்வரன் சேவையாகச் செய்தவர்கள். பாராட்டோ, பயனோ எதிர்பாராமல், ஓடும் செம்பொன்னும் ஒக்கவே கண்ட உத்தமச் சான்றோர்கள். மனிதன் மேம்பட்டவனாவது சடங்குகளினால் அல்ல, மனத் தூய்மையினாலும் தொண்டினாலும்தான் என உணர்த்தி அதற்கேற்ப வாழ்ந்து காட்டியவர்கள். அவர்களுடைய மதம் அனைவரிலும் இறையைக் காணும் அன்பு மதம். இறைக் கொள்கையினாலோ, சனாதன

தர்மத்தின் பெயராலோ பேதங்களை வளர்க்கக்கூடாது எனும் கோட்பாடு உடையவர்கள். சமரச சன்மார்க்க வாதிகள்.''

சித்தர் கலை

''சித்தர் கலை என்பது அறிவியல் மட்டுமல்ல. அது ஒரு வாழ்க்கை நெறியும் ஆகும். உயிரியல், உடலியல், ஆன்மிக இயல், விண்ணியல், இரசாயன இயல், இறையியல் என அவர்களுடைய ஆராய்ச்சிக்கு உள்ளாகாத துறைகளே கிடையாது. இன்றைய அறிவியல் விளக்கங்கள் அவர்கள் விட்டவை தொட்டவைகளையே விளக்குகின்றன.''

சித்த மருத்துவம்

''உலகப் பொருள்களுக்கு அடிப்படையாக உள்ளவை ஐம்பூதங்கள். உடல் அமைப்பும் ஐம்பூதங்களாலேயே அமைந்தவை. ஆகவே ஐம்பூத சமநிலையைப் பேணினால் நோயற்றநிலையைக் காணலாம். நோய் உண்டாவதற்குப் புவியியல் காரணங்கள் மட்டுமல்லாமல் சூட்சும காரணங்கள் உண்டென்பதை அறிந்தவர்கள்.''

யோகம்

''‘யோகம்’ என்ற சொல்லுக்கு ‘ஒன்றித்தல்’, ‘கூட்டு’ என்பது பொருள். ஆன்மா, உடல் ஒருங்கிணைந்து செயல்படுமாறு செய்வது. தெளிவாகச் சொல்வதானால், உடம்பையும் மனத்தையும் வயப்படுத்தும் பரிபூரண விஞ்ஞானமே யோகம். மனிதன் சமுதாயத்தின் ஓர் அங்கம். அவன் தன்னையும் ஒழுங்குபடுத்தி, மற்றவர்களுக்கும் பயனளிக்கின்ற தெய்வீக நிலைக்கு உயரும்வண்ணம் நம்முன்னோர்கள் வகுத்த ஆன்ம, மன, உடல் பயிற்சிகளே யோக விஞ்ஞானமாக மலர்ந்துள்ளது. அவற்றை அட்டாங்க யோகம் என நெறிப்படுத்தி இருக்கின்றனர். யோகம், அந்தர் யோகம் எனவும் பகிரங்க யோகம் எனவும் இரு வகைப்படும்.''

தியானம்

"'தியானம்' என்பதற்கு 'மெடிடேஷன்' என்பது சரியான மொழிபெயர்ப்புச் சொல் அன்று. தியானம் அபரிமிதமான மன ஆற்றலை வழங்குகின்றது."

ஆசனம்

"'ஆசனம்' என்பது தேகத்தை ஒரு குறிப்பிட்ட நிலையில் அமைத்தலேயாகும். ஆசனம், 'தளர்த்துதல்' எனவும் கொள்ளலாம். ஆசனங்கள் எண்ணிக்கை ஒவ்வோர் மரபிலும் ஒவ்வொரு விதமாக சொல்லப்பட்டிருக்கின்றது". இக்கட்டுரையிலிருந்து மேற்காட்டிய செய்தி களை உணர முடிகின்றது.

'சித்தர் பாடல்கள்' ஸ்ரீசெண்பகா வெளியீடு (1995) என்ற நூலின் மூலம் அறியப்படும் செய்திகள்: "சித்தர்கள், எல்லாம் அறிந்த ஞானிகள்; தன்னியல்பான மனிதர்களிடமிருந்து மேம்பட்ட ஆற்றல்களையுடையவர்கள்; நீர்மேல் நடக்கவும் நிழலுக்குள் ஒதுங்கவும் வல்லவர்கள்; நெருப்புக்குள் தவஞ்செய்யும் ஆற்றல் அவர்களுக்கு உண்டு; மூலிகைகளைப் பற்றி மருத்துவத் துறையில் நிறைந்த அறிவு பெற்றவர்கள் அவர்கள். இரும்பைப் பொன்னாக்கும் இரஸவாதக் கலையில் தேர்ச்சி பெற்றவர்கள். ஒரே நேரத்தில் இரண்டு இடங்களில் காட்சி தரும் ஆற்றல் அவர்களுக்கு உண்டு. காடுகளிலும் மலைகளிலும் அவர்கள் அலைந்து திரிவார்கள். குகைகளில் தங்குவார்கள். அவர்கள் எளிய மக்களிடத்தில் பரிவுடையவர்கள். அரசன், கோவில், வேதம் ஆகியவற்றை லட்சியம் செய்யாதவர்கள். ஆனால் பொதுவாகக் கடவுள் நம்பிக்கை உடையவர்கள். தமிழ்நாட்டில் அறியப்பட்ட, அறியப்படாத எல்லாச் சித்தர்களும் இந்த வரையறைக்குள் அடங்கிவிடுவர்."

மேலும், ''தமிழ்நாட்டில் பிறந்த சித்தர் மரபுபோல இஸ்லாத்திலும் 'சூஃபிகள்' எனப்படும் சித்தர் மரபு ஒன்று உண்டு. எனவேதான் இஸ்லாமிய ஞானியாகிய குணங்குடி மஸ்தானை இஸ்லாமியர் அல்லாதாரும் தமிழ்ச் சித்தர் எனக் கண்டு போற்றுகின்றனர். குணங்குடி மஸ்தானைப்போல் தமிழ்நாட்டில் நிறைய இஸ்லாமிய ஞானிகள் இருந்துள்ளனர். இஸ்லாமியச் சித்தர்களுள் தக்கலை பீர்முகம்மது ஞானியார், காலங்குடியிருப்பு மச்சரேகைச் சித்தர் போன்றவர்களும் அடங்குவர்'' என்னும் செய்திகளை அறியமுடிகிறது.

இந்நூல் தரும் சித்தர் பாடல்களைக் கொண்டு சித்தர்களின் வல்லபம், கொள்கை, கோட்பாடு, வாழ்வியல் சிந்தனைகள் ஆகியவற்றை அறிய முடிகிறது.

கௌசல்யா (1996) என்பவரின் ஆய்வு நூல், 'திருமந்திரம் காட்டும் வாழ்வியல் சிந்தனைகளை உலகோர் அறிந்து பின்பற்ற வேண்டும்' என்னும் குறிக்கோளைக் கொண்டுள்ளது. இந்த நூல், 1. திருமந்திரமும் திருமூலரும், 2. சமுதாய வாழ்வும் திருமந்திரச் சிந்தனைகளும், 3. புராணக் கதைகள் தொடர்பான சிந்தனைகள், 4. விலங்குகள், பறவைகள், தாவரங்கள், உலோகங்கள், மணிகள் தொடர்பான சிந்தனைகள், 5. திருமந்திரமும் ஆன்மிக வாழ்வும் (அ) இல்லற வாழ்க்கை (ஆ) துறவற வாழ்க்கை, 6. முடிவுரை என்னும் ஆறு பிரிவுகளைக் கொண்டுள்ளது.

'திருமந்திரமும் திருமூலரும்' என்னும் முதல் இயலில், திருமந்திரம் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நூற்பயன் நான்கினையும் வழங்கும் நூல் என்றும், ஒன்பது தந்திரங்கள், 232 அதிகாரங்கள் எனப் பிரிந்து சைவ சித்தாந்தக் கருத்துகளை விளக்குகின்ற நூல் என்றும், திருமந்திரம் ஒரு சாத்திர நூலாகவும் தோத்திர நூலாகவும் திகழ்கின்றது என்றும் குறிப்பிடுகின்றார்.

அட்டாங்க யோகங்கள், அவற்றின் செய்முறைகள், அவற்றின் பயன்கள் ஆகியவற்றை இனிய தமிழில் திருமூலர் விளக்கியுள்ளமை குறித்தும் கேசரி யோகம், பரியங்க யோகம், அமுரிதாரணை, சந்திர யோகம், மந்திர யோகம் ஆகியன குறித்தும் திருமூலர் வழிநின்று விளக்கியுள்ளார். அட்டமாசித்திகள் குறித்தும் அவற்றை அடையும் வழிமுறைகள் பற்றியும் திருமந்திரம் கூறுமாறு இவர் எடுத்துரைக்கிறார்.

திருமூலருடைய வரலாறு, காலம் முதலியவற்றை வரையறை செய்கிறார். திருமூலர் பற்றிய கதைகள், பிறப்பு, மாதம், நட்சத்திரம், ஜாதி இவை யாவும் ஆதாரம் அற்றவை என்று மறுக்கிறார். திருமூலர் சித்தர்களுள் தலையாயவர். இவ்வாறு முதல் இயலில் திருமூலர் பற்றியும் திருமந்திரம் பற்றியும், சான்றுகளோடும் தடைவிடைகளோடும் சிறந்த கருத்துகளை வழங்கியுள்ளார்.

இரண்டாவது இயல், 'சமுதாய வாழ்வும் திருமந்திரச் சிந்தனைகளும்' என்னும் தலைப்பாகப் பகுக்கப்பட்டுள்ளது. இந்தப் பெருந்தலைப்பு சமுதாயமும் அன்பும், சமுதாயமும் அறமும், சமுதாயமும் ஈகையும், சமுதாயமும் சாதிமதச் சடங்குகளும், சமுதாயமும் நிலையாமையும், சமுதாயமும் நம்பிக்கைகளும், சமுதாயமும் அரசும் என ஏழு உட்தலைப்புகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

மூன்றாவது இயலில், 'புராணக் கதைகள் தொடர்பான கருத்துகள்' என்னும் தலைப்பில் சிவபெருமான் பற்றிய பல்வேறு புராணக் கதைகளைத் திருமந்திரம் கூறியவாறு எடுத்துக்காட்டுகிறார். மேலும், தேவர், அசுரர் குறித்த புராணக் கதைகள் பற்றியும், தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் உலக மக்களோடுள்ள தொடர்பு பற்றியும் வடித்தெடுத்து வழங்கியுள்ளார்.

நான்காவது இயலில், திருமந்திரம் கூறும் விலங்குகள், பறவைகள், தாவரங்கள், உலோகங்கள், மணிகள் தொடர்பான சிந்தனைகளை ஆய்ந்து தொகுத்து வழங்குகிறார்.

பறவைகள், விலங்குகள், தாவரங்கள் ஆகியவை எவ்வாறு உவமைகளாகவும் உருவகங்களாகவும் சொல்லப்படுகின்றன என்பதையும் விளக்குகின்றார்.

ஐந்தாவது இயல், 'திருமந்திரமும் ஆன்மிக வாழ்வும்' என்னும் தலைப்பில் அமைந்துள்ளது. இத்தலைப்பின்கீழ் இல்லற வாழ்க்கை, துறவற வாழ்க்கை என்னும் இரண்டு உட்பிரிவுகள் உள்ளன.

'இல்லற வாழ்க்கை' என்னும் பிரிவில் இல்லறத்தானுக்கு விதிக்கப்பட்டவை, விலக்கப்பெற்றவை, சிவ வழிபாடு, சக்தி வழிபாடு, திருவம்பலச் சக்கர வழிபாடு, உமாகாந்தன் வழிபாடு முதலான வழிபாட்டு முறைகள், சக்கரம் அமைக்கும் முறைகள், அவற்றால் பெறும் பயன்கள், கரு உற்பத்தி, அது தொடர்பான பிற கருத்துகள், உடலுக்கு வரும் நோய்கள் முதலான செய்திகளைத் திருமூலர் வழிநின்று எடுத்துரைத்துள்ளார்.

'துறவற வாழ்க்கை' என்னும் தலைப்பில், துறவறத்தார் பற்றிய விளக்கம், துறவிகளின் ஒழுகலாறு, போலித் துறவிகளின் அடையாளம் ஆகியவற்றைப் பற்றித் திருமந்திரம் தரும் செய்திகளைக் கூறியுள்ளார். மேலும், இறைவனை அடைவதற்குரிய வழிமுறைகளான, சுத்த சைவம், அசுத்த சைவம், சரியை, கிரியை, சற்புத்திர மார்க்கம் முதலான பதினெட்டு வழிமுறைகளைத் திருமந்திரம் கூறுமாறு எடுத்து விளக்கியுள்ளார்.

இறுதியில், ஐந்தெழுத்தினால் மனித உடலின் புறத்தோற்றம், ஆதாரங்களும் இதழ்களும், ஆதாரங்களில் பிராணன் மேலேறுதல், மூலாதாரம் முதல் பிராணன் சித்ரணி வாயிலாக மேலேறுதல் ஆகியவற்றைப் படங்களுடன் விளக்கியுள்ளார்.

மேலும் அண்ட லிங்கம், திருவம்பலச் சக்கரம், சாம்பவி மண்டலச் சக்கரம், புவனாபதிச் சக்கரம், நவாக்கரிச் சக்கரம் ஆகியவற்றையும் படத்துடன் விளக்கியுள்ளார்.

திருமந்திரம் மனிதனின் மாண்புறு வாழ்க்கைக்கு ஒரு கலங்கரை விளக்கமாகத் திகழ்கிறது என்ற முத்தாய்ப்புடன் இந்நூல் நிறைவு பெறுகிறது.

சாரங்கபாணி (1996) என்பவரின் நூல் அகமும் புறமும், விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானமும், சித்த வித்தையும் கட்டுப்பாடும் முதலான 10 தலைப்புகளைக் கொண்டு விளங்குகிறது.

பட்டினத்தார், வள்ளலார், சட்டைமுனி, சிவவாக்கியர், பத்ரகிரியார், முதலியோர் கருத்துகளை விளக்கும் முறையில் இந்நூல் அமைந்துள்ளது.

சித்தநெறி பகுதி–2 இல் ஜீவகாருண்யம், ஆன்மிகச் சொல்லமுதம், ஈஸ்வர மதம் முதலான 10 தலைப்புகளில் சித்தர்கள் கருத்து விளக்கப்படுகிறது.

புலால் உணவின் புன்மையை அருட்பா, திருக்குறள், அறநெறிச்சாரம், கொன்றை வேந்தன் முதலான இலக்கிய மேற்கோள்கள் மூலமும், தாயுமானவர், புத்தர், மகாவீரர், இயேசு கிறிஸ்து, நபிகள் நாயகம், பட்டினத்தார் முதலான மகான்களின் கருத்துகள், மற்றும் டாக்டர். வில்கின்ஸ், டாக்டர் மாக்களம், டாக்டர் வாட்ச்மன் போன்ற மேலைநாட்டு அறிஞர்களின் கருத்துகள் ஆகியவற்றின் மூலமும் அழுகணிச் சித்தர், கொங்கணர், பட்டினத்தார் ஆகியோர் பாடல்கள் மூலமும் விளக்குகிறார். 'கொன்றால் பாவம் தின்றால் தீரும்', 'காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்' முதலான பழமொழிகளுக்குத் தத்துவ விளக்கம் தருகிறார்.

சித்தர்களுடைய அருமை பெருமைகளை அனுபவ வாயிலாக உணர்ந்து அவற்றையும் தொகுத்துத் தருகிறார் இந்நூல் ஆசிரியர்.

தேவநாத சுவாமிகள் (1998) என்பார் இயற்றிய நூலின் முதல் பகுதியில் அகத்தியர், சுந்தரானந்தர், திருமூலர், போகர், புசுண்டர், உரோமரிஷி, யூகிமுனிவர், பிரும்மரிஷி, காலாங்கிநாதர், நந்தீசர், தன்வந்திரி, குருராஜரிஷி, கொங்கணர், சட்டைமுனி, இராமதேவர், கோரக்கர், மச்சமுனி, கருவூரார், பிண்ணாக்கீசர், கலைக்கோட்டுமுனி, தேரையர், புலத்தியர், புலிப்பாணி, தட்சணாமூர்த்தி சுவாமி, பட்டினத்தார், பத்ரகிரியார், இராமலிங்க சுவாமிகள் ஆகியோர் பற்றிய வாழ்க்கைக் குறிப்புகள் இடம் பெற்றுள்ளன.

இந்நூலில் சித்தர்களின் வாழ்க்கைக் குறிப்புகளோடு, அவர்கள் இயற்றிய நூல்கள் பற்றியும் குறிப்பிட்டுள்ளார்.

இரண்டாம் பகுதியில், சித்தர்கள் இயல்பு பற்றிக் கூறவந்த நூலாசிரியர், "சித்தர்கள், சாகாக் கலை அறிந்தவர்கள். ஆன்மிகத்தில் உயர்ந்த இடம் அவர்களுக்குரியது. அவர்களுக்குக் காணும் இடமெல்லம் கடவுளின் தோற்றம். சித்தர்கள் ஓரிடத்தில் நிலையாக இருப்பது இல்லை. மக்களுக்கு நன்மை செய்வதையே நோக்கமாகக் கொண்டு அவர்கள் உலகெங்கும் யாத்திரை செய்வார்கள். அவர்களை நடமாடும் தெய்வம் எனலாம்" என்று எடுத்துரைக்கின்றார்.

"சித்தர்கள், தாம் யாரென்று உரைப்பதில்லை; ஓரிடத்தில் கடமை முடிந்ததும் வேறிடம் செல்வர். அவர்கள் உருமாறும் கலை அறிந்தவர்கள். சித்தர்களுக்குக் குளிர் இல்லை; வெயில் இல்லை; தமக்கென வாழும் எண்ணம் இல்லை. அவர்கள் உடம்பை ஒரு கருவியாகக் கொண்டனரே யன்றி, உடம்புக்கு முக்கியத்துவம் கொடுத்ததில்லை. பொன், பொருள், சுகவாழ்வில் மோகம் அற்றவர்கள். ஆனால் மற்றவர்களுக்காகச் செம்பைப் பொன்னாக்கினர்; செம்பொருள் பலவும் உருவாக்கினர்" என்றும் விளக்கியுள்ளார்.

"சித்தர்களுடைய கிரியைகளும் மந்திரங்களும் யோக நெறியோடு நிற்பவை; தேவையில்லாத மதச் சடங்குகளை மட்டுமே எதிர்த்தார்கள்.

சித்தர்கள் வானவியலில் தேர்ந்த ஞானம் பெற்றவர்கள்; கிரக நிலைகளை ஆராய்ந்து தெளிந்தவர்கள். தாம் அறிந்த உண்மைகளை மனிதனின் வாழ்க்கையோடு பொருத்தி, நாடி சோதிடம் கண்டனர். அவர்கள் அன்று சுவடிகளில் எழுதி வைத்தவைதாம், இன்று பலருக்கு வியாபாரப் பொருளாகப் பயன்பட்டு வருகிறது'' என்று சித்தர்களின் இயல்புபற்றி எடுத்துரைக்கிறார்.

'யோக சாதனை' என்னும் இயலில், 'சித்தர்களின் வாழ்க்கை யோகத்துடன் பின்னிப் பிணைந்தது' என்பதை எடுத்துக் காட்டுகிறார். சித்தர்கள், புறத்தே வேள்வி நடத்தவில்லை. மூலாதாரத் தீயினால் செய்யும் 'ஆதார யோகமே' அவர்களின் வேள்வித் தீ எனச் சுட்டிக் கூறியுள்ளார்.

'இறைநெறி' என்னும் தலைப்பில், சித்தர்களின் மதக் கோட்பாடுகளை விளக்கும் இந்நூலாசிரியர், ''சித்தர்கள் சமய எல்லைகளுக்கு அப்பாற்பட்டவர்கள்; மதக் கோட்பாடுகளை ஒரு கருவியாகக் கொண்டு தங்களுடைய இறையனுபவத்தை உலகுக்கு வழங்கினரேயன்றி, மதக்கோட்பாடுகளுக்கு உட்பட்டவர்கள் அல்லர். அவர்கள் கோட்பாடுகளே தனி. 'சித்தர் பாடல்', 'பரவெளி' என்னும் பேரெல்லை தழுவியது. சமயச்சார்பு என்னும் குறுகிய எல்லைகளைத் தகர்த்தது'' என்று கூறி, சித்தர்களின் இறைநெறியின் உயர்வினை உலகுக்கு உணர்த்துகின்றார்.

அடுத்து, சிவவாக்கியர் தொடங்கி, இராமலிங்க அடிகள் ஈறாகப் பதினேழு சித்தர்களின் வாக்குகளை, அவர்தம் பாடல்கள் வழிநின்று எடுத்துக் காட்டுகிறார்.

'சித்த மருத்துவம்' என்னும் இயலில், சித்தர்கள் தந்த, கண்ட மருந்துகளின் மாண்பினைப் புலப்படுத்துகிறார்.

'வாழும் கலை' என்னும் தலைப்பின்கீழ் 'காயகற்பம்' பற்றி எடுத்துரைக்கின்றார். என்றும் இளமையுடன் திகழ, சித்தர்கள் செய்த அமுது 'காயகற்பம்' என்று கூறி, பல்வேறு காயகற்ப முறைகளையும் இந்நூலாசிரியர் விளக்கியுள்ளார். இறுதியில் "இந்நூலில் குறிப்பிடப் பட்டுள்ள காயகற்ப முறைகள், ஒரு பரிச்சயத்துக்கு மட்டுமேயன்றி, நாம் பரீட்சித்துப் பார்ப்பதற்கு அல்ல" என்று கூறியுள்ளார்.

'சித்தாடல்' என்னும் தலைப்பின்கீழ், குருசுவாமிகள், மகான்குழந்தை ஆனந்த சுவாமிகள், பட்டினத்தார் ஆகியோரின் சித்தாடல் பற்றியும் எடுத்துரைக்கின்றார்.

'ஷீரடி பாபா' என்னும் தலைப்பின்கீழ் பாபாவின் மகிமையை எடுத்துரைப்பதன்மூலம் சித்தர்களின் சிறப்பினைக் கூறுகிறார்.

'ஒளி மயம்' என்னும் தலைப்பின்கீழ், "சித்தர்களைப் பொறுத்தவரை தம்மை அறிந்ததோடு, அந்த விண்ணையும் இந்த மண்ணையும் அறிந்து தெளிந்தார்கள். தாங்கள் கண்டு தெளிந்த உண்மைகளை நமக்காகவிட்டுச் சென்றார்கள்" என்று கூறி, தமிழகத்தின் அரும்பெரும் சித்தர்கள் எங்கெங்கு சமாதி ஆனார்கள், அதனால் அந்தத் தலங்கள் எவ்வாறு சிறப்புற்றுத் திகழ்கின்றன என்பனவற்றையும் எடுத்துரைக்கின்றார்.

இறுதியில், 'நாமும் சித்தனாக முடியுமா?' என்று வினாவெழுப்பி, 'சித்தம் இருந்தால் முடியும். அதற்கு மாயை நீங்க வேண்டும். உண்மை கண்டு, பொய்யைக் கைவிட்டு, மனம் தெளிந்தால் முடியம்' என்று விடையும் கூறுகிறார்.

இராமச்சந்திரன் (1999) என்பாரின் நூல், "சித்தர்கள் மனிதர்களாகப் பிறந்து, மனிதர் நிலையிலிருந்து மேம்பட்டவர்கள்; மனிதனின் அடுத்த பரிணாம வளர்ச்சியைக் கண்டவர்கள். சாகாக் கலை கற்றவர்கள். உலகத்தின் எந்த மூலையில் எது நடந்தாலும் உய்த்துணரும்

உயர்ந்த ஆற்றலாளர்கள். இத்தகைய ஆற்றல்களை மனிதகுலம் முழுவதுமே அடைய வேண்டும் என்ற ஆர்வமுடையவர்கள்'' என்ற குறிப்போடு தொடங்குகிறது.

இத்தகைய சித்தர்கள் ஐம்பதின்மர் பற்றிய செய்திகளின் தொகுப்பாக இந்நூல் விளங்குகிறது. 26 பெருநூல்களின் துணையோடு, இந்நூலாசிரியர் இந்நூலை இயற்றியுள்ளார்.

இந்நூல், சித்தர்கள் பிறப்பு, நாள், உரிய நட்சத்திரம், அவர்கள் வாழ்க்கையில் நடைபெற்றதாகச் சொல்லப்படும் நிகழ்ச்சிகள், அவர்களைப் பற்றி வழங்கப்படும் கதைகள், அவர்கள் நிகழ்த்தியதாகச் சொல்லப்படும் அற்புதங்கள் ஆகியவற்றைத் தொகுத்து வழங்குகின்றது.

சித்தர்கள் அறிவியல் துறையில் எந்த அளவு மேம்பட்டு விளங்கினர் என்பதைச் சில எடுத்துக்காட்டுகளுடன் இந்நூல் விளக்குகிறது. மேலும், ஆன்மிக அறிவு, மருத்துவ ஞானம், யோக விளக்கம், இலக்கிய இன்பம் அனைத்தையும் ஒருங்கே வழங்குகிறது.

சித்தர்களின் வாழ்க்கைக் குறிப்புகளோடு, அவர்கள் மானுட சமுதாயத்திற்கு எவ்வாறு உதவினார்கள் என்பதையும் வாதம், வைத்தியம், ஞானம், யோகம் என்னும் நான்கு துறைகளிலும் அவர்தம் படைப்புகளின் தொகுப்புகளையும் திரட்டி வழங்கியுள்ளமை இந்நூலின் தனிச்சிறப்பாகும்.

'சித்தர் தத்துவம்'– மணிவாசகர் பதிப்பகம் – (1999) என்ற நூலில் திரு.வி. கலியாணசுந்தரனார், பேராசிரியர் வெள்ளைவாரணனார் ஆகிய இருவருடைய 'சித்தர்கள்' என்னும் தலைப்பில் அமைந்த கட்டுரைகள், தெய்வநாயகம் அவர்களின் 'சித்தர் வித்தகம்', அரவிந்தன் அவர்களின் 'சித்தர்கள் வாழ்வும் வரலாறும்', இளங்குமரனாரின் 'சித்தர்களின் சிந்தனை வளம்', மெய்யப்பன் அவர்களின் 'சித்தர் பரம்பரை' ஆகிய கட்டுரைகள் உள்ளன.

இந்நூலில் கலியாணசுந்தரனார் சித்தர்களின் இயல்புகளை, சிறப்புகளை எடுத்துக் காட்டுகிறார். சான்றாகச் சிலவற்றைக் காண்போம்.

"இப்பொழுது மனிதன் ஆற்றிவரும் அருஞ்செயல்களைக் கொண்டு மனிதன் ஆற்றலை அளவிடுதல் கூடாது. மின்சாரத் துணையானும் நீராவித் துணையானும் மனிதன் கண்டுவரும் புதுமைகள், அவனது முழு ஆற்றலைப் புலப்படுத்துவனவாகா! தற்காலத்தை, மனிதன் தன்பாலுள்ள பேராற்றலைக் காணாது வாழுங்காலமென்று கூறலாம். மனிதன் தன்பாலுள்ள முழு ஆற்றலையுணர்ந்து வாழ்ந்த காலமொன்றிருந்தது. அக்காலமே சித்தர்கால மென்பது."

"பொதுவாக உலகிலும், சிறப்பாக இந்தியாவிலும் வகுப்புப் பூசல், சாதிச்சண்டை, சமயப்போர் முதலியன நிகழ்ந்து வருவது எவரும் அறிந்ததொன்று. சித்தர் கல்வி இப்போர்களைப் போக்க வல்லது. மனிதன் தன்பாலுள்ள ஆன்ம சக்தியைக் காணவும் பெறவும் முயலும்போது, சாதி மதச் சண்டை முதலியவற்றில் கருத்தைச் செலுத்தான். ஆன்ம சக்தி நினைவூட்டுங் கல்வி இப்பொழுது வேண்டற்பாலது."

"நமது தமிழ் நாட்டில் வடமொழி, தென்மொழிச் சண்டை ஒருபால் வளர்ந்து வருகிறது. சித்தர் கல்வி அச்சண்டையையும் போக்கும். சித்தர்கள் இருமொழியையுங் கொண்டவர்கள். நாட்டுக்கு, நலம் பல வழியிலும் நல்கவல்ல சித்தர் கல்வியைப் பரப்ப, ஓர் இயக்கந் தோன்றுதல் வேண்டும். அவ்வியக்கத்தில் ஈடுபட்டு உழைக்கத்தக்க, சமரச நோக்குடைய சாந்த மூர்த்திகளும் வேண்டும்."

கலியாணசுந்தரனாரின் இத்தகைய சிந்தனைக் கருத்துகள் சித்தர் தத்துவ மேன்மைகளை, தேவைகளை உணர்த்துகின்றன.

வெள்ளை வாரணனார் அவர்களின், "தமிழ்நாட்டின் தவப்பேறாகத் தோன்றிய சித்தர்கள், உலகமெங்கும் உலவித் திரிந்து, மனித குலத்தினர் அனைவரையும் தம் மகவெனப் பேணிக் காக்கும் பேரருளாளராகத் திகழ்ந்துள்ளார்கள்."

“உலக மக்கள் அனைவரும் பிணி நீங்கி, உடல் நலத்துடன் நெடுங்காலம் இனிது நுகர்ந்து வாழ்தல் வேண்டும் என்னும் பெருங்கருணைத் திறத்தால், தமிழ்நாட்டுச் சித்தர் கண்டுணர்த்திய மருத்துவ முறையே சித்த மருத்துவமாகும்.”

“திருமூலர் முதலிய தமிழ்ச் சித்தர்கள் கண்டுணர்த்திய தத்துவ மெய்ந்நெறியே சைவ சித்தாந்தச் செந்நெறியாக வளர்ந்தோங்கியது என்னும் உண்மை, மெய்கண்ட நூல்களையும் சித்தர் பாடல்களையும் ஒப்பிட்டு ஆராய்வார்க்கு இனிது புலனாகும்” ஆகிய கருத்துகள் சித்தர்களைப் பற்றித் தெளிவாக உணர்த்துகின்றன.

தெய்வநாயகம் அவர்கள், “மக்கட் சமுதாயத்தில் மலிந்து நின்ற பொய்மைகளை எதிர்த்துப் புரட்சி செய்த இயக்கத்தினராகத் தோன்றியவர்களே சித்தர்கள் என்பது வெளிப்படை. மக்களிடையே வாழ்ந்து, ஆசைகளில் உழன்று, அனுபவத்தாலும் பட்டறிவாலும் மனித வாழ்வின் உண்மையினை உணர்ந்து உருவானவர்களும் சித்தர்களே ஆவர். சித்தர்கள் அத்துணை பேரும் கற்றறிந்தவரல்லர். பாமரராய் வாழ்ந்தும், மன்னராய்த் திளைத்தும், செல்வராய்ச் செழித்தும், யோகியராய் நிலைத்தும் நின்றவர்கள் சித்தர்களுள் உண்டு. மதமான பேய்பிடித்தும், மாயாசாலங்களாலும் பொய்வழிபாடுகளாலும் அல்லற்பட்டு வீணாகக் காலங்கடத்தும் மக்களைக் கண்டு, நிலையாமை உணர்ந்து, உருவான சித்தர்களுமுண்டு” எனச் சித்தர்கள் இயல்புகளை எடுத்துரைக்கின்றார்.

அரவிந்தன் அவர்கள், “சித்தர்கள் உலகமெங்கும் உள்ளனர்; எல்லாக் காலங்களிலும் எல்லா இடங்களிலும் இருக்கின்றனர். அவர்கள், உலக மக்கள் அனைவர்க்கும் பொதுவானவர்கள். சாதி சமய வேறுபாடு அற்றவர்கள்; நாடு, மொழி, இனம் ஆகிய குறுகிய எல்லையைக் கடந்தவர்கள். அவர்கள் எங்கும் எப்போதும் தோன்றி, மக்கள் இன்புற்று வாழ நல்வழி காட்டுகின்றனர். அவர்கள் ஆன்ம நேய ஒருமைப்பாட்டை,

'எம்மதமும் சம்மதம்' என்ற சமரச சன்மார்க்கத்தை வளர்க்கின்றனர். 'நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்பதே அவர்களின் குறிக்கோள். 'ஒன்றே குலம், ஒருவனே தேவன்' என்பதே அவர்களின் சமயக் கோட்பாடு. எல்லாரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லாமல் வேறு ஒன்றும் அறியாதவர்கள் அவர்கள்.''

''சித்தர்கள் தம்மை உயர்த்திக் கொண்டதோடு நில்லாமல், உலக மக்களையும் உயர்த்துவதற்குப் பணிகள் பல செய்தனர். சித்தர்கள், மக்களின் மன இருளைப் போக்கி, ஞானஒளி பரப்பச் சிந்தனைச் செல்வத்தை வாரி வழங்கினர்; உடல் நோய்களைத் தீர்க்கும் மூலிகைகளைக் கண்டறிந்து மருந்து செய்யும் முறைகளைத் தெரிவித்து நூல்கள் இயற்றினர்; கோள்களின் நிலை, காலமாறுபாடு, சுடர்களின் இயக்கம் ஆகியவற்றை விளக்கிச் சோதிட நூல்கள் எழுதினர். நிறைமொழி மாந்தர்களாக விளங்கிய அவர்கள், மறைமொழிகளை 'மந்திரம்' என்ற பெயரால் வழங்கினர்; மனித ஆற்றலை ஒருமைப்படுத்தவும் கூர்மையாக்கவும் வெளிப்படுத்தவும் மாந்திரிகங்களை வெளியிட்டனர்; தெய்வங்களுக்கு முறைப்படி பூசைகள் செய்யப் பூசைவிதி பற்றிய பாடல்களைப் பாடித் தந்தனர்; ஆத்மசக்தி, யோகநிலை ஆகியவற்றை விளக்கி இலக்கியம் படைத்தனர்.''

''சித்தர்கள் யாவரும் மனிதநேயம் மிகுந்தவர்கள்; சாதி, சமய வேறுபாடுஅற்றவர்கள்; சமரச சன்மார்க்கத்தைப் போற்றுபவர்கள்; போலிச் சடங்குகளையும் பொருளற்ற செயல்களையும் மூட நம்பிக்கைகளையும் கண்டிப்பவர்கள்.''

''அவர்கள், மனித வாழ்வு மிக உயர்ந்தது என்று கருதுகின்றனர்; உடம்பைப் பேணிக் காக்கவேண்டும் என்று வற்புறுத்துகின்றனர்; மனிதன் சிற்றின்பத்தில் மூழ்கிச் சீரழியக் கூடாது என்று எச்சரிக்கை செய்கின்றனர்;

யாக்கை நிலையற்றது; செல்வம் நிலை இல்லாதது; இளமை நிலைபெறாதது என்று இடித்துரைக்கின்றனர்.''

''மனம் தூய்மையின்றிச் செய்யும் தெய்வ வழிபாடு பயன்தராது; பொய், களவு, கொலை, கோபம், கள், காமம் ஆகியவை மனித இனத்தை நாசமாக்கி வீழ்த்திவிடும்; 'கண்டதே காட்சி கொண்டதே கோலம்' என்று வாழும் வாழ்க்கை பயனற்றது; எல்லாம் வல்ல, எங்கும் நிறைந்த இறைவனை மனமொழி மெய்களால் போற்ற வேண்டும்; அன்பு, இரக்கம், தொண்டு ஆகியவற்றைக் கொண்டவர்கள் வாழ்வே சிறந்தது. இவையே சித்தர் பின்பற்றிய நெறிகள்; உலகிற்கு உணர்த்திய நெறிகள்'' என்று சித்தர்களின் சிறப்புகளை எடுத்துரைக்கின்றார்.

இளங்குமரனார், ''சித்தர் பாடல்களைச் சுருங்கச் சொன்னால், சீர்திருத்தப் பெட்டகம்; பகுத்தறிவுப் பாசறை; உள்ளொளி உறையுள்; உயிருய்க்கும் ஒளிநெறி'' என்று வருணிக்கிறார். மேலும், ''சித்தர் நெறியைச் சுருங்கச் சொன்னால், சித்தர் நெறி செந்நெறி; செந்தண்மை நெறி; பின்னைப் புன்மைகளைக் களைந்து முன்னைப் பெருமையைக் கூட்டி வைக்கும் நெறி.''

''பிறப்பின்மை, நிலையாமை, கூடா ஒழுக்கம், வழிகாட்டல் ஆகிய தலைப்புகளில் சித்தர்களின் வாழ்வியல் நெறிகளை வகுத்துக் காட்டி, கூடா ஒழுக்கம் இவையெனக் கூறி, 'அவை மனிதர்க்குக் கூடா' என இடித்துரைக்கின்றனர். அல்ல வழிகள் வேண்டா என விலக்கும் சித்தர்கள், நல்ல வழிகள் இவை இவை என்றும் இவற்றைக் கடைப்பிடி என்றும் வலியுறுத்துகின்றனர்'' சித்தர்கள் காட்டும் இத்தகுநெறிகளை இந்நூல் இவ்வாறு உரைக்கின்றது.

வேம்பத்தூர் கிருஷ்ணன் (1999) என்பாரின் நூலானது, சித்தர்களைப் பற்றி, இதுவரை பலரும் எழுதியிருந்த போதிலும், அப்புத்தகங்களில் காணப்படாத பல அரிய உண்மைகளை விளக்குகின்றது.

சிவவாக்கியர், காகபுசுண்டர் போன்றோரது பாடல்களைப் பற்றிய கருத்து விளக்கம், கருதத்தக்கதாக இருக்கிறது. இந்நூல், சித்தர் யார்?, சிந்தித்துப் பார், அட்டமா சித்திகள், திருமந்திரத் திருமூலர், ஆதிச் சித்தர் ஸ்ரீ அகத்தியர், ரோமரிஷி, போகர், சிலுவைச் சித்தர், பாம்பாட்டி, கோரக்கர், தேரையர், கொங்கணர், ஔவை, திருவள்ளுவர், இடைக்காடர், நம்மாழ்வார், திருமழிசை யாழ்வார், தாயுமானார், திருவலச் சித்தர், பாம்பன் சுவாமி, சீரடி சாயிபாபா என்னும் பல தலைப்புகளைக் கொண்டுள்ளது.

இந்நூலின் மூலம் கீழ்க்காணும் கருத்துகளை நாம் தெரிந்து தெளிய முடிகிறது.

'கடவுளைக் காண முயல்பவன் பக்தன். கடவுளைக் கண்டு தெளிந்தவன் சித்தன்' – அறிஞர் தெ.பொ.மீ.

"கல்வி, மருத்துவம், வானியல், புவியியல், ஜோதிடம் முதலான அனைத்திலும் மெய்ஞ்ஞான – விஞ்ஞானபூர்வ அறிவுச் சுரங்கங்களாக விளங்குபவை, நமது சித்தர்கள் தந்த இலக்கியங்கள்."

"மனிதனை மனிதனாக்குவதற்கு, சில அடிப்படையான மனப் பயிற்சிகள் இன்றியமையாது உள்ளன. அந்தப் பயிற்சிகளை மனிதருக்கு வழங்கி, மனிதர்களை மனிதர்களாக்கி, பிறகு அவர்களை வானவர்களாகவும் உயர்த்துகின்ற உயர்ந்த நோக்கிலே எழுந்தவையே சித்தர் இலக்கியங்கள்" என்கிறார் பேரறிஞர். மீ.ப.சோ.

மேலும், திருமந்திரம் பற்றிக் கீழ்க்காணும் செய்திகளை இந்நூலிலிருந்து அறிய முடிகிறது.

"சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நால்வகை நெறிகளில் யோக நெறிக்கும், அதன் வழியாக அடைய வேண்டிய ஞான நெறிக்கும்

முதலிடம் தருகிறது திருமூலர் அருளிய திருமந்திரம். இறைவழிபாட்டில் பொறியடக்கமும், மன ஒருமைப்பாடும் இன்றியமையாதன. ஆதலால், பிராணாயாமம்முதல் இருக்கை வகை, அட்டாங்க யோக வகை முதலியவற்றைத் திருமந்திரம் ஆதார பூர்வமாக விரித்துரைக்கின்றது."

"இருவினைப் பற்றுகளையும் அறவே நீக்கி, ஐம்புலன்களையும் அறிவால் அடக்கி, எவ்வுயிர்க்கும் அருளுடையவராய் வாழும் பெரியோர் அருளிய வார்த்தைகளே 'மந்திரம்' ஆகும். இத்தகு பெரியோரும் அட்டாவதானச் சித்தருமாகிய திருமூலர் என்னும் சிவயோகியின் திருவாக்கில் மலர்ந்த தமிழ் மந்த்ர தந்திரம்தான் திருமந்திரம்."

ஆதிச்சித்தர் அகத்தியரை, சித்தருள் முதல்வர் என்று இந்நூல் கூறுகிறது. இவருடைய ஞானப் பாடல்களுள் ஒன்று கீழ்க்காணும் பாடலாகும்.

சக்தியே பராபரமே ஒன்றே தெய்வம்
சகலஉயிர் சீவனுக் கும்அது தானாச்சு
புத்தியினால் அறிந்தவர்கள் புண்ணியோர்கள்
பூதலத்தில் கோடியிலே ஒருவ ருண்டு
பக்தியினால் மனம்அடங்கி நிலையில் நிற்பார்
பாழிலே மனத்தைவிடார் பரம ஞானி
சுத்தியே அலைவதில்லை சூட்சஞ் சூட்சம்
சுழியிலே நிலையறிந்தால் மோட்சந் தானே

(அக. ஞா. 9)

இராமகிருட்டினன் **(2000)** அவர்களின் நூல், 1. ஊன்பற்றி நின்ற உணர்வுடை மந்திரம், 2. மரணம் இலாப் பெருவாழ்வு, 3. கடவுள் கோட்பாடுகள், 4. அமுதம் தரும் குண்டலினி, 5. பரியங்கயோகம் ஓர் திருமணப்பரிசு என்னும் தலைப்புகளைக் கொண்டு திருமந்திரத்தை விளக்குகிறது.

'திருமூலரின் கடவுள் கொள்கை' என்னும் தலைப்பில், உடம்பே கோயில், சிற்றம்பலம், குண்டலினி, இரண்டு மனம், இரண்டு மனங்களின் தன்மை, பிள்ளை மனத்தின் தன்மை, அக வழிபாடு, புற வழிபாடு, படமாடும் கோயில், நடமாடும் கோயில், மனக்கோயில் எனப் பல உள்தலைப்புகளில் இறைவனைப் பற்றிய திருமந்திரக் கருத்துகளை வடித்து வழங்குகிறார்.

'திருமூலர் கண்ட மரணமிலாப் பெருவாழ்வு' என்னும் தலைப்பில் 'நமன் இல்லை நாடுமே சென்றே புகுந்தது மில்லை' என்ற திருமூலரின் புரட்சி முழக்கத்தோடு தொடங்கி அழுகணிச் சித்தர், குதம்பைச் சித்தர், பாம்பாட்டிச் சித்தர், போகர், கருவூரார், கொங்கணவர், மச்சமுனி, சட்டைமுனி, தேரையர், ரோமரிஷி, யாகோப்பு, கடுவெளிச் சித்தர், இடைக்காடர், சிவவாக்கியர், அகஸ்தியர், புலஸ்தியர் ஆகியோர் பெரும்பாலும் ஒத்த கருத்துடையவராகத் திகழ்ந்தவர்கள் எனக் கூறுகிறார்.

மரணம் தவிர்க்கும் மாமருந்து பிராணாயாமம் என்பதையும் 'பெண்மயல் கெட்டால் பேரட்ட சித்தியாம்', 'மாதரை மாய வரும்கூற்றம் என்று உன்ன' என்றும் கூறுவதோடு,

பொய்செய் புலன்நெறி ஒன்பதும் தாட்கொளின்
மெய்என் புரவியை மேற்கொள்ள லாகுமே

(திரு. மந். 2557)

காணாக்கண், கேளாச்செவி என்றிருப் பார்க்கு
வாணாள் அடைக்கும் வழியது வாமே (திரு. மந். 568)

என்று மரணமிலாப் பெருவாழ்வு பற்றியும் திருமூலர் கருத்துகளை எடுத்துரைக்கின்றார்.

'திருமண வாழ்க்கையில் பரியங்க யோகம்' என்னும் தலைப்பில் "பெண்ணாசையை அறவே விட்டவர்கள்தான் யோக நெறியில் வெற்றி

பெறலாம் என்று திருமூலர் எண்ணவில்லை. எனவேதான், 'பரியங்க யோகம்' என்னும் அரிய யோக போக முறையை வெளிப்படுத்தியுள்ளார். திருமந்திரம், ஏழாம் தந்திரத்தில் விந்து உற்பனம், விந்து சயம், போக சர ஓட்டம் என்னும் பகுதியில் விரிவாகப் பேசியுள்ளார். மூலரின் மையக் கருத்து இதுவரை யாரும் வெளிப்படுத்தாததும் புதுமையானதுமாகும். ஆணும் பெண்ணும் கலவி செய்யும்போது இருவிதக் கொள்கையை மேற்கொள்ள வேண்டும். குழந்தைப்பேறு வேண்டும் என்ற எண்ணம் தம்பதிகளுக்கு இருந்தால்தான், விந்தைக் கருப்பையில் செலுத்த வேண்டும். மகப்பேறு தேவை இல்லை என்கிற நிலையில் விந்தைச் செலுத்தி வீணாக்குவதைத் தவிர்க்க, அதனை மூலத்தில் அடக்க வேண்டும் என்ற இரண்டு கொள்கைகளும் வலிமையாக நிற்கின்றன'' என்று கூறுகிறார்.

இராசாராம் (2000) அவர்களின் நூல் திருமூலரின் வாழ்க்கைச் சரிதமாகக் கூறப்படும் அனைத்துத் தகவல்களையும் தொகுத்து வழங்குகிறது; திருமந்திரத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட மந்திரங்களையும் அவற்றிற்கான பொழிப்புரையையும் தருகிறது.

'திருமந்திரமே சைவ சித்தாந்தத்தின் முதல் நூல்' என்றும், திருமூலரின் தலையாய கொள்கை 'அன்பே சிவம்' என்பதாகும் என்றும் இராஜாராம் இந்நூலில் விளக்குகிறார்.

திருமூலர் வாழ்க்கை வரலாற்றைச் 'சதுரகிரிப் புராணம் கூறும் திருமூலர் வரலாறு' என்றும், 'பெரியபுராண அடிப்படையில் எழுந்த திருமூலர் வரலாறு' என்றும் இரண்டாகப் பகுத்து, தமக்குக் கிடைத்த அனைத்துச் செய்திகளையும் தொகுத்து வழங்கியுள்ளார்.

'திருமூலரின் வாக்கு' என்னும் தலைப்பின்கீழ், திருமந்திரத்திலுள்ள ஒன்பது தந்திரங்களிலும் சொல்லப்பட்டுள்ள செய்திகளைத் தொகுத்து

வழங்கியுள்ளார். அதனையடுத்து இறைவன் பெருமை, இறைவன் இயல்பு, இறைவன் உறவு, அவன் அருள், அருள் பெறும் வழி ஆகியவற்றைத் திருமந்திரத்தின் வழிநின்று எடுத்துரைக்கிறார்.

சமுதாய வாழ்க்கைக்கு ஆதரவானவை வேதம், ஆகமம் என்னும் இரண்டாகும் என்று பகுத்துக்கொண்டு, அவ்விரண்டைப் பற்றிக் கூறுவதோடு வேதத்தின் சிறப்பு, வேதத்தின் விரிவு, வேதசாரம் ஆகியவற்றையும் கூறுகிறார்.

குருமார்கள், மும்மூர்த்திகள், திருமூலர் உபதேசம் ஆகியவற்றைத் திருமந்திரத்தின் வழிநின்று எடுத்தோதுகிறார்.

நிலையாமை என்னும் தலைப்பின்கீழ், யாக்கை நிலையாமை, செல்வம் நிலையாமை, இளமை நிலையாமை, உயிர் நிலையாமை ஆகியவை பற்றி விளக்குகின்றார்.

கொல்லாமை, புலால் மறுத்தல், பிறர்மனை நயவாமை, பொது மகளிர் இழிவு, நல்குரவு, அந்தணர் ஒழுக்கம், அரசன் கடமை, வானச் சிறப்பு, தானச் சிறப்பு, அறம் செய்வான் திறம், அறம் செய்யாதவன் திறம், அன்புடைமை, கல்வி, கேள்வி, கல்லாமை, நடுவுநிலைமை, கள் உண்ணாமை, பெரியாரைத் துணைக்கோடல், கூடாவொழுக்கம் முதலான தனிமனிதர்க்கும் சமுதாயத்திற்கும் பொருந்தும் பல நீதிகளைத் திருமந்திரத்தின் வழிநின்று எடுத்துரைக்கிறார்.

மேலும், சரீர சித்தி உபாயம் (சாகாக் கலை) பற்றிய திருமந்திரக் கருத்தை எளிய விளக்கங்களோடு எடுத்துக் கூறுகிறார்.

திருமந்திரம் கூறும் திருநீற்றின் சிறப்பைத் தொகுத்து வழங்குவதோடு, அதனைத் திருஞானசம்பந்தப் பெருமான் கூறும் திருநீற்றுப் பதிகத்தோடு இணைத்தும் கூறுகிறார்.

சுத்தானந்த பாரதியார் (2001) வழங்கும் நூலானது பரம்பொருள் விளக்கம், வேதாகம விளக்கம், பரமுத்தி விளக்கம், திருநெறி விளக்கம், உயிர்மெய் விளக்கம், அருளுபதேச விளக்கம், சிருட்டி விளக்கம் ஆகிய ஏழு விளக்கங்களைக் கொண்டுள்ளது.

இறைவனின் பெருமையையும் அவன் மாட்டு பக்தி செலுத்த வேண்டிய பான்மையையும் திருமூலர் வழிநின்று பின்வருமாறு கூறுகிறார். ''அனைத்தின் உள்ளும் அவனே; மண் அகம், வான் அகம் (Ether), விண் அகம் (Heaven), வேத அகம், பண் அகம் அனைத்தும் அவனே; பண்ணில் இசையாயிருப்போன் அவனே; அவ்விசையால் அடியார் கொண்டாடும் ஆண்டவன் அவனே. அவனுக்கே நான் காதலானேன். எப்படி? புறஞ்செல்லும் கண்ணை அகத்தே திருப்பி, பார்வையை உள்ளே ஊன்றி, அவனை உள்ளத்தில் காதலித்தேன். கண் அகத்தே நின்று காதலித்தேன்.''

'போலிகள் வேலை' என்னும் தலைப்பில் கீழ்க்காணுமாறு கூறுகிறார். ''நமது புண்ணிய பூமி அன்னியருக்கு இரையானதேன்? 1. நாம் ஒருவருக்கொருவர் பொறாமை கொண்டு குடுமி பிடித்தலைவதால்; 2. அருட்பெரியார் வகுத்த அறநூல்களைப் போற்றிப் பயிலாமல், அன்னிய மோகத்தில் உறங்குவதால்; 3. நாமே நம் அருள் நூல்களை அலட்சியம் செய்து வைவதால்; 4. பெரியார் வாக்குகளின் உட்பொருளறியாமல் அனர்த்தம் செய்துகொண்டு, மூடப் பழக்கங்களில் கண்மூடித்தனமாக அழுத்தம் செய்வதால்; 5. நாமே நம்மவரை அன்னியருக்குக் காட்டிக் கொடுப்பதால்; இன்னும் நம் பண்பாட்டு இயக்கங்கள் படுத்துப் போவதற்கு இவையே காரணமாயிருக்கின்றன. பழமையைக் காலத்திற்கேற்றவாறு நாம் பயிலவேண்டும். புதுமையை மாசு நீங்க வடிகட்டிக் கொள்ள வேண்டும்.''

''சமயப் போலிகள், சாத்திரப் போலிகள், பெரியார் வாக்குகளை வேறங்கமாக்கிச் சுயநலந் தேடுவார். அவர் மண், பெண், பொன்

வேட்டையில் ஆசை கொண்டவர். அவர் விரதமில்லாதவர்; நோன்பில்லாதவர்; கொல்லாமை, கள்ளாமை, கள்ளுண்ணாமை, விழைவின்மை, சூதின்மை ஆகிய விரதமின்றிக் கண்டபடி பாப வழியில் நடப்பர். அவர் நாட்டம் எங்கே செல்லும்? 'ஈட்டும் இடம் சென்று' பிறகு 'இகவல் உற்றாரே' எனதருமைத் தோழர்களே, தற்கால நடத்தையைத் திருமூலர் அப்படியே படம்பிடித்துக் காட்டுகிறார் பாருங்கள்" என்று சுத்தானந்தர் கூறுகிறார்.

மயில்வாகனன் (2001) என்பாரின் நூல், பெரிய புராணம் எடுத்துக் கூறும் தமிழ்ச் சமூகம் பற்றிய சிறந்த செய்திகளை விளக்குகிறது.

பெரியபுராணத்தில் காணப்படும் அடியார்களின் வாழ்க்கை வரலாறு மூலம் தொண்டுநெறி, குறிக்கோள் வாழ்க்கை, இல்லற மாண்பு, பெண்டிர் பெருமை பேணல் முதலான வாழ்வியல் கருத்துகளை இந்நூலில் எடுத்துரைக்கிறார்.

திருநீலகண்டரின் திருமனைவியை, 'கணவனைத் திருத்திய காரிகையார்' என வருணித்து, அவர் மூலம் கற்பின் சிறப்பு, இல்லாள் மாண்பு, கணவன் மனைவிக்கு மதிப்பளித்து வாழ்தல் முதலான வாழ்வியல் கருத்துகளை எடுத்துரைக்கின்றார்.

திருநீல கண்ட நாயனாரின் வரலாற்றைக் கூறுவதோடு, கீழ்க்காணும் வாழ்வியல் கோட்பாடுகளை இந்நூல் வடித்துரைக்கின்றது. 'ஒருவனுக்கு ஒருத்தி' என்ற சமுதாய நிலையும் இங்கு விளக்கப்படுகிறது. "மகளிர் எதை விட்டுக் கொடுத்தாலும் தம் கணவரை மட்டும் யாருக்காகவும் எதற்காகவும் விட்டுக் கொடுக்கமாட்டார்கள்."

'பிறனை மருவிய நாயகியை, நாயகன் தீண்டாது விலக்குவது போல், பிற பெண்ணை மருவிய நாயகனையும் நாயகி தீண்டாது விலக்க வேண்டும்' என்னும் கோட்பாட்டு, திருநீலகண்டரின் மனைவியார் மூலம் எடுத்துக் காட்டப்படுகிறது.

மேலும், திருநீலகண்ட நாயனார் வாழ்க்கை வரலாற்றின் மூலம், பெண்மைச் சிறப்பு, பெண்ணுரிமை பேணுதல், இல்லறத்தார் கடமைகள், தனிமனித ஒழுக்கம், ஆடவர் கற்பு வலியுறுத்துதல், மனையாளைப் போற்றுதல். பெண்ணினத்தின் கண்ணியம், கணவன் மனைவிக்குள் ஏற்படும் குடும்பப் பிரச்சினைகள் அயலாருக்குத் தெரியாமல் வாழும் பாங்கு முதலான மிகச் சிறந்த வாழ்வியல் நெறிகளை எடுத்துக் கூறுகிறது.

இளையான்குடி மாறநாயனார் வரலாற்றை ஆய்ந்து கூறுவதன் மூலம், 'விருந்தோம்புதல்', 'வறுமையிலும் செம்மையாக வாழ்தல்', 'உலகத்தோடு ஒட்ட ஒழுகுதல்' முதலான வாழ்வியல் நெறிகள் எடுத்துரைக்கப் பெறுகின்றன.

அமர்நீதி நாயனார் வரலாற்றின் மூலம் அனைத்து உயிர்களிடத்தும் அன்பு செலுத்துதல் வேண்டும், அன்பே எல்லாச் சமயத்திற்கும் பொதுப்பண்பு, பொய்தீர் ஒழுக்க நெறியே சமய நெறி ஆகிய வாழ்வியல் செய்திகள் எடுத்துரைக்கப்படுகின்றன.

மேலும் இந்த நூலின் மூலம், பெரிய புராணம் கண்ட சமுதாயத்தில், அக்காலத் திருமண நிகழ்வில் சாதி குல வேறுபாடுகள் எவையும் தடைக் கற்களாக இருந்ததில்லை என்பது தெரிய வருகின்றது.

"பெரியபுராணத்தில் அந்தணர் திருமணமுறை, வேளாளர் திருமணமுறை, வணிகர் திருமணமுறை என்று பல நிலைகளில் விளக்கிக் கூறப்படுகின்றது. ஒத்த குலத்திலேயே பெண்பார்த்தல், பெரியோரும், பெற்றோரும் மூதறிவாளர்களும் சென்று பெண்பார்க்கும் முறை, பெண் பேசும் முறை, திருமண இசைவுமுறை, திருமணநிகழ்வு, திருமண ஓலை அனுப்புதல், மணமகன் ஊர்வலக் காட்சி, பெண் வீட்டில் திருமணம் நிகழ்தல் போன்ற பல அரிய செய்திகள் விளக்கப்படுகின்றன."

"சமய வாழ்விலும் சமுதாய வாழ்விலும் பெண்ணியம் பெருமை பெற்றிருக்கிறது. பெண்டிர் இயல்புகள், சமூக மதிப்புகள், சமூகம்

பெண்டிர்க்கு வழங்கிய உரிமைகள், பெண்டிர் பொறுப்புகள், இல்லறக்கடமைகள், செயல்பாடுகள், சமத்துவம், கற்பின் சிறப்பு, கற்பின் ஆற்றல், கணவர் சொற்காத்தல் ஆகிய அனைத்து வாழ்வியல் நெறிகளையும் கூறுவதால் பெரிய புராணம் சிறந்ததோர் வாழ்வியல் நூல் என்பது ஆய்வின் தெளிவு''. இத்தகைய செய்திகள் இந்த ஆய்வில் வாழ்வியல் கருத்துகளை வகைப்படுத்த உதவியது.

சுவாமிநாதன் (2002) என்பார் தம் நூலில், 'எளிதாக அறம் செய்யலாமே', 'இறைவன் இருக்கின்றானா?' முதலான பதினான்கு தலைப்புகளில் திருமந்திரம் காட்டும் வாழ்வியல் கருத்துகளைத் தொகுத்து வழங்கியுள்ளார்.

ஒவ்வொரு வாழ்வியல் கருத்துக்கும் திருமந்திரப் பாடல்களோடு திருக்குறள், சிவஞான சித்தியார், பெரிய புராணம், தேவாரம், புறநானூறு முதலான இலக்கியங்களையும் இணைத்துச் சிறந்த சான்றுகளோடு விளக்கியுள்ளார்.

திருமந்திரம், பிரம்மச்சரியம், கிரஹஸ்தம், வானப்பிரஸ்தம், துறவறம் என எந்நிலையில் இருப்போருக்கும் ஏற்றதே.

எவ்வகையிலும் நல்வழி வாழ வழி கூறுகிறது. பக்தர்கள், ஞானிகள், அரசர், அந்தணர், வணிகர், வேளாளர், கற்றோர், கல்லாதோர், ஆத்திகர், நாத்திகர், யோகிகள், போகிகள், ரோகிகள் போன்ற பல திறப்பட்டோருக்கும் ஏற்றம் தரக்கூடியது திருமந்திரம் என்று சுவாமிநாதன் எடுத்துக்காட்டுகிறார்.

இந்நூலில் உள்ள 'எளிதாக அறம் செய்யலாமே' என்ற கட்டுரையில், 'யாவர்க்கு மாம்இறை வற்கொரு பச்சிலை' என்னும் திருமந்திரப் பாடல் விளக்கப்படுகிறது.

'இறைவன் இருக்கின்றானா?' என்னும் கட்டுரை, 'உள்ளத்தும் உளன்' என்ற திருமந்திரத்துவழி அந்த வினாவுக்குத் திருமூலர் கூறும்

விடையைக் கூறுகிறது. 'அடப்பண்ணி வைத்தார்' என்னும் திருமந்திரப் பாடலின் விளக்கமாக, 'நல் இதயம்' என்னும் கட்டுரை அமைந்துள்ளது.

திருக்கோயில் பூசனை முறைகள் மற்றும் பூசனைமுறை வழுவுவதால் ஏற்படும் குறைபாடுகள் பற்றி, 'முன்னவ னார்கோயில்', 'பேர்கொண்ட பார்ப்பன்' என்னும் திருமந்திரப் பாடல்கள் கொண்டு விளக்கம் தருகிறார். 'நன் மக்கட் பேறு' என்ற கட்டுரையில் திருமந்திரம் காட்டும் கர்ப்பக் கிரியைப் பகுதியிலுள்ள கருத்துகளை விளக்கியுள்ளார்.

'ஆர்க்கும் இடுமின்' என்ற கட்டுரையில், நாம் பிறருக்குச் செய்கின்ற அறமானது தானம், உபகாரம், தர்மம் என மூவகைப்படும் என்பதை எடுத்துக்காட்டி, திருமந்திரப் பாடலான 'ஆர்க்கும் இடுமின்' என்ற பாடலோடு ஒப்பிட்டு விளக்கியுள்ளார்.

'கரகத்தால் நீர் அட்டிக் காவினை வளர்க்கார்' என்னும் பாடலடியை எடுத்துக்கொண்டு திருமூலர் மரம் வளர்த்தல் பற்றியும் கூறுகிறார், என்று எடுத்துக்காட்டி, 'மரங்களை வளர்க்கும் மனங்களை வளர்ப்போம்' என்று நூலாசிரியர் நயமாக எடுத்துரைக்கிறார்.

தம்மண்ண செட்டியாரின் (2003) திருமூலர் திருமந்திரத்தில் மந்திர யந்திர ஞான யோகங்கள் என்ற நூலானது மந்திர யோகம் முதலாக, கேசரி யோகம் ஈறாக 43 உள் தலைப்புகளைக் கொண்டு விளங்குகிறது.

இந்நூலாசிரியர் திருமந்திரம் கூறுகின்ற அண்டலிங்கம், பிண்டலிங்கம், சதா சிவலிங்கம், ஆத்மலிங்கம், ஞானலிங்கம் என்னும் ஐவகைச் சிவலிங்கம் பற்றி விளக்குகிறார்.

திருவம்பலச் சக்கரம், புவனாபதிச் சக்கரம், சாம்பவி மண்டலச் சக்கரம், நவாக்கரி சக்கரம் ஆகிய சக்கர வழிபாட்டு முறைகளைத் திருமந்திரம் வழிநின்று விளக்குகிறார்.

திரு ஐந்தெழுத்து பற்றி விளக்கி, அதன் பயன், தூலம், சூக்குமம், அதி சூக்குமம் ஆகியவற்றையும் விளக்குகிறார்.

திருவம்பலச் சக்கரம், சாம்பவி மண்டலச் சக்கரம், புவனாபதிச் சக்கரம் ஆகியவற்றைப் படங்களுடன் விளக்கியிருப்பது இந்நூலின் தனிச் சிறப்பாகும்.

இறைவனை அடைவதற்குரிய நெறிகளைத் தியான யோகம், மந்திர யோகம், ஞான யோகம் எனத் திருமூலர் கூறியிருப்பதை இந்நூல் சிறப்பாக விளக்குகிறது.

அட்டாங்க யோகத்தைச் சிறப்பாக விளக்கியிருப்பதோடு கேசரி யோகம், அதனைப் பயிலும் விதமான அட யோகம், இலம்பிகா யோகம், இராஜ யோகம் ஆகியவற்றையும் இந்நூல் விளக்குகிறது.

தெய்வநாயகம் (2003) என்பார் எழுதிய நூல், சமய வரலாற்றில் சித்தர் சித்தாந்தம், சித்தர் வித்தகம், சித்தர் மெய்ப்பொருள் முதலான பதினான்கு தலைப்புகளைக் கொண்டு விளங்குகிறது.

பத்ரகிரியார், சிவவாக்கியர், பாம்பாட்டிச் சித்தர், கொங்கணர், கருவூர்த் தேவர், நந்தி ஆகிய அறுவரைப் பற்றிய வரலாற்றுச் செய்திகளும் இடம்பெற்றுள்ளன.

சித்தர்கள் காட்டும் கடவுள் கொள்கை, தொண்டு நெறியாகிய சித்தர்நெறி, யோகமே போகம், சித்தர் நாத்திகம், சித்தர் வாழ்க்கை முறை, சித்த அமுதம், யோகப் பயிற்சி, உயிர் ஓம்பல், சித்த மதம், சித்த மருத்துவம், சித்தர்கள் கண்ட தெய்வங்கள், சித்தர் உரைத்த மணி மந்திரம் முதலான பல செய்திகளை இந்நூல் எடுத்துக் கூறுகிறது.

'தத்துவச் சொற்பொருள்' என்னும் தலைப்பில் சித்தர்கள் கண்ட, கையாண்ட தத்துவச் சொற்களுக்குப் பொருள் விளக்கம் தரப்பட்டுள்ளது.

இரத்தின சபாபதி (2004) என்பாரின். கட்டுரையின் மூலம் அறியப்படும் செய்திகள்: 1. திருமந்திரம் பற்றிய பொது அறிமுகம். 2. பெரியபுராணத்தை ஒட்டிய திருமூலர் வரலாறு. 3. திருமந்திரத்தில் உள்ள ஒன்பது தந்திரங்களின் தொகைப் பொருள், 4. திருமந்திரத்தில் காணப்படும் அத்வைத வேதாந்தக் கருத்துகள் ஆகியன.

பொது அறிமுகம்

உபதேசம் முப்பதும், மந்திரம் முந்நூறும் ஆகிய இரண்டையும் தன்னுள் அடக்கியதே திருமந்திரம்.

திருமூலர் வரலாறு

திருமூலரை அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவராக இணைத்து, வழங்கற்பாடு செய்தவர் சுந்தர மூர்த்தி சுவாமிகள். தாம் அருளிய 'திருத்தொண்டத் தொகை'யில், 'நம்பிரான் திருமூலன் அடியார்க்கும் அடியேன்' என்ற தொடரால் முதன்முதலில் விளக்கிக் கூறியவர், தேவார மூவர்களுள் இறுதியில் நின்ற சுந்தர மூர்த்தி சுவாமிகளே!

அதனை ஒட்டி, திருத்தொண்டத் தொகைக்கு வகைநூல் செய்த, திருநாரையூர் நம்பியாண்டார் நம்பிகள், தாம் அருளிய திருத்தொண்டர் திருவந்தாதியில், திருமூலர் வரலாற்றை ஒரு பாடலில் பாடியருளினார்.

சுந்தரர் ஒருவரியில் அமைத்த திருமூலர் வரலாற்றை, நம்பியாண்டார் நம்பிகள் ஒரு பாடலில் சிறிது விளக்கமாக மொழிந்தருளினார்.

திருமூலர் வரலாற்றை ஒரு வரியாற் சுந்தரும், ஒரு பாடலால் நம்பியாண்டார் நம்பிகளும் முறையே தொகையாக, வகையாக எடுத்து

விளக்கியருளிய பிறகு, தெய்வச் சேக்கிழாரடிகள் திருமூலரின் வரலாற்றை விரிவாக இருபத்தெட்டுப் பாடல்களில் அமைத்தருளினார்.

சுந்தரர் அருளிய ஒரு வரி – தொகை
நம்பியாண்டார் நம்பிகளின் ஒரு பாடல் – வகை
தெய்வச் சேக்கிழாரின் 28 பாடல்கள் – விரி

என அமைத்துக்கொள்ள வேண்டும் என்னும் மரபு வழிச் சிந்தனையாகிய கருத்துகளை அறியமுடிகிறது.

ஒன்பது தந்திரங்கள்

திருமூலர் அருளிய திருமந்திரம் ஒன்பது பிரிவுகளாகப் பிரிக்கப் பெற்றுள்ளது. திருமந்திரம் என்பது நூலின் பெயர். திருமந்திரம் ஒன்பது தந்திரங்களாகப் பிரிக்கப்பெற்றுள்ளது.

ஒன்பது தந்திரங்களும் (பிரிவுகளும்), ஒன்பது ஆகமங்களின் விளக்கம் என்று கூறும் திருமந்திரப் பாடலைக் கீழே காணலாம்.

பெற்றநல் ஆகமம் காரணம் காமிகம்
உற்றநல் வீரம் உயர்சிந்தம் வாதுளம்
மற்றுஅவ் வியாமளம் ஆகும்கா லோத்தரம்
துற்றநற் சுப்பிரம் சொல்லு மகுடமே (திரு. மந். 73)

மேலும், திருமந்திரம் சைவ சித்தாந்த சாத்திரமும் தோத்திரமுமாய் அமைந்த நூல் என்றும், அது யோக பாதத்தைச் சொல்லுகின்ற நூலே என்றும், அது சித்தர் நெறியை வலியுறுத்திக் கூறும் நூல் என்றும், மந்தர யந்தர மார்க்கங்களை எடுத்துக் கூறுவதற்காக வந்த நூல் என்றும் பல்வேறு ஆராய்ச்சியாளர்கள் பல்வேறு ஆய்வுரைகளை வழங்கியுள்ளார்கள்.

'சைவ சித்தாந்தம்' என்ற தொடரை முதன்முதலாக எடுத்து வழங்கிய பெருமை திருமூலருக்கே உண்டு என்றும், 'தற்பரம் கண்டுளோர்

சைவசித் தாந்தரே' என்று வரையறை செய்தவர் திருமூலரே என்றும் கொள்வது போலவே,

'வேதாந்தங் கண்டோர் பிரமவித் தியாதரர்' என்று குறிப்பிட்டுக் கூறி, 'வேதாந்தப் பொருளை ஆராய்ந்துணர்ந்தவர்கள் பிரம வித்தியாதரர்கள் என்ற வரையறையையும் செய்தமைத்தவர் திருமூலரே' ஆகிய செய்திகளை அறிகிறோம்.

இராமகிருட்டினன் **(2004)** என்பாரின் நூல் திருமந்திரம் பற்றிய பல கருத்துகளை எடுத்துக் கூறுகிறது. திருமூலர் வரலாற்றை விளக்குகிறது. பிராணாயாமம் பற்றிய விளக்கத்தையும் அட்டாங்க யோகங்களின் அருமை பெருமைகளையும் எடுத்துக் கூறுகிறது. திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகியோர் கூறும் யோக நெறிகளைத் திருமந்திரத்தோடும் சித்தர்களின் பாடல்களோடும் ஒப்பிட்டுக் காட்டுகிறது. சித்தர்கள் கூறும் வழிபாட்டுச் சடங்குகளை யாவரும் புரிந்து கொள்ளும்படி எடுத்துக் கூறுகிறது.

சிவலிங்க வரலாறு, ஆறு ஆதார விளக்கம், வாசி யோகம் ஆகியவை பற்றியும் விளக்குகிறது.

இந்நூலிலிருந்து திருமந்திரம் ஒரு யோகநூல், வாழ்வியல் நூல், புரட்சி நூல் என்பதை அறிய முடிகிறது.

இந்நூலில் திருமந்திர விளக்கம், சிவலிங்க தத்துவம், சிவபூமி ஆதார விளக்கம், ஆறாதாரச் சிலை முதலானவை படங்களுடன் விளக்கப்படுகிறது.

ஊர்கள் தோறும் சிவலிங்கம் மற்றும் அரசமர நிழலில் விநாயகருடன் இரட்டைப் பாம்பு பின்னிப் பிணைந்திருக்கும் கல் காணப்படுகிறது. இதற்கு, அகப் பூசையான பிராணாயாமத்தால் ஆறாதார

மலர்களையும் நிராதார மீதானங்களையும் வழிபடுவது என்பது இதன் கருத்து என்னும் விளக்கத்தை இந்நூல் தருகிறது.

'பாரத பூமியும் மனித வடிவமும்' என்னும் தலைப்பின் கீழ் ''திருமூலர் இந்தியத் துணைக் கண்டத்தை ஓர் மனித வடிவாகக் கண்டார். அதன்படி இமயமலையின் உச்சி, தலை; மேற்குத் தொடர்ச்சி மலையும் கிழக்குத் தொடர்ச்சி மலைகளும் இரண்டு கைகள்; இலங்கை, கன்னியாகுமரி இரண்டும் கால்கள்; ஆஞ்ஞை முதலாக மூலாதாரம் ஈறாகச் சொல்லப்பட்ட ஆறு ஆதாரங்களும் இந்திய மனித வடிவத்தில் அமைந்துள்ளன. 'முகம்பீட மாமட முன்னிய தேயம்' என்னும் பாடல் இதனை உணர்த்தும். இறுதியாக உள்ள 'தில்லை' என்னும் சிதம்பரமே, மூலாதரம் எனக் கருதுகிறார். அதனால், தில்லையின் மூலவராகத் திகழும் இலிங்கம், 'திருமூலர்' என்று அழைக்கப்படுவது காண்க'' என்று கூறுவதும் சிந்திக்கத்தக்கது.

தொல்காப்பியம் – பொருளும் வாழ்வியலும் (2004) என்னும் நூல், 120 கட்டுரைகளைக் கொண்ட ஒரு தொகுப்பு நூல். இந்நூலில் உள்ள 'அகத்திணை காட்டும் மக்கள் வாழ்க்கை ஒழுக்கம்', 'அகத்திணை காட்டும் மக்கள் வாழ்வியல்', 'கற்பியல் உணர்த்தும் இல்வாழ்க்கை நெறி', 'தொல்காப்பியம் காட்டும் அறவாழ்வு', 'தொல்காப்பியரின் வாழ்வியல் நெறிகள்', 'தொல்காப்பியர் கால வாழ்வியல் அறிவியல்', 'தொல்காப்பியர் தெளிவுறுத்தும் வாழ்வியல் நெறி' ஆகிய கட்டுரைகள் தொல்காப்பியர் காட்டும் வாழ்வியல் கருத்துகளைத் தெளிவாக விளக்குகின்றன. ஆதலால் இந்நூல் சார்பு இலக்கியமாக எடுத்துக் கொள்ளப்பெறுகின்றது.

இந்நூலின் அணிந்துரையில் 'தொல்காப்பியம்' என்னும் பெயருக்கு, பால சுந்தரனார் தரும் விளக்கம் படித்து மகிழத்தக்கதாக உள்ளது. அது ''தொல்காப்பியம் என்னும் காரணப்பெயர், தொல் (தொன்மை) + காப்பு +

இயம் என்னும் மூன்று சொற்களால் ஆக்கப் பெற்றதொரு தொகைச்சொல். இவற்றின் பொருள் விளக்கம்: 'தொன்மை' என்பது தமிழக மக்களின் நாகரிகம், பண்பாடு, மொழி, இயலிசை நாடகம் என்னும் முத்தமிழ் மரபுகளையும் இயல் நெறிமுறைகளையும் குறிக்கும். 'காப்பு' காத்தல் என்பது, மக்கள் அவற்றைச் சோர்வாலும் அறியாமையாலும், மறவாமலும் பிழைபுரியாமலும் காத்தலைக் குறிக்கும். 'இயம்' என்பது இயம்புதல்; அஃதாவது இனிமையாகக் கூறுதல். இவற்றின் திரண்டபொருள், தொன்றுதொட்டு வழங்கி வரும் தமிழ்மொழி மரபுகளைக் காக்கும் நெறிமுறைகளை இயம்பும் நூல்'' என்பதாகும்.

மேலும், ''தொல்காப்பியம், மக்கள், குடும்ப வாழ்க்கையையும் ஆட்சி அமைப்பையும் மேற்கொண்டு, அறநெறி, ஒழுகலாறு, தெய்வச் சிந்தனை, சமய ஒழுக்கங்களை வகுத்துக்கொண்டு வாழ்ந்து வரும் வாழ்க்கை நிலைகளைப் பொருளிலக்கணம் விளக்குகிறது'' என்பதும் அவர்கூற்று.

'தொல்காப்பியரின் வாழ்வியல் நெறிகள்' என்னும் கட்டுரையில், தலைவன் தலைவிக்கு இருக்க வேண்டிய பண்புகள், தேவையில்லாத பண்புகள் ஆகியவற்றைப் பின்வருமாறு விளக்குகிறார்.

''சிறந்த தலைவன் தலைவியர் சிறந்த பிறப்பு, உயர்ந்த குடிமை, நல்ல ஆண்மை, சரியான வயது, சிறந்த அழகு, காதலுக்குரிய அல்லது காமக் கூட்டத்திற்கு வேண்டிய காதல் அன்பு, ஆன்ற அடக்கம், அமர்ந்த அருள், சிறந்த அறிவு, உயர்ந்த செல்வம் ஆகியவை கொண்டவர்களாக இருத்தல் வேண்டும். ஒத்த குணமுடையவர்களாக இருந்தால், இருவரிடையே முழுமையான அன்புநிலை, புரிதல்நிலை உருவாகும். களவு, கற்பு, வாழ்க்கையில் இன்பமான நிலையில் வாழலாம் என்பதனை உய்த்துணர வைக்கின்றார். தொல்காப்பியரின் ஆண், பெண் திருமண வயதும், உளவியல் ரீதியாக நோக்கும்போது இல்லற வாழ்க்கையில் இருவரிடையே புரிதல் தன்மையினை உணரவைக்கின்றது.''

ஒத்த அன்புடையவர்களின் ஒருமித்த ஒரு கூட்டமே காமக்கூட்டம் என்பதையும் காட்டி,

நாட்டம் இரண்டும் அறிவுடம் படுத்தற்குக்
கூட்டி உரைக்கும் குறிப்புரை யாகும் (தொ. கா. 1042)

உயிரினுஞ் சிறந்தன்று நாணே நாணினும்
செயிர்தீர் காட்சிக் கற்புச்சிறந் தன்று ....
(தொ. கா. 1059)

ஆகும். வாழ்வியல் நிலை, ஒழுக்க நிலை இவற்றுடன் 'முந்நீர் வழக்கம் மகடூஉவோடு இல்லை', 'மடலேறுதல் பெண்களுக் கில்லை' போன்ற செயல்பாட்டினையும் சுட்டியுள்ளார்.

'பெருமையும் உரனும் ஆடூஉ மேன' எனத் தலைமகனுக்குரிய பெருமையும் சிறப்புமாகும் இலக்கியவழி காணலாகும் செய்திகளைக் கோட்பாடுகளின்வழி விளக்கியுள்ளார் தொல்காப்பியர்.

இவ்வாறு சங்க காலத்தில் மட்டுமல்லாமல், எக்காலத்தும் எல்லா மக்களுக்கும் உரிய வாழ்வியல் நெறிகளைத் தொல்காப்பியர் எடுத்துரைத்துள்ளார்.

தொல்காப்பியர் தெளிவுறுத்தும் வாழ்வியல் நெறி பற்றி இக்கட்டுரை கூறும் செய்திகளைக் காண்போம்.

தலைவியின் பண்பு

"அடக்கம், அமைதி, மனங்கோடாது சொல்லுதல், நன்மை பயப்பனவும் தீமை பயப்பனவும் அறிதல், உள்ளக் கருத்தறிதலருமை என, பெண்டிர்க்குரியதோர் இயல்புகளை உணர்த்துகிறார் தொல்காப்பியர். இத்தகு குணமுடைய பெண்களே இல்லத் தலைவிகளாக விளங்குகிறார்கள்."

தலைவன் பண்பு

"விருந்தினரையும் சுற்றத்தாரையும் சுற்றத்தார்தம்மைச் சூழ்ந்திருப்பவர்களையும் உபசரித்தல், பாதுகாத்தல், அன்பு செலுத்துதல், பெற்றோரும் மற்றோரும் கற்பித்த நல்லுரைகளை மறவாது பின்பற்றல் ஆகியவை இல்லாளின் கடமைகளாக அமைய, இல்லறத்தை இனிது நடத்துவதற்கேற்ற செல்வத்தைச் சேர்த்தல் தலைவனின் பொறுப்பாக அமைகிறது."

இறுதியாக, "வாழ்க்கை நிலையாமையும், மரணம் நிலைத்தலும் வாழ்வின் அவலமாகும். வாழ்க்கையில் ஒளிநிறை பக்கமும் இருத்தல் இயல்புதான். எப்படியும் வாழலாம் என்று இல்லாமல், இப்படித்தான் வாழ வேண்டும் என நெறிபிறழாமல், கொள்கை போற்றி வாழும் தொல்காப்பியர் கால வாழ்வியல் இனிமை பயப்பதாக இருந்தது. களவும் கற்பும் கொண்ட இல்லறத்தில் பொருளீட்டலும் அறஞ்செய்தலும் மறஞ் செய்தலும் வாழ்வியல் நெறியாக அமைந்தன" என விளக்குகிறார்.

ஒருவர்மீது மற்றொருவருக்குள்ள காதலை அறிவுறுத்தும் உரையாக, குறிப்புரையாக உள்ளன, அவர்கள்தம் கண்களாகும் என்கின்றார். காமக் கூட்டத்தில் தலைவியின் அழகைக் கண்டு 'தெய்வப் பெண்ணோ?' என்று ஐயுறும் தலைவன்,

வண்டே இழையே வள்ளி பூவே
கண்ணே அலமரல் இமைப்பே அச்சமென்று
அன்னவை பிறவும் ஆங்கண் நிகழ .... (தொ. கா. 1041)

என்பதால் பெண்ணே என்பதனை அறிகின்றான். தெய்வச் சந்திப்பு, திருமண நிகழ்வு, தேவையான குணங்கள் இவற்றையெல்லாம் பட்டியலிட்டுத் தேவையில்லாத குணங்களையும் பட்டியலிட்டுள்ள

நிம்பிரி கொடுமை வியப்பொடு புறமொழி
வன்சொற் பொச்சாப்பு மடிமையொடு குடிமை
இன்புறல் ஏழைமை மறப்போ டொப்புமை
என்றிவை யின்மை என்மனார் புலவர் (தொ. கா. 1220)

அவர்களிடம் இழுக்காறு இருத்தல் கூடாது. அறனழியப் பிறரைச் சூழும் சூழ்ச்சி இருத்தல் கூடாது. தன்னையே வியந்து நிற்கும் போக்கோ, புறமொழியோ, பொல்லாப்போ, கடுஞ்சொல் கூறிக் கடுமையாகத் தாக்கும் பண்போ இருத்தல் ஆகாது. தலைவன் தலைவிக்குரிய பொதுவான குணங்களை மட்டுமல்லாமல் தனித்தனியாகப் பின்பற்ற வேண்டிய நெறிகளையும் வரிசைப்படுத்தியுள்ளார்.

அச்சம், நாணம், மடம், செறிவு, செம்மை, நிறைவு, அறிவு, அருமை, செப்பு, அழகு, அருள், அன்பு போன்ற பண்புகளைக் கொண்டவள் தலைவி.

அச்சமும் நாணும் மடனும் முந்துறுதல்
நிச்சமும் பெண்பாற் குரிய என்ப (தொ. கா. 1045)

உயிரும் நாணும் மடனும் என்றிவை
செயிர்தீர் சிறப்பின் நால்வர்க்கும் உரிய (தொ. கா. 1147)

செறிவும் நிறைவும் செம்மையும் செப்பும்
அறிவும் அருமையும் பெண்பா லான (தொ. கா. 1155)

பெண்ணினத்துக்குச் செறிவு வேண்டும்; செம்மை வேண்டும்; நிறைவு வேண்டும்; செப்பும் மொழியில் சிறப்பு வேண்டும்; அறிவு வேண்டும்; அச்சம், நாணம், மடம், செறிவு, நிறைவு, செம்மை, அறிவு, உயிர் இவையெல்லாம் பெண்ணிற்குத் தேவையானவைதாம். ஆனால் இவற்றுக்கெல்லாம் மேலானது கற்புநெறி.

"மணம் புரிந்தபின் இருவரது பெற்றோரும், 'கணவனைவிடச் சிறந்த தெய்வம் வேறொன்றும் இல்லை; அவனை இவ்வாறு வழிபட வேண்டும்' என்றும், சான்றோர் முதலிய பெருமக்கள், விருந்தினர், ஏனையோரிடம் இவ்வாறு நடந்து கொள்ள வேண்டுமெனக் கணவனும், பெண்ணிடம் கற்பித்தலே 'கற்பியல்' என்பது நச்சினார்க்கினியர் கூற்று. மனையறத்தைக் கற்றுக்கொடுத்தல் கற்பியல் எனப்படும். பொருள் தேடுதல் கல்வி, தூது, போர் போன்றவை காரணமாகக் கணவன் வெளியில் கழிக்கும் காலமே அதிகம்; வீட்டில் மனைவியுடன் மகிழ்ந்திருத்தல் குறைவே. மனைவியோ, மணம் புரியும் முன்னர்வரை, தோழிகளுடன் விளையாடி மகிழ்வதை மட்டுமே கொண்டவள். குடும்பம், விருந்தோம்பல், சுற்றம்காத்தல் பற்றிய திறன் அவளுக்குக் கிடையாது. மணம் புரிந்த பின்னும் அவள் வெளியில் செல்வாள் இல்லை. இல்லத்திற்குள்ளேயே இருப்பதால் மேற்குறித்த அறம் தலைவிக்குக் கற்பிக்கப்படுகிறது. ஆனால் கற்பு என்பதற்கு இன்றைய பொருளே வேறு."

"அறம், பொருள், இன்பம், வீடு இந்நான்கும் அமையப்பெறுதல் இல்வாழ்க்கை நெறி. இதன் அடிப்படையிலேயே கற்பியலின் கூற்றும் அமைகின்றது. என்னையெனில், ஆணும் பெண்ணும் களவு வழிப்பட்டுப் பின் இன்புறுகிறான் கணவன். மனைவி தன் கணவனைப் போற்றிப் பணிந்து, சுற்றத்தார் நலம் காத்து, விருந்தினரை உபசரித்து உணவு படைக்கிறாள். இவ்வாறு இல்லறம் மேற்கொள்ளும் தலைவற்குரிய மாண்புகளாகத் தொல்காப்பியர் கூறுவது எண்ணுதற்குரியது." இத்தகைய தொல்காப்பியம் காட்டும் வாழ்வியல் நெறிகள், திருமூலர் கருத்துகளோடு ஒத்துப்போகின்றன.

இதுவரை கண்ட சார்பு நூல்களின் துணைகொண்டு, வாழ்வியல் நெறிகள் பற்றிய விளக்கத்தையும் சித்தர்கள் பற்றிய வாழ்க்கைக் குறிப்பு மற்றும் சித்தர்கள் காட்டும் வாழ்வியல் கல்வி, திருமூலர் காட்டும் வாழ்வியல் கல்வி ஆகியவற்றின் நுட்பங்களையும் உணரமுடிந்தது. அவற்றை அடியொற்றி இந்த ஆய்வு தொடருகின்றது.

இயல் - மூன்று

இயல் மூன்று

வாழ்வியல் கல்வியின் விளக்கம்

வாழ்க்கை என்பது, உயிர்வளியை (பிராண வாயுவை) உள்ளிழுத்து, கரிவளியை (கரியமில வாயுவை) வெளியிட்டு நிகழும் ஒரு மூச்சுப் பயிற்சி அன்று. அஃதோர் கலை; ஒரு நெறிமுறை; ஒரு நெடும்பயணம்; மனிதத்துக்குரிய புனிதம்; மானுடன் மறைந்த பிறகும் மறையாது நிற்கும் மானுடம். அதனால்தான் மக்கள் வாழ்க்கையை 'வாழ்க்கை' எனவும் பிற உயிர்களின் வாழ்க்கையை 'இயக்கம்' எனவும் சுட்டுகிறோம்.

வாழ்க்கையின் சிறப்பானது, எவ்வளவு காலம் வாழ்கிறோம் என்பதைப் பொறுத்ததன்று. எப்படி வாழ்கிறோம் என்பதைப் பொறுத்தது. 'எப்படி?' என்பதற்கான விளக்கமாக, 'வரையறை', 'இலக்கணம்', 'வாழும் முறை', 'வாழ்வியல் நெறி', 'வாழ்வியல் கல்வி' என்பன அமைகின்றன.

திருவள்ளுவப் பெருந்தகை, இதனை, 'வாழ்வாங்கு' என்னும் தொடரால் குறிப்பிடுகின்றார்.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும். (திருக்குறள். 50)

என்னும் குறட்பாவில் 'வாழ வேண்டிய முறைப்படி/நெறிப்படி இந்த வையத்துள் வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் ஒருவனாக வைத்துப் போற்றப்படுவான்' என்னும் கருத்தை வெளிப்படுத்துகிறார். இக்குறட்பாவில் வந்துள்ள, 'வாழ்வாங்கு' என்னும் தொடர் 'வாழவேண்டிய நெறிப்படி' என்னும் பொருள் தருவதாகும்.

மகாகவி பாரதியார்.

உயிர்க ளிடத்தில்அன்பு வேணும் – தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்
வயிர முடையநெஞ்சு வேணும் – இது
வாழும் முறைமையடி பாப்பா. (பா.பா.)

என்று கூறுவதன் மூலம், வாழும் நெறியை, வாழும் முறைமை என்று வழிப்படுத்துகிறார்.

ஒல்காப் பெரும்புகழ் தொல்காப்பியம், பாரத நாட்டின் கண்களெனப் போற்றப்பெறும் இதிகாசங்களான இராமாயணம், மகாபாரதம் மற்றும் பத்துப்பாட்டு, எட்டுத்தொகை நூல்கள், பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் திருக்குறள், நாலடியார், நான்மணிக்கடிகை, இனியவை நாற்பது, இன்னா நாற்பது, திரிகடுகம், ஆசாரக் கோவை, பழமொழி நானூறு, சிறுபஞ்சமூலம், ஏலாதி மற்றும் ஔவையாரின் ஆத்திசூடி, கொன்றை வேந்தன், மூதுரை, நல்வழி மற்றும் உலகநீதி, வெற்றி வேற்கை, நன்னெறி, நீதிவெண்பா, நீதிநெறி விளக்கம், அறநெறிச்சாரம் எனவரும் தமிழ் இலக்கியங்கள் யாவும் வாழ்வியல் நெறிகளை வகுத்துக் காட்டுவனவாகவே உள்ளன.

சுருக்கமாகக் கூறினால் இலக்கியங்கள் யாவும் இன்புறுத்துவனவாகவும், வாழ்வியல் நெறிகளை அறிவுறுத்துவனவாகவுமே உள்ளன.

மகாபாரதம் 'மண்ணாசை கூடாது' என்னும் வாழ்வியல் நெறியையும் இராமாயணம் 'பெண்ணாசை கூடாது' என்னும் வாழ்வியல் நெறியையும் பெரிதும் உணர்த்துகின்றன.

சங்க இலக்கியங்களுள் தலையாயதான தொல்காப்பியம், எழுத்துக்கும் சொல்லுக்கும் இலக்கணம் சொல்வதோடு, வாழ்க்கைக்கும் இலக்கணம் இயம்பும் பொருளதிகாரத்தைத் தன்னகத்தே கொண்டு

இலங்குகிறது. அதன்கண், அகவாழ்வு, புறவாழ்வு என வாழ்க்கையை இரண்டாகப் பகுத்து ஒவ்வொன்றும் எப்படி இலங்குவது சிறப்பென எடுத்தியம்புகின்றது.

அன்பினை மையமாகக் கொண்டது அகவாழ்வு. மறம் பாடும் புறத்திலும் அறம் பேணல் சிறப்பெனக் கூறி வாழ்க்கையைப் பொருள் பொதிந்ததாகக் காட்டுவது புறவாழ்வு ஆகும்.

தொல்காப்பியம் காட்டும் வாழ்வியல் கல்விக் கருத்துகள்

தலைவியின் பண்பு

அடக்கம், அமைதி, மனங்கோடாது சொல்லுதல், நன்மை பயப்பனவும் தீமை பயப்பனவும் அறிதல், உள்ளக் கருத்தறிதலருமை எனப் பெண்டிர்க்குரியதாம் இயல்புகளை உணர்த்துகிறார் தொல்காப்பியர். இத்தகு குணமுடைய பெண்களே இல்லத் தலைவிகளாக விளங்குகிறார்கள்.

தலைவன் பண்பு

விருந்தினரையும் சுற்றத்தாரையும் சுற்றத்தார்தமைச் சூழ்ந்திருப்பவர்களையும் உபசரித்தல், பாதுகாத்தல், அன்பு செலுத்துதல், பெற்றோரும் மற்றோரும் கற்பித்த நல்லுரைகளை மறவாது பின்பற்றல் ஆகியவை இல்லாளின் கடமையாக அமைய, இல்லறத்தை இனிது நடத்துவதற்கேற்ற செல்வத்தைச் சேர்த்தல் தலைவனின் பொறுப்பாக அமைகிறது.

வாழ்க்கை நிலைபாமையும், மரணம் நிலைத்தலும் வாழ்வின் அவலமாகும். வாழ்க்கையில் ஒளிநிறை பக்கமும் இருத்தல் இயல்புதான். எப்படியும் வாழலாம் என்று இல்லாமல், இப்படித்தான் வாழவேண்டும் என நெறிபிறழாமல், கொள்கை போற்றி வாழும் தொல்காப்பியர்கால வாழ்வியல் இனிமை பயப்பதாக இருந்தது. களவையும் கற்பையும் கொண்ட இல்லறத்தில் பொருளீட்டலும், அறஞ்செய்தலும், மறஞ்செய்தலும் வாழ்வியல் நெறிகளாக அமைந்துள்ளன.

'இனியவை கண்டு இன்புறுக! இன்னாதன கண்டு கவலற்க!' (புறம். 194) என்னும் வாழ்க்கைத் தத்துவத்தைப் பக்குடுக்கை நன்கணியார் தம் புறப்பாடல் வழியாக வடித்துக் கூறுகிறார்.

வாழ்தல் வேண்டிப் பொய் கூறேன்; மெய் கூறுவல்......

பீடில் மன்னர்ப் புகழ்ச்சி வேண்டிச்

செய்யா கூறிக் கிளத்தல்

எய்யா தாகின்றெம் சிறுசெந் நாவே! (புறம். 148)

என்று கூறி, வன்பரணர் உண்மையைப் போற்றி வாழ்தலைக் காட்டுகிறார்.

கடமையுணர்வுடன் வாழ்தலைப் புறநானூறு 312 ஆம் பாடலில், 'ஈன்று புறந்தருதல் தாயின் கடமை! சான்றோன் ஆக்குதல் தந்தையின் கடமை! வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லர் கடமை! நன்னடை நல்குதல் வேந்தன் கடமை! செருக்களத்துக்குச் சென்று களிறு முதலான நால்வகைப் படைகளையும் எதிர்நின்று பொருதழித்தல் காளையின் கடமை!' எனப் பொன்முடியார் காட்டுகிறார்.

'உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே'(மணி. காதை. 11. 96) என்பதன் மூலம் நன்றியுணர்வுடன் வாழ்தலை வலியுறுத்துகின்றார் சீத்தலைச்சாத்தனார்.

வறியவருக்கு ஈந்து மகிழ்ந்து வாழ்தலைப் பெரிதும் வற்புறுத்தும் பான்மையை வள்ளுவத்திலும் புறப்பாடலிலும் காணமுடிகிறது.

'ஈத்துவக்கும் இன்பம் அறியார் கொல்?' (திரு.கு. 228), என வள்ளுவமும் 'செல்வத்துப் பயனே ஈதல்' (புறம். 189) எனப் புறப்பாடலும் எடுத்தியம்புகின்றன.

விருந்தோம்பும் பண்பு பெற்று வாழ்தலை இராமாயணம், மகாபாரதம் ஆகிய இதிகாசங்களும் பேசுகின்றன.

'தொல்லோர் சிறப்பின் விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை' (சிலம்பு. காதை. 16.73) எனக் கண்ணகி கூற்றாகச் சிலம்பும் பேசுகின்றது. வள்ளுவமோ, இல்வாழ்வோரின் தலையாய கடமைகளுள் ஒன்றாக விருந்தோம்பலைக் கூறுகின்றது. அக்கருத்தை,

தென்புலத்தார் தெய்வம் விருந்துஒக்கல் தானென்றாங்கு
ஐம்புலத்தாறு ஓம்பல் தலை. (திரு.கு. 43)

இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு. (திரு.கு. 81)

இக்குறட் பாக்களால் அறியலாம்.

சார்ந்திருப்போரின் துன்பம் நீக்கி வாழ்தலை,

இன்பம் விழையான் வினைவிழைவான் தன்கேளிர்
துன்பம் துடைத்தூன்றும் தூண். (திரு.கு.615)

என வள்ளுவமும்,

சான்றோர், செல்வம் என்பது சேர்ந்தோர்
புன்கண் அஞ்சும் பண்பின்
மென்கட் செல்வம் செல்வம்என் பதுவே. (நற். 210)

என நற்றிணையும் நவில்கின்றன.

பிறருக்கு நல்லது செய்து வாழவியலாவிடினும் அல்லது செய்யாது வாழ்தலை, புறப்பாடலாசிரியரான நரிவெரூஉத்தலையார்,

நல்லது செய்தல் ஆற்றி ராயினும்
அல்லது செய்தல் ஓம்புமின்.... (புறம் 195)

எனக் கூறி வற்புறுத்தியுள்ளார்.

புறப்பாடலாசிரியர்களான கணியன்பூங்குன்றனார், பிசிராந்தையார், கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி, நக்கீரர், சோழன் நல்லுருத்திரன்,

கோப்பெருஞ்சோழன் முதலானோர் வடித்தெடுத்து வகைப்படுத்தி வழங்கும் வாழ்வியல் நெறிகள் தேனொடு கலந்த தெள்ளமுதாகச் சிந்தையைக் குளிரச் செய்கின்றன.

இனி, ஐம்பெருங்காப்பியங்கள் காட்டும் வாழ்வியல் நெறிகளுள் சிலவற்றைக் காண்போம்.

நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம்,

அரைசியல் பிழைத்தோர்க்கு அறங்கூற் றாவதூஉம்
உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்தலும்
ஊழ்வினை உருத்துவந்து ஊட்டும் என்பதூஉம்.
(சிலம்பு. பதிகம். 55–57)

என்னும் முப்பெருநெறிகளைக் காட்டுவதோடு சமய ஒருமை, இன ஒருமை, மகளிர் மாண்பு, இருமுதுகுரவர் பேணல் முதலான வாழ்வியல் நெறிகளை வலியுறுத்துகின்றது.

தமிழன்னையின் மெல்லிடையைப் பொலிய வைக்கும், சீத்தலைச் சாத்தனாரின் பாத்தமிழ் மணிமேகலை,

அறமெனப் படுவது யாதெனக் கேட்பின்
மறவாது இதுகேள் மன்னுயிர்க் கெல்லாம்
உண்டியும் உடையும் உறையுளும் அல்லது
கண்டது இல்......... (மணி. காதை. 25. 228 – 231)

(உலகத்தோர்க்கு உணவு, உடை, உறையுள் ஆகிய மூன்றையும் வழங்கலே தலையாய அறம் என்பது இதன்பொருள்) என்று கூறுவதோடு,

கள்ளும் பொய்யும் காமமும் கொலையும்
உள்ளக் களவும்என்று உரவோர் துறந்தவை

தலைமையாக் கொண்டநின் தலைமையில் வாழ்க்கை

புலைமைஎன்று அஞ்சிப் போந்த பூங்கொடி....

(மணி. காதை. 24. 77 – 80)

என்றும் கூறி, பரத்தையொழிப்பு, மது ஒழிப்பு, கொலையொழிப்பு முதலான வாழ்வியல் நெறிகளை வடித்து வைக்கிறது.

சீவகசிந்தாமணிக் காப்பியமானது, இறையன்பு, பெண்மை போற்றல், உயிர்களிடத்து அன்பு, முயற்சியின் பெருமை, செய்ந்நன்றி மறவாமை, கொடைப்பண்பு, கடமையுணர்வு, மக்களாட்சி மாண்பு, பகைவரையும் பாராட்டும் பண்பு, நல்வினை தீவினைப் பயன்களைச் சமமாகக் கருதுதல் முதலான வாழ்வியல் நெறிகளை வலியுறுத்தும் காப்பியமாக உள்ளது.

இளமை நிலையாமை–யாக்கை நிலையாமை–இல்லறவாழ்வின் உயர்வு–கற்புடைமையின் சிறப்பு–புல்லறிவின் பொருத்தமின்மை முதலான வாழ்வியல் கோட்பாடுகளை வளையாபதி வழங்குகின்றது.

ஐம்பெருங்காப்பியங்களுள் இறுதியாக வைத்துக் கொள்ளப்படும் குண்டலகேசியானது புலன் அடக்கம், மனத்தூய்மை, அவா அறுத்தல், ஊழின் வலிமை முதலான வாழ்வியல் நெறிகளை வழங்குகிறது.

ஐஞ்சிறு காப்பியங்களுள் ஒன்றான யசோதர காவியம்,

அடுக்குவது அடுக்கு மானால் அஞ்சுதல்

பயனின் றென்றே..... (யசோதரகாவியம். பா.எண். 61)

என்பன போன்ற கருத்துகளைக் கூறி வாழ்க்கையின் யதார்த்தத்தைப் புரிய வைக்கின்றது.

பெருங்கதை (உதயணகாவியம்) நட்பின் சிறப்பு, பெரியோரைப் பேணல், கல்வியின் மேன்மை, அமைச்சர்தம் பண்பு, துறந்தோர்ப் பேணுதல் முதலான வாழ்வியல் நெறிகளை எடுத்துரைக்கின்றது.

பக்திச் சுவை நனிசொட்டும் பனுவலாகிய பெரியபுராணம், இறைவனின் முன் யாவரும் சமம், ஆடை அணிகள் ஆபரணங்களை ஆண்டவன் விரும்புவதில்லை, மக்கள் தொண்டே மகேசன் தொண்டு, உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்று பேசுவார் நட்பு கூடாநட்பு, பெரியோரெல்லாம் பெரியோரல்லர், சிறியோர் எல்லாம் சிறியரும் அல்லர், அன்பெனும் பிடியுள் அகப்படுமலையே இறைவன் என்பன போன்ற வாழ்வியல் நெறிகளை எடுத்தியம்புகின்றது.

இறைவன் எங்கும் நிறைந்தவன் என்று எண்ணாதவர்கள் உண்மையான இறையுணர்வு உடையவர்களாக இருக்க முடியாது. எங்கும் இறைவன் நீக்கமற நிறைந்து இலங்குகின்றான் என்று எண்ணாதவர்களுக்கு இறைவன் இல்லாதவனாகவே ஆகிவிடுவான். இதனையே, நாவுக்கரசர் பின்வருமாறு கூறுகிறார்.

கங்கை ஆடிலென்? காவிரி ஆடிலென்?
கொங்கு தண்கும ரித்துறை யாடிலென்?
ஒங்கு மாகடல் ஓதநீ ராடிலென்
எங்கும் ஈசனெ னாதவர்க் கில்லையே. (திரு.தே. 6225)

மக்களாய்ப் பிறந்தோர் யாவரும் ஏதேனும் ஒரு குறிக்கோளை மையமாகக் கொண்டு வாழ வேண்டும்.

ஓரறிவுயிர்களான புல், நாங்கூழ்ப் புழு, ஆறு போல்வனகூட ஒரு குறிக்கோளோடு வாழ்கின்றன என்பார் மனோன்மணீயம் சுந்தரனார். ‘குறிக்கோளிலாது கெட்டேன்’ என்பார் அப்பரடிகள்.

செல்வம் பெற்றவர்கள், அதனைப் பிறருக்கு ஈதல் சிறந்த வாழ்வியல் நெறியாகும்.

'செல்வத்துப் பயனே ஈதல்' (புறம். 189) என்று புறநானூறும், 'செல்வர்க்கழகு செழுங்கிளை தாங்குதல்' (வெ. வே. 3) என்று வெற்றி வேற்கையும் சொல்லுகின்றன. இல்லையென்று இரப்பவர்களுக்கு, இல்லையென்று மறுத்துரைப்பது பெருங்குற்றம் என்பதனை அப்பரடிகள்,

இரப்பவர்க்கு ஈயவைத்தார் ஈபவர்க்கு அருளும் வைத்தார்
கரப்பவர் தங்கட்கு எல்லாம்கடு நரகங்கள் வைத்தார்
(திரு.தே. 4541)

என்று எடுத்துரைக்கிறார்.

இறைவன் மீது உண்மையான அன்பின்றி, பயனற்ற சாத்திரங்களைப் பேசி, கோத்திரமும் குலமும் பெரிதெனக் கொண்டு வாழ்தல் பயனற்றது என்பதை,

சாத்திரம் பலபேசும் சழக்கர்காள்
கோத்திரமும் குலமும் கொண்டுஎன் செய்வீர்?
(திரு.தே. 5832)

என அப்பரடிகள் வினவுகின்றார்.

"வாழ்வாங்கு வாழ்வதென்றால் என்ன பொருள்? முறையாக உண்டு, உடுத்து வாழ்வதா? இல்லை. வாழ்க்கையின் குறிக்கோளை அடைகிற வழியில் பயனுடைய வாழ்க்கை வாழ்தலே வாழ்வாங்கு வாழ்தல். 'வாழ்க்கையைப் பொருளோடு கூட்டி, அறத்தொடு அணைத்து, இன்பத்தோடு இணைத்து, பின், விலகி வீடுபெறும் வழிநின்று வாழ்வதே முறையான வாழ்க்கை' என்னும் வாழ்வியல் கோட்பாட்டை வழங்குவன சமயப் பனுவல்கள்" என்பது குன்றக்குடி அடிகளார் கருத்தாகும்.

அன்பு நெறியே மாந்தர்நெறி. எவ்வுயிரும் தம்முயிர்போல் எண்ணி இரங்கி உதவும் வாழ்வே இன்பவாழ்வு.

எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன்று அறியேன் பராபரமே.
(தாயு. பராபரக் கண்ணி. 221)

என்று எண்ணும் உயர்ந்த வாழ்வியல் நெறிகளை வாரி வழங்குவனவும், வாழ்தல் என்பது எளிதான செயல் அன்று. அதனினும் வாழ்வாங்கு வாழ்தல் என்பது ஓர் அரிய முயற்சி. அத்தகைய அரிய முயற்சியைத் தூண்டித் துலங்கச் செய்வனவும் பக்திப் பனுவல்களே.

"வாழ்க்கை என்பது கட்டி முடிக்கப்பெற்ற மாளிகையன்று. விநாடிக்கு விநாடி எண்ணங்கள் என்ற கற்களை அடுக்கி, ஊக்கம் என்ற சாந்து கூட்டி, அன்பு என்ற நீரில் கலவைசெய்து, ஆள்வினை என்ற கொற்றாள் துணை செய்ய, கட்டி முடிக்கப்பெறும் மாளிகையாகும். வாழ்க்கை, நமக்குரிய ஒவ்வொரு விநாடியையும் நாம் பயன்படுத்தும் முறையினைப் பொறுத்து ஆக்கத்தை அல்லது அழிவைத்தரும்" என்னும் குன்றக்குடி அடிகளாரின் இக்கூற்று சிந்திக்கத்தக்கது.

இத்தகு வாழ்வியல் நெறியை, பக்குவத்தைத் தருவன சமயப் பனுவல்களாகும்.

உலகின் முதல் பெண்ஞானி எனப் பாரதியார் போற்றிய, தமிழ் மூதாட்டி ஔவை வழங்கும் வாழ்வியல் நெறிகள்:

"தருமத்தைச் செய்வதற்கு நீ ஆசைப்படு! தணிய வேண்டுவது கோபமாகும். கொடுக்க முடிந்த பொருளை, இரப்பவர்களுக்கு இல்லை என்று ஒளிக்காதே! ஒருவர்க்கு மற்றொருவர் கொடுப்பதை இடையே நின்று தடுக்காதே. உன்னிடத்து உள்ள பொருளைப் பிறர் அறியும்படி சொல்லாதே. செய்யும் செயலில் மனத்துணிவைக் கைவிடாதே. கணித நூலையும் இலக்கண நூலையும் கல்லாமல் இகழ்ந்து தள்ளாதே. ஒருவரிடத்தில் சென்று ஒரு பொருளை யாசிப்பது இழிவான செயல்.

யாசிப்பவர்களுக்குக் கொடுத்து நீயும் உண்ணுக. உலக ஒழுக்கத்திற்குப் பொருந்த நட. எப்பொழுதும் நூல்களைக் கற்பதைக் கைவிடாதே. பொறாமையான வார்த்தைகளைப் பிறரிடம் பேசாதே.

கண்ணால் கண்டதற்கு மாறாக, வேறொன்றைச் சொல்லாதே. உயிர்மெய் எழுத்துகளுள் 'ஙகரம்' போல உன் சுற்றத்தைத் தழுவுக. கேட்பவருக்கு இன்பம் உண்டாகும்படி பேசு. நட்புக்கு ஏதுவாகிய நற்குண நற்செயல்களை நன்கு அறிந்து, பின் ஒருவரோடு நட்பு செய். உன் தந்தையையும் அன்னையையும் போற்றிக் காப்பாற்று. ஒருவர் உனக்குச் செய்த நன்மையை எப்போதும் மறவாதே. நியாய சபைக்கு நீதி கேட்க வரும் மக்களிடம், பொருளை வலியப் பறித்து வாழாதே. இயற்கைக்கு மாறான செயல்களைச் செய்யாதே. கபடமான வார்த்தைகளை யாரிடமும் பேசாதே. ஒழுங்கு இல்லாத செயல்களை நீ ஒருபோதும் செய்யாதே. இளம் பருவத்திலேயே கல்வியைக் கற்றுக்கொள். அறச் செயல்களைச் செய்ய மறவாதே. ஒருவரைப் பார்த்துக் கோபத்துடன் பேசுவதை மறந்துவிடு.

பிற உயிர்களுக்குத் தீங்கு செய்யாது காப்பாற்றுவதே உயர்ந்த நோன்பாகும். உன்னுடைய உடல், பொருள் எல்லாம் பிறர்க்குப் பயன்படும்படி வாழ்ந்திரு. இழிந்த குணத்தை நீக்கி விடு. உயர்ந்த குணத்தைக் கைவிடாதே. நல்லவரோடு நட்பு செய்து பின் அவரை விட்டுப் பிரியாதே. பிறர்க்குத் தீமை செய்வதை விட்டுவிடு. கற்றோர் சொல்லும் நல்ல சொற்களைக் கேட்பதற்கு முயற்சி செய். பிறருடைய பொருளைக் கவர்வதற்கு ஆசைப்படாதே. குற்றம் பொருந்திய விளையாட்டை விட்டுவிடுக. அரசு விதிகளுக்கு அடங்கி நட. அறிஞர்கள் கூடியுள்ள கூட்டத்தில் நீ சேர்ந்திரு. பொய்யான வார்த்தைகளை மெய்போலப் பேசாதே. புகழுக்குக் காரணமான நல்ல செயல்களைச் செய்ய மறவாதே. கேட்பவர் உள்ளம் வருந்தும்படி ஒன்றையும் பேசாதே. பொருளுக்கு அழிவுதரும் சூதாடுதலை ஒருபோதும் விரும்பாதே. செய்யும் செயல்களைச் செம்மையாகச் செய். சேரத்தக்க நல்ல இடத்தை ஆராய்ந்து அறிந்து

சேர்ந்து கொள். பிறர் உன்னைச் 'சீ' என வெறுக்கும்படியாகத் திரியாதே. உன்னைப் பிறர், சான்றோன் எனக் கூறும்படி நடந்துகொள். தக்கவர்க்குத் தானம் செய்தலை விரும்பு.

பாவச் செயல்களைச் செய்யாமல் விலக்குக. வருத்தத்தை உண்டாக்கக் கூடிய செயலுக்கு இடம் கொடாதே. தொடங்குவதற்குமுன் நன்றாக ஆராய்ந்து பார்த்து ஒரு வினையை முடியச் செய். கடவுளைத் தாழ்த்திப் பேசாதே. உன் நாட்டில் வாழ்பவருடன் பகையின்றிப் பொருந்தி வாழ். பழமையான நண்பரை மறந்து விடாதே. தோல்வி அடையக் கூடிய செயல்களில் ஈடுபடாதே. நன்மை செய்தலை உறுதியாகப் பின்பற்று. உன் நாட்டினர் பலரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய செயல்களைச் செய். உன்னுடைய உயர்ந்த நிலையினின்று ஒருபோதும் தாழ்ந்து விடாதே. நோய் தரும் பொருந்தாத உணவுகளை உண்ணாதே. அறிவைத் தருகின்ற நூல்கள் பலவற்றைக் கற்றுக்கொள். ஒழுக்கம் தவறாமல் நேரிய வழியில் நட. பிறர் துன்புறத்தக்க தீவினைகளைச் செய்யாதே. பயனற்ற அற்ப வார்த்தைகளைப் பேசாதே. பெரியோர்களால் பழிக்கப்படும் இழிந்த சொற்களைப் பேசாதே. சொல்லும் சொற்களில் குற்றம் உண்டாகும்படி ஒன்றையும் சொல்லாதே. பெருமை பெறும்படி நல்ல வழியிலே நில். உன் பெருமையைப் பேசியவரை ஆதரித்து வாழ்ந்திடு. அறிவிற் சிறந்த சான்றோரை உனக்குத் துணையாக ஆக்கிக் கொள்க. அறியாமையைப் போக்கி விடுக. அறிவில்லாத சிறுபிள்ளைகளோடு சேராதே.

செல்வத்தை வீண்செலவு செய்யாமல் பாதுகாத்து வாழ்க. எதனாலும் உள்ளம் கலங்காதே. சுருங்கச் சொல்லாமல் சொற்கள் மிகுதிப் படும்படியாகப் பேசாதே. செரிக்கும் அளவுக்குமேல் அதிகமாக உண்ணுதலை விரும்பாதே. கொடுங்குணம் உள்ளவர்களுடன் நட்புச் செய்யாதே. பெரியோருடைய சொல்லைக் கேட்டு நட. சொல்லப்படும் பொருளைக் கேட்போருக்கு ஐயம் நேராதவாறு சொல்லுக. நிலையற்ற பொருள்களின்மீது கொள்ளும் ஆசையை வெறுத்துவிடுக. உன்னுடைய

சாமர்த்தியத்தைப் பிறரிடம் புகழ்ந்து பேசாதே. வாதிடும் சொற்களைப் பெரியோர் முன்னிலையில் முற்பட்டுப் பேசாதே. ஊர் மக்களுடன் இன்ப துன்பங்களில் கலந்து வாழ்க. பகைவர்களை ஒரு போதும் நம்பாதே. யாதொரு வழக்கிலும் ஒரு சார்பாகப் பேசாதே.'' (ஆ.சூ. 1 – 108)

இதேபோல், கொன்றை வேந்தன், மூதுரை முதலான நூல்கள் வாயிலாக ஔவையார் வாழ்வியல் நெறிகள் பலவற்றை வகுத்து வழங்குகின்றார். உலகத்திலுள்ள இயற்கையின் படைப்புகள் யாவுமே வாழ்வியலை உணர்த்துகின்றன; வாழ்வியல் கல்விக் கருத்துகளை வழங்குவனவாக உள்ளன.

இயற்கை அன்னை கற்பிக்கும் வாழ்வியல் கல்வி குறித்துச் சற்றுக் காண்போம். பூமி, பொறுமையைக் கற்பிக்கின்றது. காற்று, யாவரோடும் கலந்து பழகும் பண்பைக் கற்பிக்கின்றது. நீரானது மக்களுக்கு விடா முயற்சியைக் கற்பிக்கின்றது. நெருப்பானது தீய எண்ணங்களைச் சுட்டுப் பொசுக்கும் பண்பைக் கற்பிக்கின்றது.

தனக்குக் கீழ் என்ன மாறுதல் ஏற்பட்டாலும் நிலைமாறாத் தன்மைகொண்ட வானம், கொண்ட கொள்கையை விடாமல் கடைப்பிடிக்கும் வாழ்வியல் நெறியை உணர்த்துகின்றது.

கதிரவன், தீயோருக்கும் நன்மை புரிதலையும் யாவரையும் சமமாகக் கருதும் பண்பையும் கற்பிக்கின்றது.

சந்திரன், தான் வளர்ந்தாலும் தேய்ந்தாலும் பிறருக்கு ஒளி வழங்கத் தவறுவதில்லை. ஆதலால், சந்திரன் பிறர் நலத்தைப் பெரிதாகப் பேணும் வாழ்வியல் நெறியை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

மேகக்கூட்டம், கள்ளமில்லாமல் மழை வழங்கி, அருள் உள்ளத்தோடு வாழவேண்டும் என்பதைக் கற்றுக்கொடுக்கின்றது.

இலட்சியத்தை அடையும்வரை, நிற்காமல் போய்க்கொண்டே இருக்க வேண்டும் என்பதை, நிற்காமல் ஓடிக் கொண்டிருக்கும் ஆறுகள் கற்பிக்கின்றன.

மரங்கள், தம்மை வெட்டுபவருக்கும் நிழல் தந்து, தீங்கிழைப் போருக்கும் பெருந்தன்மையோடு நன்மை செய்தல் வேண்டும் என்ற பேருண்மையைக் கற்பிக்கின்றன.

சமணசமயம் வழங்கும் இத்தகைய வாழ்வியல் நெறிகளை ஈண்டு நினைப்பது பெருமைக்கு உரியதாகும்.

ஆயகலைகள் அறுபத்து நான்கனுள், சிற்பக்கலை ஒன்று. சிற்பக் கலை ஒரு தனித்தன்மை வாய்ந்த கலை. பிற கலைகள், ஒன்றைக் கொண்டு வந்து சேர்ப்பதால் மிளிர்வன. ஆனால் சிற்பக் கலையோ, வேண்டாதவற்றைச் செதுக்கித் தள்ளிவிடுவதால் உருவாகின்ற அழகுக் கலை. அதுபோல், மனித வாழ்க்கையில், வேண்டாதனவற்றை, செய்யக் கூடாதனவற்றை, வாழ்க்கைக்குப் பொருந்தாதனவற்றைத் தள்ளி வைப்பதும் வாழ்வியல் நெறியாகும். அத்தகைய நெறிகளாவன:

"நல்லோர் மனத்தை நடுங்கச் செய்தல், வலிய வழக்கிட்டு மானங் கெடுத்தல், தானங் கொடுப்போரைத் தடுத்து நிறுத்தல், கலந்த சினேகனைக் கலகஞ்செய்தல், மனமொத்த நட்புக்கு வஞ்சகஞ்செய்தல், குடிவரியுயர்த்திக் கொள்ளை கொள்ளல், ஏழைகள் வயிறு எரியச் செய்தல், தருமம் பாராது தண்டஞ்செய்தல், மண்ணோரம் பேசி வாழ்வழித்தல், உயிர்க்கொலை செய்வோர்க்கு உபகாரம் செய்தல், களவு செய்வோர்க்கு உளவு சொல்லுதல், பொருளை இச்சித்துப் பொய் சொல்லுதல், ஆசைகாட்டி மோசம் செய்தல், வரவு போக்கு ஒழிய வழியடைத்தல், வேலையிட்டுக் கூலி குறைத்தல், பசித்தோர் முகத்தைப் பாராது இருத்தல், இரப்போர்க்குப் பிச்சை இல்லையென்றல், கோள் சொல்லிக் குடும்பங் குலைத்தல், நட்டாற்றில் கைநழுவவிடல், கலங்கி யொளித்தோரைக் காட்டிக் கொடுத்தல், குருவை

வணங்கக் கூசி நிற்றல், குருவின் காணிக்கை கொடுக்க மறுத்தல், கற்றவர்தம்மைக் கடுகடுத்தல், பெரியோர் பாட்டில் பிழை சொல்லுதல், பக்ஷியைக் கூண்டில் பதைக்க அடைத்தல், கன்றுக்குப் பாலூட்டாது கட்டிவைத்தல், ஊன் சுவையுண்டு உடல் வளர்த்தல், கல்லும் நெல்லும் கலந்து விற்றல், அன்புடையவர்க்குத் துன்பம் செய்தல், குடிக்கின்ற நீருள்ள குளத்தைத் தூர்த்தல், வெயிலுக்கு ஒதுங்கும் விருக்ஷம் அழித்தல், பகைகொண்டு அயலவர் பயிரை அழித்தல், பொது மண்டபத்தை இடித்தல், ஆலயக் கதவை அடைத்து வைத்தல், சிவனடியார்களைச் சீறி வைதல், தவஞ் செய்வோரைத் தாழ்வு சொல்லுதல், சுத்த ஞானிகளைப் பழித்துரைத்தல், தந்தை தாய் மொழியைத் தள்ளி நடத்தல், தெய்வம் இகழ்ந்து செருக்குக் கொள்ளுதல்'' (மனு. மு. வா. பக். 42, 43) இன்னோரன்ன பாவச் செயல்களைச் செய்யாமல் வாழ்தல், நெறிப்பட்ட வாழ்க்கையாகும்.

மேலும் ''நெல் முதலான பயிர்க்கு நீர் விடுதல், குருடர்க்குக் கோல் கொடுத்தல், இரவில் வந்தவர்க்கு இடம் தந்து உதவுதல், அஞ்சி வந்து அடுத்தவர்க்கு அபயம் கொடுத்தல், தாகம் கொண்டோர்க்குத் தண்ணீர் கொடுத்தல், பசிகொண்டு பரிதவிப்போர்க்கு அன்னம் கொடுத்தல், சேற்றில் விழுந்து திகைக்கின்றோர்க்குக் கைகொடுத்தல், ஆற்று வெள்ளத்தில் அகப்பட்டோரைக் கரையேற்றுதல், சத்திரம் கட்டித் தருமஞ்செய்தல், இன்னபிற நற்செயல்களை வாய்ப்புறுபொழுதெலாம் செய்து வாழ்தல்'' (மனு. மு. வா. பக். 19) ஆகியவை அறங்கூறும் வாழ்வியல் நெறிகளாகும். இவை யாவும் இராமலிங்க அடிகள் காட்டும் வாழ்வியல் கல்வியாகும்.

ஆணவம், கன்மம், மாயை என்னும் முக்குற்றங்களும் மனிதர்களுக் குரிய குற்றங்கள். எனினும், ஆணவமின்றி வாழ்ந்திடப் பெரிதும் முயலவேண்டும்.

ஏனெனில், விபத்துகளினாலோ, விடம் அருந்தியோ, தூக்கிட்டோ, நோயுற்றோ இறந்தவர்களைவிட, அகங்காரத்தினால் அழிந்தோர் பலராவர்.

"சூரபத்மனின் பலம், இராவணனின் வீரம், கம்சனின் வலிமை, இரணியனின் வர வலிமை, வாலியின் வலிமை, துரியோதனன் உள்ளிட்ட கௌரவர்களின் ஆற்றல், மதுகைடவர் போராற்றல், மாவலிச் சக்கரவர்த்தியின் வெற்றிச் சிறப்புகள், சேரமுகன் வீரம், கீசகனின் வலிமை, திரிபுரர்களின் வீரம், தட்சனின் ஆற்றல் இவை யாவும் அவர்களுடைய ஆணவத்தால், 'யான்', 'எனது' என்னும் செருக்கால் அழிந்தவையாகும்" (கும. ச. 47) என்னும் குமரேச சதகக் கூற்று நினைவுகூரத் தக்கது.

ஆதலால், செருக்கற்று வாழவேண்டும். செருக்குற்றுத் தருக்கித் திரிவதற்கு ஏற்ற வளப்பங்கள் பலவற்றைப் பெற்றிருந்தால்கூட, செருக்கற்ற பெருமிதத்தோடு வாழ வேண்டும் என்பதும் வாழ்வாங்கு வாழ்தற்குரிய நெறியாகும்.

மக்களாய்ப் பிறந்த ஒவ்வொருவரும், அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை என்பதை யுணர்ந்து, மனைத்தக்க மாண்புடைய ஒருத்தியை மணம் புரிந்து, அவ்வில்லாளோடும் இணைந்து, இல்லறச் சோலையில் நல்லறம் பல புரிய வேண்டும். அவ்வறங்களாவன அன்புடைமை, அருளுடைமை, அடக்கமுடைமை, அறிவுடைமை, ஆள்வினையுடைமை, ஊக்கமுடைமை, ஒழுக்கமுடைமை, நாணுடைமை, பண்புடைமை, பொறையுடைமை ஆகிய உடைமைகளைப் பெற்று, அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்சொல், புறங்கூறல், கயமை, பயனிற்சொற் பாராட்டுதல், பிறனில் விழைதல் முதலான கீழ்மைப் பண்புகளை விலக்கி, நடுவுநிலை பிறழாது, நன்றி மறவாது, வாய்மை போற்றி, ஒப்புரவொழுகி, கல்வி கேள்வி வாயிலாக அறிவைப் பெருக்கி, சிற்றினம் தவிர்த்து, பெரியாரைப் பிழையாது, அவர்தம் துணைகொண்டு வாழும் வாழ்வியல் நெறிகள் முதலானவை திருவள்ளுவர் வகுத்துக் காட்டும் வாழ்வியல் நெறிகளாகும்.

இத்தகைய வாழும் நெறிகளை, வாழ்வியல் கோட்பாடுகளை, வாழ்வாங்கு வாழ்வதற்குரிய வழிவகைகளை வகுத்தளித்த சான்றோர் பலராவர். அவர்களுள் ஆதிமனு, பிளாட்டோ, அரிஸ்டாட்டில், குறளாசான் திருவள்ளுவர், வள்ளலார், விவேகானந்தர், அரவிந்தர், அண்ணல் காந்தியடிகள் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

இச்சான்றோருள், வாழ்வியல் நெறிகளை வகுத்துக் காட்டியோர் சிலர்; வாழ்ந்தும் காட்டியோர் சிலர். திருவள்ளுவர், வள்ளலார், காந்தியடிகள், விவேகானந்தர் ஆகியோர் வாழ்வியல் நெறிகளை வகுத்தும் காட்டினர்; வாழ்வாங்கு வாழ்ந்தும் காட்டினர்.

இனி, இச்சான்றோர் காட்டிய வாழ்வியல் நெறிகள், எவற்றை அடிப்படையாகக் கொண்டவை என்பதைக் காண்போம். திருவள்ளுவர் காட்டும்வாழ்க்கை, அறத்தை அடிப்படையாகக் கொண்டது. அரிஸ்டாட்டில் காட்டும் வாழ்க்கை, அரசியலை அடிப்படையாகக் கொண்டது. அண்ணல் காந்தியடிகள் காட்டும் வாழ்க்கை, அன்பையும் இன்னா செய்யாமையையும் அடிப்படையாகக் கொண்டது. வள்ளலார் காட்டும் வாழ்க்கை, அருளை அடிப்படையாகக் கொண்டது. அரவிந்தரும் விவேகானந்தரும் காட்டும் வாழ்க்கை, ஆன்மிகத்தை அடிப்படையாகக் கொண்டது. இவற்றுள் திருவள்ளுவர் காட்டும் வாழ்வியல் நெறிகள் அறத்தை அடிப்படையாகக் கொண்டு திகழ்வதால், அவை சிதைவுபடவில்லை. இவற்றை, தமிழ்த்தென்றல் திரு.வி.க. அவர்களின் கீழ்க்காணும் கருத்துகளும் வலியுறுத்துவனவாக அமைகின்றன.

“வாழ்க்கைக் கலையை உலகுக்கு உதவினோர் பலர். அவருள் குறிக்கத்தக்க பண்டைச் சான்றோர் ஆதிமனு, அரிஸ்டாட்டில் திருவள்ளுவர் முதலியோர். ஆதிமனுநெறி செவ்வனே செழித்து வந்தது. இடைநாளில் ‘மனு’ என்ற பெயரால் தோன்றிய சிலர், பழைய செந்நெறிக்குக் கேடுசூழ்ந்தனர். அவரால், பிறப்பில் உயர்வு – தாழ்வு,

பெண்ணடிமை, தீண்டாமை, கண்மூடி வழக்கங்கள் முதலியன கற்பிக்கப்பட்டன. அவை, தூறுகளாய்ச் செந்நெறியை மறைத்தன. இவ்வாறு ஆதிமனு நெறி குலைந்தது. அரிஸ்டாட்டில் வழியில் பொறாமை, நாட்டாசை, சுரண்டல், இகல், போர், கொலைவெறி முதலிய கொடுமைகள் மலியலாயின. இம்மலிவால் அரிஸ்டாட்டில் வழி, இரத்த ஆறாகியது. திருவள்ளுவர் நெறியோ, அறத்தை அடிப்படையாகக் கொண்டது. அறத்தில் மாசுபடுதல் அரிதன்றோ? அதனால் திருவள்ளுவர் நெறி, சிதைவுபடவில்லை. அறத்தை அடிப்படையாகக் கொண்ட எதுவும் சிதைவுபடாது.'' (திரு.வி.க.).

இவ்வாறு, வாழ்வியல் நெறிகளை வகுத்துரைத்தோருள் சித்தர் மரபினரும் சிறப்பிடம் பெறுகின்றனர். சித்தர்கள், மக்களாகப் பிறந்து, மக்கள் சக்தி மகத்தான சக்தி என மாநிலத்திற்கு அறிவுறுத்தி, மக்களின் மேம்பட்டவர்களாக வாழ்ந்து காட்டியவர்கள். ஆதலால், மக்களாய்ப் பிறந்த நமக்குப் பேருதவியாக இருக்கும் என்ற மகத்தான குறிக்கோளின் அடிப்படையில் 'சித்தர்கள் காட்டும் வாழ்வியல் கல்வி திருமூலர் ஒரு சிறப்பு நோக்கு' என்ற தலைப்பு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெறுகிறது.

இயல் - நான்கு

இயல் நான்கு

சித்தர்கள் பற்றிய குறிப்பு

சித்துகளைச் செய்பவர்கள் சித்தர்களா? சித்தனை (சிவனை) வழிபடுபவர்கள் சித்தர்களா? சித்திகள் கைவரப் பெற்றவர்கள் சித்தர்களா? சித்தம் உடையவர்கள் (இங்குச் 'சித்தம்' என்பது 'தெளிவான முடிவு') சித்தர்களா? சித்தம் (பேரறிவு) உடையவர்கள் சித்தர்களா? சித்தத்தை (மனத்தை) ஒருநிலைப் படுத்தியவர்கள் சித்தர்களா? அனுபூதி ஞானம் பெற்றவர்கள் சித்தர்களா? யோக மார்க்கத்தில் நின்று வெற்றி பெறுகிறவர்கள் சித்தர்களா? மூண்டு எரியும் அக்னிக்குள் மூழ்கி, முந்நீருள்ளிருப்பினும் மூச்சடக்கி, தாண்டிவரும் வன்புலியைத் தாக்கி வலிமை காட்டுபவர் சித்தரா? இவ் வினாக்களுக்கு விடைகண்டு வாழ்ந்த சித்தர்கள் பலரின் வாழ்க்கைக் குறிப்புகளையும், அவர்கள் அறிவுறுத்திய வாழ்வியல் நெறிகள் அல்லது வாழ்வியல் கல்வியையும் குறித்துக் காண்பது இப்பகுதியின் நோக்கமாகும்.

சித்தர்கள் பக்திமான்களா, ஞானிகளா, யோகிகளா என்றால், அவர்கள் யோகிகளே! ஆன்மிக நெறிநின்று, உள்ளத்தையே கோயிலாகக் கருதி, உயிரினங்களை வணங்கிய யோக நெறியினர் சித்தர்கள்.

சமயங்களுக்கும் சடங்குகளுக்கும் அப்பாற்பட்டு, அனைத்து உயிர்களிலும் நேயத்தையும் இறைத்தன்மையையும் கண்டவர்கள் சித்தர்கள்.

சித்தர்கள் காடு சென்று, காயேனும் கனியேனும் காய்ந்த சருகேனும் உண்டு, மூச்சைப்பிடித்து முக்திக்கு வழி தேடுபவர்களாயினும், சமுதாயத்திலிருந்து விலகிப் போகாதவர்கள். சமுதாயம் சீர்திருந்த வேண்டும் என்ற பெருநோக்கும், போக்கும் உடையவர்கள்.

சாதி, சமயம், சடங்குகள், இவை தொடர்பான சழக்குகள் முதலானவற்றை வன்மையாகக் கண்டித்த நன்மையாளர்கள் சித்தர்கள்.

'சித்தர்' என்னும் சொல் 'சித்' என்பதை வேர்ச் சொல்லாகக் கொண்டு பிறந்தது.

சித்து, சித்தி, சித்தம், சித்தர் முதலான சொற்களுக்கு இடையே பொருள் தொடர்பு உண்டு.

'சித்து' என்பதற்கு 'மாயவித்தை' என்னும் பொருள் கொண்டு, மாயவித்தைகளைச் செய்பவர்கள் சித்தர்கள் என்று கொள்ளலாம்; அட்டமா சித்திகளான அணிமா, மகிமா, லகிமா ஆகிய சித்திகள் கைவரப்பெற்றவர்கள் 'சித்தர்கள்' எனக் கொள்ளலாம்; 'சித்தம்' என்றால் 'மனம்' என்று, பொருள் தருவது கொண்டு, ஐம்புலன்களை அடக்கி, மனத்தை ஒரு நிலைப்படுத்தி இறைவனிருப்பதை உணர்ந்தவர்கள் சித்தர்கள் என்றும் பொருள் கொள்ளலாம்.

'யோகசமாதி உகந்தவர்கள் சித்தர்கள்' என்று திருமூலர் கூறுகிறார். 'வேதாந்த சித்தாந்த சமரச நன்னிலை பெற்ற வித்தகர்கள் சித்தர்கள்' என்பது தாயுமானவர் கூற்று. 'சாத்திரத்தைச் சுட்டெரித்தால் அவனே சித்தன்' என்பது அகத்தியர் தரும் விளக்கமாகும்.

'அனுபூதி ஞானம் பெற்றவர்களே சித்தர்கள்' எனத் தெ.பொ.மீனாட்சிசுந்தரனாரும், 'சித்தன் என்பது, சிவபெருமானுக்கு உரிய பெயர். அச்சித்தனை வணங்குவோர் சித்தர்கள்' என மாணிக்கவாசகரும் கூறுகிறார்கள்.

இவ்வாறு சித்தர்கள் என்பதற்குப் பலபொருள்கள் வழங்கப்பட்டாலும், 'அவர்கள், சாகாநிலையைப் பெற்றவர்கள்; அழியாத உடம்பைப் பெற்றவர்கள்; உடம்பை அழிவிலிருந்து பாதுகாத்துக் கொள்ளும்

உபாயம் அறிந்தவர்கள்; கூடுவிட்டுக் கூடுபாயும் ஆற்றல் பெற்றவர்கள்; வான்வெளிப் பறந்து செல்லும் ஆற்றலும், முக்காலமும் உணர்ந்து கூறும் திறனும் பெற்றவர்கள்; யோகமார்க்கத்தில் நின்று வெற்றி பெற்றவர்கள்' என்னும் கருத்துகளே சித்தர்கள் பற்றிய நிலையான கருத்துகளாகும்.

பொன்வெள்ளி செய்கிறவன் பெரியோன் அல்ல
புகழான அஷ்ட சித்தி பெரியோனல்ல
முன்நின்ற வயித்தியனும் பெரியோன் அல்ல
மூச்சடக்கி யெழும்பினவன் பெரியோன் அல்ல
சின்னமுள்ள குழியிருப்போன் பெரியோன் அல்ல
திறமுடனே கெவனமிட்டோன் பெரியோன் அல்ல
தன்னிலையை அறிந்தவனே பெரியோனாவான்
தன்னையறியான் வகைகெட்ட சண்டிமாடே.

– சுப்பிரமணியர் சுத்தஞானம் நூறு – பாடல் 98.

என்பதற்கிணங்க, தன்னிலையை அறிந்து, மக்களுள் மக்களாகப் பிறந்து, மக்கள் நிலையிலிருந்து மேம்பட்ட நிலையைப் பெற்றிருந்தவர்கள் சித்தர்கள்.

மக்களின் துன்பங்களைப் போக்கி, அவர்களை நல்வாழ்வு வாழச் செய்வதைத் தலையாய நோக்கமாகக் கொண்டவர்கள் சித்தர்கள்.

'உடல் இருக்கும்பொழுதே ஆன்ம சாதனையை அடைந்துவிட வேண்டும்' என்ற அழுத்தமான கொள்கையைக் கொண்டவர்கள் சித்தர்கள்.

மக்களுயிர்களை அச்சுறுத்தும் பிணி, மூப்பு, சாக்காடு ஆகிய பிறவித் துன்பங்களை வெல்லும் உபாயங்களைக் கண்டறிந்து கூறியவர்கள் சித்தர்கள்.

"இயம நியமங்களோடு இயைந்த கடுமையான கட்டுப்பாட்டுடன் கூடிய வாழ்க்கை; எப்பொழுதும் பிறருக்கு நன்மையே செய்ய

வேண்டுமென்ற சிந்தனை; எவ்வுயிர்க்கும் துன்பம் ஏற்படக் கூடாது என்ற கனிவினால் உண்டான திட வைராக்கியம்; இவையே சித்தர்களின் செம்மையான வாழ்க்கைக்கு அடித்தளங்கள்'' (சித்.வர.) என்ற சித்தர்கள் பற்றிய இந்தக் கருத்து, பெரிதும் போற்றத்தக்கதாகும்.

சித்தர்கள், ஞான சித்தர்கள், நவநாத சித்தர்கள், ராஜேஸ்வர சித்தர்கள் என மூன்று வகையாகப் பிரிக்கப்படுவார்கள்.

உண்மையான ஞானநிலையில் நின்றவர்கள் ஞானசித்தர்கள். அகத்தியர், திருமூலர் முதலானோர் ஞான சித்தர்கள் வகையில் அடங்குவர். பிராணாயாமம் முதலான யோகப் பயிற்சியால் நாடியில் உண்டாகும் நாதத்தில் தம் மனத்தை ஒடுக்கிச் சமாதி நிலையில் நின்றவர்கள் நவநாத சித்தர்கள். கோரக்கர், மச்சேந்தரர் முதலானோர் நவநாதசித்தர் வகையினர். மருத்துவம், சோதிடம், ரசவாதம் முதலான துறைகளில் ஈடுபட்டவர்கள் ராஜேஸ்வர சித்தர்கள். போகர் முதலானோர் இவ்வகையினர்.

சித்தர்களை ஐந்து வகையினராகவும் பிரிக்கலாம். அவை, சாதி, சமயம், உருவ வழிபாடு முதலானவற்றை எதிர்க்கும் புரட்சியாளர்கள், இரசவாதம் செய்வதில் வல்லவர்கள், மருத்துவம் கண்ட சித்தர்கள், நிலையாமையைப் பற்றிப் பாடியவர்கள், யோகப் பயிற்சியைச் செய்தவர்கள் என்பனவாகும்.

சித்தர் தன்மை

மூண்டெரியும் அக்கினிக்குள் மூழ்கி வருவோம்
முந்நீருள் ளிருப்பினும் மூச்சடக்கு வோம்
தாண்டிவரும் வன்புலியைத் தாக்கி விடுவோம் ---

(பா.பா.சி. 30)

என்னும் பாம்பாட்டிச் சித்தரின் கூற்றையொத்த இத்தகைய சித்தர்கள் உலகம் முழுவதும், பல நாடுகளிலும் வாழ்ந்து மறைந்துள்ளார்கள்; வாழ்ந்தும் வருகிறார்கள்.

இவர்களுள் பதினெட்டுச் சித்தர்களை, 'நிஜானந்த போதம்' என்னும் நூல் கீழ்க் காணுமாறு எடுத்துக் கூறுகிறது.

1.	அகத்தியர்	10.	உரோமமுனி
2.	போகர்	11.	வாசமுனி
3.	நந்தீசர்	12.	அமலமுனி
4.	புண்ணாக்கீசர்	13.	கமலமுனி
5.	கருவூரார்	14.	கோரக்கர்
6.	சுந்தரானந்தர்	15.	சட்டைமுனி
7.	ஆனந்தர்	16.	மச்சமுனி
8.	கொங்கணர்	17.	இடைக்காடர்
9.	பிரம்மமுனி	18.	குரு பிரம்மமுனி (நிஜா.போ.3)

அபிதான சிந்தாமணியில்,

1.	அகத்தியர்	10.	மச்சமுனி
2.	போகர்	11.	வாசமுனி
3.	கோரக்கர்	12.	கூர்மமுனி
4.	கைலாசநாதர்	13.	கமலமுனி
5.	சட்டைமுனி	14.	இடைக்காடர்
6.	திருமூலர்	15.	உரோமரிஷி
7.	நந்தி	16.	புண்ணாக்கீசர்
8.	கூன்கண்ணன்	17.	சுந்தரானந்தர்
9.	கொங்கணர்	18.	பிரம்மமுனி (அபி.சி. பக்.637–638)

இவ்வாறு வகைப்படுத்தப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில், பதினெண் சித்தர்கள் என்ற வழக்காற்றுக் குரியவர்களான, கீழ்க்காணும் 18 சித்தர்களின் வாழ்வியல் நெறிகளும் கோட்பாடுகளும் இந்த ஆய்வில் எடுத்துக் கொள்ளப்படுகிறது.

1.	கும்பமுனி	10.	புண்ணாக்கீசர்
2.	நந்திமுனி	11.	இடைக்காடர்
3.	கோரக்கர்	12.	பூனைக்கண்ணார்
4.	புலிப்பாணி	13.	சிவவாக்கியர்
5.	புசுண்டரிஷி	14.	சண்டிகேசர்
6.	திருமூலர்	15.	உரோமரிஷி
7.	தேரையர்	16.	சட்டநாதர்
8.	யூகிமுனி	17.	காலாங்கி
9.	மச்சமுனி	18.	போகர்

சித்தர்கள் சிலரின் வாழ்க்கைக் குறிப்புகளை இப்பொழுது காண்போம். சித்தர்களின் பிறப்பு மற்றும் குறிப்புகளை, போகருடைய 'ஜனன சாகரம்' என்ற நூலால் அறியமுடிகிறது.

1. காலாங்கி நாதர்

இவர் சீன நாட்டவர். இவர் அந்தரத்தில் சஞ்சரிக்கும், உடலைப் பெற்றவர். கால் + அங்கி (கால் – காற்று, அங்கி – உடல்) இவருக்குக் 'காலாக்னி நாதர்' என்ற பெயரும் உண்டு. இவர் திருமூலரின் சீடர்களுள் முதன்மையானவர். வைத்திய காவியம், உபதேச ஞானம் முதலான பல நூல்களை இயற்றியுள்ளார். இவர் காஞ்சியில் சமாதியானார்.

2. போகர்

இவர் தமிழகத்தில் பிறந்து சீனாவுக்குச் சென்று போ–யாங்–போகர் என்னும் பெயரில் வாழ்ந்தவர். மீண்டும் தமிழ்நாட்டுக்கு வந்து, பழனி

மலையில் வாழ்ந்து, அங்கேயே சமாதியானவர். போகரே சித்த மருத்துவத்தின் தந்தையாவார். போகரின் நூல்களில் வேதியியல் கருத்துகள் பல இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத் தகுந்ததாகும். போகர் 12,000, சப்த காண்டம், அட்டாங்க யோகம், வைத்தியச் சூத்திரம் முதலான பல நூல்களை இயற்றியுள்ளார்.

3. கொங்கணச் சித்தர்

கொங்கு நாட்டில் பிறந்தவர். ஆதலால், கொங்கணவர் எனப்படுகிறார். இவர், இரும்புக் கருவிகள் செய்து விற்றுச் செல்வரானவர். பிறகு துறவு வாழ்க்கையை மேற்கொண்டவர். இவருடைய பாடல்கள் இனிமையும், கவிநயமும் வாய்ந்தவை. இவர் மூலிகைகளில் செம்பு இருப்பதைக் கண்டுபிடித்தவர். வாத காவியம் 3000, வாலைக் கும்மி 100, முக்காண்டங்கள் முதலான பல நூல்களை இயற்றியவர். இவர் திருப்பதியில் சமாதியானார்.

4. கருவூர்ச் சித்தர்

இவர் போகரின் சீடர். திருவிசைப்பா பாடிய கருவூர்த் தேவரினின்றும், இவர் வேறுபட்டவர். இவர் பிரம்ம ஞானியாக வாழ்ந்தவர். மகாசித்தர். இவர் வாதகாவியம் 700, வைத்தியம் 500, சிவஞான போதம் 42 முதலான பல நூல்களை இயற்றியுள்ளார். இவருடைய பாடல்கள் மிகவும் இனிமை வாய்ந்தவை. வேம்பின் பயனை இவரது பாடல்கள் சிறப்பித்துக் கூறுகின்றன. இவர் கருவூரில் இறைவனடி சேர்ந்தார்.

5. இடைக்காட்டுச் சித்தர்

இவர் மதுரைக்குக் கிழக்கே உள்ளே இடைக்காடு என்னும் ஊரில் பிறந்தவர். இவர் சோதிட ஆராய்ச்சியில் வல்லவர். நவக்கிரகங்கள் குறித்த ஆராய்ச்சியில் வல்லவர். இவருக்கும் போகரே குருநாதர். இவர் ஊர்வசி பஞ்சரத்தினம், ஞான சூத்திரம் எழுபது முதலான பல நூல்களை

இயற்றியுள்ளார். இவருடைய பாடல்கள் எளிய சொற்களால் ஆனவை. இனிய சந்தங்களையும் ஆழமான கருத்துகளையும் உடையவை. இவர் திருவண்ணாமலையில் சமாதியானார்.

6. கமலமுனி

இவர் தமிழ்நாட்டில் பிறந்து சீனாவில் வாழ்ந்தவர். கமலமுனி சூத்திரம் 76 போன்ற பல நூல்களை இயற்றியவர். இவர் மதுரையில் சமாதியானவர்.

7. சட்டைமுனிச் சித்தர்

இவர் சிங்கள நாட்டைச் சேர்ந்த சித்தர். இவரும் போகரின் சீடர். சித்தர்கள் தம்முடைய நூல்களை மறைமொழியில் (பரிபாஷையில்) எழுதும் பண்பினர். ஆனால், சட்டைமுனி எல்லாக் கருத்துகளையும் வெளிப்படையாகப் பாடியவர். இவர் ரசவாதத்தை அலசியவர். வேதியியலில் நிபுணர். சட்டைமுனி வாத காவியம் 1000, நிகண்டு 1200, முன் ஞானம் பின்ஞானம் 200 முதலான பல நூல்களை இயற்றியவர். இவருடைய நூல்களில் மருத்துவம், வேதியியல் கருத்துகள் மிகுதியாகப் புதைந்து கிடக்கின்றன. சட்டைமுனி சீர்காழியில் சித்தி பெற்றவர். திருவரங்கத்தில் இறைவனோடு கலந்தார் என்ற கருத்தும் உண்டு.

8. பாம்பாட்டிச் சித்தர்

இவர் பாம்புகளைப் பிடித்துப் படமெடுத்து ஆடச் செய்கின்ற வேடிக்கைத் தொழிலைச் செய்தவர். சட்டைமுனி சித்தரால் உபதேசம் செய்யப் பெற்றவர். விஷத்தை முறிக்கும் மூலிகைகளை அறிந்தவர். விஷவைத்திய 'சித்தர்' என்றும் இவரைக் கூறலாம். பாம்பை முன்னிலைப் படுத்திப் பாடும் பாடல்களை இயற்றியவர். இவர், பாம்பு போன்ற குண்டலினி சக்தியைப் பாம்பாக உருவகம் செய்து பாடியவர். ஆதலால், பாம்பாட்டிச் சித்தர் என அழைக்கப்படுகிறார் என்ற கருத்தும் உண்டு.

இவர் பாம்பாட்டிச் சித்தர் பாடல்கள், சித்தர் ஆரூடம் மற்றும் சில மருத்துவ நூல்கள் ஆகியவற்றை இயற்றியுள்ளார். இவர், திருக்கோகர்ணத்தில் பிறந்து துவாரகையில் சமாதியானவர்.

9. பிண்ணாக்கீசர்

இவர் பாம்பாட்டிச் சித்தரின் சீடர். இவர் ஆத்திமரப் பொந்தில் வசித்தவர். உண்பதற்காக மட்டும் வெளியில் வந்து, உண்ட பிறகு மீண்டும் மரப் பொந்திற்குச் சென்றுவிடுவார். இவர் 'முப்பு சூத்திரம் 17' என்ற நூலைப் பாடியவர். 'யோக ஞான சாஸ்திரத் திரட்டு' என்னும் நூலில் இவருடைய பாடல்கள் பல உள்ளன. கேரளத்தில் உள்ள நாங்குநா சேரி என்ற ஊரில் இவர் சமாதியானார்.

10. குதம்பைச் சித்தர்

'குதம்பை' என்பது காதுகளில் அணியும் அணிவகை. இவர் குழந்தைப் பருவத்தில் அந்த அணியை அணிந்திருந்ததால், இவர் சித்தரான பின்பும் 'குதம்பைச் சித்தர்' என அழைக்கப்பட்டார். இவர் பாடல்கள் தமக்குத் தாமே உபதேசம் செய்து கொள்வதுபோல் அமைந்திருக்கும். பெரிய பெரிய தத்துவங்களையெல்லாம் எளிமையாகவும் இனிமையாகவும் இவர் பாடியுள்ளார். குதம்பைச் சித்தரின் பாடல்கள் 246 கண்ணிகளாக உள்ளன. இவருடைய பாடல்கள் சாதிப்பிரிவினைகளைச் சாடுகின்றன; நல்லொழுக்கத்தையும் நல்ல நோன்புகளையும் எடுத்துக் காட்டுகின்றன. அறியாமையை அகற்ற வல்லன. இவர் மயிலாடுதுறையில் சித்திபெற்றவர்.

11. கடுவெளிச் சித்தர்

இவர் மனித உடலை, மண் தோண்டியாக உருவகித்துப் பாடியவர். உடல் உள்ளபோதே, ஆன்மா கடைத்தேற வழி காண வேண்டும் என்று விரும்பியவர். 'அஞ்ஞான மார்க்கத்தைத் தூறு, உன்னை அண்டினோர்க்

கானந்தமாம் வழி கூறு' எனப்பாடி எல்லோரும் இன்புற்றிருக்க நினைத்தவர். இவர் காஞ்சிபுரத்தில் சமாதியானவர்.

12. அகப்பேய்ச் சித்தர்

அகம் + பேய் + சித்தர் 'மனமாகிய பேயை வென்று சித்தி அடைந்தவர்' என்ற பொருளில் இவர் பெயர் காரணப் பெயராக அமைந்துள்ளது. இவர் வாத, வைத்திய, யோக, ஞான மார்க்கங்களை எளிய இனிய பாடல்களால் பாடியவர். இறைவனடி சேர்வதற்கு, நஞ்சு உண்ண வேண்டாம்; மனம் போன வழி திரிய வேண்டாம்; வேறு துன்பங்களை மேற்கொள்ள வேண்டாம்; மனத்தை மட்டும் அடக்கினால் போதும் என்று பாடியவர். இவர் பூரண ஞானம் 15, அகப்பேய்ச் சித்தர் பாடல் 90 முதலான நூல்களை இயற்றியவர். இவர் திருவையாற்றில் சமாதி அடைந்தவர்.

13. அழுகண் சித்தர்

இவர் ஊரையும் உலகத்தையும் தன்னையும் பார்த்துப் பார்த்து அழுத சித்தர். இவர் ஓரிடத்தில் தங்காமல் எவரிடமும் பேசாமல் அழுதுகொண்டே செல்பவர். ஆதலால் அழுகண் சித்தர் ஆனார். 'பையூரிலே யிருந்து பாழூரிலே பிறந்து மெய்யூரில் போவதற்கு வேதாந்த வீடறியேன்' என்று வேதாந்தம் பாடியதோடு, வைத்தியம் முதலானவற்றையும் பாடியுள்ளார். அழுகண் சித்தர் பாடல் 200, ஞான சூத்திரம் 23 முதலான நூல்களை இயற்றியுள்ளார். இவர் நாகப்பட்டினத்தில் சமாதியானார்.

14. குருராச சித்தர்

இவர் திருமூலரின் சீடர். திருமூலரின் நூல்களைக் காப்பாற்றியவர். இவர் சிவகாமித் தாயைத் தியானம் செய்தவர். சிவகாமித் தாயின் கட்டளையால் பிற சித்தர்களைப்போல் மறைவடக்கமாகக் கருத்துகளைக் கூறாமல் வெளிப்படையாகப் பாடியவர். அதனால் பிற சித்தர்களின்

சினத்திற்கு ஆளானவர். காவியம் 1000, சூத்திரம் 700, சிவயோக சிந்தாமணி 50 முதலான நூல்களைப் பாடியவர் இவர்.

15. புலிப்பாணி

இவர் போகரின் மாணவர். நவ பாஷாணத்தால், பழனி முருகப் பெருமான் சிலையைச் செய்வதற்கு உதவியவர். இவர் மருத்துவத்திலும், சோதிடத்திலும் வல்லவர். புலிப்பாணி வைத்தியம் 500, புலிப்பாணி சோதிடம் 300, புலிப்பாணி ஜாலம் 325 முதலான நூல்களை இயற்றியுள்ளார்.

16. சிவவாக்கியர்

இவர் பிறக்கும்பொழுதே 'சிவசிவ' என்று சொல்லிக்கொண்டே பிறந்தவர். 'அரியும் சிவனும் ஒன்று', 'நட்ட கல்லும் பேசுமோ நாதன் உள்ளிருக்கையில்' என்னும் சமயம் மற்றும் சமுதாயச் சீர்திருத்தச் சிந்தனைகளுக்கு வித்திட்டவர். யோக சாதனை பற்றிச் சிறப்பாகப் பாடியவர். மேலும் வைத்தியம் முதலான நான்கு துறைகளைப் பற்றியும் பாடியவர். இவருடைய பாடல்கள் 'சிவ வாக்கியம்' என்னும் நூலாகத் தொகுக்கப்பெற்றுள்ளது. இவர் கும்பகோணத்தில் சித்தியடைந்தார்.

17. சுப்பிரமணிய சித்தர்

இறைவன் முருகப் பெருமானே சுப்பிரமணிய சித்தர் என்ற கருத்தும் உண்டு. இவருடைய நூல்கள் அகத்திய மாமுனிவருக்கு உபதேசம் செய்வதுபோல் அமைந்துள்ளன. சுப்பிரமணியர் வைத்திய விஞ்சை 1500, சுப்பிரமணியர் ஞானம் 25, சுப்பிரமணியர் நாடி 32 முதலான பல நூல்களைத் தந்துள்ளார். மகப்பேறு உண்டாவது பற்றியும், பிறக்கும் குழந்தையின் எதிர்காலம் பற்றியும் சுப்பிரமணிய சித்தர் கூறும் கருத்துகள் மிகச்சிறந்த வாழ்வியல் கருத்துகளாக விளங்குகின்றன.

18. பட்டினத்துச் சித்தர்

காவிரிப்பூம்பட்டினத்தில் வணிகர் குலத்தில் பிறந்து, சித்தராகி, பல சித்துகளைப் புரிந்தவர். கோயில் நான்மணி மாலை, திருவிடை மருதூர் மும்மணிக்கோவை போன்ற பல நூல்களை இயற்றியவர். 'காதற்ற ஊசியும் வாராதுகாண் கடைவழிக்கே' என்ற வேதாந்தக் குரலுக்குச் சொந்தக்காரர்.

மேலும் அகத்தியர், தேரையர், யாகோபு, யூகி முனி, காகபுசுண்டர் முதலான சித்தர் பலர் வலம் வந்து வாழ்வியல் நெறிகளை வகுத்தளித்த நாடு இந்த நாடு.

சித்தர்கள் காட்டும் வாழ்வியல் கல்வி ஒரு பொதுநோக்கு

மக்களுக்குள் பேதம் இல்லை. அவர்களுக்குள் சாதி, மத, இனவேற்றுமை உண்டென்று கூறுவது தவறு. மனிதர்கள் எந்த நிறத்தில் இருந்தாலும் எந்த மொழியைப் பேசினாலும் எந்த நாட்டில் இருந்தாலும், அவர்கள் அனைவரும் ஒரே இனம். 'மக்கள் ஒரே இனம் என்பதே பழந்தமிழர் கோட்பாடு' என்ற பேருண்மையைச் சித்தர் பாடல்கள் உணர்த்துகின்றன.

சிவவாக்கியர் என்னும் சித்தர், "இறைவன் எல்லாருடைய உள்ளங்களிலும் உள்ளான். அவனை விக்கிரகத்தில் காண எண்ணுவது அறியாமையே. இறைவன் உள்ளத்தே அன்றி, வேறு எங்கும் இரான்" என்று இடித்துரைக்கிறார்.

சாதி ஆவது ஏதடா.......? (சிவ. வா. 68)

பறைச்சி ஆவது ஏதடா? பணத்தி ஆவது ஏதடா? (சிவ. வா. 38)

என்ற பாடல்கள் மூலம் சாதி வேற்றுமைகளைச் சாடுகிறார்.

சித்தர்கள் அனைவரும் மத ஒருமையையே வலியுறுத்துகிறார்கள். மூடநம்பிக்கைகளை வன்மையாகச் சாடும் அவர்களிடம் மதவெறுப்போ, அளவு கடந்த மத வெறியோ இல்லை.

மக்கள் அனைவரும் ஒழுக்கம் தவறாமல் வாழ வேண்டும் என்பதை வலியுறுத்திப் பாடியிருக்கின்றனர். பொய், சூது, கொலை, குடி, பரத்தமை முதலியவற்றைத் தவறெனக் கண்டிக்கிறார்கள். கூடாவொழுக்கம் உடல்நோயை உண்டாக்கும். நல்வாழ்வுக்கு உலைவைக்கும் கூடா வொழுக்கத்தைத் தவிர்ப்பவர்களே யோகப் பயிற்சியில் வெற்றிபெற முடியும். உடல் வலிமையுடன் நீண்ட நாள் வாழமுடியும் என்பதை உணர்ந்து நல்லொழுக்கத்தைப் போற்றுகின்றனர்; தீயொழுக்கத்தைக் கண்டிக்கின்றனர்.

சொல்லரும் சூதுபொய் மோசம் – செய்தால்
சுற்றத்தை முற்றாய்த் துடைத்திடும்; நாசம் (கடு. சி. 2)

கஞ்சா, புகைகுடி யாதே – வெறி
காட்டி மயங்கியே கட்குடியாதே;
அஞ்ச உயிர்மடி யாதே; – புத்தி
அற்றவர் அஞ்ஞானத்தின் நூற்படியாதே (கடு. சி. 29)

என்னும் வாழ்வியல் நெறிகளைக் கடுவெளிச் சித்தர் காட்டுகிறார்.

உளியிட்ட கற்சிலையில் உண்டோ உணர்ச்சி?
உலகத்தின் மூடர்களுக்கு உண்டோ உணர்ச்சி?
(பா. பா. சி. 92)

எனப்பாடி உருவச்சிலை வணக்கம், வழிபாடு கூடாதெனக் கூறுகிறார் பாம்பாட்டிச் சித்தர். மேலும் அவர்,

மலைபோன்ற செம்பொன் குவை வைத்திருப்பவர்
மறலி வருகையில் வாரிச் செல்வாரோ? (பா. பா. சி. 44)

என்று பாடிச் செல்வ நிலையாமையைக் காட்டுகிறார்.

ஊத்தைச் சடலமடி; என் கண்ணே உப்பிருந்த பாண்டமடி
.... ஊத்தைச் சடலம் விட்டு என்
கண்ணம்மா உன்பாதம் சேரேனோ (அழு. சி. 8)

'கொல்லன் உலைபோல் கொதிக்குதடி என் வயிறு' என்று பாடுவதன் மூலம் யோகத்தையும், ஞானத்தையும் வற்புறுத்துகிறார் அழுகண் சித்தர்.

காகபுசுண்டர் என்னும் சித்தர்,

காண்அப்பா சாதிகுலம் எங்கட் கில்லை
கருத்துடனே என்குலம்சுக் கிலந்தான் மைந்தா (காக. பு. 66)

என்று பாடுவதன் மூலம் சாதி வேற்றுமைகளைச் சாடுகிறார்.

..... வேதபுரா ணங்காவ் யங்கள்
மந்திரங்கள் கோடானு கோடி யென்றும்
சொல்லுவார் கோவிலென்றுந் தீர்த்த மென்றும்
திருடர்கள்தா னலைந்தலைந்து திரிவார்... (காக. பு. 22)

என்று கூறி, புராணம், கோயில், தீர்த்தம், மந்திரம் ஆகியவற்றைச் சாடி, பகுத்தறிவுப் பறைகொட்டுகிறார்.

கோபம், பொறாமை, கொடுஞ்சொல், வன்கோள்இவை
பாபத்துக் கேதுவடி குதம்பாய் பாபத்துக் கேதுவடி (குத. சி. 87)

கள்ளங்கள் காமங்கள் கொலைகள், கபடங்கள்
பள்ளத்தில் தள்ளுமடி (குத. சி. 87)

கொல்லா விரதம் குளிர்பசி நீக்குதல்
நல்ல விரதமடி (குத. சி. 128)

ஆண்சாதி பெண்சாதி யாகும் இருசாதி
வீண்சாதி மற்றவெல்லாம் குதம்பாய் (குத. சி. 137)

எனப்பாடி, நல்லொழுக்க நெறிகளையும், உணர்த்துவதோடு சாதிகளைச் சாடவும் செய்கிறார் குதம்பைச் சித்தர்.

மிகச் சிறந்த மருத்துவ முறைகளான ஆயுள்வேதம், சித்த மருத்துவம் ஆகியவற்றின் மூலவர்கள் சித்தர்களே ஆவர். அகத்தியர், தேரையர், யூகிமுனி ஆகியோர் ஆயுள்வேத வைத்தியம், சித்த வைத்தியம் ஆகியவற்றின் திட்ப நுட்பங்களை உலகுக்குச் சொன்னவர்கள்.

வேதியியலின் தந்தை என்று சொல்லிப் பாராட்டும் அளவுக்குப் பெருமை பெற்றவர் போகர்.

மனிதனுடைய உடம்பிலுள்ள இரத்த அணுக்கள், தசையணுக்கள், எலும்பணுக்கள், நரம்பணுக்கள் எல்லாம் முதிர்ச்சியடையாமல் இருக்கும் வழிகளைக் கண்டறிந்து கூறியவர் போகர்.

துத்தநாகத்தை ஈயமாக்கவும், ஈயத்தை வெள்ளியாக்கவும், வெள்ளியைச் செம்பாக்கவும், செம்பைத் தங்கமாக்கவும் செடி கொடிகளின் சத்தால் முடியும் என்று சித்தர்கள் கூறுவது, இக்கால வேதியியலாளர்களின் கவனத்தை ஈர்க்க வல்லவை.

சித்தராகிய கொங்கணவர் செங்கீரை, அவுரி, ஓரிதழ்த் தாமரை, சிறுகீரை முதலான பதினைந்து மூலிகைகளில் செம்பு இருக்கிறது என்று கண்டு சொன்னவர்.

இக்கால வல்லரசுகள் காப்புரிமை கொள்ளத் துடிக்கும் வேம்பின் பயனை நூற்றுக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே உலகத்துக்குச் சொன்னவர் சித்தர் கருவூரார் ஆவார். வேம்பின் கொழுந்தைக் கிள்ளி, இருபத்தேழு நாள்கள் உண்டு வந்தால், உண்டவரைப் பாம்பு கடித்தால் விஷம் ஏறாது. ஒரு மாதம் தின்று வந்தால், குஷ்ட நோய்கூடப் பறந்தோடிவிடும் என்ற மருத்துவக் குறிப்புகள், சித்தர்கள் தரும் முத்தான கருத்துகளாகும்.

இக்காலத்தில், தமிழ்ப் பஞ்சாங்க நூல்களில் தமிழ் ஆண்டுகளுக்கு உரிய பொதுப் பலன்களைக் கூறும் பாடல் இடம்பெற்றுள்ளதை நாம் காண முடிகிறது. எடுத்துக்காட்டாக, தாரண வருடத்திற்குரிய பொதுப்பலனை,

தாரணத்தில் மாரியிலுந் தாரணியிற் கேடுமுண்டாம்
ஓராய்நீ சீவன் களுய்யாது – பார்பிணியால்
ஐய்ய மடியுமே கங்கு றைவாமே
வெய்யர் பயமே மிகும் (இடை.சி. பஞ்சரத்தினம்)

என்று இடைக்காடர் இப்பாடலில் கூறுகிறார். மேலும் நாட்டில் பஞ்சம் வந்தால் ஆடுமாடு போன்ற விலங்கினங்களும் மக்களும் எப்படி உயிர் வாழலாம் என்பதைச் செய்முறைப்படுத்திக் காட்டியவர் இடைக்காடர் ஆவார்.

விளையாட்டுச் சித்தர் என்னும் சித்தர், ஞானம் பெறுவதற்கான வழிகளை விளையாட்டாகவே கூறுகிறார். மேலும்,

நம்பினோருக் காசை சொல்லல் விளையாட்டே – பின்பு
நட்டாற்றில் கைவிடுதல் விளையாட்டே
கும்பிக் கிரைதேடுதல் விளையாட்டே– கடன்
கொடுத்தாரைக் கெடுத்தலும் விளையாட்டே (விளை.சி.20)

என்னும் வாழ்வியல் கல்வியை மிகவும் அழகாகக் கூறியுள்ளார்.

மக்களாய்ப் பிறந்தவர்கள் துன்பம் இல்லாமல் வாழ ஒரே வழி மனத்தை அடக்கி ஆள்வதுதான் என்பதை அகப்பேய்ச் சித்தர்

நெஞ்சு மலையாதே – அகப்பேய்
நீஒன்றும் சொல்லாதே (அக. பே. 1)

என்று பாடிச் செல்கிறார்.

பத்து மாதங்களாகத் தவம் செய்து இந்தப் பூத உடலைப்பெற்று வரும் மனிதன், தனக்கும் பயன்படாமல், பிறருக்கும் பயன்பெறும் செயல்களைச் செய்யாமல், ஆட்டத்திலும் பாட்டத்திலும் வீணாகக் கழித்து, வெந்ததைத் தின்று விதிவந்தால் சாகிறானே என்பதைக் கண்டு வருந்தி,

நந்த வனத்தில்ஓர் ஆண்டி – அவன்
நாலாறு மாதமாய்க் குயவனை வேண்டிக்
கொண்டு வந்தானொரு தோண்டி – அதைக்
கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத் தாண்டி (கடு. சி. 4)

என்று பாடும் கடுவெளிச் சித்தரின் வாழ்வியல் கோட்பாடு எவ்வளவு உயர்ந்ததாக உள்ளது!

செல்வம் பெற்றதன் பயன், பிறர்க்குக் கொடுத்து உதவுதலே. பிறர்க்கு ஈந்து மகிழ்ச்சியடையாத கஞ்சன் வாழ்ந்துதான் பயன் என்னே? அவனிடம் கட்டி கட்டியாகத் தங்கமும் மற்றும் நவமணிகளும் இருந்தாலும் அதனால் யாருக்கு என்ன பயன் என்பதைக் கீழ்க்காணுமாறு, கல்லுளிச் சித்தர் பாடியுள்ளார்.

எட்டி பழுத்தாலு மென்ன – காசு
யீயாத லோபிகள் வாழ்ந்தாலு மென்ன
கட்டி வராகனிருந் தென்ன – அதைக்
காவல்கள் போட்டுநீ காத்திருந் தென்ன (கல்.சி. 138)

இது எத்தகைய சிறந்த வாழ்வியல் கோட்பாடு! மேலும், மனிதன் எப்படி வாழவேண்டும் என்பதை,

தெரிந்து கொண்ட தெய்வமதை வணங்கவேணும்
தெரிசித்துடனே பூமியி லிருக்கவேணும்
அறிந்து கொண்டு சிவயோகஞ் செய்யவேணும்
அப்பனே ஆங்கார மடக்கவேணும் (கல்.சி. 139)

என்று அழகாகப் பாடியுள்ளார்.

மனிதன் வாழ்வதற்காக உண்ண வேண்டும்; உண்பதற்காக வாழக் கூடாது. மான அவமானங்களை நோக்காமல் வயிற்றை நோக்கமாகக் கொண்டு சிலர் வாழத்தான் செய்கிறார்கள். இத்தகைய வாழ்க்கை, வாழ்க்கை ஆகாது. பொருளாசை பிடித்த இன்றைய சமுதாயத்திற்கு, கஞ்சமலைச் சித்தர் காட்டும் வாழ்வியல் நெறி,

சாண்வயிற் றாலலை யாதே–நிதம்
சஞ்சலப்பட்டுக் கொண்டே மலையாதே
ஆணுவத் தாலுலை யாதே – உனக்
கானந்த முத்தி யதுநிலையாதே (கஞ். ம. சி. 68)

என்பதாகும். (ஆணுவம் – ஆணவம் என்பதன் திரிபு)

ஆணவத்தை அகற்றி, அன்பைப் பரப்பினால் அதுவே மிக உயர்ந்த வாழ்வியல் நெறி என்பதைத் தாமே உணர்ந்து பின்பற்றியும் பிறர்க்கு உணர்த்தியும் வாழ்ந்த சித்தர், டமரானந்தச் சித்தர் ஆவார்.

சுந்தரானந்தச் சித்தர் என்பவர், மக்கள் பலரால் விரும்பப்படுகின்ற சோதிடக் குறிப்புகள், இன்ன மாதம், இன்ன நாளில் பிறக்கும் குழந்தையின் சிறப்பியல்பு ஆகியவற்றைக் கூறுவதோடு, தென்னை, மா, பலா, வாழை, அவரை, துவரை, நெல், கரும்பு போன்ற பயிர் வகைகளைப் பயிர் செய்வதற்கான நாள் விவரங்களையும் மனையடி சாத்திரமும் விளங்கக் கூறி, இக்கால மக்களின் வாழ்க்கை மேம்பாட்டிற்கு அன்றைக்கே வித்திட்டுள்ளார்.

சட்டைமுனிச் சித்தர் படைத்த நூல்கள், அவருடைய மனிதாபிமானத்தை வெளிப்படுத்துவனவாக உள்ளன. மனித குலம் மேம்பாடு அடையவேண்டும் என்பதை நோக்கமாகக் கொண்ட அவருடைய நூல்களுள், 'சட்டைமுனி வாத காவியம்' என்பது, வேதியியல் அற்புதங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது. மருந்தை அரைப்பது, குகைகள் செய்து புடம்போடுவது, அளவற்ற ஆற்றலை உடைய

ரசமணிகளை உருவாக்குவது, பல்வேறு சித்த மருந்துகளைச் செய்வது இவற்றையெல்லாம் சட்டைமுனிச் சித்தர் தம்முடைய நூல்களில் ஆழமாகவும் அகலமாகவும் கூறியுள்ளார்.

அறுவை மருத்துவம் இக்காலத்தில் மிகப்பெரும் கலையாக வளர்ந்துள்ளது. சித்தர்கள் அறுவை மருத்துவத்தில் துறை போகியவர்கள் என்பதை வசிஷ்ட முனிவரின் மகப்பேற்று அறுவை மருத்துவச் செய்தியால் உணர முடிகிறது. வசிஷ்ட முனிவர் போன்றவர்களை 'இரசாயன சாஸ்திரிகள்' என்று வடநூலார் குறிப்பிடும் கருத்தும் ஈண்டு சிந்திக்கத் தக்கது.

'மிகினும் குறையினும் நோய்செய்யும் நூலோர் வளிமுதலா எண்ணிய மூன்று' (திரு. கு. 941) என்னும் வள்ளுவர் வாக்கினால், மனித உடலில் உள்ள வாதம், பித்தம், சிலேத்துமம் ஆகிய மூன்று நாடிகளின் தன்மையை நாம் உணருகிறோம். இந்த நாடிகளின் துடிப்புகளைக் கொண்டு மனிதனின் ஆயுட்காலத்தைக் கூறமுடியும் என்பதை, 'நாடி சாஸ்திரம்' என்ற நூலில் அல்லமாப் பிரபு என்னும் சித்தர் கூறுகிறார். இது மருத்துவ உலகிற்கு நெறிகாட்டுகிறது.

'பிறக்கும்பொழுது கொண்டு வந்ததும் இல்லை! பிறந்து மண்ணில் இறக்கும்பொழுது கொண்டு போவதும் இல்லை. ஆதலால், இறைவன் தந்த செல்வத்தைப் பிறருக்குக் கொடுத்து வாழாமல் இருப்பது என்னவோ' எனச் செல்வ நிலையாமையையும், 'ஊரும் சதமல்ல – உற்றார் சதமல்ல – உற்றுப் பெற்றபேரும் சதமல்ல – பெண்டிர் சதமல்ல – பிள்ளைகளும் சதமல்ல – சீரும் சதமல்ல – செல்வம் சதமல்ல – தேசத்திலே யாரும் சதமல்ல' என்று நிலையாமையையும் எடுத்துக் கூறி வாழ்வியல் நெறிகாட்டும் சித்தர் பட்டினத்தடிகள் வாழ்வியல் நெறிகளைவிட வேறு எவை உயர்வாக இருக்க முடியும்?

இவ்வாறு சித்தர்கள், கடவுள்மீது நம்பிக்கை கொண்டவர்களாகவும் அதே நேரத்தில் கோயில், வேதம் மற்றும் சமயச் சடங்குகளில் நம்பிக்கையற்றவர்களாகவும் வாழ்ந்து காட்டினர். அதையே பிறர்க்கும் வற்புறுத்தினர். ஏழைகளைக் கண்டு இரங்குபவர்களாகவும், மனித நேயம் மிக்கவர்களாகவும், நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம், எல்லாரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லாமல் வேறொன்றறியேன் என்னும் பொதுநோக்கு உடையவர்களாகவும், அறிவியல், மருத்துவம், ரசவாதம், சமூகவியல், மானிடவியல் இன்னபிற கலை வல்லுநர்களாகவும் வாழ்ந்து, அந்தக் கலை இன்பம் மனிதகுலம் முழுமைக்கும் பொது உடைமையாக வேண்டும் என்று உளமார விரும்பி, மனித ஆற்றலே மாபெரும் ஆற்றல் என்பதை மன்பதைக்கு எடுத்துக்காட்டும் பெருமை உடையவர்கள் சித்தர்கள் என்பதை, இதுவரை இப்பகுதியில் பொதுவாகக் கண்டோம்; இயல் ஐந்து மற்றும் ஆறில் சிறப்பாகக் காண்போம்.

சித்தர்கள் உலகில் திருமூலர்

திருமூலர், ஒரு நிறைமொழி மாந்தர்; மறைமொழியாகிய திருமந்திரம் தந்த சிவயோகி; உலகெலாம் உயர்ந்திட உரைத்த உரைகளுள், அலகிலாத் தத்துவங்களை அழகிய-எளிய சொற்களால் அடக்கி, பாரில் நிலை பொருள் யாது–நிலையாப் பொருள் யாதென விளக்கிய ஞானி. திருமூலர், சித்தர்களுள் முதல்வர்; முதன்மையானவர்.

"........ ....

என்னைநன் றாக இறைவன் படைத்தனன்

தன்னைநன் றாகத் தமிழ்செய்யு மாறே" (திரு. மந். 152)

என்று தன்னை நன்றாக இறைவன் படைத்தது தமிழ் செய்வதற்காகவே எனக் கூறிய முதற்பாவலர் திருமூலர்.

நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் (திரு. மந்.147)

என்று மொழிந்த சமுதாயப் பெருநோக்குடைய தத்துவஞானி.

'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' எனவும், 'அன்பே சிவம்' எனவும் முழங்கிய பொதுநோக்குப் பெரும்புலவர்.

சக்கர வர்த்தி தவராச யோகிஎனும்
மிக்கதிரு மூலன்அருள் மேவுநாள் எந்நாளோ

(தாயு. அடியார் வணக்கம். கண்ணி. 7)

எனத் தாயுமானவத் தயாபரர் பாராட்டிய பெருமைக்கு உரியவர், 'தவராஜயோகி' திருமூலர்.

இவர் மூவாயிரம் ஆண்டுகள் வாழ்ந்து, ஆண்டுக்கு ஒன்றாக மூவாயிரம் பாடல்களைத் திருமந்திர நூலாகத் தந்த அற்புத முனிவர்.

'நந்தி' என்று சுட்டப்பெறும் சிவபெருமானின் அருள்பெற்ற சிவகணங்களின் ஒப்பாக வைத்துப் போற்றப் பெறுபவர்.

கயிலாயத்தில் நம்பிரான் 'சுந்தரர்' என்ற பெயரோடு விளங்கியவர். பூலோகத்தில் வந்து அகத்தியர்பால் நட்புக் கொண்டவர் திருமூலர்.

திருமூலரின் பிறப்புச் சிறப்புகளைத் திருத்தொண்டர் புராணசாரம் பின்வருமாறு கூறுகிறது.

கயிலாயத் தொருசித்தர் பொதியிற் சேர்வார்
காவிரிசூழ் சாத்தனூர் கருது மூலன்
பயிலாநோ யுடன்வீயத் துயர நீடும்
பசுக்களைக்கண்டு அவனுடலில் பாய்ந்து போத

அயலாகப் பண்டையுடல் அருளான் மேவி
ஆவடுதண் டுறையாண்டுக் கொருபா வாகக்
குயிலாரும் அரசடியி லிருந்து கூறிக்
கோதிலா வடகயிலை குறுகி னாரே

(திருத்தொண்டர் புராணசாரம்)

அடுத்து, திருமூலர் வரலாறு பற்றிப் பெரிய புராணம் கூறுமாறு காண்போம்.

திருக்கயிலாயத்தில் நந்தியெம்பெருமான் திருவருள் பெற்ற சிவயோகிகளுள் ஒருவர், அணிமா முதலிய அட்டமா சித்திகளில் வல்லவராக இருந்தார். அவர்தம் பெயரைச் 'சுந்தரன்' என்றும் 'சுந்தரநாதன்' என்றும் பின்னுள்ளோர் குறிப்பிட்டுள்ளனர். அவருக்கு அகத்தியருடன் தங்கியிருக்க வேண்டும் என்ற வேட்கை உண்டாயிற்று. திருக்கயிலையிலிருந்து பூவுலகில் உள்ள பொதிகை மலைக்குப் புறப்பட்ட அவர், திருக்கேதாரம் முதலிய பல தலங்களை வணங்கிக்கொண்டு திருவாவடுதுறைக்கு வருகிறார்.

திருவாவடுதுறையிலிருந்து புறப்பட்டபோது, காவிரிக்கரையில் உள்ள ஒரு பசுங்காட்டிலே, பசுக் கூட்டங்கள் புலம்பிக் கொண்டிருந்தன. அவற்றை மேய்த்து வந்த மூலன் என்னும் இடையன் இறந்துவிட்டதுதான் பசுக்களின் அழுகைக்குக் காரணம். பசுக்களின் அழுகையானது சிவயோகியாரின் நெஞ்சைக் கரைத்தது. பசுக்களின் துயரை நீக்க வேண்டும் என்ற கருணையால், தமக்குத் தெரிந்த கூடுவிட்டுக் கூடு பாயும் சக்தியால், தம் உடலை ஓரிடத்தில் பாதுகாப்பாக வைத்துவிட்டு, மூலன் உடம்பில் புகுந்து திருமூலராய் எழுந்தார். பசுக்கள் அழுகை தவிர்ந்தன.

மாலைப்பொழுது வந்ததும் பசுக்களைச் சாத்தனூரிலுள்ள வீடுகளில் முறையாகச் சேர்ப்பித்தார். மூலன் மனைவியானவள், தன்னுடைய கணவன் என நினைத்து, மூலன் உடலில் இருந்த சிவயோகியாரை வீட்டுக்கு

வருமாறு அழைத்தாள். 'உனக்கும் எனக்கும் எந்தவிதச் சம்பந்தமும் இல்லை' என்று கூறிய திருமூலர், அன்றிரவு ஒரு பொதுமடத்தில் தங்கினார்.

மறுநாள் காலையில், இடையன் மனைவிக்கும் ஊர் மக்களுக்கும் உண்மையை உணர்த்தி, தாம் பாதுகாப்பாக வைத்துவிட்டுவந்த தம் உடலைத் தேடினார். அது கிடைக்கவில்லை. 'சிவாகமங்களின் உண்மைப் பொருளைத் தம் வாயிலாகத் தமிழில் வெளியிடவேண்டி உடலை மறைத்தது சிவபிரான் திருவருள்' என்பதை ஞான உணர்வினால் திருமூலர் தெளியலானார். ஆதலால், இந்நிலவுலகில் தங்கிவிட்டார்.

திருமூலர் 3,000 ஆண்டுகள் வாழ்ந்ததாக அவருடைய திருமந்திரமே சொல்கின்றது. அதற்கான அகச் சான்றுகள் சில:

இருந்தேன்இக் காயத்தே எண்ணிலி கோடி
இருந்தேன் இராப்பகல் அற்ற இடத்தே (திரு. மந். 142)

அண்டம் சுருங்கில் அதற்கோர் அழிவில்லை (திரு. மந்.715)

காற்றைப் பிடிக்கும் கணக்கறி வாளர்க்குக்
கூற்றை உதைக்கும் குறியது வாமே (திரு. மந். 553)

திருமூலருடைய வரலாற்றைப் பெரிய புராணம், சதுரகிரிதல புராணம் ஆகிய இரண்டாலும் அறிய முடிகின்றது. திருமூலரைப் பற்றிய சில குறிப்புகள் திருமந்திரத்திலும் உள்ளன.

இங்கு, பெரிய புராணத்தை அடிப்படையாகக் கொண்ட திருமூலர் வரலாறு இடம் பெற்றுள்ளது.

நம்பியாண்டார் நம்பி அருளிய திருத்தொண்டர் திருவந்தாதி, திருமூலருடைய வரலாற்றைக் கீழ்க்காணும் ஒரே பாடலில் கூறுகின்றது.

**குடிமன்னு சாத்தனூர்க் கோக்குலம் மேய்ப்பவன் குரம்பைபுக்கு
முடிமன்னு கூனற் பிறையாளன் தன்னை முழுத்தமிழின்
படிமன்னு வேதத்தின் சொற்படி யேபரவிவிட் டேன்உச்சி
அடிமன்ன வைத்த பிரான்மூல னாகின்ற அங்கணனே**

(திரு. தொ. திரு. 36)

திருமூலர் இயற்றியதாகக் கூறப்படும் நூல்கள்

1. திருமூலர் தத்துவக் கட்டளை (உரைநடை)
2. திருமூலர் தியானக் குறிப்பு (28 பாடல்கள்)
3. திருமூலர் தேவர்வாலை பஞ்சாக்ஷர விளக்கம் (20 பாடல்கள்)
4. திருமூலர் வைத்தியம் (102 பாடல்கள்)
5. திருமூலர் வைத்திய முறை வசனம் (உரைநடை)
6. திருமூலர் சொச்சச் சூத்திரம் (33 பாடல்கள்)
7. திருமூலர் தண்டகம் (98 பாடல்கள்)
8. திருமந்திரச் சூத்திரம் 200
9. திருமூலர் நாடிசூத்திரம்
10. திருமூலர் வாகடம் (25 பாடல்கள்)
11. திருமூலர் வாலை
12. திருமூலர் எட்டு (எட்டுப் பாடல்கள்)
13. திருமூலர் வைத்தியம் 600
14. திருமூலர் கவுன நூல்

15. திருமூலர் குளிகை முறை 50

16. திருமூலர் பூரண மாலை

17. திருமூலர் சூத்திரத் திரட்டு (13 பாடல்கள்)

18. திருமூலர் கற்பமுறை 500 (360 பாடல்கள்)

19. திருமூல நாயனார் வாத சூத்திரம் 300

20. திருமூல நாயனார் நிகண்டு 300

21. திருமூலர் குருமுறை

22. திருமூலர் ஞானம் (11 பாடல்கள்)

23. திருமூலர் கருக்கிடைத் தொள்ளாயிரம்

24. திருமூலர் ஆயிரம்

25. திருமூலர் கருமானச் சுருக்கம் 22.

இவை யாவும் செவிவழிச் செய்தியாகக் கூறுப்படுபவை. திருமந்திரம் மட்டுமே திருமூலரால் இயற்றப்பட்டது என்பதற்கு அகச்சான்றுகளும் புறச்சான்றுகளும் பல உள்ளன. திருமந்திரம் மட்டுமே இந்த ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

மூவாயிரம் ஆண்டுகள் வாழ்ந்து, மூவாயிரம் பாடல்களைக் கொண்ட திருமந்திரத்தை அருளிய திருமூலர், தமிழ்நாட்டில் வாழ்ந்த காலம், கிறிஸ்து பிறப்பதற்கு 200 ஆண்டுகளுக்கு முன்பாக இருக்கலாம். திருமூலர் சிதம்பரத்தில் சமாதியானார். இதனை,

நானென்ற மேலச் சிதம்பரத்தில்
நாடிநின்ற திருமூலர் நாட்டந்தானே

என்ற போக முனிவரின் 'ஜனன சாகரம்' 312 வது பாடல் மூலம் அறிய முடிகின்றது.

சித்தரான திருமூலர், பக்தர்களான நாயன்மாரோடு வைத்து எண்ணப்படுவதற்குக் காரணம், அவர் இயற்றிய திருமந்திரமே என்று துணிந்து கூறலாம். திருமந்திரம் சித்தர் நெறிகளான வைத்திய, வாதயோக ஞானங்களைப் பற்றிப் பேசுவதோடு இறைவனின் பெருமையையும் இடையறாது நினைவூட்டிக் கொண்டே செல்கிறது.

இக்காரணத்தால், நாயன்மார்கள் பாடிய திருமுறைகள் வரிசையில் திருமந்திரமும் சேர்க்கப்பட்டுப் பத்தாம் திருமுறை என்று வழங்கப்படுகிறது.

திருமூலரின் வாழ்வியற் கல்வியுள், யோகம் பற்றிக் கூறப்பெறுவன பெரிதும் போற்றி யொழுகத்தக்கவை.

'அகத்தவம்' அல்லது 'பிரைச்சதம்' என்னும் அட்டாங்க யோகம் பற்றித் திருமூலர் பெரிதும் விளக்கியுள்ளார்.

அட்டாங்க யோகங்களின் பயன்கள், செய்முறைகள் ஆகியவற்றை முதன்முதலாகவும் சிறப்பாகவும், தீந்தமிழினிற் கூறிய பெருமைக்கு உரியவர் திருமூலர்.

மேலும் கேசரி யோகம், பரியங்க யோகம், அமுரிதாரணை, சந்திர யோகம், மந்திர யோகம் ஆகிய யோகங்கள் குறித்தும் விளக்குகிறார்.

அட்டமாசித்திகள் பற்றியும் அவற்றை அடையும் மார்க்கங்கள் பற்றியும் திருமூலர் எடுத்துரைக்கிறார்.

இவ்வரிய செய்திகளை வழங்கும் திருமந்திரம் பற்றிக் காண்போம்.

திருமூலர் அருளிய திருமந்திரச் சிறப்பு

திருமூலர் அருளிய திருமந்திரம், சைவத் திருமுறைகள் பன்னிரண்டனுள் பத்தாம் திருமுறையாக வைத்துப் போற்றப்பெறுகின்றது. திருமந்திரமானது, 'தமிழ் மூவாயிரம்', 'திருமந்திரமாலை', 'தமிழ்மந்திரம்', 'சுந்தரஆகமம்' என்ற பெயர்களாலும் சுட்டப்படுகிறது.

நூலின் அமைப்பும் அழகும்

திருமந்திரம், முப்பது உபதேசம், முந்நூறு மந்திரம், மூவாயிரம் தமிழ்ப் பாக்களைக் கொண்டு விளங்குகிறது. இதனைச் சிறப்புப் பாயிரத்தில்,

மூலன் உரைசெய்த முப்பது உபதேசம்
மூலன் உரைசெய்த முந்நூறு மந்திரம்
மூலன் உரைசெய்த மூவா யிரந்தமிழ்
மூலன் உரைசெய்த மூன்றும்ஒன் றாமே (திரு. மந். சி. பா. 3)

என்று வந்துள்ள பாடலால் அறிகிறோம்.

இந்நூல் பாயிரம் என்னும் தனிப் பகுதியையும் முதல் தந்திரம், இரண்டாம் தந்திரம், மூன்றாம் தந்திரம், நான்காம் தந்திரம், ஐந்தாம் தந்திரம், ஆறாம் தந்திரம், ஏழாம் தந்திரம், எட்டாம் தந்திரம், ஒன்பதாம் தந்திரம் என, ஒன்பது பிரிவுகளையும் 221 தலைப்புகளையும் கொண்டுள்ளது.

தந்திரம் என்பது, ஆகமம் ஆகும். ஆகமங்கள் ஒன்பதன் கருத்துகளும் திருமந்திரத்தில் உள்ளதை உய்த்துணரலாம்.

முதல் தந்திரம் – காரணாகமத்தின் சாரம்

இரண்டாம் தந்திரம் – காமிகாகமத்தின் சாரம்

மூன்றாம் தந்திரம் – வீராகமத்தின் சாரம்

நான்காம் தந்திரம் – சிந்தாகமத்தின் சாரம்

ஐந்தாம் தந்திரம் – வாதுளாகமத்தின் சாரம்

ஆறாம் தந்திரம் – வியாமளாகமத்தின் சாரம்

ஏழாம் தந்திரம் – காலோத்தராகமத்தின் சாரம்

எட்டாம் தந்திரம் – சுப்பிராகமத்தின் சாரம்

ஒன்பதாம் தந்திரம் – மகுடாகமத்தின் சாரம்

இக்கருத்தினை,

வந்த மடமேழும் மன்னுஞ்சன் மார்க்கத்தின்
முந்தி உதிக்கின்ற மூலன் மடவரை
தந்திரம் ஒன்பது சார்வுமூ வாயிரம்
சுந்தரன் ஆகமச் சொன்மொழிந் தானே (திரு. மந். சி. பா. 1)

என்ற திருமந்திரச் சிறப்புப் பாயிரப் பாவால் அறிகிறோம்.

திருமந்திரத்தில், ஞேயம், ஞானம், ஞாதுருவம், மாயை, மாமாயை, ஆயம், சிவம், தன்னை, வீயம் ஆகிய ஒன்பதனையும் ஒன்பது தந்திரங்களின் வாயிலாக எடுத்துக் கூறுகிறார் திருமூலர்.

இவண், ஞேயமாவது, அறியப்படும் பொருள். ஞானமாவது அறிவு. ஞாதுருவம் என்பது அறிபவன். மாயை என்பது, உலக மாயைகள் (மயக்கங்கள்). அவை, உலகத் தோற்றத்திற்கு முதற் காரணமாகிய சுத்தமாயை, அசுத்தமாயை, பிரகிருதிமாயை என்பன. மாமாயை தன்னில் வரும்பரை என்பது சுத்தமாயையில் வசிக்கும்பரை. ஆயமாவது, ஆதிசத்தி, திரோதாயிசத்தி, இச்சாசத்தி, ஞானசத்தி, கிரியாசத்தி முதலான சத்திகளின் கூட்டம். சிவமாவது பரம்பொருளாகிய சிவம். தன்னையாவது

ஜீவான்மா. வீயமாவது பீஜாட்சரம். மேலும், இந்நூலில் பல சக்கரங்களும் பீஜாட்சர மந்திரங்களும் கூறப்பட்டிருப்பினும், அவற்றுக்கெல்லாம் மூலமாய், வித்தாய் இருப்பது பஞ்சாட்சர மந்திரமாகிய 'சிவயநம' என்பதே என்று அறுதியிட்டு உறுதியாகவும் கூறப்பெற்றுள்ளது.

திருமந்திரத்தின் தனிச்சிறப்புகள்

திருவள்ளுவனார் அருளிய திருக்குறள், இறைவன் அருளிய நான்கு வேதங்கள், திருஞானசம்பந்தரும் அப்பரும் சுந்தரரும் அருளிய தேவாரப்பதிகங்கள், அகத்தியர் அருளிய திரட்டுகள், மணிவாசகப் பெருமான் அருளிய திருக்கோவையார் மற்றும் திருவாசகம் ஆகியவற்றோடு ஒருங்கு வைத்து எண்ணத்தக்க பெருமைக்குரியது, திருமூலர் அருளிய திருமந்திரம். காரணம், இவை யாவும் ஒத்த கருத்துகளை ஈந்து, ஒத்த பெருமைக் குரியவையாகவும் திகழ்கின்றன. இதனைத் தமிழ் மூதாட்டி ஔவைப் பிராட்டியார்,

தேவர் குறளும் திருநான் மறைமுடிவும்
மூவர் தமிழும் முனிமொழியும் – கோவை
திருவா சகமும் திருமூலர் சொல்லும்
ஒருவா சகம்என்று உணர் (நல். வ. 40)

என்னும் பாடலில் விளக்குகின்றார்.

'முழுத்தமிழின்படி மன்று வேதத்தின் சொல்படியே பரவிட்டு' என்ற நம்பியாண்டார் நம்பிகளின் கூற்றுப்படி திருமந்திரம் வேதத்தின் பிரிவாக விளங்கா நிற்கிறது.

தண்ணிலவார் சடையார் தாம் தந்த ஆகமப்பொருளை
மண்ணின் மிசைத்திருமூலர் வாக்கினால் தமிழ் வகுப்ப
(பெரி. பு. 3591))

என்னும் சேக்கிழார் பெருமான் கூற்றால், திருமந்திரம் ஆகமத்தின் பொருள் என்பதை உணரலாம்.

'சித்தாந்த தரிசனம்' என்ற நூலானது, 'ஞான முதல் நான்கும் மலர் திருமந்திர மாலை' என்று கூறுவதால், ஞானம், யோகம், கிரியை, சரியை ஆகியவற்றைத் திருமந்திரம் எடுத்துரைக்கிறது என்பதை யுணருகிறோம்.

மேலும், அந்நூல், 'திருமூலர் மாலை யெனும் தெப்பத்தைப் பற்றிக் கருவேலையைக் கடப்போம் காண்' என்று கூறுவதன் மூலம், பிறவிக் கடலைக் கடக்க உதவிடும் பெருந்தெப்பம் திருமந்திரம் என அறிகிறோம்.

'திருமந்திரம் ஒரு வாழ்வியல் நூல். இல்லறத் தார்க்கும் துறவறத்தார்க்கும், ஆன்ம ஈடேற்றத்திற்கும் பிறவி நீக்கத்திற்கும் வீடுபேற்றிற்கும் வழிகாட்டுவதே திருமந்திரத்தின் உயரிய நோக்கம்.'

இல்லறத்தான் செய்ய வேண்டிய கடமைகளையும் செய்யக் கூடாதனவற்றையும் திருமந்திரம் எடுத்தோதுகிறது. விருந்தோம்புதல் முதற்கடமை. துறந்தார்க்குப் பொருள் கொடுத்துப் பணிவிடைகள் செய்தலும் இல்வாழ்வார்க்குரிய கடமையெனக் கூறுகிறது.

இல்லறத்தான் விலக்க வேண்டியவற்றுள் முதலாவது பரத்தையர் தொடர்பு, அடுத்தது பிறன்மனை நயத்தல், மூன்றாவது பொருட்பற்று எனவும் விதந்தோதுகிறது.

திருமூலர், சித்தர்களுக்கு உரிய துறைகளான வைத்தியம், வாதம், யோகம், ஞானம் ஆகிய நான்கு துறைகளிலும் கருத்துகளைக் கூறியவர் என்றாலும், அட்டாங்க யோகம் பற்றிக் கூறுவது தனிச்சிறப்பாகும்.

அட்டாங்க யோகங்களாவன: 1. இயமம், 2. நியமம், 3. ஆதனம், 4. பிராணாயாமம், 5. பிரத்தியாகாரம், 6. தாரணை, 7. தியானம், 8. சமாதி ஆகியவை.

இந்த அட்டாங்க யோகங்களோடு கேசரி யோகம், பரியங்க யோகம், அமுரிதாரணை யோகம், சந்திர யோகம், மந்திர யோகம் ஆகிய யோகங்களைப் பற்றியும் திருமந்திரம் கூறுகிறது.

அணிமா, மகிமா, கரிமா, இலகிமா, பிராப்தி, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம் ஆகிய அட்டமா சித்திகளைப் பற்றியும் கூறுகிறது.

திருமந்திரத்திலுள்ள ஒன்பது தந்திரங்களும், ஆகமங்கள் ஒன்பதன் விளக்கமாக அமைந்துள்ள தனிச்சிறப்பாகும். இதனைக் கீழ்வரும் திருமந்திரப் பாடல் உணர்த்துகிறது.

பெற்றநல் ஆகமம் காரணம் காமிகம்
உற்றநல் வீரம் உயர்சிந்தம் வாதுளம்
மற்றுஅவ் வியாமளம் ஆகும்கா லோத்தரம்
துற்றநற் சுப்பிரம் சொல்லு மகுடமே (திரு. மந். 73)

சமய நூல்கள் சில சாத்திர நூல்களாக விளங்கும்; சில தோத்திர நூல்களாக விளங்கும். ஆனால், திருமந்திரம் சாத்திர நூலாகவும், தோத்திர நூலாகவும் வாழ்வியல் நூலாகவும் விளங்குவது தனிச்சிறப்பாகும்.

திருமந்திரம் சமுதாயச் சிந்தனைகள் பலவற்றை வாரி வழங்குகின்றது.

தாவரங்கள், பறவைகள், விலங்குகள், உலோகங்கள், நவமணிகள் முதலானவை பற்றிப் பல செய்திகளைத் தருகின்றது. ஆன்மிக வாழ்க்கையோடு, இல்லற வாழ்க்கை மற்றும் துறவற வாழ்க்கை பற்றியும் கூறுகின்றது. சக்தி வழிபாடு, ராஜேஸ்வரி வழிபாடு, பைரவி வழிபாடு, சாம்பவி வழிபாடு முதலான வழிபாடுகளைக் கூறுவதோடு, அக வழிபாட்டையும் எடுத்துக் கூறுவது திருமந்திரம்.

திருமந்திரம் இறைவனைப் பற்றிக் கூறுகிறபோது, 'ஒன்றுஅவன் தானே! இரண்டுஅவன் இன்னருள்!' (திரு. மந். 1) என்று கூறுவது ஒரு தனிச் சிறப்பாகும்.

உயிருக்கு வடிவம் கூறி, அதன் இருப்பிடங்கள் பற்றியும் கூறுவது திருமந்திரத்தின் தனிச்சிறப்பாகும்.

மூவகை உயிர்களின் இயல்பு பற்றியும் சுத்தன், கேவலன், சகலன் என்றும் பிரித்துக் கூறுகிறது. சகலரில் ஐந்து வகை இயல்பினர் உண்டு என்பதையும் திருமந்திரம் மட்டுமே கூறுகிறது.

பிராணன், புருடன், சிவன், பசு, போதன் ஆகியோர் அவ்வகையினர் ஆவர்.

தமிழ் மொழியில் 16 உயிரெழுத்துகளும் 35 மெய் எழுத்துகளும் இருந்தன என்ற செய்தி திருமந்திரத்தில் சொல்லப்படுகிறது. (இன்று வழக்கில் உள்ளது உயிர் 12, மெய் 18 என்பது குறிப்பிடத்தக்கது).

சைவ சித்தாந்தம் என்ற சொல்லாட்சியை முதன்முதலில் கையாள்வது திருமந்திரமே. மேலும் சைவசித்தாந்தக் கருத்துகள் பலவற்றைத் திருமந்திரம் கூறுகிறது. அவையாவன:

சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நால்வகை நெறிகள். சாலோகம், சாமீபம், சாரூபம், சாயுச்யம் ஆகிய பேறுகள். சன் மார்க்கம், சக மார்க்கம், சற்புத்திர மார்க்கம், தாச மார்க்கம் முதலிய மார்க்கங்கள்.

அவத்தைபேதம், கனவுநிலை, சுழுத்தி, துரியம் ஆகிய நான்கு நிலைகள். பிறவிக்கு வித்தாகும் காமம், வெகுளி, மயக்கம் ஆகிய முக்குற்றங்கள்.

மேலும், 'முப்பதம்' எனச் சுட்டப்பெறுவதும், 'நீ அது ஆகின்றாய்' என்று பொருள் தருவதுமான 'தத்–துவம்–அசி' பற்றித் திருமந்திரம் விளக்குகின்றது.

சிவதுரியம், சீவதுரியம், பரதுரியம் எனப்படும் முத்துரியம் பற்றித் திருமந்திரம் கூறுகின்றது.

முக்கரணம், முப்பாழ், பிரணவ ஒடுக்கம் பற்றியும் திருமந்திரம் சிறப்பித்துக் கூறுகின்றது. திரு ஐந்து எழுத்து பற்றியும், அதன் உட்பிரிவுகள் பற்றியும், அம்மந்திரங்களை உச்சரிக்கும் முறை பற்றியும், உயிர்கள் சென்றடையும் வீடுபேறு (அத்விதமுத்தி) பற்றியும் கூறுகின்றது.

சாத்த தத்துவம் பற்றித் திருமந்திரம் கூறுவது ஒரு தனிச் சிறப்பாகும். (பதின்மூன்று தலைப்புகள்; 520 பாடல்கள்) திருவம்பலச் சக்கரம், திரிபுவன சக்கரம், ஏரொளிச் சக்கரம், வைரவச் சக்கரம், சாம்பவி மண்டலச் சக்கரம், புவனாபதி சக்கரம், நவாக்கரிச் சக்கரம் ஆகிய ஏழு சக்கரங்களைப் பற்றிக் கூறுவது திருமந்திரத்தின் தனிச் சிறப்பாகும்.

தம்பனம், மாரணம், வசியம் எனப்படும் மூவகை மந்திரங்களைப் பற்றித் திருமந்திரம் கூறுகிறது. சைவ நெறிகளைச் சுத்த சைவம், அசுத்த சைவம், மார்க்க சைவம், கடுஞ்சைவம் என நான்காகப் பிரித்து விளக்குகிறது.

தத்துவங்கள் 4,00,48,500 என விரித்துக்கூறி, அவற்றை 96 என வகைப்படுத்தி, அவற்றையும் 25 ஆகச் சுருக்கிக் குறிப்பிடுவது திருமந்திரத்தின் தனிச் சிறப்பாகும்.

சைவ சித்தாந்தக் கருத்துகள் அதிகமாகக் கூறப்பட்டிருப்பதுபோல வேதாந்தக் கருத்துகளும் திருமந்திரத்தில் சொல்லப்பட்டிருப்பது ஒரு தனிச்சிறப்பாகும்.

உயிர்களின் தோற்றம், இருப்பு, ஒடுக்கம் ஆகியவற்றிற்குக் காரணமாக இருப்பது 'கலாந்தம்' எனப்படும். இக்கலாந்தம் பற்றித் திருமந்திரம் விரிவாகக் கூறுகிறது.

11 மந்திரங்கள், 81 பதங்கள், 51 வண்ணங்கள், 224 புவனங்கள், 36 தத்துவங்கள் பற்றியும் திருமந்திரம் சிறப்பித்துப் பேசுகிறது.

அண்டங்களின் இயல்பு பற்றியும், புடவி தத்துவத்தை அடக்கி நிற்கும் நிவிருத்திக் கலை, மற்றும் பிரதிட்டா கலை, வித்திபா கலை, சாந்தியதிதா கலை, பஞ்சாக்கினி வித்தை ஆகியவற்றைப் பற்றியும் திருமந்திரம் சிறப்பித்துக் கூறுகிறது.

'சிவபதத்திற்குச் சேர்க்கும் வழி' என்ற பொருள் தரக்கூடிய, அத்துவாக்கள் பற்றித் திருமந்திரம் பேசுகிறது.

தில்லையில் திருநடனம் செய்யும் நடராசப் பெருமானின் திருக்கூத்து கண்டு மகிழ்ச்சியடைந்ததையும் அந்தத் திருக்கூத்தின் உட்பொருளைப் பற்றியும் திருமந்திரம் சிறப்பித்துக் கூறுகிறது.

தில்லைக் கூத்தனின் கூத்துகளுள் சுந்தரக் கூத்து, பொற்பதிக் கூத்து, பொற்றில்லைக் கூத்து, அற்புதக் கூத்து முதலான கூத்துகளைத் திருமந்திரம் விளக்கிக் கூறுகிறது.

உடம்பினை இழுக்கு என்று நினைத்துக் கொண்டிருந்து, பின்பு அவ்வுடம்பே இறைவன் உறையும் பெருமைக்குரியது என்று எண்ணி, உடம்பை வளர்க்கும் உபாயத்தை விளக்கிக் கூறுவது திருமந்திரத்தின் சிறப்பாகும்.

குரு, சிவலிங்கம், சிவனடியார்கள் ஆகிய மூவரையும் வழிபடுவது முத்திற வழிபாடு ஆகும். முத்திற வழிபட்டால் பிறவித்துயர் நீங்கும் என்று திருமந்திரம் சிறப்பித்துக் கூறுகிறது.

பதி, பசு, பாசம் (இறை, உயிர், தளை) பற்றிய கருத்துகள் முப்பொருள் உண்மை எனப்படும். இதைப் பற்றித் திருமந்திரம் கூறுவது தனிச்சிறப்பாகும்.

உருவ வழிபாட்டினராகிய சகலர், அருஉருவ வழிபாட்டினராகிய பிரளயாகர், அருவ வழிபாட்டினராகிய விஞ்ஞானகலர் ஆகியோர் பற்றியும் திருமந்திரம் விளக்கிக் கூறுகிறது.

உடம்பு பற்றியும் உடலோம்பல் பற்றியும் ஆண், பெண் குழந்தைகள் பிறப்பதற்கான வழிமுறைகள் பற்றியும் எந்தெந்தக் காலத்தில் 'கரு' தோன்றும் என்பது பற்றியும், ஆரோக்கியமான குழந்தைகளைப் பெற்றுக் கொள்வதற்கான வழிமுறைகளையும் திருமந்திரம் கூறுகிறது.

உடம்பிலுள்ள 'தனஞ்செயன்' என்னும் வாயுவின் திரிபால், பல நோய்கள் உண்டாகும் என்று திருமந்திரம் கூறுகிறது.

அறம் (தருமம்) செய்யாத இல்லறத்தானை இருமல், சோகை முதலான நோய்கள் வருத்தும் என்றும் திருமந்திரம் கூறுவது தனிச் சிறப்பாகும்.

அக வழிபாட்டையும், அக வழிபாட்டு முறைகளையும் கூறுவது திருமந்திரத்தின் தனிச் சிறப்பாக உள்ளது.

அரச நீதியையும் அரசன் பெற்றிருக்க வேண்டிய தகுதிகளையும் பண்புகளையும் பற்றித் திருமந்திரம் எடுத்துரைப்பது ஒரு தனிச்சிறப்பு.

'பொருள் இல்லாதவனை இல்லாளும் வேண்டாள், ஈன்றெடுத்த தாய் வேண்டாள்' என்பதற்கு ஏற்ப, வறுமையாளன் எல்லாராலும் இகழப்படுவான் என்பதைத் திருமந்திரம் எடுத்து ஓதுகிறது.

இறந்தவர்களுக்குச் செய்யப்படும் இறுதிச் சடங்குகள் பற்றியும் சமாதியில் செய்ய வேண்டிய சடங்குகள் பற்றியும் திருமந்திரம் கூறுகிறது.

இருவினை யொப்பு, மலபரி பாகம் பெற்ற உயிரே, வீடு பேற்றுக்குத் தகுதியுடையது என்ற சிவாகமக் கருத்தைத் திருமந்திரம் பேசுகிறது. சத்தித் தத்துவத்தின் துணைகொண்டு சிவ தத்துவம் உண,ரப்படும். ஆதலின், சத்தி சிவ தத்துவத்தைத் திருமந்திரம் கூறுவது அதன் தனிச் சிறப்பாகும்.

இன்பம் என்பது, இல்வாழ் தவநிலை. புதுமணம் செய்து இல்வாழ் தவநிலை புகுவார் இருவரும், அம்மையும் அப்பனும் ஆவர் என்று கருதுவது,

தமிழர் கடமை. அத்தகைய தவநிலையைத் திருமந்திரம் சிறப்பித்துக் கூறுகிறது.

பன்னிரு திருமுறைகளுள் பத்தாவது திருமுறையாக வைத்து எண்ணப்படுவதும் திருமந்திரத்தின் தனிச்சிறப்பாகும்.

இறைவனை வழிபடுவதற்கு, சமஸ்கிருத மொழியே ஏற்றது என்ற கருத்தையும், வேத ஆகமங்கள் சமஸ்கிருதத்தில்தான் இருக்க வேண்டும் என்ற கருத்தையும் பொய்யாக்கிய பெருமைக்குரியது திருமந்திரம். இது திருமந்திரத்தின் தனிச்சிறப்பாகும்.

'அடியவர்களின் திருவுள்ளமே இறைவன் உறையும் கோயில்' என்பதை முதன் முதலில் சொன்ன பெருமை திருமந்திரத்தையே சாரும்.

திருமூலர் தம்முடைய பட்டறிவால் பெற்ற அறிவினை, உபதேசங்களாக, மந்திரங்களாக, தமிழ்ப் பாடல்களாகப் படைத்ததோடு, தாம் பெற்ற அனைத்து இன்பங்களையும் வையக மாந்தர் யாவரும் பெற்று உய்ய வேண்டும் என்று எண்ணி, 'நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்று பாடி, திருமந்திரத்தைத் தனிச் சிறப்புறச் செய்கிறார்.

திருக்கோவில் செல்வார் திருமந் திரநூல்
உருக்கமுடன் கொண்டுசென் றோதின் – பெருக்க
அறமுதலாம் நான்கும் அருள்முதலாம் ஐந்தும்
உறவருள்வன் முக்கணிறை ஓது

என்னும் பழம்பாடலின் கருத்துப்படி, திருமந்திரத்தை நாளும் உருக்கமுடன் ஓதினால், சிவனருளைப் பெறமுடியும் என்பதும் இதன் சிறப்பாகும்.

திருமந்திர நூலின் அமைப்பு

வ. எண்.	தந்திரம்	தலைப்புகள்	வெளிப்படுத்தும் கருத்துகள்
1.	முதல் தந்திரம்	24 தலைப்புகள்	மக்கள் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்க நியதிகள்
2.	இரண்டாம் தந்திரம்	25 தலைப்புகள்	சில புராண வரலாறுகள்; கரு உண்டாகும் விதம்; இறைவனின் படைத்தல் முதலான தொழில் பற்றிய செய்திகள்.
3.	மூன்றாம் தந்திரம்	21 தலைப்புகள்	அட்டமாசித்திகள், அட்டாங்க யோகம், பிராணாயாமம் பற்றிய கருத்துகள்.
4.	நான்காம் தந்திரம்	13 தலைப்புகள்	பலவித சக்கர அமைப்புகள் வயிரவி மந்திரம் மார்க்கங்கள்.
5.	ஐந்தாம் தந்திரம்	20 தலைப்புகள்	சரியை, கிரியை, யோகம், ஞானம், சலோக-சாமீப-சாரூப-சாயுச்சிய நிலையை விளக்கும் கருத்துகள்.
6.	ஆறாம் தந்திரம்	14 தலைப்புகள்	சீடருக்குரிய இலக்கணம்-திருநீற்றின் பெருமை, துறவு-சிவவேடம்-தவவேடம் பற்றிய செய்திகள்.
7.	ஏழாம் தந்திரம்	38 தலைப்புகள்	அடியார் பெருமை-குரு பூஜைவிதி-ஆன்மாவின் இலக்கணம்-அடியார் கட்கு அன்னமிடுதலின் சிறப்பு-பற்றிய கருத்துகள்.
8.	எட்டாம் தந்திரம்	43 தலைப்புகள்	பதி-பசு-பாசம் பற்றிய விளக்கம், முக்குற்றம்-முக்கரணம்-முப்பரம்-வாய்மை-பக்தி-பற்றிய செய்திகள்.
9.	ஒன்பதாம் தந்திரம்	23 தலைப்புகள்	சிவதரிசனம்-சிவ சொரூபதரிசனம், சூக்கும பஞ்சாட்சரம்-திருக்கூத்துத் தரிசனம் பற்றிய செய்திகள்.

இயல் - ஐந்து

இயல் ஐந்து

சித்தர்கள் காட்டும் வாழ்வியல் கல்வி

இந்த இயலில் சித்தர்களின் இறைக் கோட்பாடு, சித்தர்கள் கண்ட உடலும் உடலோம்பும் நெறிகளும், தனிமனித வாழ்வியல் நெறிகள், சமுதாய வாழ்வியல் நெறிகள் என்னும் நான்கு பகுதிகளாகச் சித்தர்கள் காட்டும் வாழ்வியல் கல்வி கூறப்பெறுகின்றது.

1. சித்தர்களின் இறைக் கோட்பாடு

சிவவாக்கியர்

சிவவாக்கியரின் பாடல்களில் புரட்சிகரமான சிந்தனைகள் பல நிறைந்துள்ளன. உருவ வழிபாடு, தல யாத்திரை, மத வாதம், வேதம் ஓதல், சாதியாசாரம் முதலானவற்றை எதிர்த்து, 'ஒன்றே குலம், ஒருவனே தேவன்', 'உள்ளமே கோயில்' என்னும் கொள்கைகளை அவர் உலகிற்கு உணர்த்துகிறார்.

சிவவாக்கியர் திருமூலரின் திருவிளக்கமாகப் போற்றப்படுபவர். மதம், சமயம், கடவுள் அனைத்தும் மாந்தரின் உள்ளத்துள்ளேயே உள்ளன என்று உறுதியாகக் கூறுபவர்.

இறைவன் உள்ளத்தில் உறைபவன். அவனை விக்கிரகத்திலும் கோயிலிலும் குளங்களிலும் காண முயல வேண்டாம் என்பதை,

நட்டகல்லும் பேசுமோ நாதன் உள்ளிருக்கையில் (சிவ. வா. 496)

கோயிலும் மனத்துளே குளங்களும் மனத்துளே (சிவ. வா. 33)

பூவும் நீரும் என் மனம்;

பொருந்து கோயில் என் உளம் (சிவ. வா. 195)

மூவராலும் அறியொணாத முக்கணன் முதற்கொழுந்து

காவலாக உம்முளே கலந்திருப்பன் காணுமே (சிவ. வா. 126)

என்று பாடியுள்ளார்.

இறைவன் ஒருவனே என்னும் கருத்தை வலியுறுத்தும் சிவவாக்கியர்,

எங்கள் தேவர் உங்கள் தேவர் என்றிரண்டு தேவரோ

....

அங்கும் இங்கும் ஆகிநின்ற ஆதிமூர்த்தி ஒன்றலோ?

(சிவ. வா. 128)

என்று பாடுகிறார்.

தில்லை நாயகன் அவன் திருவரங்கனும் அவன்

எல்லையான புவனமும் ஏகமுத்தியும் அவன் (சிவ. வா. 54)

என்னும் சிவவாக்கியரின் பாடலடிகளும் அதனை உறுதிப்படுத்தும்.

'சிவன் வேறு திருமால் வேறு என்று வேறுபடுத்திப் பேசுதல் பொருந்தாது. அப்படிப் பேசுவோர் வாய் புழுத்து மாய்வர்; நரகில் வீழ்வர்' என்றும் எச்சரிக்கிறார். இதனை,

எருதில் ஏறும் ஈசனும் இயங்குசக்ர தரனையும்

வேறு வேறு பேசுவோர் வீழ்வர்வீண் நரகிலே (சிவ. வா. 53)

என்ற பாடலடிகள் கூறுகின்றன.

சிவவாக்கியர் உருவ வழிபாட்டில் நம்பிக்கை கொள்ளவில்லை. இதனை,

பூசனைக்கு வைத்த கல்லில் பூவும்நீரும் சாத்துறீர்
ஈசனுக்கு உகந்தகல் எந்தக் கல்லு சொல்லுமே (சிவ. வா. 421)

கட்டை யால்செய் தேவரும் கல்லினால்செய் தேவரும்
மட்டை யால்செய் தேவரும் மஞ்சளால்செய் தேவரும்
சட்டை யால்செய் தேவரும் சாணியால்செய் தேவரும்
வெட்ட வெளிய தன்றிமற்று வேறுதெய்வம் இல்லையே
(சிவ. வா. 510)

என்னும் பாடல் சிவவாக்கியரின் உருவ வழிபாட்டில் ஈடுபாடின்மையைக் காட்டுவதோடு, இறைவன் வெட்டவெளியானவன் என்பதையும் புலப்படுத்துகிறது. மேலும், செம்பில் இறைவுருவத்தை வைத்துத் தேர் இழுப்பது போன்ற செயல்கள் மனிதர் பண்ணும் புரளிகள் என்றும் சாடுகிறார்.

கல்லிலும் வெள்ளியிலும் செம்பிலும் இரும்பிலும் 'தரா' எனப்படும் கலப்பு உலோகத்திலும் இறைவன் திருவுருவத்தை வடிவமைத்து வணங்குவது சுகமான செயலாகாது. அவ்வாறு செய்வது இறைவன் ஆணையும் ஆகாது என்று அடித்துக் கூறுமுகத்தான்,

இல்லை இல்லை இல்லை இல்லை ஈசன் ஆணை இல்லையே
(சிவ. வா. 522)

என்று பாடுகிறார்.

அகப்பேய்ச் சித்தர்

'இறைவன் ஆனந்த வடிவமாக இருக்கிறான்' என்பது அகப்பேய்ச் சித்தரின் கருத்து.

மேலும், அக்கினிக்கு ஆண் என்றோ, பெண் என்றோ இனம் இல்லை. இறைவனும் அவ்வண்ணமே. அவனுக்கு என்று தனி அடையாளங்கள் இல்லை என்கிறார்.

இறைவனின் திருவடியைக் கண்டுவிடு. அவனை மறைகளில் தேடாதே. அவன் மறைகளுக்கு அப்பால் மறைந்து நிற்பவன்.

தெய்வம் ஒன்றுதான். அதுவே, தத்துவமானது; சதாசிவம் என்பது. மற்றதெல்லாம், மாயை உருக்கொண்டது என்கிறார். இக்கருத்தை,

தத்துவத் தெய்வமடி – அகப்பேய்
சதாசிவம் ஆனதடி
மற்றுள்ள தெய்வ மெல்லாம்
மாயை வடிவாமே (அக. சி. 74)

என்று கூறுகிறார் அகப்பேய்ச் சித்தர்.

மேலும், 'நான்கு வேதங்களாலும் அறிய முடியாத அந்த இறைவனை யார்தாம் காண முடியும்? கண்டவர்கள் இல்லை. அப்படிக் கண்டவர்கள் இருந்தால், அவர்கள் கண்டு வந்தது என்னவென்று உசாவி அறியுங்கள்' என்கிறார்.

பாம்பாட்டிச் சித்தர்

இறைவன் உயிர்களோடு பிரிக்க முடியாதபடி இணைந்துள்ளான் என்பதைப் பாம்பாட்டிச் சித்தர் பலவாறாக விளக்குகிறார்.

பொன்னிலிருந்து ஒளியையும், பூவிலிருந்து மணத்தையும் பிரிக்க இயலாததுபோல இறைவன் உயிர்களோடு பிணைந்துள்ளான். எள்ளில் எண்ணெய்போல் அவன் மறைந்துள்ளான் என்கிறார்.

அண்டத்தையும் பிண்டத்தையும் படைத்தவன் அவனே. உருவாகவும் இருப்பான்; உருவம் அற்றும் விளங்குவான்.

குருவும் அவனே. திருவும் அவனே. அவன் ஒளி வடிவினன்; தூயவன். அனைத்துக்கும் அவனே முடிவு. அவனைப் போற்றுமின் என்கிறார்.

பாம்பாட்டிச் சித்தரின் இக்கருத்துகளை,

அருவாயும் உருவாயும் அந்தி யாயும்
அந்தமாயும் ஒளியாயும் ஆக மாயும்
திருவாயும் குருவாயும் சீவ னாயும்
செறிந்த வத்துவைப் போற்றிஆடு பாம்பே (பா. பா. சி. 7)

என்ற பாடல் மூலம் அறியலாம்.

'அற்றது பற்றெனில் உற்றது வீடு' என்பதற்கு ஏற்ப, ஆசைகளை விட்டொழித்தால் மட்டுமே முதற்பொருளான இறைவனை அடையலாம். மற்று, பூசைகள் செய்வதாலோ, பூமியை வலம் வருவதாலோ இறைவனைக் காணமுடியாது என்று கூறுகிறார்.

இறைவனை உள்ளத்தில் வைத்தே எண்ண வேண்டும் என்ற கருத்தை,

உள்ளத்துக் குள்ளேயே உணர வேண்டும் (பா. பா .சி. 115)

என்கிறார்.

எண்ணரிய புண்ணியங்கள் எல்லாம் செய்தும், என்
ஏகன்அடி நெஞ்சமதில் எண்ணா விடிலே?
(பா.பா.சி. 107)

என்று வினவுவதன் மூலம் இறைவனை உள்ளத்தில் ஏற்றித் தொழ வேண்டும் என்பதை வலியுறுத்துகிறார்.

இடைக்காட்டுச் சித்தர்

இடைக்காட்டுச் சித்தர், 'இறைவன் காலங்களை யெல்லாம் கடந்த சோதி வடிவானவன்; நம்முடைய கற்பனைகளுக்கெல்லாம் அப்பாற்பட்ட

அற்புதம்; நூல்வல்லார் எடுத்துக்காட்டுகின்ற நுண்பொருள்' என்று விளக்குகிறார்.

மேலும், 'அவன், கண்மணியாகத் திகழும் விண்மணி; பாலின் சுவை போல், பழத்தின் இனிமைபோல், நூலின் கருவினைப்போல் நுண்பொருளாய் விளங்குபவன்' (இடை.சி. 47 – 50) என்று கூறுகிறார்.

இறைவன் அன்பர்களின் உள்ளத்தில் உறைபவன். அவனை வேறு இடங்களில் தேடி அலைவது புல்லறிவு என்று சாடுகிறார். இதனை,

கைவிளக்குக் கொண்டு கடலில் வீழ்வார்போல்
மெய்விளக்குஉன் உள்ளிருக்க வீழ்குவதேன் புல்லறிவே
(இடை. சி. 74)

என்று பாடுகிறார். பல மதங்கள் பேசுவது பொய்ம்மையானது என்பதை,

பலமதம் பொய்மையே என்றுஓது குயிலே (இடை. சி. 84)

என்று எடுத்துரைக்கின்றார்.

மேலும்,

ஆறாதாரத் தெய்வங்களை நாடு
அவர்க்கும் மேலான ஆதியைத் தேடு
(இடை. சி. 32)

என்று கூறுவதன் மூலம், குறித்த தெய்வம் இதுவெனக் கூறுகிறார். சிவபெருமானை, அர்த்த நாரீஸ்வரனாகக் கண்டு ஆராதிக்கிறார் இடைக்காடர். இதனை,

கண்ணுள் கருமணியைக் கற்பகத்தைக் காஞ்சனத்தைப்
பெண்ணுருவப் பாதியனைப் பேசரிய முப்பொருளை
(இடை. சி. 12)

என்று குறிப்பிடுகிறார்.

இடைக்காடர், தம் கருத்துகளைத் தாண்டவராயக் கோனார் கூற்று, நாராயணக் கோனார் கூற்று எனவும், பலரொடு கிளத்தல், நெஞ்சொடு கிளத்தல், அறிவொடு கிளத்தல், சித்தத்தொடு கிளத்தல், குயிலொடு கிளத்தல், மயிலொடு கிளத்தல், அன்னத்தொடு கிளத்தல், புல்லாங் குழலூதுதல், பால் கறத்தல், கிடை கட்டுதல் எனப் பல உத்திகளாகவும் வெளிப்படுத்துகிறார்.

குதம்பைச் சித்தர்

இறையை வெட்டவெளியாகக் காட்டி, அதுதான் உண்மை நிலையென்றும் கூறுகிறார் குதம்பைச் சித்தர்.

தந்திரக் கலை எனப்படுவது சரியை, கிரியை, சற்புத்திர மார்க்கங்களைப் போதிப்பது. இம்மூன்று மார்க்கங்களாலும் இறைவனை அடைந்துவிடலாம். வேறு மந்திரங்கள் செபிக்க வேண்டாம் என்பது குதம்பைச் சித்தர் கருத்து. இதனை,

தந்திரமான தலந்தனில் நிற்போர்க்கு
மந்திரம் ஏதுக்கடி – குதம்பாய்
மந்திரம் ஏதுக்கடி? (குத. சி. 7)

என்று பாடியுள்ளார்.

வெட்டவெளியே இறை என்று உணர்வாருக்கு, ஓர் அடையாளம் (உருவம்) வேண்டாம் என்று உரைப்பதுபோல்,

வெட்டவெளி தன்னை மெய்யென்று இருப்போர்க்குப்
பட்டயம் ஏதுக்கடி? – குதம்பாய்
பட்டயம் ஏதுக்கடி? (குத. சி. 1)

என்று பாடி வினவுகிறார்.

ஒருவர் தம்மைத்தாமே அறியும் நிலையே, இறைவனை அறிந்து அவரை அடையும் நிலை. ஆதலால், அவருக்கு வேறு உத்திகள் வேண்டாம் என்று கூறுவதுபோல்,

தன்னை அறிந்து தலைவனைச் சேர்ந்தோர்க்குப்
பின்னாசை ஏதுக்கடி? – குதம்பாய்
பின்னாசை ஏதுக்கடி? (குத. சி. 31)

என்று பாடுகிறார்.

கடுவெளிச் சித்தர்

கடுவெளியாரும், இறைவன் வெளியானவன் என்ற கருத்தையுடையவர். ஆதலால்,

மெய்ஞ்ஞானப் பாதையிலேறு – சுத்த
வேதாந்த வெட்டவெளி யினைத்தேறு (கடு. சி. 10)

என்று கூறுகிறார்.

இறையை அடையப் பக்தி மார்க்கமே மேலானது என்பதை,

பாரில் உயர்ந்தது பத்தி – அதைப்
பற்றின பேர்க்குண்டு முத்தி (கடு. சி. 18)

என்று பாடுகிறார். இதனையே மேலும்,

அன்பெனும் நன்மலர் தூவிப் – பர
மானந்தத் தேவின் அடியிணை மேவி (கடு. சி. 19)

என்று கூறுகிறார்.

காசிபோன்ற புனிதத் தலங்களுக்குப் போகவேண்டா, கங்கை போன்ற புனிதநதி நீராட வேண்டா, உள்ளார்ந்த அன்பே போதுமானது என்பதை,

காசிக்கோ டில்வினை போமோ—அந்தக்

கங்கையா டில்கதி தானுமுண் டாமோ? (கடு. சி. 15)

என்று வினவுகிறார் கடுவெளிச் சித்தர்.

அழுகண் சித்தர்

இவர் இறையைச் சக்தியாகக் காணுகின்றார்; கண்ணம்மாவாகக் கருதிப் பாடுகிறார். இந்தக் கண்ணம்மாவை, பொற்சிலம்பும் பாடகமும் அணிவித்து, பட்டாடை உடுத்தி, கண்ணுக்கு மையெழுதி, பல்வகை அணிகளையெல்லாம் பூட்டி அழகு பார்ப்பதாக அவரே கூறுகிறார்.

நலிவுறும் இப்பிறவியை எடுத்து, நாற்றமெடுக்கும் உடம்பொடு வாழ்ந்து கொண்டிருக்கிறோம். நற்பிறவி எடுக்க நன்மருந்து கிடைக்கவில்லை. அந்த மாமருந்து கிடைத்துவிட்டால் இந்த மனிதப் பிறவி வேண்டுவதில்லை. மகாசக்தியின் பாதத்தில் விழுந்துகிடக்கவே விரும்புவேன் என்கிறார். இதனை,

ஊற்றைச் சடலமடி உப்பிருந்த பாண்டமடி
மாற்றிப் பிறக்க மருந்தெனக்குக் கிட்டுதில்லை
மாற்றிப் பிறக்க மருந்தெனக்குக் கிட்டுமென்றால்
ஊற்றைச் சடலம்விட்டே என் கண்ணம்மா
உன்பாதஞ் சேரேனோ? (அழு. சி. 8)

என்று பாடுகிறார். மேலும்,

பையூரிலே இருந்து பாழூரிலே பிறந்து
மெய்யூரில் போவதற்கு வேதாந்த வீடறியேன்
மெய்யூரில் போவதற்கு வேதாந்த வீடறிந்தால்
பையூரும், மெய்யூரும் என்கண்ணம்மா
பாழாய் முடியாதோ (அழு. சி. 10)

என்று பாடி, தம் வேதாந்த விருப்பத்தை வெளிப்படுத்துகிறார் அழுகண் சித்தர்.

கொங்கணச் சித்தர்

இவருடைய கருத்துகள் சக்தி வழிபாட்டை வலியுறுத்தும் 'சாக்தத்தை'ச் சார்ந்தவை. அன்னை படைத்தளித்த உடலைப் போற்று; அந்த அன்னையைப் போற்று; உள்ளே தெய்வம் இருக்கிறது.

'சக்தி பெரிதா? சிவம் பெரிதா?' என்று கேட்பவர்களுக்குக் 'கத்தி பெரிதா? உறை பெரிதா?' என்ற வினாவையே விடையாகத் தருகிறார்.

மண்ணின்றி விண்ணில்லை, மணமின்றிப் பூவில்லை, பெண்ணின்றி ஆண் இல்லை என்பதும் கொங்கணர் கருத்து.

சிவன், சுப்பிரமணியர், விஷ்ணு, நந்தீசர், சரஸ்வதி ஆகியோரை வாழ்த்தி வணங்கினாலும், சக்தி வழிபாட்டிலேயே இவர் பெருவிருப்பினர் என்பதை,

சத்தி சடாதரி வாலைப் பெண்ணாம்..... (கொங். சி. 2)

சித்தர்கள் போற்றிய வாலைப் பெண்ணாம்.... (கொங். சி. 3)

எங்கும் நிறைந்தவள் வாலைப் பெண்ணாம்... (கொங். சி. 4)

என்னும் பாடலடிகள் விளக்குகின்றன.

சக்தியை வழிபட்டால் பேய் பிசாசு அண்டாது, பில்லி சூனியம் நெருங்காது, நீரிழிவு (சக்கரை நோய்) முதலான நோய்கள் வாரா, நீண்ட ஆயுள் கிட்டும் என்பதை,

ஆயுசு கொடுப்பாள் நீரிழி வுமுதல்
அண்டாது மற்ற வியாதி யெல்லாம்
பேயும் பறந்திடும் பில்லிவி னாடியில்
பத்தினி வாலைப்பெண் பேரைச் சொன்னால்

(கொங். சி. 105)

என்று கூறுகிறார்.

அகத்தியர் (ஞானப் பாடல்)

இவர், யோகம், ஞானம் என்பவை பற்றிய விளக்கங்களைக் கூறுகிறார். மனம் செம்மைப் பட்டுவிட்டால் வேறு எந்த ஆன்மிக முயற்சியும் வேண்டாவெனக் கூறுகிறார். இதனை,

மனமது செம்மையானால் மந்திரம் செபிக்க வேண்டா

....

....

மனமது செம்மையானால் மந்திரஞ் செம்மை யாமே

(அக. ஞா. 2)

என்று கூறுகிறார்.

'சக்தியும் சிவனும் ஒன்று என்பதை இவ்வுலகில் கோடியில் ஒருத்தர் தாம் அறிந்து இருக்கிறார்', 'வணங்குதற்குத் தெய்வம் ஒன்றுதான்' என்னும் கருத்துகளை அகத்தியர் தம் ஞானப் பாடல்கள் மூலம் விளக்குகிறார். அவற்றை,

சத்தியே பராபரமே ஒன்றே தெய்வம் சகலவுயிர் சீவனுக்கும்
அதுதா னாச்சு

புத்தியினால் அறிந்தவர்கள் புண்ணியோர்கள் பூதலத்தில்
கோடியிலே ஒருவர் உண்டு

(அக. ஞா. 1)

ஒருவன்என்றே தெய்வத்தை வணங்க வேணும்
உத்தமனாய்ப் பூமிதனில்இருக்க வேணும்

(அக. ஞா. 4)

என்னும் பாடல்கள் கூறுகின்றன.

காகபுசுண்டர்

'இருப்பதோ ஒரு பிரம்மம். ஆனால், மனிதன் படைத்ததோ எண்ணற்றவை' என்று வருந்துகிறார். இதனை,

ஒன்றான பிரமமே வெவ்வே றாக
உலகத்தில் அனந்தமடா கூத்து மாச்சு (காக. பு. 3)

என்று எடுத்தோதுகின்றார்.

விரிவான வேடமிட்டுக் காவி பூண்டு
வெறும்பி லுக்காய் அலைந்தி டுவான்.... (காக. பு. 34)

என்று போலித் துறவிகளைச் சாடுகிறார்.

உடலை வருத்திச் சாதனைகள் செய்ய வேண்டும் என்று கூறும் சித்தர்களிடையே, காகபுசுண்டரோ 'உள்ளொளியைக் காணும்வரை யோக சாதனைகளை விட்டுவிடாதே' என்று கூறுகிறார். இதனை,

ஆணவத்தாற் சாதனத்தை மறந்தா யானால்
அபரோட்ச ஞானமுத்தி அரிது தானே (காக.பு. 15)

என்று பாடுகிறார்.

சட்டைமுனிச் சித்தர்

கடவுள் நிலையைக் காண்பதற்கு 'நான்' என்ற அகந்தையும் ஆணவமும் போகவேண்டும் என்று அறுதியிட்டுக் கூறுகிறார் சட்டைமுனி.

இந்த உலகத்தில் நடைபெறும் யாவும் பராசக்தியின் கூத்தாகவே கண்டவர் சட்டைமுனி.

சக்தி – சிவம் இரண்டனுள் யார் பெரியவர் என்று விவாதிப்பதும், விலகி நிற்பதும், விலக்கி வைப்பதும் மனிதர் இயல்பாகி விட்டதே என்று வருந்துகிறார். இதனை,

சமயமெலாஞ் சக்தியுண்டு, சிவமும் உண்டு

சண்டாளர் பிரித்தல்லவோ தள்ளி னார்கள் (சட். சி. 24)

என்று கூறுகிறார்.

மனத்தை அடக்கினால் உயர்ந்த பொருளாகிய இறையைக் காண முடியும் என்பதும் சட்டைமுனிச் சித்தர் கருத்தாம்.

பட்டினத்துச் சித்தர்

'மனப்பிணி மருத்துவர்' என்று போற்றப்பெறும் பட்டினத்தார், நிலையாமை பற்றியும் வாழ்வியல் பற்றியும் நிரம்பக் கூறியுள்ளார். தெய்வம் ஒன்று என்பதனை,

ஒன்றென்றிரு தெய்வம் உண்டென்றிரு உயர் செல்வமெல்லாம்

அன்றென்றிரு .... (பட். சி – பொது. 20)

என்று கூறுகிறார். உருவ வழிபாட்டை வெறுக்கும் பட்டினத்துச் சித்தர்,

உள்ளத்தி லன்றோ உறைகின்றான் இறைவன்

உருவச் சிலைதனில் எங்கி ருப்பான் (பட். சி. பொது.)

என்று பாடுகிறார். இறைவன் உறையுமிடம் அன்பர்கள் உள்ளமே என்பதைப் பட்டினத்தாரும்,

.... அன்பரிடத்திலும் ஈசன் இருக்குமிடம்

கல்லிலும் செம்பிலுமோ இருப்பான் எங்கள் கண்ணுதலே

(பட்.சி. பொது. 6)

என்று பாடியுள்ளார்.

2. உடலும் உடலோம்பும் நெறிகளும்

சித்தர்கள் உடம்பை வளர்த்து உயிரையும் வளர்க்கும் உபாயம் அறிந்தவர்கள்; சாகாக் கலையை உணர்ந்தவர்கள்; அவ்வாறே உணர்த்தியவர்கள்.

உயிரைக் காப்பதற்கு உடம்பை ஒரு கருவியாகக் கொண்டார்களேயன்றி உடம்புக்கு முக்கியத்துவம் கொடுத்தவர்கள் அல்லர் சித்தர்கள்.

அழியக்கூடிய உடம்பின் அசுத்தமான மூலகங்களை ரசவாதத்தின் மூலம் தூய்மைப்படுத்திக் கொண்டு, 'சுத்த தேகம்' பெற்றனர். மீண்டும் அதனை மாற்றி, 'பிரணவ தேகம்' ஆக்கிக் கொண்டனர்.

சித்தர்கள் தங்கள் சாதனையை, உடம்பை மேம்படுத்திக் கொள்வது என்ற பொருளில், 'காய சாதனை' என்று கூறிக்கொள்வர். அதன்மூலம் காயசித்தி (தேக பூரணத்துவம்) பெறுவது சித்தர்கள் நோக்கம். 'ககன சித்தர் வந்து வந்து காயசித்தி விளைப்பர்' என்ற குற்றாலக் குறவஞ்சிப் பாடலும் இதனை வலியுறுத்தும்.

ரசவாத வித்தை மூலம் உடம்பைப் பாதுகாக்கவும் பூரணமாக்கவும் அறிந்தவர்கள் சித்தர்கள். உடம்பில் உள்ள தண்டுவட இறுதி, உயிர் உறுப்பு, தொப்புள், இதயம், தொண்டை, புருவநெற்றி ஆகிய இந்த ஆறு ஆதார நிலைகளிலும் மனத்தை ஒருமைப்படுத்தி அழிவற்ற நிலைக்கு வழிகண்டனர்.

இனி, சித்தர்கள் சிலரின் உடம்பு பற்றியதும், உடல் ஓம்பல் பற்றியதுமான சில கருத்துகளைக் காண்போம்.

சிவவாக்கியர்

'உடம்புதான் உயிரின் வடிவமா? உடம்பை உயிர் தேடிக் கொண்டதா? உயிரை உடம்பு தேடிக் கொண்டதா? உடம்பில் இருந்து பிரிந்த உயிருக்கு உருவமேது?' என்று வினவுகிறார் சிவவாக்கியர்.

மூலாதாரத்துச் சோதியை உச்சிட்ட தளத்தில் நிறுத்தி வைத்து, உலாவவிடும் திறன் படைத்தால் எப்போதும் இளமையாய் வாழமுடியும்.

நாடியில் ஒடுங்குகின்ற வாயுவைக் கபாலம் ஏற்றும் மூச்சுப் பயிற்சியைப் பெற்றால், முதியவரும் இளைஞர் ஆவார். இதனை,

உருத்தரித்த நாடியில் ஒடுங்குகின்ற வாயுவைக்
கருத்தினால் இருத்தியே கபாலம்ஏற்ற வல்லிரேல்
விருத்தரும் பாலராவர் மேனியும் சிவந்திடும்
அருள்தரித்த நாதர்பாதம் அம்மைபாதம் உண்மையே

(சிவ. வா. 4)

என்று கூறுவதோடு, மூச்சுப் பயிற்சியின் சிறப்பினை மேலும் சில பாடல்களில் சிவவாக்கியர் தெளிவுபடுத்துகிறார்.

அகப்பேய்7

'உடம்பை வருத்தி யோகத்து இருந்து ஆவதென்ன? நீ உள்ளத்தைக் கண்டுகொள். உன் தேகமே ஞான வடிவாகிவிடும்' என்று அகப்பேய்ச் சித்தர் கூறுவதால், 'இறையை அடைய உடலை வருத்தி யோகங்களைச் செய்ய வேண்டாம்' என்பது அவருடைய கருத்தாகிறது.

அஞ்சையும் உண்ணாதே
ஆசையும் வேண்டாதே
நெஞ்சையும் விட்டுவிடு
நிட்டையில் சாராதே (அக. சி. 85)

என்று கூறுவதன் மூலம் உடலை வருத்தித்தான் இறையருளைப் பெற வேண்டும் என்ற கருத்தை அகப்பேய்ச் சித்தர் மறுத்து உரைக்கிறார்.

அழுகண் சித்தர்

இவர் உடம்பை 'மெய்யூர்' என்று குறிப்பிடுகின்றார். பிறவியை 'நலிவுறும் பிறவி' என்று குறிப்பிடுகிறார்.

மெய்யூரில் போவதற்கு வேதாந்த வீடறிந்தால்
பையூரும் மெய்யூரும் என் கண்ணம்மா
பாழாய் முடியாதோ (அழு. சி. 10)

என்று கூறுவதால் உடம்புபற்றியும் பிறவிபற்றியும் அழுகணிச் சித்தரின் கருத்தை நாம் அறிய முடிகிறது. மேலும்,

எண்சாண் உடம்படியோ ஏழிரண்டு வாயிலடி (அழு. சி. 2)

ஊற்றைச் சடலமடி உப்பிருந்த பாண்டமடி (அழு. சி. 8)

என்பன போன்ற அழுகணிச் சித்தரின் பாடலடிகள் உடம்பு பற்றிய அவருடைய கருத்தைப் புலப்படுத்துகின்றன.

பாம்பாட்டிச் சித்தர்

ஆண் பெண் உடலைக் குயவர்கள் செய்த மட்பாண்டமாக நினைக்கிறார் பாம்பாட்டிச் சித்தர்.

'சரீரத்தின் குணம்' என்னும் தலைப்பிட்டு உடம்பைப் பற்றிக் கூறும்பொழுது, 'குயவனார் செய்த பாண்டம்', 'நாற்றமுடைக் குடம்', 'நீரில் எழும் நீர்க் குமிழி', 'நவவாயில் பீற்றல் துருத்தி', 'மரப் பாவை', 'மரக் கப்பல்' எனப் பல பெயர்களால் பாம்பாட்டிச் சித்தர் குறிப்பிடுகிறார்.

இடைக்காட்டுச் சித்தர்

'சாகாக் கலை' கற்க இடைக்காடர் வற்புறுத்துகிறார்.

சாவா திருந்திடப் பால்கற – சிரம்
தன்னில் இருந்திடும் பால்கற (இடை. சி. 107)

'ஆசை' என்ற பசுவை மாளச் செய்து, 'சினம்' என்னும் பாம்பை இறக்கச் செய்து, 'மனம்' என்ற மாட்டை அடக்கி, ஆன்மிக நெறி நிற்க வேண்டுகிறார். மெய், வாய், கண், மூக்கு, செவி இவற்றை ஆடுகளாகவும்,

மனித மனத்தை மேய்ப்பவனாகவும் உருவகம் செய்கிறார், இடைக்காடர். 'நீர் மேல் எழுத்துப் போன்று நிலையாமை உடையது உடல்' என்பதை,

அப்பிலெழுத் துடல் என்றே தும்பீபற – என்றும்
அழிவில்லாதது ஆதியென்று தும்பீபற (இடை. சி. 82)

என்று பாடுகிறார்.

குதம்பைச் சித்தர்

குதம்பைச் சித்தரும் சாகாக் கலை பற்றி வற்புறுத்துகிறார். 'சாகாக் கலை அறிந்து காலனை வென்றபின் வேடம் புனைகிற அவசியம் இல்லை' என்பது இவருடைய கருத்து.

'அட்டாங்க யோக முறைகளின்படி உடம்பையும் உள்ளத்தையும் பேணிக் கொண்டால், வேறு உலகச் சிந்தனைகள் வேண்டியது இல்லை' என்கிறார். இதனை,

அட்டாங்க யோகம் அறிந்த மெய்ஞ்ஞானிக்கு
முட்டாங்கம் ஏதுக்கடி? – குதம்பாய்
முட்டாங்கம் ஏதுக்கடி? (குத. சி. 21)

என்றும்,

காலனை வென்ற கருத்தறி வாளர்க்குக்
கோலங்கள் ஏதுக்கடி? – குதம்பாய்
கோலங்கள் ஏதுக்கடி? (குத. சி. 26)

என்றும் பாடி இக்கருத்தை விளக்குகின்றார்.

இங்கு, 'காலனை வெல்லும் கருத்து' என்பது, அட்டாங்க யோகம் ஆகும்.

கடுவெளிச் சித்தர்

நந்த வனத்தில் ஓர்ஆண்டி – அவன்
நாலாறு மாதமாய்க் குயவனை வேண்டிக்
கொண்டு வந்தான் ஒருதோண்டி – அதைக்
கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத் தாண்டி

(கடு. சி. 4)

உடம்பையும் பிறவியையும் இவ்வளவு எளிமையாகவும் இனிமையாகவும் கடுவெளிச் சித்தர் எடுத்துக் கூறுகிறார். 'நீர்மேல் குமிழி போன்றது இந்த உடல். அது நிலைக்காது' என்றும் கூறுகின்றார்.

மனத்துக்கு அடிமையாகி உடம்பைப் பாழ்படுத்தக் கூடாது. உடம்பை நன்கு பராமரித்துக் கொள்ள வேண்டும். அவ்வாறு செய்தால் பலநூறு ஆண்டுகள் வாழலாம். மனத்தில் கெட்ட எண்ணங்கள் ஏற்படின், அவை உடலையும் உயிரையும் பாதிக்கும்.

மேலும், அட்டாங்க யோகங்களைப் பின்பற்றி உடலையும் உள்ளத்தையும் காக்க வேண்டும் என்பதும் கடுவெளிச் சித்தரின் கருத்தாகும்.

கொங்கணச் சித்தர்

உடம்பை 'ஒன்பது வாயில் கொண்ட கோட்டை' என்று குறிப்பிடுகின்றார். உடம்பை, 'உப்பிருந்த பாண்டம்' என்றும், 'ஊத்தைச் சரீரம்' என்றும் இகழக் கூடாது. அன்னை சக்தியால் வந்த இந்த உடலைப் பேணிக் காக்க வேண்டும். ஏனென்றால் உள்ளே தெய்வம் இருக்கிறது என்பது கொங்கணரின் மேலான கருத்தாகும். உடலையும் உள்ளத்தையும் பேண, யோகமும் வாசியும் வேண்டும் என்பதை,

வாசிப் பழக்க மறியவே ணுமற்று
மண்டல வீடுகள் கட்ட வேணும்
நாசிவழிக் கொண்டு யோகமும் வாசியும்
நாட்டத்தைப் பாரடி வாலைப் பெண்ணே (கொங். சி. 28)

என்று வலியுறுத்துகிறார் கொங்கணர்.

அகத்தியர் (ஞானப் பாடல்கள்)

இவர் அனைத்து நலன்களுக்கும் 'மனமே வித்து' என்று கூறுகிறவர். இயமம், நியமங்களில் தவறாமல் ஈடுபட்டுவந்தால், அதுவே உடலோம்பும் நெறியாகும் என்பது இவருடைய கருத்து. இதனை,

மனமது செம்மையானால் வாயுவை வுயர்த்த வேண்டா
மனமது செம்மையானால் வாசியை நிறுத்த வேண்டா
(அக. ஞா. 1)

என்றும்

மூலமதை யறிந்தக்கால் யோக மாச்சு
முறைமையுடன் கண்டக்கால் வாத மாச்சு (அக. ஞா. 5)

என்றும் பாடி வெளிப்படுத்துகிறார்.

உடலுயிரும் பூரணமும் மூன்று மொன்றே
உடலுயிரும் பூரணமும் அயன் மாலீசன்
உலகத்தோ ரறியாமல் மயங்கிப் போனார் (அக. ஞா. 12)

என்று பாடுவதால் உடல், உயிர் பற்றிய அகத்தியரின் உயர்வான கருத்துகளை நாம் உணருகின்றோம்.

காகபுசுண்டர்

உடலை வருத்தும் பயிற்சிகள் தேவையில்லை என்பது சித்தர் சிலருடைய கருத்து. ஆனால், காகபுசுண்டர் உள்ளொளியைக் காணும்வரை உடலை வருத்தி, யோக சாதனைகள் செய்ய வேண்டும். அவற்றை விட்டு விடாதே என்கிறார். இதனை,

வீணல்லோ தியான தாரணைக ளெல்லாம்
மெய்பிர காசிக்கும் வரைவேணுந் தானே (காக. பு. 14)

என்னும் பாடல் அடிகளால் விளக்குகின்றார்.

இவர் பலகோடி கல்பங்கள் வாழ்ந்தவர். யுகங்கள் அழியும்போது கூட, உடம்பு அழியாமல் இருக்க உச்சரிக்க வேண்டிய தாரணைகளையும் கூறியுள்ளார். வெற்றிக்கு வழி, மனஅடக்கம் என்று கூறுகிறார்.

உடலை ஓம்புவதற்குப் பல மருத்துவ முறைகளைக் காகபுசுண்டர் கூறுகிறார். ஜவ்வாது, புனுகு முதலானவற்றை மருந்தாகப் பயன்படுத்தக் கூறுகிறார். கருந்துளசி, தில்லைப் பால், வௌவாலின் பித்து, மந்திப் பித்து முதலான மருந்துகளை அரைத்துப் பயன்படுத்த வேண்டும் என்று கூறுகிறார். செந்தூரம், புடம், தைலம் போன்ற சித்த மருத்துவ முறைகளைச் சொல்லுகிறார் காகபுசுண்டர்.

ஆச்சடா வுடம்பிலுள்ள வியாதி யெல்லாம்
அணுப்போல வுண்டிடவே பறந்து போகும்

(காக. பு. 75)

இவ்வாறு உடம்பைப் பேணும் உபாயங்களைக் காகபுசுண்டர் எடுத்துக் கூறுகிறார்.

சட்டைமுனிச் சித்தர்

'மன அடக்கமே அனைத்திற்கும் அடிப்படை' என்பது சட்டை முனியின் கருத்து. பிராணாயாமம் செய்தல், காயசித்தி செய்தல், யோக மார்க்க முற்றல் இவையெல்லாம் உடலை ஓம்பும் உபாயங்கள் என்றும், இவற்றைச் செய்து வெற்றி கண்ட கொங்கணர், காகபுசுண்டர் முதலானோரை எடுத்துக்காட்டி வலியுறுத்துகிறார் சட்டைமுனி.

'சட்டைமுனிச் சித்தரின் கற்பவிதி' என்னும் நூலில் உப்புச் சுண்ணம், காய சித்தி, அயச் செந்தூரம், காந்த கற்பம், செந்தூரம், சூதமணி, வாதசித்தி, பூநாகச் செந்தூரம், கெந்திமெழுகு எனப்படும் பல மருந்துகளின் செய்முறைகளையும் கூறி, உடலோம்பும் உபாயத்தை விளக்குகிறார்.

பட்டினத்துச் சித்தர்

இவர் ஒரு 'மனப் பிணி மருத்துவர்'. பட்டினத்தார் நாற்பதுக்கும் மேற்பட்ட சொற்களால் உடம்பைக் குறிப்பிடுகின்றார். 'ஆசைக் கயிற்றில் ஆடும் பம்பரம்', 'இருவினைப் பெட்டகம்', 'காற்றில் பறக்கும் கானப் பட்டம்', 'சோற்றுத்துருத்தி', 'ஓடும் மரக்கலம்', 'நீரில் குமிழி', 'நீர்மேல் எழுத்து' முதலான சொற்களே, உடம்பினைப் பற்றிய பட்டினத்தார் எண்ணத்தை நமக்கு விளக்குகின்றன.

யாக்கை நிலையாமையைப் பற்றியும், செல்வ நிலையாமையைப் பற்றியும் வற்புறுத்திப் பாடியவர் பட்டினத்தார்.

விட்டுவிடப் போகுதுயிர்
விட்ட உடனே உடலைச்
சுட்டுவிடப் போகின்றார் சுற்றத்தார் (பட். சி. பொது. 6)

எத்தனை நாள்கூடி எடுத்த சரீரம் இவை?
அத்தனையும் மண்தின் பதல்லவோ (பட். சி. பொது. 14)

இருப்பதுபொய் போவதுமெய் என்றெண்ணி நெஞ்சே
ஒருத்தருக்கும் தீங்கினை உன்னாதே (பட். சி. பொது. 17)

என்னும் பாடலடிகள், உடம்பு பற்றிய பட்டினத்தாரின் கருத்துகளை நமக்குத் தருகின்றன.

3. தனிமனித வாழ்வியல் நெறிகளாகச் சித்தர்கள் கூறுவன

"சித்தர்கள், மக்கள் அனைவரும் ஒழுக்கம் தவறாமல் வாழ வேண்டும் என்பதை வலியுறுத்திப் பாடியிருக்கின்றனர். பொய், சூது, கொலை, குடி, பரத்தமை முதலியவற்றை வன்மையாகக் கண்டித்திருக்கின்றனர். கூடா ஒழுக்கம், உடல் நோயை உண்டாக்கும்; நல்வாழ்வுக்கு உலைவைக்கும். நல்லொழுக்கத்தைப் பின்பற்றுபவர்களே

யோகப் பயிற்சியில் வெற்றி பெற முடியும்; உடல் வலிமையுடன் நீண்டநாள் வாழ முடியும். இதன் பொருட்டே நல்லொழுக்கத்தைப் போற்றியும் தீயொழுக்கத்தைக் கடிந்தும் பாடியிருக்கின்றனர்.'' (சாமி சிதம்பரனார் – சித்தர்கள் கண்ட விஞ்ஞான தத்துவம் : பக். 49–50)

சிவவாக்கியர்

வாழ்வியல் கோட்பாடுகளைச் சந்தப்பாவில் சிந்தித்து வெளியிட்ட பெருமைக்கு உரியவர் சிவவாக்கியர்.

சாதி வேற்றுமையைக் கடுமையாகச் சாடுபவர் சிவவாக்கியர். இதனை,

சாதி ஆவது ஏதடா (சிவ. வா. 68)

சாதிபேதம் ஓதுகின்ற தன்மை என்ன தன்மை
(சிவ. வா. 45)

பறைச்சி ஆவது ஏதடா? பணத்தி ஆவது ஏதடா?
(சிவ. வா. 38)

என்ற பாடலடிகள் விளக்குகின்றன.

இறைவனை நம் உள்ளத்திலேயே காணலாம் என்று உணர்ந்து பாடியவர் சிவவாக்கியர். இதனை,

கோவில் பள்ளி ஏதடா? குறித்து நின்றது ஏதடா?
வாயினால் தொழுது நின்ற மந்தி ரங்கள் ஏதடா?
ஞானமான பள்ளியில் நன்மையாய் வணங்கினால்
காயமான பள்ளியில் காணலாம் இறையையே
(சிவ. வா. 180)

என்று பாடுகிறார்.

இறந்தவர் பிழைப்பதில்லை என்னும் கருத்தில் சிவவாக்கியர் அழுத்தமான நம்பிக்கை உடையவராக உள்ளார்.

கறந்த பால் மடி புகாது; கடைந்த வெண்ணெய் மோர் புகாது; அதுபோல் இறந்தவர்கள் பிழைப்பதில்லை என்று கூறுகிறார்.

கறந்தபால் மடிபுகா; கடைந்த வெண்ணெய் மோர்புகா
இறந்தவர் பிழைப்பதில்லை. இல்லை; இல்லை; இல்லையே

(சிவ. வா. 46)

என்பது அக்கருத்தைக் கூறும் பாடலடிகள்.

இவர், இறைவனை உள்ளத்தில் காண விரும்பியவர்; கண்டவர்.

நட்ட கல்லும் பேசுமா நாதன் உள்ளிருக்கையில் (சிவ. வா. 496)

என்று புரட்சிப் பா பாடியவர் சிவவாக்கியர்.

ஆன்மிகத் துறையில் நிகழ்ந்துவந்த அறியாமையைக் களைய முயன்றவர் சிவவாக்கியர்.

'குளித்தால் அழுக்குப் போய்விடும் என்று எண்ணும் மனிதர்களே! அழுக்கு எங்கே இருக்கிறது? எங்கே இல்லை? உள்ளத்தின் அழுக்கைக் களைய முயலுங்கள்' என்று அறிவு கொளுத்துகிறார்.

பூசனைக்கு வைத்த கல்லில் பூவை நீரும் சாத்துறீர்
ஈசனுக்கு உகந்த கல் எந்தக்கல்லு சொல்லுமே

(சிவ. வா. 421)

என்பன போன்ற புரட்சிக் கருத்துகளுக்குச் சொந்தக்காரர் சிவவாக்கியர்.

அகப்பேய்ச் சித்தர்

அகப்பேய்ச் சித்தர் பாடல்கள் யாவும், மக்களுக்குக் கூறும் அறிவுரையாகவே உள்ளன. 'சைவம்' என்பதற்கு 'அன்பு' என்று பொருள் என்று புது விளக்கம் காண்பவர் அகப்பேய்ச் சித்தர். 'தான்' என்ற ஆணவத்தை விட்டால் அன்பு வளரும் என்றும், புலால் உணவைக் கைவிட்டவர்களுக்கு வாழ்வில் எந்த விதத் தீங்கும் ஏற்படாது என்றும் கூறுவார். இதனை,

தான்அற நின்றஇடம் அகப்பேய் சைவம் கண்டாயே
ஊன்அற நின்றவர்க்கு அகப்பேய் ஊனம்ஒன்று இல்லையடி
(அக. சி. 54)

என்று பாடுகின்றார்.

பிறவித் துயர் நீங்க வேண்டுமானால் யாருக்கும் தீமைகள் விளைவிக்கக் கூடாது என்பதை,

பிறவி தீரவென்றால் – அகப்பேய்
பேதகம் பண்ணாதே (அக. சி. 56)

என்று எடுத்துரைக்கிறார்.

மேலும், சாதி வேறுபாடு பாராட்டாமல் இருப்பதே, செருக்கின்மைக்கு அடையாளம் என்பதையும், சாத்திரங்களின் மூலம் கடவுளைக் காண முடியாது, அவனைக் காணத் தன்னை உணர வேண்டும் என்பதையும்

சாத்திரம் இல்லையடி – அகப்பேய்
சலனம் கடந்ததடி (அக. சி. 78)

என்றும்,

தன்னை அறிய வேண்டும் – அகப்பேய்
சாராமல் சாரவேண்டும்

பின்னை அறிவதெல்லாம் – அகப்பேய்

பேயறிவு ஆகுமடி (அக. சி. 78)

என்றும் கூறுகிறார்.

பாம்பாட்டிச் சித்தர்

பொய் மதங்கள் போதனைசெய் பொய்க் குருக்களைப்

புத்தி சொல்லி நல்நெறியில் போக விடுக்கும்

மெய் மதந்தான் இன்னதென்று மேவ விளம்பும்

மெய்க் குருவின் பதம் போற்றி ஆடாய் பாம்பே (பா. பா. சி 11)

என்று பாடுவதன் மூலம், 'பொய்ப் போதனையில் ஈடுபட்டிருக்கும் வஞ்சகரையும் திருத்தி, நல்ல நெறியிலே நடக்கச் செய்யும் ஆற்றலைப் படைத்தவரே உண்மையான போதகர். உண்மையான மார்க்கம், துன்பத்திலிருந்தும் கவலையிலிருந்தும் விடுதலையளிக்கும். உண்மையான மதம் இன்னதென்று உள்ளத்தில் பதியும்படி சொல்லுகின்றவரே உண்மையான குரு. அத்தகைய குருவின் திருவடிகளைப் போற்று' என்கிறார்.

மலையளவு செல்வம் வைத்திருந்தாலும், காலன் வந்து உயிரைக் கவர்ந்து கொண்டு செல்லும் பொழுது, அச்செல்வத்தைக் கொண்டு செல்ல முடியாது என்பதை,

மலைபோன்ற செம்பொன் குவை வைத்திருப்பவர்

மறலி வருகையில் வாரிச் செல்வாரோ? (பா. பா. சி. 44)

என்று பாடியுள்ளார்.

கானல் நீரைத் தண்ணீர் எனக் கருதித் தடுமாறும் மான்போல், உலக இன்பங்களை மெய்யென்று எண்ணுவது அறியாமை என்பதை,

கானலை மான்நீர் எனவேகண்டு செலல்போல்
காசினி வாழ்வினை மூடர்கண்டு களிப்பார் (பா. பா. சி. 49)

என்று கூறிச் செல்கிறார்.

உள்ளத்தில் எள்ளளவாவது அன்பு இல்லாதவர்கள் முத்தி அடைய முடியாது. அன்பற்றவர்கள் நல்ல செயல்களைச் செய்ய மாட்டார்கள்; கொடுமையைத்தான் செய்வார்கள். வஞ்சப் புலன்களின் ஆசையை அறுக்க வேண்டும் என்று கூறி, அன்பின் மேன்மையை, அன்பின் தேவையை எடுத்துரைக்கின்றார்.

தல யாத்திரை, தீர்த்த யாத்திரைகளால் இறைவனைக் காண முடியாது.

உருவச் சிலையை வணங்குவதில் பயன் இல்லை. கற் சிலையிலும் செம்புச் சிலையிலும் உணர்ச்சியில்லை என்ற பகுத்தறிவுக்கும் பாம்பாட்டிச் சித்தர் சொந்தக்காரர்.

சதுர்வேதம் ஆறுவகைச் சாத்திரம் பல
தந்திரம் புராணங்களைச் சாற்றும் ஆகமம்
விதம்விதம் ஆனதான வேறு நூல்களும்
வீணான நூல்கள் என்று ஆடாய் பாம்பே (பா. பா. சி. 98)

சமயபேதம் பலவான சாதி பேதங்கள்
சகத் தோர்க்கே யல்லாது சற்சாதுகளுக்கோ
(பா. பா. சி. 99)

சாதிப் பிரிவினிலே தீயை மூட்டுவோம்
சிந்தை வெளியினில் கோல் நாட்டுவோம் (பா. பா. சி. 123)

என்பன போன்ற கருத்துகளால் சமயம், சாதி பேதங்களுக்கு அப்பாற்பட்டது என்ற தனிமனித வாழ்வியல் நெறியைப் பாம்பாட்டிச் சித்தர் வகுத்துக் காட்டுகிறார்.

இடைக்காட்டுச் சித்தர்

அடக்கமே அனைத்துப் பண்புகளுக்கும் உலையாத அடிப்படை. 'அடக்கம் அமரருள் உய்க்கும்' (திரு. கு. 121) என்பது வள்ளுவம். இடைக்காடர் மன அடக்கம், சின அடக்கம், ஆசை அடக்கம் ஆகிய மூன்று அடக்கங்களை வலியுறுத்துகின்றார். மேலும், மனத்தை மாடு என்றும், சினத்தைப் பாம்பு என்றும், ஆசையைப் பசு என்றும் உருவகித்துக் கூறுகிறார் இடைக்காடர். இதனை,

மனமென்னும் மாடு அடங்கில் (இடை. சி. 13)

சினமென்னும் பாம்பு இறந்தால் (இடை. சி. 14)

ஆசையென்னும் பசுமாளின் (இடை. சி. 15)

என்னும் இடைக்காடரின் பாடலடிகள் விளக்கும்.

சித்தர்கள் சிந்தனையைத் தூண்டுவதில் வல்லவர்கள் என்பதற்கு இடைக்காட்டுச் சித்தர் ஒரு சிறந்த எடுத்துக்காட்டு ஆவார்.

கடவுள் பற்றிய சிந்தனையைத் தூண்டும் இடைக்காடர், மனிதன் தன்னுடைய அறிவின் வல்லமையை உணர வேண்டும்; இருட்டறைக்கு நல்ல விளக்காக இருப்பது அறிவு; எல்லோரையும் ஒன்றென நினைத்து அருள் செலுத்து என்று அறிவுக்கு ஆணையிடுகிறார்.

இருட்டறைக்கும் நல்விளக்காய்
இருக்கும்உன்தன் வல்லமையை
அருள்துறையில் நிறுத்திவிளக்கு
ஆகுகநீ புல்லறிவே (இடை. சி. 72)

என்பது அவர் கூறும் பாடலடிகள்.

குதம்பைச் சித்தர்

'கடவுளுக்கு உருவமில்லை; அவர் அருவமானவர். சூன்யம் என்றும் வெட்டவெளி என்றும் கூறப்படுவதே கடவுள் என்று அறிந்தவர்களுக்கு ஆடம்பரம், பகட்டு எவையும் தேவையில்லை' என்பது குதம்பைச் சித்தரின் முதல் கருத்து. 'அட்டாங்க யோகம் அறிந்தவர்கள் பெண்களால் கவரப்படுவதில்லை' என்பதும், உண்மையான ஞானம் பெற்றவர்களுக்கு உடலை நீண்ட காலம் காப்பாற்றிக் கொள்ளப் பயன்படும் காய கற்பங்கள் தேவையில்லை என்பதும், காலனை வெல்லும் கருத்து அறிந்தவர்களுக்குப் பொய்யான வேறு புனைவுகள் தேவையற்றவை என்பதும் குதம்பைச் சித்தரின் கருத்தாகும்.

யோகப் பயிற்சி செய்பவர்களுக்கு எக்காலத்தும் சோர்வுகள் இல்லை என்பதும் இவர் கருத்தாகும்.

கடுவெளிச் சித்தர்

தனிமனிதன் பெற்றிருக்க வேண்டிய, வாழ்க்கையில் மேற்கொள்ள வேண்டிய நெறிகளைக் கடுவெளிச் சித்தர் 'ஆனந்தக் களிப்பு' என்னும் பண்ணில் அமைத்துப் பாடுகிறார்.

தீய பழக்கங்களான கள் அருந்துதல், கஞ்சா குடித்தல், புகைபிடித்தல் முதலானவை உடலுக்கும் உயிருக்கும் தீங்கு பயக்கும் என்பதை,

> **கஞ்சா புகை குடியாதே – வெறி**
> **காட்டி மயங்கியே கட்குடியாதே** (கடு. சி. 29)

என்று பாடுகிறார்.

'சூதும் வாதும் வேதனை செய்யும்' (கொ. வே. 31) என்னும் தமிழ் மூதாட்டியின் கருத்துகளுக்கேற்ப, கடுவெளிச் சித்தரும் 'சூது, பொய், மோசம் செய்தல் முதலானவற்றை விட்டுவிடவேண்டும். இல்லையேல்,

அவன் தன் குடும்பத்தாராலும் சுற்றத்தாராலும் வெறுத்து ஒதுக்கப்படுவான்' என இடித்துரைக்கிறார். இவற்றைக் கைவிடுவதோடு பக்தியையும், மனித நேயத்தையும் கடைப்பிடிக்க வேண்டுமென்கிறார். இதனை,

சொல்லரும் சூது,பொய், மோசம் – செய்தால்
சுற்றத்தை முற்றாய்த் துடைத்திடும் நாசம்
நல்லபத் திவிசு வாசம் – எந்த
நாளும் மனிதர்க்கும் நன்மையாய் நேசம்

(கடு. சி. 2)

உயிரினங்களுக்குத் துன்பம் செய்யக்கூடாது; நம்மைப் பழிப்பவரைககூட தீயன கூறித் திட்டக்கூடாது; உலகமே பொய்த்தாலும் பொய் சொல்லக்கூடாது.

மனைவியைப் பழித்தலாகாது; ஆணவம் கொண்டு அலையக் கூடாது; அடுத்தவரைக் கெடுக்கக் கூடாது; நான்கு பேருக்கு நடுவில் நம்மை யாரேனும் போற்றித் துதிக்கமாட்டார்களா என்ற எண்ணம் கொண்டு அலையக்கூடாது.

எக்காலத்துக்கும் பொருந்தும் இக்கருத்துகள் கடுவெளிச் சித்தர் தந்த முத்தான கருத்துகள்.

அறிவற்றவர்கள் எழுதி எழுதிக் குவிக்கும் அஞ்ஞான மார்க்கத்தைக் காட்டும் நூல்களைப் படிக்கக்கூடாது என்பதை,

பத்தி அற்றவஞ் ஞானத்தின் நூல்படியாதே" (கடு. சி. 29)

என்னும் பாடலடியால் வற்புறுத்துகிறார். இத்தகைய வாழ்வியல் நெறிகளைக் கடுவெளிச் சித்தர் தம் மனத்துக்குக் கூறுவதுபோல் கூறுகிறார்.

அழுகண் சித்தர்

அழுகண் சித்தர் பாடல்கள் ஒப்பாரிப் பாடல்கள்போல் உள்ளன.

உடம்பை இழுக்கென்று எண்ணியவர் இவர். 'ஊத்தைச் சடலம், உப்பிருந்த பாண்டம்' என உடம்பைக் குறித்து வெறுத்துக் கூறி, யாக்கை நிலையாமையை வலியுறுத்துகின்றார்.

யோகிகளுக்கு நல்லொழுக்கமே முதன்மை; நல்லொழுக்கம் இல்லாதவர்கள் யோகிகள் அல்லர் என்பது அழுகணிச் சித்தர் கருத்தாகும்.

மனிதர் செய்யும் கூடாவொழுக்கங்களைத் தம்மேல் ஏற்றிக்கூறுவது போல,

அஞ்சாத கள்ளனடி ஆரும்அற்ற பாவியடி
நெஞ்சாரப் பொய்சொல்லும் நேயம்இல்லா நிட்டூரன்
கஞ்சா வெறியனடி (அழு. சி. 27)

என்று பாடுகின்றார்.

பொருள் வேண்டிப் பிறரிடம் கையேந்தி நிற்றல், பற்களைக் காட்டிப் பரக்க விழித்தல் முதலான செயல்கள் இழிசெயல்கள் என்று கூறுவதுபோல்,

புல்லரிடத்திற் போய்ப்பொருள் தனக்குக் கையேந்திப்
பல்லை மிகக்காட்டிப் பரக்க விழிக்கிறண்டி (அழு. சி. 31)

என்று பாடுகிறார். இவை, தனிமனித வாழ்வுக்குச் செம்மை சேர்ப்பனவாக உள்ளன.

கொங்கணச் சித்தர்

'கொங்கணச் சித்தர்', 'கொங்கண நாயனார்' என்னும் பெயர்களால் வழங்கப்படும் கொங்கணர் பாடல்களில் 'வாலைக் கும்மி' சிறப்பான ஒன்று. அதன் மூலம் கொங்கணர் கருத்துகளை அறிய முடிகிறது.

கொங்கணர் காட்டும் வாழ்வியல் கல்வி, 'பெற்றவர்களை அவமதிப்பு செய்யாதே! நலிவுற்றவர்களை நசித்து வாழ எண்ணாதே! உன்னைத் தஞ்சம் என்று வந்தடைந்தவர்களைக் கெடுப்பதற்குத் துணியாதே! உன் கண்ணிற் பட்டதையும் காதில் விழுந்ததையும் உண்மை என்று கொள்ளாதே' என்பவையாகும். (கண்ணால் காண்பதும் பொய்; காதால் கேட்பதும் பொய்; தீர விசாரிப்பதே மெய் என்ற பழமொழி இங்கு நினைவு கூரத்தக்கது). அவற்றோடு,

சீக்கிரந் தருமஞ் செய்யவேண் டுங்கொஞ்ச
திருப்ப ணிகள்மு டிக்கவேண்டும் (கொங். சி. 83)

என்றும் கூறுகிறார்.

மேலும், 'உன்னிடம் இல்லை என்று கேட்டு நிற்கும் எளியோருக்கு நீயும் இல்லையென்று சொல்லாதே! நாளைவா என்று நாளைக் கடத்தாமல், அப்போதே கொடுத்து உதவு' என்றும் கூறுகிறார்.

'கற்புடை பெண்டிர்மீது காமம் கொள்ளாதே! கட்டியவளே என்றாலும் உற்றது உரைக்காதே! பிள்ளைகளுக்கு அளவுக்கு மீறி இடம் கொடுத்து, பின்னர் அவர்களுடைய அலட்சியத்துக்கு ஆளாகாதே! கொலை, களவு, பொய் விலக்கு! தன்னை வியந்து தருக்கிக் கொள்பவனும் வலுச்சண்டைக்கு நிற்பவனும் காணாமல் போவான். பணக்காரனைப் பகைத்துக் கொள்ளாதே!' இத்தகைய வளமான வாழ்வியல் கல்வியை வகுத்தளிப்பவர் கொங்கணர். மேலும்,

மண்ணும்இல் லாமலே விண்ணும் இல்லை; கொஞ்சம்
வாசம்இல் லாமலே பூவும் இல்லை;
பெண்ணும்இல் லாமலே ஆணும் இல்லை (கொங். சி. 72)

என்று பெண்ணின் பெருமை பாடும் பெருஞ்சித்தராகவும் உள்ளார் கொங்கணர்.

யோகப் பயிற்சி செய்தால் நீரிழிவு முதலான நோய் அணுகாமல் நீண்டநாள் வாழலாம் என்பதும் கொங்கணர் கருத்தாம்.

மேலும், 'சாதி பேதம் சொல்லக்கூடாது; சாதியில் பேதம் இல்லாததுபோல் தெய்வத்திலும் பேதம் இல்லை' என்னும் கருத்துகளையும்,

சாதிபேதம் சொல்லுகிறீர், தெய்வம்
தான்என்பது ஒன்றுடன் பேதம் உண்டோ?

(கொங். சி. 95)

என்று பாடி வலியுறுத்துகின்றார் கொங்கணர்.

அகத்தியர் (ஞானப் பாடல்கள்)

'மோகம், பொய், கொலை, களவு விடுங்கள்! கோபத்தை ஒதுக்குங்கள்! புண்ணியத்தைத் தேடிக் கொள்ளுங்கள்!' என்று மோட்சத்துக்கு வழி சொல்கிறார்.

'பூமியில் உத்தமராய் இருக்கப்பாருங்கள்! பருவத்தில் பயிர் செய்வது போல், தருணத்தில் மனத்தைப் பண்படுத்துங்கள்! வணங்குவதற்குத் தெய்வம் ஒன்றுதான்!' என்கிறார்.

'உண்மை'யே உயர்ந்தது. நித்திய கர்மங்களை ஒழுங்காகச் செய்து வாருங்கள். நியமங்களில் தவறாதீர்கள். புத்தியோடு இருங்கள். அதனை மதவாத தர்க்கத்துக்குப் பயன்படுத்தாதீர்கள்' என்றும் உபதேசிக்கிறார்.

மனமது செம்மையானால் மந்திரம் செபிக்க வேண்டா

(அக. ஞா. 2)

என்று கூறி, மனத்தைப் பெருமைப்படுத்திக் கூறுகிறார். இவ்வாறாகத் தனிமனித ஒழுக்க நெறிகளை அகத்தியர் கூறுகிறார்.

காகபுசுண்டர்

காணாத காட்சிஎலாம் கண்ணில் கண்டு
காகமடா புசுண்டர் என்றுபேரும் பெற்றேன் (காக. பு. 19)

என்று, தாம் காக்கை உருவினராய்த் திரிந்ததைக் கூறுபவர் காகபுசுண்டர் என்னும் சித்தராவார்.

'பொய் நூல்களை நம்புகின்றவன் உண்மையை உணரமாட்டான், தீய வழிகளிலே சென்று துன்புறுவான்' என்று 'காகபுசுண்டர் ஞானம்' என்னும் நூல் கூறுகிறது.

திருக்கோயில் யாத்திரை, திருத்தல யாத்திரை இவை யாவும் திருடர் செயல் என்று கண்டிக்கிறார் காகபுசுண்டர். இதனை,

கோயில் என்றும் தீர்த்தம் என்றும்
திருடர்கள் தாம் அலைந்து அலைந்து திரிவார்
(காக. பு. 22)

என்று பாடுகிறார்.

'உண்மை நெறியை உணராதவன் தெய்வம் பலப்பல சொல்லித் திரிவான்; பொய், கொலை, களவு போன்ற தீச்செயல்களைச் செய்வான்; வேசியர்பால் தொடர்பு கொள்வான்' என்னும் கருத்தமைந்த பாடலின் மூலம் சாடுகிறார்.

மேலும் பொய்யான துறவு மேற்கொண்டவர்களை மிகுதியாக இடித்துரைக்கின்றார்.

சாதி – சமய வேற்றுமைகள் தனக்கு உடன்பாடில்லை என்பதை,

காணப்பா சாதிகுலம் எங்கட்கில்லை (காக. பு. 66)

எனவும்,

சாதிபேதம் சொல்லுவான் சுருக்கமாகச்
சுருண்டு போவான் (காக. பு. 66)

என்றும் பாடி வெளிப்படுத்துகிறார்.

சட்டைமுனிச் சித்தர்

'நான்' என்ற அகந்தையும் ஆணவமும் போக வேண்டும். அப்போதுதான் கடவுள் நிலை காணமுடியும்.

'நான்' இரண்டு வகை. ஒன்று பழுத்தது; மற்றொன்று பழுக்காதது. என்வீடு, என் குழந்தை, என் மனைவி, என் உடம்பு, என் சொத்து என்பவை பழுக்காத அகங்காரத்துக்கு உரிய 'நான்'. 'ஆண்டவன் ஆணைப்படி செய்கிறேன், அனைத்தும் ஆண்டவன் சொத்து, எல்லாம் அவன் சிறப்பு, நான் செய்வது ஒன்றில்லை' என்று எண்ணிப் பக்தியோடு வாழ்க்கை நடத்துபவன் கனிந்த பழமாகிறான். 'நான்' என்கிற ஆணவத் திரை அகன்றிட, கடவுளைக் காணலாம் என்கிறார் சட்டைமுனி.

சைவர்கள் சிவத்துக்கு முதலிடமும், சாக்தர்கள் சக்திக்கு முதலிடமும் கொடுக்கின்றனர்.

எந்த மதத்தினராயினும் தாயைப் புறக்கணித்தவர் ஞானத்தையும் புறக்கணித்தவராகிறார். இதனையே,

சமயமெலாஞ் சக்தியுண்டு, சிவமுமுண்டு
சண்டாளர் பிரித்தல்லோ தள்ளினார்கள்

என்று சட்டைமுனிச் சித்தர் கூறுகிறார். (பதினெட்டுச் சித்தர்களின் வாழ்வும் வாக்கும் – பக். 96–97)

பட்டினத்துச் சித்தர்

மனப் பிணிக்கு மருந்தூட்டும் சித்தர் எனக் கருதப் பெறுகின்ற பட்டினத்தார்,

இருப்பதுபொய் போவதுமெய் என்றெண்ணி நெஞ்சே
ஒருத்தருக்கும் தீங்கினை உன்னாதே (பட். சி. 17)

என்று கூறித் தீமையற்ற தூய உள்ளம் பேணுகிறார்.

பிறக்கும் பொழுது கொடுவந்தது இல்லை பிறந்து மண்மேல்
இறக்கும் பொழுது கொடுபோவது இல்லை (பட். சி. 7)

என்றும் கூறிப் பிறருக்குக் கொடுத்து உதவவேண்டும் என்பதை வலியுறுத்துகிறார்.

எருவாய்க்கு இருவிரல் மேல் ஏறுண்டு இருக்கும்
கருவாய்க்கோ கண் கலக்கப்பட்டாய் (பட். சி. 6)

மண்பெண் பொன்னாசை மயக்கத்திலே விழுந்து
கண்கெட்ட மாடதுபோல் கலங்கினேன் பூரணமே
(பட். சி. பூரணமாலை. 18)

இவ்வாறு பாடி, பெண்ணாசை, மண்ணாசை, பொன்னாசைகளுக்குத் திரையிடுகிறார்.

ஆங்காரம் உள்ளடக்கி
ஐம்புலனைச் சுட்டறுத்துத்
தூங்காமல் தூங்கிச்
சுகம்பெறுவது எக்காலம்
பேய்போல் திரிந்து பிணம்போல்
கிடந்து பெண்ணைத்
தாய்போல் நினைத்துத்
தவம் முடிப்பது எக்காலம்

இவ்வாறு ஆங்காரத்தை அடக்கு; ஐம்புலனை ஒடுக்கு. பெண்ணைத் தாயாகப் போற்று எனப் புத்தி கூறுகிறார் பட்டினத்தார்.

இதுவரை சித்தர்கள் காட்டும் தனிமனித ஒழுக்க நெறிகளைக் கண்டோம்.

4. சித்தர்கள் காட்டும் சமுதாய வாழ்வியல் நெறிகள்

'சமுதாயம்' என்பது தனிமனிதர் பலர் சேர்ந்த கூட்டமைப்பாகும். தனிமனிதர் பலர் கூடி ஒன்றுபட்ட எண்ணத்துடன் ஓரிடத்தில் வாழ்வது சமுதாயம்.

ஒரு சமுதாயத்தின் குறை, நிறைகளை உற்றுப் பார்த்து, அவற்றின் தாக்கத்தால் ஏற்படும் உறுத்தலை கவிதையாகவோ, கதையாகவோ, கட்டுரையாகவோ வெளிப்படுத்துபவன் படைப்பாளி. அதற்கு அடிப்படையாக இருப்பது மனித நேயம். அந்த வகையில், சமுதாய உணர்வு மிக்கவர்களாக, மனித நேயம் மிக்கவர்களாக, சமுதாயத்தைத் திருத்த வேண்டும் என்ற பெருநோக்கு உடையவர்களாக வாழ்ந்து மறைந்தவர்கள் சித்தர்கள். அவர்களுடைய அறிவுரைகளில் வழிகாட்டுதல் இருக்கின்றது. கனிவும் அறிவுறுத்தலும் மிளிர்கின்றன. அனுபவமும் சமுதாயம் திருந்த வேண்டும் என்ற தாகமும் வெளிப்படுகின்றன.

சித்தர்கள் ஆற்றிய சமுதாயத் தொண்டுகள், என்றும் நின்று நிலவக் கூடியவை. "சித்தர்கள் மனித சமுதாயத்திற்குச் செய்திருக்கும் நன்மை அளவிடற்கரியது. அவர்கள் மக்கள் அனைவரும் நோய் நொடியில்லாமல் வாழ்வதற்கான, இன்பத்துடன் வாழ்வதற்கான, துன்பங்களிலிருந்து கரையேறுவதற்கான வழிகள் பலவற்றைக் கண்டறிந்தனர். உண்மைகள் பலவற்றை ஆராய்ந்து தெளிந்தனர். அவர்கள் கண்டறிந்த உண்மைகளை மனித சமுதாயம் அனுபவிக்கும்படி செய்தனர். அவர்கள் கண்டறிந்த விஞ்ஞான ஆராய்ச்சியையும் பலனையும் மனித சமுதாயம் இன்றும் அனுபவித்துக் கொண்டு வருகிறது" என்ற சாமி சிதம்பரனாரின் கருத்துகள் சிந்திக்கத்தக்கவை.

சித்தர்கள் வெளிப்படுத்திய பாடல்கள், மனித சமுதாயத்தின்மேல் நேசம் கொள்ளும்படி வலியுறுத்துகின்றன என்றால் அது மிகையாகாது.

இனி, சித்தர்கள் காட்டும் சமுதாய நெறிகள் குறித்துக் காண்போம்.

சிவவாக்கியர்

சிவவாக்கியர் ஒரு சமரச ஞானி. மனத்துக்குப் பிடித்த பெண்ணை, இல்லறத்திற்கு ஏற்ற பெண்ணைத் திருமணம் செய்துகொள்ளாமல், பெண்ணின் சாதியை விசாரித்துக் கொண்டிருப்பதில் பொருள் இல்லை என்று கூறும் இந்தக் கருத்து, சமுதாய நலம் நோக்கிய புரட்சிக் கருத்து. மாண்டார் மீள்வதில்லை என்ற கருத்தில் சிவவாக்கியர் அழுத்தமான நம்பிக்கை உடையவர். இதனை,

கறந்தபால் முலைபுகா; கடைந்த வெண்ணெய் மோர்புகா
உடைந்துபோன சங்கின்ஓசை உயிர்களும் உடல்புகா
விரிந்தபூ உதிர்ந்தகாயும் மீண்டும்போய் மரம்புகா
இறந்தவர் பிழைப்பதில்லை, இல்லைஇல்லை இல்லையே
(சிவ. வா. 46)

என்ற பாடலில் விளக்குகிறார்.

சிவவாக்கியர், இறை வழிபாட்டில் அக வழிபாடே சிறந்தது என்ற கொள்கையுடையவர். புற வழிபாட்டை வெறுத்தவர்.

சமுதாயத்தில் காணப்படும் சமய வேறுபாடுகள், சமயச் சடங்குகள், சமயச் சின்னங்கள், உருவ வழிபாடு, கோயில் – குளம் நாடல், தலம் – தீர்த்தம் போற்றல் முதலானவை வெற்று ஆரவாரம் என்பது இவர் கருத்தாகும். உருவ வழிபாடு, சாத்திர முறை வழிபாடு, பொருள் உணராது மந்திரம் செபித்தல், சமயக் கோலங்கள் பூணல், தேர், திருவிழா முதலான மரபு வழிப்பட்ட சமயச் செயற்பாடுகளைச் சாடுகிறார் சிவவாக்கியர். அவை மனிதர் செய்யும் புரளி என்கிறார். (சிவ.வா. 237)

பேய் ஓட்டுதல், புலால் உண்ணுதல், உயிர்ப் பலியிடுதல் முதலான மூடநம்பிக்கைகளைக் கண்டிக்கிறார். அந்நியர் பொருளை மோசம் செய்ய எண்ணுபவருக்கு நரகம் காத்திருக்கிறது என எச்சரிக்கிறார்.

இரசவாதம் செய்யும் துறவிகள், பெண்ணைத் துறந்தும் பெண்ணாசையைத் துறக்காத துறவிகள், பொறுப்பில்லாத போலித் துறவிகள் ஆகியோரைச் சிவவாக்கியர் கண்டிக்கிறார்; வெறுக்கிறார்.

மாயவித்தை செய்வது எங்குப் பிடிப்பு மோசம் செய்பவர்
நேயமாகக் கஞ்சா அடித்து நேர் அபினைத் தின்பதால்

(சிவ. வா. 516)

சமுதாயச் சீர்திருத்தச் சிந்தனைகளாகக் குலம், சாதிப் பிரிவுகளைக் கண்டிக்கிறார்.

பெண்ணும் ஆணும் ஒன்றலோ பிறப்பதற்கு முன் எனலாம்

(சிவ. வா. 251)

என்று பாடிப் பெண்ணின் பெருமையைக் கூறுகிறார்.

கோயிலாவது ஏதடா குளங்களாகவது ஏதடா?

(சிவ. வா. 33)

பூசைபூசை என்றுநீர் பூசைசெய்யும் பேதைகாள்

(சிவ. வா. 38)

பறைச்சியாவது ஏதடா பனத்தியாவது ஏதடா?

(சிவ. வா. 38)

கோயில்பள்ளி ஏதடா குறித்து நின்றது ஏதடா
வாயினால் தொழுது நின்ற மந்திரங்கள் ஏதடா

(சிவ. வா. 180)

இவை யாவும், சிவவாக்கியர் சமுதாயத்திற்குக் காட்டும் வாழ்வியல் நெறிகளாகும்.

அகப்பேய்ச் சித்தர்

உடல் பிணியைவிட மனப் பிணி கொடியது. மனப் பிணிகளுள் மாணக்கொடியது ஆணவம். இதனைப் பேய் என்று உருவகித்துப் பாடுபவர் அகப்பேய்ச் சித்தர்.

'இறைவன் ஆனந்த வடிவமாக இருக்கிறான். ஆறு குளங்களில் நீராடி தீவினைகளைக் களைய முடியாது. நல்வினைகள் இருந்தால்தான் இறைவனைக் காணமுடியும். தெய்வம் ஒன்று தான்; அதுவே தத்துவமானது; சதாசிவம் ஆனது. மற்றவை மாயை!'

தத்துவத் தெய்வமடி – அகப்பேய்
சதாசிவ மானதடி (அக. சி. 75)

வேடங்கள் வேண்டாம்; விதண்டா வாதங்கள் வேண்டாம். வித்தைகளும் வேண்டாம். அவை வேதனைதான் செய்யும். அன்பு நெறியே உண்மையான சைவம். பிறவித் துன்பம் நீங்குவதற்கு வழி, தீமைகள் செய்யாமல் இருப்பது. சாதிபேதம் பாராட்டாமையே செருக்கின்மைக்கு அடையாளம். சாத்திரங்கள் மூலம் கடவுளைக் காண முடியாது.

சாதி பேத மில்லை தானாகி நின்றவர்க்கே – அகப்பேய்
ஓதி உணர்ந்தாலும் ஒன்றுந்தான் இல்லையடி (அக. சி. 68)

என்பன போன்ற வாழ்வியல் முத்துகளைச் சமுதாயத்திற்கு உரியதாக்குகிறார் அகப்பேய்ச் சித்தர்.

அழுகண் சித்தர்

அழுகணிச் சித்தர் யோக நெறியின் சிறப்புகளையும் ஞானத்தின் மேன்மையையும் சமுதாயத்திற்காகப் பாடியுள்ளார்.

'நீ உன்னை உணர்ந்தால் உலகையும் உணர்ந்தவன் ஆவாய்; உண்மை எது, பொய் எது என்று உணர்ந்து கொள்வாய்; வாழ்வில் நாம் பெறும் பயன்கள் நேர்மையால் வந்தவையாக இருக்க வேண்டும்' என்கிறார்.

மேலும்,

பையூரிலே யிருந்து பாழூரிலே பிறந்து
மெய்யூரிலே போவதற்கு வேதாந்த வீடறியேன்

(அழு. சி. 10)

என்றுபாடி ஞானத்தைக் கூறுகிறார்.

ஊற்றைச் சடலமடி உப்பிருந்த பாண்டமடி (அழு. சி. 8)

என உடம்பை இகழ்ந்து கூறி, யாக்கை நிலையாமையை எடுத்துரைக்கின்றார்.

மனிதர் இயல்புகளைத் தம்மேல் ஏற்றிக் கூறி, இறைவன் அருளால்தான் அந்த இழிதகவினை அகற்ற முடியும் என்பதை,

அஞ்சாத கள்ளனடி ஆரும்அற்ற பாவியடி
நெஞ்சாரப் பொய்சொல்லும் நேயம்இல்லா நிட்டூரன்
கஞ்சா வெறியனடி கைசேதம் ஆகுமுன்னே
அஞ்சாதே என்று சொல்லி – என் கண்ணம்மா
ஆண்டிருந்தால் ஆகாதோ (அழு. சி. 27)

என்று பாடி வெளிப்படுத்துகின்றார் அழுகணிச் சித்தர். இவை சமுதாயத்திற்கு நலம் பயப்பவையன்றோ?

இடைக்காட்டுச் சித்தர்

'மனித சமுதாயமே! உனக்குள் புதைந்து கிடக்கும் ஆற்றல்களை அறிந்து வெளிப்படுத்து! அறிவின் வல்லமையை உணர்ந்துகொள்' என்று கூறியவர் இடைக்காடர். இதனை,

இருட்டறைக்குள் நல்விளக்காய்
இருக்கும் உன்தன் வல்லமையை
அருள்துறையில் நிறுத்திவிளக்கு (இடை. சி. 72)

என்று பாடுகிறார்.

ஆன்மிக நெறிநிற்பவர்களின் அறிவைத் தூண்டுபவர் இடைக்காடர்.

மன அடக்கம், சின அடக்கம், ஆசை அடக்கம் ஆகிய மூன்று அடக்கங்களும் தேவை என வற்புறுத்துபவர் இடைக்காடர்.

இறைவனைப் பற்றிக் கூறும்பொழுது,

எல்லாப் பொருளையும் எண்ணப்படி படைத்த வல்லாளன்
(இடை.சி. 677)

என்று கூறுவார்.

கண்ணுக்குப் புலப்படாத அந்த இறைவன் உள்ளத்துள் உள்ளான் என்றும் கூறி, சமுதாயத்திற்கு அறிவு கொளுத்துகிறார். இதனை,

கட்புலனுக்கு எள்ளளவும் காணாதிருந்து எங்கும்
உட்புலனாய் நின்றஒன்றை உய்த்துஅறிநீ புல்லறிவே
(இடை. சி. 68)

என்று பாடியுள்ளார்.

பெண்ணாசையைக் கொண்டு பேணித் திரிந்தக்கால்
விண்ணாசை வைக்க விதியி லையே கன்மனமே!
(இடை. சி. 58)

என்று பாடுவதன் மூலம், 'பெண்ணாசை பிடித்து அலைவோர்க்கு. விண்ணுலகப் பேறு என்னும் நற்பேறு கிட்டாது' என்று எச்சரிக்கிறார். இது மானுட சமுதாயத்திற்குக் கூறப்படும் அரும்பெரும் நெறியாகும்.

கடுவெளிச் சித்தர்

இல்லறத்தானுக்குரிய ஒழுகலாறுகளை எடுத்துரைப்பவர் கடுவெளிச் சித்தர்.

இவர் சமுதாயத்திற்கு விடுக்கும் செய்திகள் மிகுதியாகும். அட்டாங்க யோகத்தைப் பின்பற்றுமாறு வேண்டுகிறார். இதனை,

ஒப்பரும் அட்டாங்க யோகம் – நன்றாய்
ஓர்ந்தறிவாய் அவற்றுண்மை சம்போகம் (கடு. சி. 31)

என்று எடுத்துரைக்கிறார். மேலும்,

'மனைவியைப் பழித்தல் கூடாது; மமதை கொள்ளக் கூடாது; அடுத்தவரைக் கெடுக்கக் கூடாது; நாலுபேருக்கு நடுவில் நம்மைப் புகழமாட்டார்களா என, புகழ்ச்சிக்கு அலையக்கூடாது; எவரிடத்தும் எதையும் யாசிக்கக் கூடாது; மனத்தின் இச்சைகட்கு அடிமையாகிவிடக் கூடாது; அழகிய பெண்கள்மீது ஆசை வைத்து அழிந்துவிடக் கூடாது' என்பன யாவும் கடுவெளிச் சித்தர் வழங்கும் கருத்துகளாகும்.

அன்றியும், 'இந்த உலகத்தில் மிகவும் உயர்ந்தது இறைவன்மீது கொள்ளும் பக்தியே. அதைக் கைக்கொண்டால் முக்தி கிட்டும்' என்றும் கூறுகிறார். இதனை,

பாரில் உயர்ந்தது பத்தி; அதைப்
பற்றின பேர்க்குண்டு மேவரு முத்தி (கடு. சி. 19)

என்ற பாடலால் அறிகிறோம்.

காசிக்கு ஓடில் வினை போமோ? – அந்தக்
கங்கை யாடில் கதிதானு முண்டாமோ? (கடு. சி. 15)

என்று கடுவெளிச் சித்தர் தரும் கருத்து, சமுதாயம் சிந்திக்க வேண்டிய கருத்தாகும்.

இவ்வாறு தனிமனித ஒழுக்கங்களையும் சமுதாய வாழ்வியல் நீதிகளையும் ஆனந்தக் களிப்பு மெட்டில் அழகாக எடுத்துரைக்கிறார் கடுவெளியார்.

பாம்பாட்டிச் சித்தர்

'தீய குணங்கள் நாணல் போன்றவை. அவற்றைத் தீயிட்டுக் கொளுத்த வேண்டும்,' 'ஆசையென்ற செருப்பின்மேல் அடிவைத்து அகங்கார முட்காட்டை மிதித்துப் போடு', 'மனம் என்ற குதிரையை அறிவென்ற கடிவாளத்தால் கட்டு' என்னும் வாழ்வியல் நெறிகளை, மக்கட் சமுதாயத்திற்கு வகுத்து வழங்குபவர் பாம்பாட்டிச் சித்தர்.

உளியிட்ட கற்சிலையில் உண்டோ – உணர்ச்சி (பா. பா. சி. 92)

சாதிப் பிரிவினிலே தீயை மூட்டுவோம்
சந்தை வெளியினில் கோல் நாட்டுவோம்

(பா. பா. சி. 123)

என்ற பகுத்தறிவுப் பண் பாடியவர், பாம்பாட்டிச் சித்தர். இந்தச் சமுதாயத்தை நோக்கி,

நாடுநகர் வீடுமாடு நற்பொருள் எல்லாம்
நமன்வரும் பொழுது நாடி வருமோ? (பா. பா. சி. 40)

மாடகூட மாளிகைகள் வண்ண மண்டபம்
மதில்சூழ்ந்த அரண்மனை மற்றும்உள்ளவை கூடவரா

(பா. பா. சி. 43)

எனப் பலவாறு பாடிப் பொருளாசையை விலக்குமாறு வேண்டுகிறார்.

பூவையென்றும் பாவையென்றும் பொன்னே யென்றும்
பூந்திருவே என்றும்என்றன் பொக்கிசம் என்றும்
கோவை என்றும் கோதை என்றும்
கூறாமல் துறந்தோம் என்று ஆடுபாம்பே

(பா. பா. சி. 58)

எனப் பாடி, பெண்ணாசை கூடாது என வேண்டுகிறார்.

நீரில்எழும் நீர்க்குமிழி நிலைகெடல் போல்
நில்லாது உடல் நீங்கி விடும் (பா. பா. சி. 64)

எனப் பாடி யாக்கை நிலையாமையை எடுத்துக் கூறுகிறார்.

இவ்வாறு, பாம்பாட்டிச் சித்தர் அறிவுரையாக, அன்பு வேண்டுகோளாக, எச்சரிக்கையாகப் பல நீதிகளைக் கூறி, சமுதாயத்திற்கு வழி காட்டுகிறார்.

குதம்பைச் சித்தர்

குதம்பைச் சித்தர், மதவாதிகளின் ஆடம்பரத்தை வெறுத்து, அவர்களைச் சமுதாயத்திற்கு அடையாளம் காட்டுகிறார். தன்னையும் அடையாளப் படுத்திக் கொள்கிறார். இதனை,

வெட்ட வெளிதன்னை மெய்யென்று இருப்போர்க்கு
பட்டயம் ஏதுக்கடி? – குதம்பாய்
பட்டயம் ஏதுக்கடி? (குத. சி. 1)

என்ற பாடல் விளக்குகிறது.

மேலும், உண்மையை உணர்ந்த ஞானிகளுக்கு உடலை ஓம்பும் காய கல்பங்கள் தேவையில்லை என்றும் எடுத்துரைக்கின்றார்.

குதம்பைச் சித்தருக்குத் தமிழ் மொழி ஒன்றுதான் மொழிக்குரிய இலக்கணமும் பண்பும் நிறைந்ததாகத் தெரிகிறது. பிறமொழிகள் வெறும் ஒலிகளாகவே தெரிகின்றன. இதனை,

முத்தமிழ் கற்று முயங்கு மெய்ஞ்ஞானிக்குச்
சத்தங்கள் ஏதுக்கடி? – குதம்பாய்
சத்தங்கள் ஏதுக்கடி? (குத. சி. 10)

என்ற பாடல் தெளிவுபடுத்துகிறது.

காலனை வென்ற கருத்தறி வாளர்க்குக்
கோலங்கள் ஏதுக்கடி? (குத. சி. 26)

என்று வினவுவதன் மூலம், 'யோக நெறிநின்று சாகாக் கலை அறிந்து விட்டால், பிற புனைவுகள் வேண்டா' என அறிவுறுத்துகின்றார். மேலும்,

மாங்காய்ப் பாலுண்டு மலைமேல் இருப்போர்க்குத்
தேங்காய்ப்பால் ஏதுக்கடி? (குத. சி. 28)

தாவாரமில்லை; தனக்கொரு வீடில்லை
தேவாரம் ஏதுக்கடி? (குத. சி. 30)

என்பன போன்ற சிந்திக்கத் தூண்டும் வினாக் கணைகள், குதம்பைச் சித்தரால் மானுட சமுதாயத்திற்கு ஏவப்பெற்றவையாகும்.

கொங்கணச் சித்தர்

உடம்பினை இழுக்கென்று உபதேசித்த சித்தர்களுக்கு மத்தியில், உடம்பினை மெய் என்றும், அதனைப் பேணிட வேண்டும் என்றும் சமுதாயத்திற்கு எடுத்துக் கூறுகிறவர் கொங்கணவர். இதனை,

ஊத்தைச் சடலம்என்று எண்ணாதே – இது
உப்பிட்ட பாண்டமென்று எண்ணாதே (கொங். சி. 24)

என்று கூறி,

கட்டாத காளையைக் கட்டவேண்டும் – ஆசை
வெட்டவேண்டும்; வாசி எட்டவேண்டும் (கொங். சி. 43)

என யோகப் பயிற்சியின் மூலம் உடம்பைப் பேணவேண்டும் என்றும் விளக்குகின்றார்.

'பெண்மை பெருமைக்கு உரியது; அதைப் போற்ற வேண்டும்' என்பதை,

பெண்ணும் இல்லாமலே ஆணும் இல்லை – அது
பேணிப் பாரடி வாலைப் பெண்ணே (கொங். சி. 72)

என்று பாடுகிறார்.

"தெய்வம் ஒன்றுதான்! சாதியில் பேதம் இல்லாததுபோல் தெய்வத்திலும் பேதம் இல்லை! ஏழைகள், ஏதிலிகள் எனக்கூறி, 'இல்லை' யென்று வருவார்க்கு, 'இன்று இல்லை நாளை வா' என்று மறுத்துக் கூறாமல், உடனே உணவு வழங்க வேண்டும்."

"பஞ்சை, பனாதியாக இருப்போரை அடித்துத் துன்புறுத்தக் கூடாது! அதனால் வரும் பாவம் என்றும் தொலையாது! 'தஞ்சம்' என்று கூறி, நம்மிடம் அடைக்கலமாக வந்தவருக்குக் கெடுதல் செய்யக்கூடாது! ஒருவருக்கும் வஞ்சனை நினைக்கக்கூடாது."

"பொய் வழக்கோ, அநியாய வழக்கோ சொல்லக்கூடாது! கற்புடைய மகளிர் மேல் ஆசைகொள்ளக்கூடாது" என்பன கொங்கணர் கூறும் சமுதாய வாழ்வியல் கோட்பாடுகளாகும். இக்கருத்துகளை,

ஏழை, பனாதிகள் இல்லையென்றால் அவர்க்கு
இருந்தால் அன்னம் கொடுக்க வேண்டும்
நாளையென்று சொல்லல் ஆகாதே என்று
நான்மறை வேதம் முழங்குதடி (கொங். சி. 86)

பஞ்சை, பனாதி யடியாதே யந்தப்
பாவந் தொலைய முடியாதே;
தஞ்சமென் றோரைக் கெடுக்காதே யார்க்கும்
வஞ்சனை செய்ய நினையாதே (கொங். சி. 87)

வழக்கழிவுகள் சொல்லாதே கற்பு
மங்கையர் மேல்மனம் வையாதே (கொங். சி. 90)

என்ற பாடல்கள் விளக்குகின்றன. மேலும்,

கூடிய பொய்களைச் சொல்லாதே பொல்லாக்
கொலை களவுகள் செய்யாதே (கொங். சி. 91)

என்ற நீதிகளையும் புகட்டுகிறார்.

இன்றைய உலகில், உலக நாடுகள் பலவற்றிலும் மக்களை வருத்தும் ஒரு நோயாக இருப்பது நீரிழிவு என்று சொல்லப்படும் சர்க்கரை நோயாகும்.

இந்தச் சர்க்கரை நோய் வராமல் காப்பதற்கும், வந்தால் கட்டுப்படுத்துவதற்கும் யோகப் பயிற்சி செய்வது சிறந்த மருத்துவ முறையென அன்றே கொங்கணர் கூறியுள்ளது, சமுதாயத்திற்கு ஓர் இனிய செய்தியாகும். இதனை,

ஆயுசு கொடுப்பாள், நீரிழி வுமுதல்
அண்டாது மற்ற வியாதி யெல்லாம்
பேயும் பறந்திடும் புல்லி வினாடியில்
பத்தினி வாலைப்பெண் பெயரைச் சொன்னால்
(கொங். சி. 105)

என்ற பாடல் விளக்கும். இங்கு, 'வாலைப் பெண்' என்று குறிப்பிடப்படுவது யோக நெறியாகும்.

இவ்வாறு, கொங்கணர் 'வாலைக் குமரி' என்னும் கும்மிப் பாடல்கள் மூலம் சமுதாயத்திற்கு வேண்டிய நீதி நெறிகளை வழங்குகிறார்.

கருவூர்ச் சித்தர்

கருவூரார், மனிதர்க்கு மனஅடக்கம் வேண்டும் என வற்புறுத்துகிறார்.

'செய்கின்ற பணியும் மனமும் ஒன்றுபட்டு நிற்க வேண்டும். கண்ட கண்ட நூல்களைப் படித்துப் படுகுழியில் விழக்கூடாது. மனம் அடக்கமின்றி அலைந்தால் அறிவும் கெட்டுவிடும்' என்று உரைக்கிறார். இதனை,

..... செய்தொழிலும் மனமும் வேறாய்ப்
பலநூலைப் படித்துப்படு குழியில் வீழ்வார்
ஏற்றபடி மனம் போனால் புத்தி போச்சே (கரு. சி. 7)

என்ற பாடலடிகள் மூலம் விளக்குகிறார்.

மேலும், 'வேதங்களைக் கற்றோம், சாத்திரங்களைப் படித்துக் கரைகண்டோம் என்று தம்பட்டம் அடிப்பவர்கள், மனம் அடக்கமின்றிச் செயற்பட்டால், அவர்களுடைய பூசை மற்றும் வழிபாடுகள் சிறிதளவும் பயன்தராது. அவர்களின் தியானம் முழுவதையும் பெண்ணாசை ஆக்கிரமித்திருக்கும்' என்று கூறி நகைப்பதன் மூலம், மக்களுக்கு மன அடக்கம் பெரிதும் தேவை என வற்புறுத்துகிறார் கருவூரார்.

காகபுசுண்டர்

"சங்கரர் கொள்கையாகிய வேதாந்த தத்துவமே காகபுசுண்டரின் ஞானப்பாடல் என்று கூறப்படுகிறது." (சாமி. சிதம்பரனார், சித்தர்கள் கண்ட விஞ்ஞான தத்துவம், பக். 120).

காக புசுண்டர், புராணப் பொய்ம்மைகளைச் சாடுகின்றார். இதனை,

வல்லவர்போல் வேத புராண காவியங்கள்
மந்திரங்கள் கோடானு கோடியென்றும்

சொல்லுவார்; கோவில்என்றும் தீர்த்தம்என்றும்
திருடர்கள் தாம்அலைந்து அலைந்து திரிவார்
(காக. பு. 22)

என்ற பாடலடிகள் விளக்குகின்றன.

மேலும், 'சாதி பேதம் இல்லை; சாதி பேதம் சொல்லுகிறவன் அழிந்து போவான்' என்றும் எச்சரிக்கை செய்கிறார் காகபுசுண்டர். இக்கருத்தை,

காணப்பா சாதிகுலம் எங்கட்கில்லை
கருத்துடனே என்குலம் சுக்கிலந்தான் மைந்தா
தோணப்பா தோணாமல் சாதிபேதம்
சொல்லுவான் சுருக்காகச் சுருண்டு போவான் (காக. பு. 66)

என்ற பாடலடிகள் விளக்குகின்றன.

பட்டினத்துச் சித்தர்

'மனப் பிணி மருத்துவர்' எனப் போற்றப்படுபவர் பட்டினத்தடிகள். உலகியல் பற்றியும், கொள்வன கொண்டு தள்ளுவன தள்ளி வாழும் முறைபற்றியும் அதிகமாகச் சொன்னவர் பட்டினத்தடிகள்.

மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை ஆகிய மூவாசைகளும் மரணத்தின் வாயில்கள். ஆதலால் ஆசையையும், அதன் வித்துகளான செல்வ சுகபோகங்களையும் விட்டுவிடு.

ஆசை மனிதனை இழிந்த செயல்களைச் செய்யத் தூண்டும். ஆசையால் அலைக்கழிபவனுக்குப் பொய் புகலுவதும், கொலை புரிவதும்கூட சாதாரணமாகிவிடும்.

மனிதன் தன் நாவின் சுவைக்கு அடிமையாகி உயிர்களைக் கொன்று தின்கின்றான். அவன் அந்த உயிரினங்கள், அடுத்த பிறவியில்

தன்னைப் பழிவாங்கும் என்பதை உணர மாட்டானா என்று வினவுவதன் மூலம் சமுதாயத்திற்கு, ஜீவகாருண்யத்தை வலியுறுத்துகின்றார்.

ஒன்றென்றிரு, தெய்வம் உண்டென்றிரு உயர்செல்வமெலாம்
அன்றென்றிரு, பசித்தோர் முகம்பார், நல்லறமும் நட்பும்
நன்றென்றிரு (பட். சி. 20)

என்று பாடி, 'தெய்வம் உண்டு. அது ஒன்று' என்ற தெய்வக் கொள்கையையும், 'செல்வம் நிலையற்றது' என்பதையும், 'பசித்தோர்க்கு உணவிடும் இரக்கம் கொள்ள வேண்டும்' என்பதையும், 'அறமும் நட்புமே துணை' என்பதையும் மானுட சமுதாயத்திற்கு வழங்குகின்றார் பட்டினத்தார்.

காதற்ற ஊசியும் வாராது காணுங்கடை வழிக்கே
(பட். சி. 10)

பிறக்கும்பொழுது கொடுவந்த தில்லை; பிறந்து மண்மேல்
இறக்கும்பொழுது கொடுபோ வதில்லை (பட். சி. 7)

எனப் பாடி நிலையாமைக் கொள்கையைச் சமுதாயத்திற்கு எடுத்துரைக்கிறார், பட்டினத்தடிகள்.

இக்காலத்தில், உலக நாடுகளைச் சிந்திக்க வைத்துள்ள பெரும்பிரச்சினை, மக்கள் தொகைப் பெருக்கம். இதற்குக் காரணம் அறியாமைதான். இதனைப் பட்டினத்தடிகள்,

பூப்பிளக்க வருகின்ற புற்றீசல் போலப்
புலபுலெனக் கலகலெனப் புதல்வர்களைப் பெறுவீர்
காப்பதற்கும் வகையறியீர்; கைவிடவும் மாட்டீர் (பட். சி. 20)

என இடித்துரைக்கிறார்; சமுதாயத்திற்கு விழிப்புணர்வு ஊட்டுகின்றார்.

இனி, உடலுக்கு நோய்கள் எவ்வாறு ஏற்படுகின்றன என்பது பற்றியும் அவற்றை நீக்கிக் கொள்ளும் மருத்துவ முறைகள் பற்றியும் சித்தர்களின் கருத்தைக் காண்போம்.

சித்த புருடர்களுள் உடலுக்கு வரும் நோய்கள் பற்றியும் அவற்றை நீக்கும் மருத்துவம் பற்றியும் கூறியவர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள் அகத்தியர், நந்தீசர், தேரையர், போகர், புலிப்பாணி, உரோமரிஷி, கம்பளிச் சட்டைமுனிச் சித்தர் முதலானோர் ஆவர்.

சித்தர்கள் கண்ட மருத்துவ நூல்களுள் அகத்தியரின் வைத்திய சாகரம், கற்பக் கோள், பிண்டோற்பத்தி, மதி வெண்பா, கர்ம காண்டம், நயனவிதி, சந்திரோதய வாலை முதலானவை குறிப்பிடத் தக்கவை.

போகர் : வைத்தியம் ஆயிரம், வைத்தியம் எழுநூறு, சரக்கு வைப்பு எண்ணூறு, வைத்திய சூத்திரம், இரண வாகடம் முதலானவை குறிப்பிடத்தக்கவை.

தேரையர் : குணபாடம்.

புலிப்பாணி : வைத்தியம் ஐந்நூறு, வைத்திய சூத்திரம் இருநூறு.

கம்பளிச்சட்டைமுனிச் சித்தர் : வாத காவியம் ஆயிரம், கற்பவிதி நூறு, சரக்கு வைப்பு ஐந்நூறு.

உரோமரிஷி : வைத்தியம் ஆயிரம், வைத்திய சூத்திரம் ஐம்பது, கருமானச் சுருக்கம்.

நந்தீசர் : வைத்திய காவியம் 1200, கருக்கிடை 300, ஞானக் (கோவை) சூத்திரம்.

யூகிமுனி : வைத்திய சிந்தாமணி எண்ணூறு, வைத்திய சூத்திரம் ஐந்நூறு, கற்பம் நூறு.

இத்தகைய அரிய நூல்கள் மூலம் நோய் மற்றும் மருத்துவ முறைகள் பற்றிய சித்தர்களின் கருத்துகளை நாம் உணர முடிகின்றது.

பொதுவாகச் சித்தர்கள் மனித உடலைப் புறவுடல், அகவுடல், முழுஉடல் என மூவகையாகப் பகுத்துக்கொண்டு, அவற்றை என்னென்ன நோய்கள் தாக்கும் எனக் கூறுகின்றனர்.

புறவுடலில், தோல் நோய்களான அரிப்பு, சொறிசிரங்கு, தடிப்பு போன்றவையும் பூச்சிக்கடி, ஒவ்வாமை முதலானவையும் ஏற்படும். இவற்றிற்கு மேல் பூச்சான தைல வகையையும் தூரம் முதலான உட்கொள்ளும் மருந்துகள் சிலவற்றையும் காட்டுகின்றனர். இந்நோய்க்குரிய மருந்துகள் பெரும்பாலும் தாவரங்களின் பூ, இலை, பட்டை, வேர் முதலானவற்றிலிருந்து தயாரிக்கப்படுகின்றன.

இவை அப்படியே பயன்படுத்துதல், காய்ச்சுதல், சேர்மானத்தோடு காய்ச்சுதல், காய்ச்சி வடித்தல் ஆகிய முறைகளில் மருந்தாகப் பயன்படுத்தப்படுகின்றன.

அகவுடம்பில் இருமல், சளி, சயரோகம், குன்மம் முதலான நோய்கள் வரும். இவற்றை ரசம், கந்தகம், பாடாணம் முதலியவற்றைக் கொண்டு தயாரிக்கப்படும் மருந்துகளால் குணப்படுத்த முடியும் என்றும் கூறுகின்றனர்.

முழு உடம்பிலும் தோன்றக் கூடிய நோய்கள் நரை, திரை, மூப்பு, சாக்காடு என்பனவாம். இவற்றிலிருந்து விடுபட, காயகல்ப மருந்துகளைக் கண்டுபிடித்துள்ளனர்.

சித்தர் கண்ட மருத்துவ முறையில், அறுவை மருத்துவமும் உண்டு என்பது குறிப்பிடத் தக்கது. எடுத்துக்காட்டாக, அகத்தியர் இயற்றிய 'நயனவிதி ஐந்நூறு' என்னும் நூலில் கண் அறுவை மருத்துவம் பற்றியும், கண் அறுவை மருத்துவத்துக்கென இருபத்தாறு அறுவை மருத்துவக் கருவிகள் இருந்தனவெனவும் கூறப்படுவதைக் கொள்ளலாம்.

மனித உடம்பில் 72000 நாடிகள் இருப்பதாகச் சித்தர்கள் ஆய்ந்து கூறியுள்ளார்கள். அந்த நாடிகளைக் கொண்டே நோய்களை அறிந்தார்கள். நாடிகளுள் பிரதான நாடிகள் பத்து என்பதும், நாடி பிடித்துப் பார்த்தே நோயின் அறிகுறி, நோயின் தன்மை, குணமாகுமா ஆகாதா, ஆயுள்காலம் அனைத்தையும் கூறிவிட முடியும் என்பதும் சித்தர்கள் கருத்தாகும்.

நோய் பற்றியறிய நாடித் துடிப்புடன், கண்கள், ஒலி, மெய் தொட்டறிதல், நாக்கில் தோன்றும் வேறுபாடு, மலத்தின் தன்மை, சிறுநீர் மாறுபாடு முதலானவற்றைச் சோதித்துப் பார்க்க வேண்டும் என்ற செய்தி, இன்றைய ஆங்கில மருத்துவத்தோடு பெரிதும் ஒத்துள்ளது.

இவ்வாறு, சித்தர்கள் காட்டும் வாழ்வியல் கல்விக் கருத்துகள் செழித்துக் காணக் கிடக்கின்றன. இனி, இந்த ஆய்வின் சிறப்பு நோக்கான திருமூலர் காட்டும் வாழ்வியல் கல்விக் கருத்துகளைக் காண்போம்.

இயல் - ஆறு

இயல் ஆறு

திருமூலர் காட்டும் வாழ்வியல் கல்வி

இந்த இயலில், இந்த ஆய்வின் சிறப்பு நோக்காக எடுத்துக்கொள்ளப்பெற்ற 'திருமூலர் காட்டும் வாழ்வியல் கருத்துகள்' திருமூலரின் இறைக் கோட்பாடு, திருமூலர் காட்டும் உடலும் உடலோம்பும் நெறிகளும், திருமூலர் காட்டும் தனிமனித வாழ்வியல் நெறிகள், திருமூலர் காட்டும் சமுதாய வாழ்வியல் நெறிகள் ஆகிய நான்கு பகுதிகளாகப் பகுத்து ஆய்வு செய்யப் பெறுகின்றது.

1. திருமூலரின் இறைக் கோட்பாடு

திருமூலர் ஓரிறைக் கொள்கையாளர். இதனை, 'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' என்கிறார். அந்த ஒருவன் சிவபெருமானே என்பதை, 'ஒன்று அவன்தானே' என்று தெளிவுபடுத்துகிறார். 'அந்தச் சிவம் எது?' என்று வினவுவார்க்கு விடை கூறுவதுபோல், 'அன்பே சிவம்' என்று அறுதியிடுகிறார். 'அந்த இறைவன் எங்குளான்?' என்பார்க்கு விடை கூறுவார்போல் 'பரத்தை மறைத்தது பார்முதல் பூதம்! பரத்தின் மறைந்தது பார்முதல் பூவே' என்று விளக்குகிறார். அந்த இறைவனை அடைவதற்கு வழியாக, நடமாடக் கோயில் நம்பர்க்கு ஈயும்படி கூறுகிறார். அதுவே திருமூலர் பெற்ற இன்பம். அந்த இன்பத்தை வையம் பெற விழைந்து, 'நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்று கூறுகிறார்.

இறைவன் உயிர்கள்தோறும் உட்புகுந்து நிற்கிறான் என்பதை,

அகம்புகுந் தானடி யேற்கரு ளாலே
அகம்புகுந் துந்தெரி யான்அரு ளில்லோர்க்கு
அகம்புகுந் தானந்த மாக்கிச் சிவமாய்
அகம்புகுந் தானந்தி யானந்தி யாமே (திரு. மந். 1773)

என்று கூறுகிறார்.

இறைவன் தனது படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்தொழில்கள் மூலம் எல்லா உயிர்களிலும் சாட்சியாவது பற்றிக் கூறுமுகத்தான்,

தானே படைத்திடுந் தானே யளித்திடுந்
தானே துடைத்திடுந் தானே மறைத்திடுந்
தானே யிவைசெய்து தான்முத்தி தந்திடுந்
தானே வியாபித் தலைவனு மாமே (திரு. மந். 1778)

என்று பாடுகிறார்.

'சிவன் வேறு சீவன் வேறு அல்ல! இரண்டும் வேறு பிரித்தறியா வண்ணம் சுவானுபூதி நிலையில் ஒன்றி நிற்கும்' என்னும் உண்மையை,

நானென்றுந் தான்என்றும் நாடினேன் நாடலும்
நானென்றுந் தானென் றிரண்டில்லை என்பது,
நானென்ற ஞான முதல்வனே நல்கினான்
நானென்று நானும் நினைப்பொழிந் தேனன்றே
(திரு. மந். 2777)

என்று பாடியுள்ளார்.

இறைவன் உலக இன்பங்களை யெல்லாம் நமக்கு வாரி வழங்கியதோடு, பேரருளுடன் தங்கி, உயிர்த் தாயும் தந்தையுமாகி நம்மைப் படைக்கிறான் என்பதை,

ஒருவன் ஒருத்தி விளையாட லுற்றார்
இருவர் விளையாட்டு மெல்லாம் விளைக்கும்
பருவங்கள் தோறும் பயன்பல வான
திருவொன்றிற் செய்கை செகமுற்று மாமே (திரு. மந். 383)

என்று விளக்குகிறார்.

இறைவன், தன் அடியவர்தம் உள்ளங்களில் இருந்து காவல் செய்வான் என்பதை,

ஆரே யறிவார் அடியின் பெருமையை
ஆரே யறிவார் அங்கவர் நின்றது
ஆரே யறிவார் அறுபத்தெட் டாக்கையை
ஆரே யறிவார் அடிக்காவ லானதே (திரு. மந். 2087)

என்று வியந்தோதுகிறார்.

இறைவன், அறிவதற்கரிதான வெளியாக விளங்குபவன் என்பதை,

ஆரு மறியாத வண்டத் திருவுருப்
பார்முத லாகப் பயிலுங் கடத்திலே
நீரினிற் பால்போல நிற்கின்ற நேர்மையைச்
சோராமற் காணும் சுகமறிந் தேனே (திரு. மந். 435)

என்று பாடிச் சென்றுள்ளார்.

இறைவன் வதியும் கோயில் அன்பர்களின் உள்ளமே என்பதை,

உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்
வள்ளல் பிரானார்க்கு வாய்கோ புரவாசல் (திரு. மந். 1792)

என்னும் பாடலடிகளால் விளக்குகின்றார்.

இறைவனை மனக் கண்ணில் காணும் காட்சியை, அதன் மகிழ்ச்சியை, வாய்ச் சொற்களால் வருணிக்கவியலாது. இதனை, 'ஒரு தாய், தன் கணவருடன் கண்ட இன்பத்தை மகளுக்குச் சொல்ல இயலுமா?' என்ற உவமைத் தொடரால் திருமூலர் விளக்குகிறார். இறைஅனுபவம் அத்தகையது என்பதை உணர்த்த,

முகத்திற் கண்கொண்டு காண்கின்ற மூடர்காள்
அகத்திற் கண்கொண்டு காண்பதே ஆனந்தம்
மகட்குத் தாய்தன் மணாளனோ டாடிய
சுகத்தைச் சொல்லென்றாற் சொல்லுமா றெங்ஙனே?
(திரு. மந். 2904)

என்று பாடி வினவுகிறார்.

'எல்லாம் வல்ல இறைவன், பாவங்களை எரித்து விடுவதில் நெருப்பைவிட வெய்யன்! அன்பர்களின் உள்ளத்தைக் குளிர்விப்பதில் நீரைக் காட்டிலும் தண்மை உடையவன்! பாசம் பொழிவதில் குழந்தைகளை விடவும் பாசம் உடையவன்! எல்லார்க்கும் நல்லவன்! வல்லவன்! அவன்மாட்டு அன்புடையார்க்குத் தாயினும் மிக்க தயாபரன்! அவர்களைத் தானே நெருங்கிவந்து அருள் புரிபவன்!' என்பதை,

தீயினும் வெய்யன் புனலினும் தண்ணியன்;
ஆயினும் ஈசன் அருளறி வார்இல்லை;
சேயினும் நல்லன்; அணியன்;நல் லன்பர்க்குத்
தாயினும் நல்லன்; தாழ்சடை யோனே (திரு. மந்.7)

என்று கூறுகின்றார்.

வாடும் பயிர்கள் வான் மேகத்தை அழைக்கின்றன. வான் மேகமும் வாடும் பயிர்கள் செழிக்க மழை பொழிகின்றது. அதுபோல் நாம்

இறைவனைக் கூவி அழைத்தால் அவனும் அருள்மழை பொழிவான் என்பதை,

வானின் றழைக்கும் மழைபோல் இறைவனும்
தானின் றழைக்குங்கொல் என்று தயங்குவார்
ஆனின் றழைக்கும் அதுபோல்என் நந்தியை
நானின் றழைப்பது ஞானங் கருதியே (திரு. மந்.30)

எனக் கூறுகிறார்.

இறைவன், மண்ணுலக மாந்தர்க்கு மனித வடிவிலும், விண்ணவர்கட்கு வானவெளியாகவும், சித்திகளை விரும்புகின்றவர்கட்குச் சித்தனாகவும், வேதாந்திகளுக்கு வேத வடிவிலும் காட்சி தருபவன். இவ்வாறு, விண்ணாக, மண்ணாக, வேதமாக, கீதமாக விளங்குபவனாகிய இறைவனே, பண்ணாகவும் பண்ணில் இசையாகவும் விளங்குபவன் என்பதை,

மண்ணகத் தான்ஒக்கும் வானகத் தான்ஒக்கும்
விண்ணகத் தான்ஒக்கும் வேதகத் தான்ஒக்கும்
பண்ணகத்து இன்னிசை பாடலுற் றானுக்கே
கண்ணகத் தேநின்று காதலித் தேனே (திரு. மந்.31)

என்று பாடுகிறார்.

இறைவன் அன்பே வடிவானவன் என்பதை,

அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே (திரு. மந். 257)

எனப் பாடி அறிவுறுத்தியுள்ளார்.

இறைபருளைப் பெறுவதற்கு அவன்மாட்டு அன்பு செலுத்துவதொன்றே மிகச் சிறந்த மார்க்கமாகும். இதனை.

--- தேவனை,

ஏத்தியும் எம்பெரு மான்என்று இறைஞ்சியும்
ஆத்தஞ்செய்து ஈசன் அருள்பெற லாமே
(திரு. மந். 39)

என்ற பாடலடிகளும்,

அன்போ டுருகி அகங்குழை வார்க்கன்றி
என்போல் மணியினை எய்தஒண் ணாதே
(திரு. மந். 259)

கொழுந்தன்பு செய்தருள் கூரவல் லார்க்கு
மகிழ்ந்தன்பு செய்யும் அருளது வாமே (திரு. மந். 267)

என்னும் பாடலடிகளும் விளக்குகின்றன.

ஆதிப் பிரானும் அணிமணி வண்ணனும்
ஆதிக் கமலத்து அலர்மிசை யானும்
சோதிக்கில் மூன்றும் தொடர்ச்சியில் ஒன்றெனார்
பேதித்து உலகம் பிணங்குகின் றார்களே (திரு. மந். 52)

சோதித்த பேரொளி மூன்றுஐந்து எனநின்ற
ஆதிக்கண் ஆவது அறிகிலர் ஆதர்கள்
நீதிக்கண் ஈசன், நெடுமால், அயன்என்று
பேதித்து அவரைப் பிதற்றுகின் றாரே (திரு. மந். 58)

என்னும் பாடல்கள் மூலம் ஓரிறைக் கொள்கையைத் திருமூலர் வலியுறுத்துகின்றார்.

ஒப்பற்ற இறைவனை வழிபடுவதற்கு ஏற்றதும் உரியதுமான மொழி, தமிழ்மொழியே என்றும் சிவபெருமானுக்கே அது உகந்தது என்றும் வரையறுத்துக் கூறுவது போல்,

பின்னைநின் றென்னே பிறவி பெறுவது
முன்னைநன் றாக முயல்தவஞ் செய்கிலர்
என்னைநன் றாக இறைவன் படைத்தனன்
தன்னைநன் றாகத் தமிழ்செய்யு மாறே (திரு. மந். 152)

என்று பாடியுள்ளார்.

இவ்வாறாக, இறைவன் பெருமை, இறைவன் இன்னருள், இறைவன் இயல்பு, அவனை அடையும் வழி இவற்றையெல்லாம் எடுத்துரைப்பதில் திருமந்திரம் தனிச் சிறப்புற்றுத் திகழ்கிறது.

இறைவன் அன்பே வடிவானவன். அவனை அடைய அன்பே வழியாகும் என்பதே திருமூலர் கண்ட திருநெறி.

அன்போ டுருகி அகங்குழை வார்க்கன்றி
என்போல் மணியினை எய்தவொ ணாதே
(திரு. மந். 259)

என்பது அவர் பாடலடிகள்.

முத்தி அடைதலே வாழ்வின் குறிக்கோள். அதனை முதன்முதலில் விளக்கியவர் திருமூலரே ஆவார்.

2. திருமூலர் காட்டும் உடலும் உடலோம்பும் நெறிகளும்

திருமூலர், உடம்பைக் குற்றமுடையது என்று முதலில் எண்ணியிருந்தார். பின்னர், இறைவன் உறையும் கோவில்தான் உடம்பு என்பதை உணர்ந்து, அதனைப் பாதுகாக்க வேண்டும் என்ற உணர்வினைப் பெற்றதாக அவரே கூறுகிறார். இதனை,

உடம்பினை முன்னம் இழுக்கென் றிருந்தேன்
உடம்பினுக் குள்ளே உறுபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோயில்கொண் டான்என்று
உடம்பினை யான்இருந் தோம்புகின் றேனே
(திரு. மந். 705)

என்று பாடியுள்ளார்.

'இந்த உடம்புக்கு ஓர் அழிவு ஏற்பட்டால், உயிரும் அழிந்துவிடும். உடல் வலிமை குறைந்தால், மெய் ஞானத்தையும் அடைய முடியாது. ஆதலால், உடம்பை வளர்க்க வேண்டியதன் கட்டாயத்தை உணர்ந்து, அவ்வுடம்பை வளர்க்கும் உபாயங்களை அறிந்து, உடம்பைப் பேணி உயிரையும் காத்தேன்' என்னும் கருத்துப்பட,

உடம்பார் அழியில் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவு மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த் தேனே (திரு. மந். 704)

என்று பாடுகிறார்.

'மாலை வேளையில் யோகம் பயின்றால், உடலிலுள்ள கபம் அகலும். மதிய வேளையில் யோகம் பயின்றால், கொடிய வாத நோய் நீங்கும். காலை வேளையில் யோகம் பயின்றால் பித்தம் நீங்கும்; நரை, திரை மாறும். யோகத்தை முறையாகப் பயின்றால் வாத, பித்த, சிலேத்துமம் சமப்பட்டு, உடல் இளமை பெறும்' என்று கூறி உடலோம்பும் வழிகளைக் காட்டுகிறார் திருமூலர்.

உடம்பு அழியாது நீண்ட காலம் வாழும் வழிகளாக,

நாட்டம் இரண்டும் நடுமூக்கில் வைத்திடில்
வாட்டமும் இல்லை மனைக்கும் அழிவில்லை (திரு. மந். 584)

என்றும்,

காற்றைப் பிடிக்கும் கணக்கறி வாளர்க்குக்
கூற்றை உதைக்கும் குறியது வாமே (திரு. மந். 553)

என்றும்,

வளியினை வாங்கி வயத்தில் அடக்கில்
பளிங்கொத்துக் காயம் பழுக்கினும் பிஞ்சாம்
(திரு. மந். 551)

என்றும் பாடுகிறார்.

இக்கருத்துகளை யெல்லாம் ஆணை யிட்டுக் கூறுவதை,

ஞாலம் அறிய நரைதிரை மாறிடும்
பாலனும் ஆவர் பராநந்தி ஆணையே (திரு. மந். 714)

என்னும் திருமந்திரப் பாடலடிகளால் உணரலாம்.

உயிர் பக்குவமாக வளர உடல் தேவைப்படுகிறது. உடலின்றி உயிர் இல்லை. பெண்ணின் கருப்பையில் கரு தோன்றுவதற்குமுன், ஆணின் (தந்தை) உடலில் கரு தோன்றுகிறது. இதனை ஆண் உணருவதில்லை. இக்கருத்தினை,

புருடன் உடலிற் பொருந்துமற் றோரார் (திரு. மந். 439)

என்று கூறுகிறார்.

மனித உடல், எலும்பாலும் நரம்பாலும் தசையாலும் குருதியாலும் கலந்து உருவாக்கப்படுகிறது என்பதை,

என்பால் மிடைந்து நரம்பு வரிக்கட்டிச்
செம்பால் இறைச்சி திருந்த மனைசெய்து
(திரு. மந். 445)

என்று திருமூலர் கூறுகிறார்.

உடலானது உண்ட உணவின் சாரம், ரத்தம், மாமிசம், தோல், நரம்பு ஆகியவற்றோடு பொருந்தி எலும்பு, கொழுப்பு, மூளை, சுக்கிலம் முதலியவை ஒன்றுசேர, மயக்கமான காரியத்தில் ஈடுபட்டு அழியும்.

'உடலில் பிருதிவிக் கூறும் மண் தத்துவமுமான மயிர், தோல், எலும்பு, நரம்பு, தசை ஆகிய ஐந்தும், நீரின் கூறான நீர், உதிரம், மூளை நிணம், சுக்கிலம் ஆகிய ஐந்தும், தீயின் கூறான ஆகாரம், தூக்கம், பயம், மைதுனம், சோம்பல் ஆகிய ஐந்தும், வாயுவின் கூறான ஒடல், இருத்தல், கிடத்தல், நடத்தல், தத்தல் ஆகிய ஐந்தும், ஆகாயத்தின் கூறான குரோதம், உலோபம், மோகம், மதம், மாசர்யம் ஆகிய ஐந்தும் அடங்கி உள்ளன. மேலும் கன்மேந்திரியங்கள் ஐந்தும், வாயுக்கள் பத்தும், நாடிகள் பத்தும், வாக்குகள் நான்கும், வினை மூன்றும், குணம் மூன்றும் சேர்ந்து அறுபதாகும். கண், கால் முதலிய பஞ்சேந்திரியங்களை மறைக்கின்ற தூல, சூக்கும, அதிசூக்கும உடலுமாக அறுபத்தெட்டுத் தத்துவங்களால் ஆனது மனித உடல்' என்பதும் திருமந்திரக் கருத்தாகும்.

சுவாசத்தின் தன்மையைக் கொண்டு, மனிதரின் ஆயுள் மருத்துவர்களால் கணக்கிடப்படுகின்றது. இதனை ஆயுள் பரிட்சை என்னும் தலைப்பில் திருமந்திரம் கூறுகின்றது. மனிதனின் ஆயுட்காலம் என்பது உயிரும் உடம்புமாக இணைந்து இயங்கும் இயக்கமாகும்.

பிராண இயக்கத்தைக் கொண்டே ஆயுள் கணக்கிடப்படுகிறது. அதனால், ஒவ்வொரு விரற்கடையளவு சுவாசம் அதிகரிக்க அதிகரிக்க ஆயுள் அதற்கேற்பக் குறையும் என்பதைத் திருமந்திரம் குறிப்பிடுகின்றது.

'ஆறு விரற்கடை அளவு சுவாசம் வெளியேறினால் எண்பது, ஆண்டுகள் வாழலாம்.

ஏழு விரற்கடை அளவு சுவாசம் வெளியேறினால், அறுபத்திரண்டு ஆண்டுகள் வாழலாம்.

எட்டு விரற்கடை அளவு சுவாசம் வெளியேறினால், ஆயுட்காலம் ஐம்பதாகும்.

ஒன்பது விரற்கடை அளவு சுவாசம் வெளியேறினால், மூத்து அழியும் ஆயுட்காலம் முப்பது ஆகும்.

பத்து விரற்கடை சுவாசம் வெளியேறினால், ஆயுட்காலம் இருபத்தெட்டு ஆண்டுகள் ஆகும்.

பதினைந்து விரற்கடை சுவாசம் வெளியேறினால், ஆயுட்காலம் இருபத்தைந்து ஆண்டுகளாகும்'.

'இத்தகைய உடம்பில் உயிர் நீடிக்க வேண்டுமானால், புணர்ச்சியைக் குறைத்துக் கொள்ளல் வேண்டும். நோன்பு முதலானவற்றால் உடலைச் சுருக்கிக் கொள்ள வேண்டும். உணவைச் சுருக்கிக் கொள்ள வேண்டும்' என்கிறார். இதனை,

அண்டம் சுருங்கில் அதற்கோர் அழிவில்லை
பிண்டம் சுருங்கில் பிராணன் நிலைபெறும்
உண்டி சுருங்கில் உபாயம் பலஉள
கண்டங் கறுத்த கபாலியு மாமே (திரு. மந். 715)

என்னும் திருமூலர் வாக்கால் அறியலாம்.

திருமந்திரத்தில் இரண்டாம் தந்திரத்தின்கண் 'கரு உற்பத்தி' அல்லது 'கர்ப்பக் கிரியை' என்னும் பகுதியில் கருப்பையில் உயிர் தோன்றுவது முதல் முழுவளர்ச்சி அடையும்வரை உள்ள பத்துத் திங்களில் நிகழ்கின்ற உடலின் வளர்ச்சிப் படிநிலைகளை நுட்பமாக எடுத்துக் கூறுகிறார் திருமூலர்.

கர்ப்பக் கிரியை கூறும் கருத்துகளைச் சுருக்கமாக ஈண்டு காண்போம்.

கரு முதலில் தந்தையின் உடலில் உருவாகி. பிறகு தாயின் வயிற்றில் புகும். விந்தும் சுக்கிலமும் ஒன்று சேரும்போது. ஆன்மாவுக்குரிய 24 தத்துவங்களும் பொருந்துகின்றன. 24 தத்துவங்களாவன:

தன் மாத்திரைகள் ஐந்து : சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம்.

ஞானேந்திரியங்கள் ஐந்து : நாக்கு, கண், தோல், செவி, மூக்கு.

கன்மேந்திரியங்கள் ஐந்து : வாக்கு, கால், கை, எருவாய், கருவாய்.

பூதங்கள் ஐந்து : நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம்.

அந்தகரணங்கள் நான்கு : மனம், புத்தி, சித்தம், அகங்காரம் ஆகியவை யாகும்.

கருவினுள் முதலில் பாய்வது 'நீள் வாய்வு' எனத் திருமூலரால் சொல்லப்படும் பத்து வாயுக்களில் ஒன்றான 'தனஞ்செயன்' என்பதாகும். உடலைவிட்டு உயிர் பிரியும் தருவாயில், இறுதியாக உடலைவிட்டு நீங்குவதும் இந்த வாயுதான்.

கரு வளரும்போது, ஒவ்வொரு தத்துவப் பொருளும் அதனுடன் அருவமாக வந்து சேருகின்றன. கரு வளரும்போதே கண்கள் இரண்டு, செவிகள் இரண்டு, மூக்குத் துவாரங்கள் இரண்டு, வாய் ஒன்று, கருவாய்த் துவாரம் ஒன்று, எருவாய்த் துவாரம் ஒன்று ஆகிய ஒன்பது துவாரங்கள் வளருகின்றன. இவற்றை இறைவனாகிய பாகன், மனித உடல் நன்கு அமையும்பொருட்டுக் கருவிலேயே பெற வைக்கிறான்.

ஆணும் பெண்ணும் ஒன்று சேரும்போது, விந்தும் கருவும் ஒன்று சேருகின்றன. அப்போது விந்து, கருவினை எதிர்த்துச் சென்றால் பிறக்கும் குழந்தை 'தாமத குணம்' பெறும். சுரோணிதம் எதிர்த்து வந்தால் பிறக்கும் குழந்தை 'சத்வ குணம்' பெறும். விந்துவும் கருவும் சமமாகச் சேர்ந்திருக்கும்போது பிறக்கும் குழந்தை 'இராசத குணம்' பெறும்.

இம்மூன்று குணங்களும் ஒத்திருக்கும் ஒருவன், பேரரசை ஆளும் தகுதியுடையவனாக விளங்குவான்.

கருப்பையில் உருவம் பெற்றபின், அக்கரு மபக்க நிலையில் வளரும். அதற்குச் சக்தி, தத்துவம் சேர்க்கின்றாள். அதன் பிறகு குழந்தையின் பேருறக்கம் நீங்கி, நினைவு உண்டாகின்றது. விந்து, கரு ஆகியவற்றின் கலப்பால் உருவாகும் குழந்தைக்கு அதன் கையளவில் எண்சாண் உடம்பு உண்டாகின்றது. இவ்வுடலாகிய மண்ணைக் கருப்பையாகிய சூளையில் வைத்துச் சுட்டுப் பக்குவப்படுத்துபவன் இறைவன். இக்கருத்தை 'வெந்தது சூளை, விளைந்தது தானே' (திரு. மந். 452) என்று பாடுகின்றது திருமந்திரம். இவ்வுடல் எலும்பு, நரம்பு, குருதி, தசை ஆகிய நான்கும் கலந்து அமைக்கப்பட்டது. கருப்பையில் விந்து கருவுடன் சேரும் வேகத்திற்கு ஏற்பக் குழந்தையின் ஆயுட்காலம் முடிவு செய்யப்படுகிறது. இதனை,

பாய்ந்தபின் னஞ்சோடில் ஆயுளும் நூறாகும்
பாய்ந்தபின் நாலோடில் பாரினில் எண்பதாம்

(திரு. மந். 463)

என்னும் பாடலடிகள் விளக்குகின்றன.

மேலும், விந்தினைச் செலுத்தும் வாயு குறைந்தால், குழந்தை குள்ளமாகப் பிறக்கும்; வாயு மெலிந்தால், முடமாகப் பிறக்கும்; வாயு தடைப்படின், கூனாகப் பிறக்கும்.

தாயின் வயிற்றில் மலம் மிகுந்தால் குழந்தை மந்த புத்தி உடையதாகவும், நீர் மிகுந்தால் ஊமையாகவும், இரண்டும் மிகுந்திருந்தால் குருடாகவும் பிறக்கும் என்ற கருத்தை,

மாதா உதரம் மலமிகில் மந்தனாம்
மாதா உதரம் சலமிகில் மூங்கையாம்
மாதா உதரம் இரண்டொக்கில் கண்ணில்லை
மாதா உதரத்தில் வந்த குழவிக்கே (திரு. மந். 465)

என்னும் பாடல் கூறுகிறது.

'ஆண் பெண் உடலுறவு காலத்தில் ஆணிடம், பிராணன் வலப் பக்க நாசியில் இயங்குமாயின், ஆண் குழந்தை பிறக்கும்; இடப் பக்க நாசியில் இயங்குமாயின், பெண் குழந்தை பிறக்கும்' என்னும் கருத்தை,

குழவியும் ஆணாம் வலத்தது வாகில்
குழவியும் பெண்ணாம் இடத்தது வாகில் (திரு. மந். 466)

என்ற பாடலடிகள் விளக்குகின்றன.

சுக்கிலத்தைச் செலுத்தும் பிராண வாயுவை 'அபானன்' என்னும் மலக் காற்று எதிர்த்தால் இரட்டைக் குழந்தை பிறக்கும்.

வலப் பக்க நாசி, இடப் பக்க நாசி ஆகிய இரண்டிலும் பிராணன் ஒன்றுபட்டு இயங்கும்பொழுது கருவினுள் விந்து பொருந்துமானால், குழந்தை அலியாகப் பிறக்கும்.

ஆண், பெண் இருவருக்கும் நல்ல முறையில் சுவாசம் ஓடினால், அழகும் அறிவும் உள்ள குழந்தை பிறக்கும்.

இவ்வாறு, கருவின் தோற்றம், வளர்ச்சி, ஆண் பெண் குழந்தை பிறப்பு, ஊனத்துடன் குழந்தை பிறப்பதற்கான வாய்ப்பு முதலான செய்திகளைத் திருமந்திரம் விதந்தோதுகிறது.

நோய் மற்றும் மருத்துவம் பற்றித் திருமூலர் கருத்துகளை இப்பொழுது காண்போம்.

மருத்துவமுறை, அன்னை பார்வதி, ஐயன் பரமசிவன் மூலமாக நந்தி தேவருக்குச் சொல்லப்பெற்று, அவர்மூலம் திருமூலருக்குச் சொல்லப் பெற்றது என்பது புராண வழக்கு.

மனிதர் சாகாக் கலை பெறும் மருத்துவ முறைகளைத் திருமூலர் தெரிவிக்கிறார். உடலில் உள்ள அணுக்கள் அழியுங்கால் பிணி, மூப்பு,

சாக்காடு வந்தெய்தும். இதனைத் தடுக்க, உடம்பைத் தூய்மையாக வைத்திருக்க வேண்டும் என்பது திருமூலர் கருத்தாகும்.

உடம்பின் தன்மையைக் கூறவந்த திருமூலர், உடம்பானது, உணவின் சத்து, இரத்தம், மாமிசம், நரம்பு, எலும்பு, நிணம், மஜ்ஜை, மூளை, சுக்கிலம் ஆகியவற்றின் கூட்டுத் தொகுப்பு என்று கூறுகிறார்.

இத்தகைய உடலில் ஏற்பட்டுள்ள நோயை, நாடி பிடித்துப் பார்த்து அறிய முடியும். வாதம், பித்தம், சிலேத்துமம் ஆகிய மூன்று நாடிகளுள் ஒரு நொடியளவு வாத நாடி பேசினால், பாதியளவு பித்தம் பேசினால், கால் பங்கு சிலேத்துமம் பேசினால் உயிருக்கு ஆபத்து இல்லை என்பதை அறியலாம்.

வாதம் மிகுந்தால் உடம்பில் எரிச்சல் உண்டாகும்; கை, கால், விலாச் சந்து, இடுப்புச் சந்துகளில் மிகுதியான வலி ஏற்படும் என்பதைத் திருமந்திரம் கூறுகின்றது.

மேலும், பித்த மிகுதியால் வரும் துன்பங்கள், கபத்தினால் வரும் நோய்கள், சாவை அறியும் விதம் பற்றியும் திருமந்திரம் கூறுகிறது. 'குறிகேளு மூக்கன்றிக் குலவி வாய்வழிஓடில் மறிகேளும் மூன்றாம்நாள் மரித்திடுவான் தப்பாது' என்பதால், சுவாசம் வாய் வழியேவரின் அது மரணத்திற்கு அறிகுறி என்று கூறுகிறது.

உதடு, பல், நா முதலியன கருமையாக நிறம் மாறினால், அவை மரணத்தை அறிவிக்கும் அறிகுறிகளாகும். உமிழ் நீர் மூலமும் இறப்பை அறிய முடியும். மேகநோய், சன்னி, மூலம் முதலான நோய்கள் வருவதற்குரிய காரணங்களையும் திருமூலர் கூறுகிறார்.

குன்மநோய் மகா திராவகத்தாலும், குஷ்டநோய் கந்தக பஸ்பத்தாலும், கிராணிநோய் பூ நாகப் பஸ்பத்தாலும், மூலநோய் தாமிர

பஸ்பத்தாலும் நீங்கும் என. நோய் நீங்கும் மருந்துகள் பலவற்றையும் திருமூலர் கூறுகிறார்.

உடலில் உள்ள வாயுக்களில் ஒன்றான 'தனஞ்சயன்' என்னும் வாயுவின் திரிபால், கால் வாதம், கூன், சிரங்கு முதலான நோய்கள் உண்டாகும் எனவும், 'கூர்மன்' என்னும் வாயு கண்ணில் பொருந்தாவிடில் கண்ணில் வீக்கம், பூ விழுதல், படலம் முதலான கண்ணோய்கள் வரும் எனவும் திருமந்திரம் கூறுகிறது.

அறம் செய்யாதவர்களுக்கு வரும் நோய்கள் பற்றியும் தீமைகள் செய்பவர் பெறும் நோய்கள் பற்றியும் திருமந்திரம் எடுத்துக் கூறுகிறது.

3. திருமூலர் காட்டும் தனிமனித வாழ்வியல் நெறிகள்

'அகத் தவம்', 'பிரைச் சதம்' எனச் சுட்டப்பெறும் 'அட்டாங்க யோகம்' (எட்டுவித நெறிகள்) என்னும் யோக நெறிகள், திருமூலர் காட்டும் நெறிகளுள் தனிச்சிறப்புப் பெறுகின்றன.

திருமந்திரத்தின் மூன்றாம் தந்திரத்தில், இந்த அட்டாங்க யோகம் பற்றித் திருமூலர் விளக்குகிறார். அட்டாங்க யோகம், தனிமனித ஒழுக்கங்களை விளக்குகிறது .

'யோகம்' என்பது 'மனம் அசையாது இருத்தல்' என்னும் பொருள்படும். இது இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி ஆகிய எட்டு அங்கங்களை உடையது என்று திருமூலர் விளக்குகிறார்.

இனி, அட்டாங்க யோகங்கள் பற்றிச் சிறிது காண்போம்.

இயமம் (தீது அகற்றல்)

'தீது அகற்றல்' என்பது இதன் பொருள். மனிதன் எந்தத் தீமைகளையும் செய்யாது வாழ வேண்டும். பிறருக்குத் தீங்கு நினைக்காமல், தாமும் தீய பழக்கங்களுக்கு ஆட்படாமல் வாழ்வது 'இயமம்'.

கொல்லாமை, பொய் சொல்லாமை, களவு செய்யாமை, எண்குணன் ஆதல், நற்பண்புகள் உடையனாதல், அடக்கம் உடையனாதல், நடுவு நிலைமை பிறழானாதல், பகுத்துண்ணும் பண்பினனாதல். மனத்தில் மாசு இலனாதல், கள் மற்றும் காமம் நீக்கியவனாதல் ஆகிய பதினொன்றும் இயம ஒழுக்கங்கள் எனத் திருமூலர் கூறுகிறார். இதனை,

கொல்லான்பொய் கூறான் களவிலான் எண்குணன்
நல்லான் அடக்க முடையான் நடுச்செய்ய
வல்லான் பகுத்துண்பான் மாசிலான் கட்காமம்
இல்லான் இயமத் திடையின்நின் றானே (திரு. மந். 536)

என்னும் திருமூலர் வாக்கால் அறிய முடிகிறது.

நியமம் (நன்றாற்றல்)

நியமம் என்றால் 'நன்றாற்றல்'. அஃதாவது, நல்லனவற்றையே செய்து வாழ்தல் என்பதாகும். அத்தகைய நன்றாற்றல் பத்து. இப்பத்தும் இயமத்தின் வழி எய்தப்பட வேண்டியதாகலின், அதன்பின் வைக்கப் பெற்றுள்ளது.

உடல் – உள்ளத் தூய்மை, அருளுடைமை, உண்டி சுருக்குதல், பொறையுடைமை, தவம், ஜெபம், இன்னாசெய்யாமை, அடக்கமுடைமை, நடுவுநிலைமை, ஆத்ம தரிசனம் ஆகிய நெறிகளைக் கைக்கொண்டு இறைவனைக் காணவேண்டும் என்கிறார் திருமூலர்.

ஆதனம் (இருக்கை)

ஆதனம் என்றால் 'இருக்கை' (ஆசனம்) என்பது பொருளாகும்.

யோகம் புரிபவர்கள் உடலுக்கு ஊறு வாராமல் காத்துக்கொள்ள, முன்னுணர்வோடு மேற்கொள்ள வேண்டிய ஆசனங்கள், 'ஆதனம்' எனப்படும். மனம் ஒரு நிலையில் நிற்க, உடல் அசையாது இருக்கும் இருப்பு

'ஆசனம்'. திருமூலர் எட்டு வகை ஆசனத்தைக் குறிக்கிறார். அவை, சுவத்தி காசனம், பத்மாசனம், பத்திராசனம், குக்குடாசனம், சிங்காசனம், கோமுகாசனம், வீராசனம், சுகாசனம் என்பனவாகும்.

பிராணாயாமம் (மூச்சைக் கட்டுப்படுத்தல்)

மூச்சைக் கட்டுப்படுத்தும் பயிற்சி பிராணாயாமம் எனப்படும். இப்பயிற்சியால் உடற்சோர்வு நீங்கிச் சுறுசுறுப்பு அடையும். உடல் மெலிந்து, ஒடுங்கி, வியர்த்து, நடுங்கித் தன்னிச்சையாக மூர்ச்சித்துக் கொள்ளலாம். இதனைத் திருமூலர்,

காற்றைப் பிடிக்கும் கணக்கறி வாளர்க்குக்
கூற்றை யுதைக்கும் குறியது வாமே (திரு. மந். 553)

என்ற பாடலடிகள் விளக்கும்.

பிராணாயாமம் செய்யும் முறை, செய்வதால் ஏற்படும் பயன்கள் பற்றியும் திருமந்திரம் எடுத்தோதுகிறது.

பிரத்தியாகாரம் (புலன் ஒடுக்கம்)

பிரத்தியாகாரம் என்பது 'புலனொடுக்கம்'. பிராணாயாமம் நன்கு கைகூடிய பிறகு, பயில வேண்டிய ஒரு பயிற்சி பிரத்தியாகாரமாகும். புறத்தே ஆடும் மனத்தை, வலிந்து இழுத்து, உத்தேசித்துள்ள ஓரிடத்தில் நிலைநிறுத்துவது பிரத்தியாகாரமாகும். மனம் சலனமற்றிருக்கும் ஏகாந்த நிலை இதுவாகும்.

தாரணை (மன ஒருமை)

தாரணையாவது 'மனத்தை ஒருமுகப்படுத்தல்'. இந்திரியங்கள் தன்வயமானவுடன் பயில்வது தாரணையாகும். சூக்கும உடலில் மனத்தை ஒரு வழியே நிறுத்தி, விந்தின் அமைப்பிடத்தை உள்முகமாக ஆராய்தல் தாரணையாகும்.

தியானம் (இடைவிடாது நினைத்தல்)

தாரணையின் முதிர்நிலையும் அதனை அடுத்த படிநிலையும் தியானம் எனப்படும். உணர்வுகளை ஆன்மிக மயமாகவும், தூய அறிவுச் சுடராக விளங்கவும் செய்வது தியானம். இதனை, சகுனத் தியானம், நிர்குணத் தியானம் என இருவகைப்படுத்தியும் திருமூலர் விளக்குகிறார்.

சமாதி(உயிரும் இறைவனும் ஒன்றி நிற்றல்)

இது அட்டாங்க யோகத்தின் இறுதி நிலை. உயிர் தன் மலம் நீங்கி, இறைவனோடு சமமாதல் சமாதியாகும்.

"சமாதி நிலையில் யோகத்தின் பயனும் எட்டுச் சித்திகளும் கைகூடும். ஏழாண்டுப் பயிற்சியினால் பெருங்காற்றிலும் விரைவாக அளவிலாத தொலைவு நடக்கக்கூடும். எட்டாண்டுப் பயிற்சியில் நரை, திரை, மூப்பு தோன்றா. ஒன்பதாண்டுப் பயிற்சியில் தூமாயை உடம்பாகும். பத்தாண்டுப் பயிற்சியில் அட்டமாசித்திகள் கைகூடும்." (திருமூலர் திருநெறி, ப.30)

மேலும், கேசரி யோகம், பரியங்க யோகம், அமுரிதாரணை, சந்திர யோகம், மந்திர யோகம் முதலான யோகம் பற்றியும் திருமூலர் கூறுகிறார்.

அன்புநெறி

> **ஆறு சமய முதலாஞ் சமயங்கள்**
> **ஊற தெனவும் உணர்க ......** (திரு. மந். 1504)

என்று கூறுவதன் மூலம், மதப் பூசல் கூடாது என்பதையும் சமரச சன்மார்க்கம் பேண வேண்டுமென்பதையும் திருமூலர் வலியுறுத்துகிறார்.

> **அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்**
> **அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்** (திரு. மந். 257)

என்று பாடுவதன் மூலம் அன்பு நெறியே அகிலத்தோருக்கு உகந்தநெறி என்பதை விளக்குகிறார்.

ஆசைவிடல்

ஆசை அறுமின்கள் ஆசை அறுமின்கள்
ஈசனோ டாயினும் ஆசை அறுமின்கள் (திரு. மந். 2570)

என்று பாடி, இறைவனிடத்துக்கூட ஆசை வளர்த்தல் தவறெனக் கண்டிக்கிறார்.

களவு செய்யாமை

வெவ்விய னாகிப் பிறர்பொருள் வவ்வன்மின் (திரு. மந். 238)

என்று கூறிக் களவினைக் கடிகிறார்.

கொல்லாமை, உயிர்ப்பலி வெறுத்தல்

பற்றாய நற்குரு பூசைக்கும் பன்மலர்
மற்றோர் அணுக்களைக் கொல்லாமை ஒண்மலர்
(திரு. மந். 239)

என்று உயிர்ப் பலியிடுதலை வெறுத்துக் கூறுகிறார்.

கள்ளும் காமமும்

கள் உண்பவர்களை, 'ஒழுக்கத்தின் நீங்கியவர்', 'கருத்தற்று இருப்பவர்கள்', 'அவர்கள் சமுதாய மூடர்கள்' என்று திருமூலர் கடிந்து கொள்வார்.

கள்வெறி, பின்னர்க் காமத்தைத் தூண்டும். கள்ளையும் காமத்தையும் கீழ் மக்களே விரும்புவர்; நல்லோர் அவற்றை விரும்பார்.

இவ்வாறு கூறுவதன் மூலம், திருமூலர் கள்ளையும் காமத்தையும் கடிந்து ஒதுக்கியவர் என்பதை அறியலாம்.

மலைவான பாதகங்கள்

கொலையே களவுகட் காமம்பொய் கூறல்
மலைவான பாதக மாம்அவை நீக்கி (திரு. மந். 241)

என்று கூறுவதன் மூலம் கொலை, களவு, கள், காமம், பொய்கூறல் முதலானவை பெரும்பாதகங்கள் என்றும், அவற்றை நீக்கி வாழ்வோரே இறையருளைப் பெறுவதற்கு உரியவர் என்றும் திருமூலர் விரும்பி வலியுறுத்தும் தனிமனித ஒழுக்க நெறிகளை நாம் உணரலாம்.

ஈகை

இன்சொல் பேசுக, ஈகை கைக்கொள்க என்பவையும் திருமூலர் காட்டும் நெறிகள். மக்கள் செய்ய வேண்டிய அறத்தை வலியுறுத்தவந்த திருவள்ளுவர், 'ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே' (திரு. கு. 33) என்று கூறினார். (தம்மால் இயன்ற அளவு ஈதலை மேற்கொள்ளலாம் என்பது இதன் கருத்து).

திருமூலரும், 'பசுவுக்கு ஒரு கைப்பிடி புல் கொடுத்தல் யாவர்க்கும் ஏற்ற செயல்; தான் உண்ணும் உணவில் ஒரு கைப்பிடி உணவினைப் பிறருக்குக் கொடுப்பது எல்லாருக்கும் ஏற்ற எளியசெயல்' (திரு.மந். 109) என்ற கருத்தமையப் பாடி, எளிய ஈகையை எடுத்து இயம்புகின்றார். பிறருக்கு ஈந்து உவக்கும் இன்பம் பெறாதவரைப் பேதைகள் என்று இகழ்கிறார் திருமூலர். இதனை,

இன்பம் அதுகண்டும் ஈகிலாப் பேதைகள் (திரு. மந். 124)

என்ற பாடலடி விளக்கும்.

மக்கள் தொண்டே மகேசன் தொண்டு

படமாடக் கோயில் பகவற்கொன் றீயில்
நடமாடக் கோயில் நம்பர்க்கங் காகா
நடமாடக் கோயில் நம்பர்க்கொன் றீயில்
படமாடக் கோயில் பகவற்க தாமே (திரு. மந். 1821)

என்ற பாடலில், இறைவனைப் 'படமாடும் கோயில்' என்றும், மக்களை 'நடமாடும் கோயில்' என்றும் உருவகித்து, படமாடும் கோயிலான இறைவனுக்கு ஒன்று செய்வதால், அது நடமாடும் கோயிலாகிய மக்களுக்குப் பயன்தராது. ஆனால், நடமாடும் கோயிலாகிய மக்களுக்குச் செய்யும் தொண்டு, படமாடும் கோயிலாகிய இறைவனைப் போய்ச் சேரும். ஆதலால், மக்களுக்குத் தொண்டு செய்யுங்கள் என்பது திருமூலர் கருத்தாக மணக்கிறது.

பரத்தையர் தொடர்பு விலக்குதல்

மனிதன் விலக்குதற்குரிய இழிசெயல் பரத்தையர் தொடர்பு என்பது திருமூலர் கருத்து. பரத்தையரை,

இயலுறும் வாழ்க்கை இளம்பிடி மாதர் (திரு. மந். 249)

இயங்கும் மடவார்

என்னும் தொடர்களால் திருமூலர் சுட்டுகிறார்.

பரத்தையரை, பொது மகளிரின் இழிவான பண்புகளை, 'மகளிர் இழிவு' என்ற தலைப்பில் திருமூலர் குறிப்பிடுகிறார்.

பரத்தையரை எட்டிக்கனி என்றும் பரத்தையர் தரும் சிற்றின்பம் கனவு போன்றது என்றும் திருமூலர் இடித்துரைக்கிறார்.

பிறன்மனை நயவாமை

பிறன்மனை நோக்காமையைப் 'பேராண்மை' என்பார் திருவள்ளுவப் பெருந்தகை.

பிறன்மனை நயத்தலுக்குக் காரணம், அறியாமை என்றும் வீட்டில் உள்ள பலாக் கனியை உண்ணாது, காட்டில் கிடைக்கும் ஈச்சம் பழத்தைத் தேடிச் செல்வதைப் போன்றது அது என்றும் திருமூலர் இடித்துரைக்கின்றார்.

'சொந்த மனைவியானவள் திருத்தி வளர்த்த தேமாங்கனியை யொத்தவள். பிறன் மனையோ புளியங் காயை யொத்தவள்' என்றும் கூறுகிறார். இதனை,

திருத்தி வளர்த்ததோர் தேமாங் கனியை
அருத்தமென் றெண்ணி அறையிற் புதைத்துப்
பொருத்தமி லாத புளிமாங்கொம் பேறிக்
கருத்தறி யாதவர் காலற்ற வாறே (திரு. மந். 245)

என்று பாடுகிறார்.

எல்லாரும் எப்பொழுதும் மேற்கொள்ள வேண்டிய எளிய வாழ்க்கை நெறிமுறைகள் சிலவற்றைத் திருமூலர் கூறுகிறார்.

அதாவது, 'இன்னார்–இனியார், நண்பர்–பகைவர், தெரிந்தவர்–தெரியாதவர் என்ற பாகுபாடு பார்க்காமல், எல்லோருக்கும் ஈதல் வேண்டும். உண்ணப் புகும்முன், விருந்தினர் யாவரேனும் வருவார்களோ என எதிர்பார்த்து உண்ண வேண்டும். பழைய உணவை உண்பதைத் தவிர்த்து விடவேண்டும். பசி மிகுதியாக இருந்தபோதும் விரைவாக உண்பதைத் தவிர்த்துவிட வேண்டும். உண்ணும்பொழுது, காகத்தைப் போன்று இனங்களையும் இணைத்துக்கொண்டு பகிர்ந்து உண்ண வேண்டும்' என அன்றாட வாழ்வில் மக்களாய்ப் பிறந்தார் அனைவரும் பின்பற்ற வேண்டிய

இத்தகைய வாழ்வியல் நெறிகளை.

ஆர்க்கும் இடுமின்; அவர்இவர் என்னன்மின்
பார்த்திருந்து உண்மின்; பழம்பொருள் போற்றன்மின்
வேட்கை யுடையீர் விரைந்தொல்லை உண்ணன்மின்
காக்கை கரைந்துண்ணும் காலம் அறிமினே
(திரு. மந். 107)

என்ற திருமந்திரப் பாடல் கூறுகின்றது.

மழைவளம் பெறுவதற்கும் காற்று மாசு களைவதற்கும் இக்காலத்து, அரசாங்கத்தாலும் தொண்டு நிறுவனங்களாலும் பொது மக்களிடம் பெரிதும் வேண்டப்படுவது, மரம் வளர்க்கவேண்டுமென்பதாகும்.

'மரம் இறைவன் தந்த வரம்', 'மரம் வளர்ப்போம் மழை பெறுவோம்', 'மாசு நீங்க மரம் வளர்ப்போம்' என்பன போன்ற முழக்கங்களை நாடு முழுவதும் கேட்கிறோம்; விளம்பரங்களிலும் காண்கிறோம்.

இத்தகைய மரம் வளர்த்தல் பற்றி நூற்றுக்கணக்கான ஆண்டுகட்கு முன்பே, திருமூலர் குறிப்பிட்டுள்ளார். அதுவும் ஒரு மரம் இரு மரம் அன்று. மரச் சோலையையே அமைக்கச் சொல்கிறார். அவ்வாறு, மரம் நட்டுத் தண்ணீர் விட்டுப் பேணாதவர் நரகத்திற்குச் சென்று துன்புறுவர் என்று திருமூலர் எச்சரிக்கிறார். இதனை,

கரகத்தால் நீரட்டிக் காவை வளர்க்கார்
நரகத்தில் நிற்றிரோ நன்னெஞ்சி னீரே (திரு. மந். 121)

என்ற பாடலடிகள் உணர்த்துகின்றன.

அரசிருந்து ஆட்சிபுரியும் அறநெறிகளைக் கல்லாத அரசன், காலனை யொத்த கொடியவன் ஆவான் என்பதை,

கல்லா அரசனும் காலனும் நேரொப்பர்
கல்லா அரசனிற் காலன் மிகநல்லன் (திரு. மந். 95)

எனத் திருமூலர் கூறுகிறார்.

யாக்கை நிலையாமை, செல்வம் நிலையாமை, இளமை நிலையாமை, உயிர் நிலையாமை ஆகிய நிலையாமைகளைப் பற்றித் திருமூலர் கூறுவனவற்றை இனிக் காண்போம்.

இந்த உடம்பானது (யாக்கை) நல்வினை, தீவினைகளால் அடைக்கப்பெற்ற கூரையாகிய உயிரோடு கூடியது. இது சில காலம்தான் உலகில் வாழும். அக்காலக்கட்டத்தில், தனக்கென்று வரையறுக்கப் பெற்ற இன்ப துன்பங்களை அது அனுபவிக்கும். உடனிருக்கும் மனைவி மக்களும் அதனை அனுபவிப்பர். காலனால் கவரப்பெற்று, உயிர் போங்காலத்து உடனிருந்து இன்பந் துய்த்த மனைவி மக்கள் ஒருவரும் உடன் வாரார். வாழுங்காலத்து அவர் கடைப்பிடித்த விரதங்களின் பயனும் ஞானமும் மட்டுமே உடன் வரும் என்னும் கருத்தை,

பண்டம்பெய் கூரை பழகி விழுந்தக்கால்
உண்டஅப் பெண்டிரும் மக்களும் பின்செலார்
கொண்ட விரதமும் ஞானமும் அல்லது
மண்டி அவருடன் வழிநட வாதே (திரு. மந். 188)

என்ற பாடலில் எடுத்துக் கூறுகிறார். இங்கு, 'பண்டம் பெய் கூரை' என்பதற்கு, நல்வினை தீவினைகளால் அடைக்கப்பெற்ற உடம்பு என்பது பொருளாகும். மேலும்,

அடப்பண்ணி வைத்தார் அடிசிலை உண்டார்
மடக்கொடி யாரொடு மந்தணம் கொண்டார்
இடப்பக்க மேஇறை நொந்தது என்றார்
கிடக்கப் படுத்தார் கிடந்தொழிந் தாரே (திரு. மந். 192)

எனவும்,

ஊரெலாங் கூடி ஒலிக்க அழுதிட்டுப்
பேரினை நீக்கிப் பிணமென்று பேரிட்டு (திரு. மந். 189)

எனவும் கூறுவதன் மூலம் யாக்கை நிலையாமையைத் தெளிவுபடுத்துகிறார்.

செல்வம் நிலையாமை

மாடு, மனை, பொருள் முதலானவை நிலையற்ற செல்வம். இறைவன் அருள் ஒன்றே நிலையான செல்வம். அதனைத் தேடவேண்டும் என்பது திருமூலர் கருத்தாம்.

அருளும் அரசனும் ஆனையுந் தேரும்
பொருளும் பிறர்கொள்ளப் போவ (திரு. மந். 212)

என்றும்,

இயக்குறு திங்கள் இருட்பிழம்பு ஒக்கும்
துயக்குறு செல்வம் (திரு. மந். 213)

என்றும் கூறிச் செல்வ நிலையாமையைத் தெளிவுபடுத்துகிறார்.

இளமை நிலையாமை

'கரும்பைப் போன்று இனிக்கும் இளமை எல்லாராலும் விரும்பப்படும். அதுவே நிலையாது. எட்டிக் காய்போல் கசக்கும் முதுமை வந்தே தீரும்' என்றும்,

பாலன் இளையன் விருத்தன் எனநின்ற
காலங் கழிவன கண்டும் அறிகிலார் (திரு. மந். 225)

என்றும் பாடுவதன்மூலம் இளமை நிலையாது என்பதைக் கூறுகின்றார்.

உயிர் நிலையாமை

வேங்கடம் என்றே விரகுஅறி யாதவர்
தாங்கவல் லாருயிர் தாம்அறி யாரே (திரு. மந். 232)

இங்கு, 'வேங்கடம்' என்பது, வேம் + கடம் எனப் பிரிந்து 'அழியும் உடம்பு' என்று பொருள் தரும். உடம்பு அழியும் எனில், உயிரும் அழியும் என்பது கருத்து.

மேலும், 'உடம்பார் அழியில் உயிரார் அழிவர்' (திரு. மந். 704) என்றும் திருமூலர் கூறுவதன் மூலம் உயிர் நிலையாமையைக் குறிப்பிடுகின்றார்.

மனிதர், உயிரோடு வாழுங் காலத்தே அறவுணர்வோடு நடந்துவிட வேண்டும் என்பதை வற்புறுத்தும் திருமூலர், 'வஞ்சனையோ பொறாமையோ பேசாதீர்; கொடியவராகி அடுத்தவர் பொருளைத் திருடாதீர்; உணவு கொள்ளும்பொழுது எவரேனும் வந்தால் ஒர் உருண்டையாவது வந்தவர்க்குக் கொடுத்துப் பின் உண்ணுங்கள்' என்று கூறுகிறார்.

இத்தகைய அறச் செயல்களை, உடலில் உயிர் இருக்கும்பொழுதே செய்து விடுங்கள் என்று வற்புறுத்துவதன் மூலம் உயிர் நிலைக்காது என்பதைக் கூறுகிறார். இதனை,

அவ்வியம் பேசி அறங்கெட நில்லன்மின்
வெவ்விய னாகிப் பிறர்பொருள் வவ்வன்மின்
செவ்விய னாகிச் சிறந்துண்ணும் போதொரு
தவ்வி கொடுமின் தலைப்பட்ட போதே (திரு. மந். 238)

என்று பாடியுள்ளர். இங்கு, 'தலைப்பட்ட போதே' என்பதற்கு 'உயிர் வாழுங் காலத்தே' என்பது பொருளாகும்.

தனிமனிதர் சேர்த்து மகிழத்தக்க செல்வமான கல்வி, கேள்வி பற்றியும் திருமூலர் கூறுகின்றார்.

கல்வி என்பது சிவானுபவத்தைத் தரத்தக்கது என்ற பொருளில் திருமூலர் கையாளுகிறார்.

கல்வி உடையார் கழிந்தோடிப் போகின்றார் (திரு. மந். 280)

கற்றறி வாளர் கருத்திலோர் கண்ணுண்டு (திரு. மந். 278)

கற்கின்ற செய்மின் கழிந்தறும் பாவங்கள் (திரு. மந். 279)

கற்றவர் பேரின்பம் உற்றுநின் றாரே (திரு. மந். 285)

எனக் கல்வியறிவின் தேவையைக் கூறிச் சென்றுள்ளார்.

கேள்வி கேட்டு அமைதல் பற்றிக் கூறவந்த திருமூலர், கேள்வி ஞானத்தைச் சிவானுபவம் பெற்றவர்பால் சென்று கேட்டு மனம் தெளிதல் என்னும் பொருளில் கூறுகிறார். இதனை,

அறம்கேட்டும் அந்தணர் வாய்மொழி கேட்டும்
மறம்கேட்டும் வானவர் மந்திரம் கேட்டும்
புறம்கேட்டும் பொன்னுரை மேனிஎம் ஈசன்
திறம்கேட்டும் பெற்ற சிவகதி தானே (திரு. மந். 287)

என்ற பாடல் விளக்கும். மேலும்,

ஓதுமின் கேண்மின் உணர்மின் (திரு. மந். 288)

என்றும் இக்கருத்தை வலியுறுத்துகின்றார்.

கல்லாமை பற்றிக் கூறும் திருமூலர், 'எல்லா உயிர்கள்பாலும் நீக்கமற நிறைந்து இலங்கும் இறைவன், கல்லார் நெஞ்சத்து நில்லான்' என்று வருந்திக் கூறுகிறார். இதனை,

எல்லா உயிர்க்கும் இறைவனே யாயினும்
கல்லாதார் நெஞ்சத்துக் காணவொண் ணாதே
(திரு. மந். 299)

எனக் கூறியுள்ளார்.

மேலும், 'கல்லாதவர்கள் அறிவிலிகள் ஆவர். கல்லாதவர்களைக் கண்களால் காணக்கூடாது, அத்தகைய அறிவிலிகளுக்கு அவர்களை யொத்த மூடர்களே நல்லவர்களாகத் தோன்றுவர். கற்றவர்களை அவர்கள் வெறுத்து ஒதுக்குவர். நல்லவர்கள் கருத்துகளை அவர்கள் அறியமாட்டார்கள்' என இடித்துரைக்கின்றார். இதனை,

கல்லாத மூடரைக் காணவும் ஆகாது
கல்லாத மூடர்சொல் கேட்கக் கடனன்று
கல்லாத மூடர்க்குக் கல்லாதார் நல்லராம்
கல்லாத மூடர் கருத்தறி யாரே (திரு. மந். 304)

நடுவுநிலைமை

சமன் செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்து, ஒருபால் கோடாத சான்றோர் பண்பு நடுவுநிலைமையாகும். இன்னார் – இனியர் என்று வேறுபாடு காட்டாமல், எல்லார்க்கும் ஒப்ப வாழும் முறை நடுவுநிலைமை. இதனைப்பற்றித் திருமூலர் கூறும்பொழுது, 'நடுவுநிலை பிறழ்பவர்க்கு ஞானம் கிட்டாது. நடுவுநிலை நிற்பவர் நரகத்திற்குச் செல்ல வேண்டியதில்லை. நடுவு நிற்பவர்களே தேவர்களை யொத்த பெருமைக்கு உரியவர்கள். ஆதலால் நடுவுநிலை பிறழாதவர் நெறியை, நடுவுநிலை பிறழாமையை நானும் பின்பற்றினேன்' என்று கூறுகிறார். இக்கருத்தினை,

நடுவுநின் றார்க்கன்றி ஞானமும் இல்லை
நடுவுநின் றார்க்கு நரகமும் இல்லை (திரு. மந். 307)

என்ற பாடலடிகள் விளக்குகின்றன.

பெரியாரைத் துணைக்கோடல்

ஒருவர், தம்மைவிட அறிவு, ஒழுக்கங்களால் சிறந்த பெரியாரின் துணையைக் கொள்வது பெருஞ்சிறப்பாகும்.

பெரியாரைத் துணைக்கொள் (ஆ. சூ. 82)

என்று ஔவை மூதாட்டியும்,

அறனறிந்து மூத்த அறிவுடையார் கேண்மை
திறனறிந்து தேர்ந்து கொளல் (திரு. கு. 441)

உற்றநோய் நீக்கி உறாஅமை முற்காக்கும்

பெற்றியார்ப் பேணிக் கொளல் (திரு. கு. 442)

என வள்ளுவப் பெருந்தகையும் கூறியுள்ளனர்.

இத்தகைய பெரியாரைத் துணையாகக் கொள்ளுதல் பற்றித் திருமூலரும்,

பெரியா ருடன்கூடல் பேரின்ப மாமே (திரு. மந். 527)

என்று பாடுவதன் மூலம் 'பெரியார் துணை பேரின்பம்' என்ற கருத்தினை வெளிப்படுத்துகின்றார்.

தம்மைச் சாரும் மாணாக்கரை நல்வழிப்படுத்தி, கல்வி கேள்விகளால் உயர்த்தி, உயர் பண்புகளைப் புகட்டும் குருவின் (ஆசிரியர்), பெருமையையும் திருமூலர் எடுத்துரைக்கின்றார். இதனை,

தெளிவு குருவின் திருமேனி காண்டல்

தெளிவு குருவின் திருநாமம் செப்பல்

தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்

தெளிவு குருவுருச் சிந்தித்தல் தானே (திரு. மந். 183)

என்று பாடியுள்ளார். இவற்றைக் கடைப்பிடிக்க வேண்டியது நன்மாணாக்கர் கடமை.

மேலும், 'எழுத்தறிவித்த இறைவனாம் ஆசிரியரை இகழக்கூடாது. அவ்வாறு இகழ்வோர், நாயாகப் பிறப்பர்; புழுவாகப் பிறந்து துன்புறுவர்' என்று சாபமே கொடுக்கிறார் திருமூலர். இதனை,

ஓரெழுத் தொருபொருள் உணரக் கூறிய
சீரெழுத் தாளரைச் சிதையச் செப்பினோர்
ஊரிடைச் சுணங்கனாய்ப் பிறந்தங் கோருகம்
வாரிடைக் கிருமியாய் மாய்வர் மண்ணிலே

(திரு. மந். 514)

என்ற பாடலில் விளக்குகிறார். இக்கருத்தினை இன்றைய மாணாக்கர் தம் கருத்தில் இருத்தல் வேண்டும்.

தனிமனித ஒழுக்கங்களுள் தலையாது வாய்மை; அஃதாவது பொய்யாமை. அதுவே மிகச்சிறந்த ஒழுக்கம்.

பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று (திரு. கு. 297)

என்ற திருக்குறள் கருத்துப்படி, பொய்யாமையாகிய ஓர் அறத்தைக் கைக்கொண்டால், வேறு எந்த அறத்தையும் பின்பற்றல் வேண்டா.

திருமூலர், 'பொய்மை புகல்வார்க்கு இறைவன் அருள் கிட்டாது; பொய்யற்றவர்க்கே இறைவனும் மெய்யாவான்' என்ற கருத்துப்பட,

பொய்கலந் தார்முன் புகுதாப் புனிதனைப்
பொய்யொழிந் தார்க்கே புகலிட மாமன்றே (திரு.மந். 2558)

எனப் பாடியுள்ளார்.

புறங்கூறாமை

புறங்கூறுதல் என்பது பொய்யான வாழ்க்கை. அவ்வாறு வாழ்வதைவிட இறப்பதே மேல் என்பது திருவள்ளுவர் கருத்து. இத்தகைய இழிபண்பு மனிதருக்கு இருக்கவே கூடாது.

திருமூலர், புறங்கூறலின் இழிதகவைக் கூறி, அதனைக் கடிய வேண்டுமென்கிறார்.

பிறையுள் கிடந்த முயலை எறிவான்
அறைமணி வாட்கொண் டவர்தமைப் போலக்
கறைமணி கண்டனைக் காண்குற மாட்டார்
நிறையறி வோமென்பர் நெஞ்சிலர் தாமே

(திரு. மந். 2472)

எனவும்,

கருந்தாட் கருடன் விசும்பூ டிறப்பக்
கருந்தாட் கயத்திற் கரும்பாம்பு நீங்கப்
பெருந்தன்மை பேசுதி நீயொழி நெஞ்சே

(திரு. மந். 2473)

எனவும் பாடிப் புறங்கூறலைத் தவிர்க்குமாறு எடுத்துரைக்கின்றார்.

பொறையுடைமை

'பொறுத்தார் பூமியாள்வார்' என்பது நம் நாட்டுப் பழமொழி. 'பொறுத்தார்க்குப் பொன்றும் துணையும் புகழ்' (திரு. கு. 156) என்பது வள்ளுவம். இத்தகைய பொறுமைப் பண்பை (பொறையுடைமையை) வற்புறுத்தும் திருமூலர், பொறுமைப் பண்பை 'மாகமை' (பெரிய பொறுமை) என்று குறிப்பிடுகின்றார். பொறுமைப் பண்பு மனிதருக்கு மிகவும் தேவை என்று கூறவந்த திருமூலர், 'மனிதரை மிகவும் கெடுப்பது பொறாமை என்னும் தீய பண்புதான். அந்தப் பொறாமைப் பண்பு, பெரும்பாலும் உண்பதையும் உடுப்பதையும் காண்பதாலேயே விளைகின்றது. ஆகவே, அப்பொறாமை வித்து, மூக்கையும் நாவையும் பின்னிக் கிடக்கிறது. இவை பற்றாமல் இருக்க வேண்டுமானால் உயிரினும் மேலான பொறுமையைச் சிறப்பாகக் கைக்கொள வேண்டும்' என்று கூறுகிறார். இதனை,

சிந்தையுள் வற்றாது ஒழிவது மாகமை யாமே (திரு. மந். 522)

என்ற பாடலடி விளக்கும்.

மேலும், பொறுமைப் பண்பினை வீட்டிலும் நாட்டிலும் கைக்கொள்ள வேண்டும் என்னும் பொருளில்,

வல்வகை யாலும் மனையிலும் மன்றிலும்
பல்வகை யாலும் பயிற்றிப் பதம்செய்யும் (திரு. மந். 524)

என்று கூறுகிறார்.

அவா அறுத்தல்

அவா அறுத்தல் தலையாய அறம். 'ஆசையே துன்பத்திற்குக் காரணம்' என்பது புத்த பெருமான் வாக்கு. அனைத்துத் துன்பங்களுக்கும் காரணமான அவாவினை (ஆசைப் பெருக்கினை) அகற்ற வேண்டும். 'இறைவனைப் பற்றுவதில்கூட ஆசை கூடாது' என்பது திருமூலர் கருத்தாம். இதனை,

ஆசை யறுமின்கள் ஆசை யறுமின்கள்
ஈசனோ டாயினும் ஆசை யறுமின்கள் (திரு. மந். 2570)

என்று வேண்டுகிறார்.

'ஆசை கொண்டால் துன்பம்; ஆசையை அகற்றினால் இன்பம்' என்பதும் அவர் கருத்து. இதனை,

ஆசை படப்பட ஆய்வருந் துன்பங்கள்
ஆசை விடவிட ஆனந்த மாகுமே (திரு. மந். 2570)

என்று கூறுகின்றார்.

அவாவினைக் கடல் என்று உருவகித்து, மண்ணிலுள்ள மக்கள், அக்கடலுக்குள் அழுந்தித் துன்புறுகின்றனர் என்றும் திருமூலர் கூறுகிறார்.

இதனை,

அவாக்கட லுட்பட்டு அழுந்தினர் மண்ணோர் (திரு. மந். 2572)

என்று கூறுகிறார்.

கூடாவொழுக்கம்

எவை எவை கூடா ஒழுக்கங்கள் என ஆன்றோர் வகுத்துக் காட்டினரோ, அவற்றைப் புறந்தள்ளி வாழ்தலே பெரும்சிறப்பாகும் என்றும் எடுத்துரைக்கின்றார்.

மனிதன் 'புலன் ஐந்தும் பொறிகலங்கி, நெறிமயங்கி' அக்கூடாவொழுக்கங்களால் பாதிக்கப்பட்டுவிடக் கூடாது எனத் திருமூலரும் வலியுறுத்துகின்றார்.

'தாம் செய்யும் கூடா ஒழுக்கங்களை யாரும் அறியமாட்டார்' என்று எண்ணிக்கூட அவற்றைச் செய்யக்கூடாது என்று கூறும் திருமூலர்,

கண்காணி இல்லென்று கள்ளம் பலசெய்வார்

(திரு. மந். 2029)

என்று பாடி அவர்களை ஏளனம் செய்கிறார்.

4. திருமூலர் காட்டும் சமுதாய வாழ்வியல் நெறிகள்

மக்கள் சமுதாயம் வாழ்வாங்கு வாழ, திருமூலர் வகுத்துக்காட்டும் சமுதாய வாழ்வியல் கல்விக் கருத்துகளை இனிக் காண்போம்.

நான்பெற்ற இன்பம் பெறுகஇவ் வையகம் (திரு. மந். 147)

என்று பாடி, இந்த உலகத்தில் திருவருளாலும் குருவருளாலும் பெற்ற ஞானத்தை, அனுபவித்தறிந்த அனுபவ ஞானத்தை, இந்த மானுடம்

பயனுறவாழ, இந்த வையக மாந்தர் வாழ்வாங்கு வாழ, வாரி வழங்கியவர் திருமூலர்.

அந்த அனுபவத்தை முப்பது உபதேசங்களாக, முந்நூறு மந்திரங்களாக, மூவாயிரம் பாடல்களின் வாயிலாக வழங்குகிறார். அவற்றை, அன்னை தமிழ்மொழி வாயிலாக வழங்குவதற்காகவே இறைவன் தம்மை நன்றாகப் படைத்துள்ளான் என்பதை,

என்னைநன் றாக இறைவன் படைத்தனன்
தன்னைநன் றாகத் தமிழ்செய்யு மாறே (திரு. மந். 152)

என்று அவரே, திருவாய் மலர்ந்தருளியுள்ளார்.

சித்த மூலர்களுள் முதலாமவராகவும், முதன்மையானவராகவும் விளங்கக்கூடிய திருமூலர் வழங்கும் வாழ்வியல் நெறிகள், மக்கட் சமுதாயத்திற்கு வழிகாட்டும் ஒளி விளக்குகள்; எக்காலத்திற்கும் பொருந்தும் கருத்துக் கொடைகள்.

திருமந்திர நூலானது பொதுப் பாயிரம், தற்சிறப்புப் பாயிரம் ஆகியவற்றை அடுத்து, ஒன்பது தந்திரங்களாகப் பகுக்கப்பட்டுள்ளது.

இவற்றுள், பொதுப் பாயிரத்தின்கண் சொல்லப்பெற்றுள்ள அந்தணர் ஒழுக்கம், அரசாட்சி முறை, அறம் செய்யான் திறம், அறஞ்செய்வான் திறம் ஆகிய பகுதிகளில் சமுதாயத்திற்கு வேண்டிய நீதிகள் கூறப்பெறுகின்றன.

முதல் தந்திரத்தில் அன்புடைமை, இளமை நிலையாமை, உபதேசம், உயிர் நிலையாமை, கல்லாமையின் குற்றம், கல்வி, கேள்வி, கள்ளுண்ணாமை, கொல்லாமை, செல்வம் நிலையாமை, யாக்கை நிலையாமை, நடுவுநிலைமை, நல்குரவு, பிறன்மனை நயவாமை, புலால்

மறுத்தல், பொதுமகளிர் இழிவு ஆகிய சமுதாயக் கருத்துகள் கூறப்பெறுகின்றன.

இரண்டாம் தந்திரத்தில், சமுதாயத்திற்குப் பெரிதும் தேவைப்படும் கரு உற்பத்தி, ஆண் – பெண் குழந்தைப்பேறு, குறையிலாக் குழந்தைப்பேறு பற்றிய செய்திகள் சிறப்பாகக் கூறப்பெறுகின்றன. மேலும், பெரியாரைத் துணைக்கோடல், பொறையுடைமை, குருநிந்தை செய்யாமை பற்றிய செய்திகளும் இடம் பெற்றுள்ளன.

மூன்றாம் தந்திரத்தில் அட்டாங்க யோகம் மற்றும் கேசரி யோகம், சந்திர யோகம் முதலான யோகங்கள் பற்றித் தெளிவாகக் கூறி, அவற்றைக் கைக்கொள்வதால் மானுட சமுதாயம் அடையும் நன்மைகளையும் கூறுகின்றார். உடலோம்பும் நெறிகளையும் இப்பகுதியில் கூறியுள்ளார்.

ஆறாம் தந்திரத்தில் அருளுடைமை, ஏழாம் தந்திரத்தில் கூடா ஒழுக்கம், எட்டாம் தந்திரத்தில் அவா அறுத்தல், வாய்மையின் சிறப்பு முதலான நீதிகள் கூறப்பெறுகின்றன.

இவ்வாறு திருமந்திரநூல் முழுவதும் சமுதாய வாழ்வியல் நெறிகள் பரவிக் கிடக்கின்றன. இனி ஒவ்வொன்றாகக் காண்போம்.

சமுதாயத்தை வாட்டி வதைக்கும் ஒரு நோய் சாதிக் கொடுமை. ஆதியில் இல்லாமல் பாதியில் வந்து, மக்களிடையே பீதியை ஏற்படுத்தும் இந்த நோயைத் திருமூலர் கடுமையாகச் சாடியுள்ளார்.

திருமூலர் 'ஒன்றே குலமும்' என்ற தொடரால் மக்கள் சமுதாயத்தில் சாதிப் பிரிவுகளுக்கு இடம் இல்லை என்று தெளிவுபடுத்துகின்றார். 'பிறப்பால், இறப்பால், பேசிடும் உணர்வால், ஒத்தோர் தம்முள் பிரிவினை

கூடாது; மனித குலம் ஒன்றே' என்று கூறுவதைத் திருமூலர் சமுதாயத்திற்கு வழங்கிய கொடையாகக் கொள்ளலாம்.

தீண்டாமை

சாதிப் பிரிவுகளின் மிகமிகக் கொடுமை தீண்டாமை. இது புற்றுநோய் போன்று சமுதாயத்தை அரித்துக் கொண்டிருக்கிறது. 'இந்து மதம் என்ற ஒரு குடம் பாலில், தீண்டாமை என்னும் ஒரு துளி விஷம் கலந்து விட்டது' என்ற காந்தியடிகளின் கருத்தும் ஈண்டு சிந்திக்கத் தக்கது.

இந்தத் தீண்டாமையை வேண்டா என்கிறார் திருமூலர். தீண்டாமையை 'ஆசூசம்' என்ற சொல்லால் குறிப்பிடுகிறார்.

ஆசூசம் இல்லை அருநிய மத்தருக்கு
ஆசூசம் இல்லை அரனைஅர்ச் சிப்பவர்க்கு
ஆசூசம் இல்லையாம் அங்கி வளர்ப்போருக்கு
ஆசூசம் இல்லை அருமறை ஞானிக்கே (திரு. மந். 2511)

இப்பாடல் மூலம் 'வேதத்தை உணர்ந்தவர்கள் தீண்டாமையை விரும்பமாட்டார்கள். தத்துவ ஞானத்தால் தம்மை உணர்ந்து இறைவனை வழிபாடு செய்வோர் தீண்டாமையை விரும்பமாட்டார்கள்' என்று கூறுவதன் மூலம், தீண்டாமை கொடியது என்பதைத் திருமூலர் வற்புறுத்துவதை அறியலாம்.

அன்புடைமை

தீண்டாமைக் கொடுமை, சாதிப் பிரிவினைகள் இவையாவும் மறைந்து, மனித நேயத்தை மலரச் செய்வது அன்புடைமை ஆகும். அன்பால் தான் இந்த வையம் செழித்திடும். 'அன்புதான் இன்ப ஊற்று! அன்புதான் உலக மகாசக்தி!' என்பன பௌத்தக் கருத்து.

இறைவன்கூட அன்புக்குத்தான் கட்டுப்படுவான். 'அன்பின் வழியது உயிர்நிலை' (திரு. கு. 80) என்பது வள்ளுவம். அன்பின் சிறப்பையும் தேவையையும் வற்புறுத்தாத புலவர்களும் நூல்களும் இல்லை என்று கூற வேண்டும்.

இத்தகைய அன்புநெறியே சமுதாயத்தை உயர்த்தும். இதைப் பற்றிக் கூறவந்த திருமூலர், 'இறைவனே அன்பு; அன்பே இறைவன்' என்னும் பொருள்பட,

அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார் (திரு. மந். 257)

என்று உரைக்கின்றார்.

அன்புநெறி நிற்பார்க்கே இறைவன் அருள்கிட்டும் என்பதை,

கொழுந்தன்பு செய்தருள் கூரவல் லார்க்கு
மகிழ்ந்தன்பு செய்யும் அருளது வாமே (திரு. மந். 267)

என்றும்,

அன்போ டுருகி அகங்குழை வார்க்கன்றி
என்போல் மணியினை எய்தவொண் ணாதே
(திரு. மந். 259)

என்றும் கூறுகின்றார்.

அன்புடையர் என்பும் உரியர் பிறர்க்கு (திரு. கு. 72)

என்பது திருவள்ளுவர் வாக்கு. 'பிறர்மாட்டு உண்மையான அன்புடையவர்கள், எலும்பு முதலான உறுப்புகளைக்கூட அன்புக்கு ஈடாக அளிப்பர்' என்பது இதன் பொருளாகும்.

திருமூலர், 'அன்பின் வெளிப்பாடாகத் தம் செல்வத்தைப் புண்ணிய வழியில் செலவு செய்க' எனச் சமுதாயத்தை நோக்கி வேண்டுகோள் விடுக்கிறார். இதனை,

வாழ்வும் மனைவியும் மக்கள் உடன்பிறந்
தாரும் அளவே தெமக்கென்பார் ஒண்பொருள்
மேவும் அதனை விரிவுசெய் வார்கட்குக்
கூவும் துணைஒன்று கூடலும் ஆமே (திரு. மந். 218)

என்ற பாடல் விளக்குகிறது.

உயிர்க்கொலை கூடாது

உயிர்க்கொலை புரிபவர் நரகத்திற்குச் சென்று துன்புறுவர் என்பதனை,

கொல்லிடு குத்தென்று கூறிய மாக்களை
வல்லடிக் காரர் வலிக்கயிற்றால் கட்டிச்
செல்லிடு நில்லென்று தீவாய் நரகிடை
நில்லிடும் என்று நிறுத்துவர் தாமே (திரு. மந். 240)

என்ற பாடலில் வலியுறுத்துகின்றார்.

வறுமையின் வாட்டம்

வறுமை என்பது வாட்டம் மிக்கது. 'கொடிது கொடிது வறுமை கொடிது' என்பது ஔவை மூதாட்டியின் வாக்கு. அந்த வறுமை எப்படியெல்லாம் வாட்டும் என்று கூறி, 'பொருள் தேடுக' என்று வேண்டுகோள் விடுப்பார்போல்,

புடைவை கிழிந்தது போயிற்று வாழ்க்கை
அடையப்பட் டார்களும் அன்பிலர் ஆனார்
கொடையில்லை கோள்இல்லை கொண்டாட்டம் இல்லை

நடையில்லை நாட்டில் இயங்குகின் றார்கட்கே

(திரு. மந். 252)

என்று கூறியுள்ளார்.

கள் உண்ணாமை

'நஞ்சுஉண்பார் கள்உண் பவர்' (திரு. கு. 926) என்று நஞ்சோடு ஒருங்கு வைத்து எண்ணி, கள் உண்பதைக் கடிகிறார் திருவள்ளுவர். கள், அறிவை மயக்கி, ஆள்வினையைக் கெடுக்கும்; குடி கெடுத்துக் குலைவினை ஏற்படுத்தும்; விலங்கினும் கீழாக நடக்கச் செய்யும்; நல்லோர் நட்பை இழக்கச் செய்யும். எனவே, பஞ்சமா பாதகங்கள் என்று சொல்லப்படும் கொலை, களவு, பொய், பிறன்மனை விரும்புதல், கள் உண்ணுதல் ஆகிய ஐந்தினையும் கடிந்து வாழ்வதே நெறியான வாழ்க்கை.

திருமூலர், கள் உண்ணக்கூடாது என்பதனை வலியுறுத்துகிறார். இது என்றைக்குமுரிய சமுதாய நீதி. இதனை,

காமத்தோர் காமக்கள் ளுண்டே கலங்குவர் (திரு. மந். 314)

கள்ளுண் ணும் மாந்தர் கருத்தறி யாரே (திரு. மந். 315)

மயங்கும் தியங்கும்கள் வாய்மை அழிக்கும் (திரு. மந். 317)

என்னும் பாடலடிகள் விளக்குகின்றன.

மயக்கும் கள்ளும் மன்னுயிர் கோறலும்
கயக்கறு மாக்கள் கடிந்தனர் (மணி. காதை. 16: 84,85)

என்னும் மணிமேகலையின் கருத்து இங்குச் சிந்திக்கத்தக்கது.

திருக்கோயில் இழிவு

ஆலயம் தொழுவது சாலவும் நன்று (கொ. வே. 2)

கோயில்இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் (உல. நீ. 4.6)

ஆலயம் தானும் அரன் எனத் தொழுமே (சிவ. ஞா. போ. 12)

என்பன போன்ற மொழிகள், திருக்கோயிலின் சிறப்பை நமக்கு உணர்த்துகின்றன. கோயில் ஒரு சமுதாய நிறுவனமும் ஆகும்.

இத்தகைய கோயிலை முறையாகப் பாதுகாக்க வேண்டும். ஆறுகாலப் பூசனைகள் தடையின்றி நடக்க வேண்டும். நித்திய, நைமித்தியங்கள் குறைவற நிகழ வேண்டும். கோயிலுக்கு இழிவு செய்தால் தீங்குகள் பல நேரும். ஆதலின், திருமூலர், திருக்கோயிலுக்குத் தீங்கு செய்தால் வரும் இழிவு பற்றி ஐந்து பாடல்களில் விளக்குகிறார். இக்கருத்துகள் சமுதாயத்திற்குச் சிறந்த படிப்பினையை வழங்கக் கூடியவை. அவற்றை இப்பொழுது காண்போம்.

“கோயிலில் உள்ள அரு உருவத் திருமேனியாகிய லிங்கத்தை எடுத்து வேறோரிடத்தில் வைத்தால், வைப்பதன் முன்னமே அந்த ஆட்சி அழிந்து போகும். எடுத்து வேறோரிடத்தில் வைத்தவன் இறப்பதற்குமுன் தொழுநோயால் பீடிக்கப்படுவான்.

நன்றாகக் கட்டி முடிக்கப்பெற்ற கோயில் மதிலில், ஒரு கல்லைப் பெயர்த்து எடுத்து எறிந்தாலும், அந்தத் தீய செயல், அந்நாட்டு மன்னனையே வீழ்த்தும். கல்லைப் பெயர்த்தவர் வேதம் ஓதுகின்ற வேதியராக இருந்தாலும் அழிவர்.

இறைவன் எழுந்தருளியுள்ள கோயில்களில், வேதங்களிலும் ஆகமங்களிலும் விதிக்கப்பெற்ற முறைமாறி நித்திய, நைமித்திக வழிபாடுகள் நடைபெறுமாயின், நாட்டில் கொடிய பஞ்சம் உண்டாகும்; நோய்கள் பரவும்; மழை குறையும்; அரசரும் போர் செய்யும் ஆற்றலில் குன்றி வலியிழந்து போவார்.

இறைவன் திருக்கோயில்களில் பூசைகள் முறையாக நடக்காது தடைப்படுமாயின், அரசனுக்கு மிகுதியான தீங்குகள் உண்டாகும்; மழை வளம் குறையும்; திருட்டுப் பயம் அதிகரிக்கும்.

சிவ தீட்சை பெறாத, தகுதியற்ற அந்தணன் இறைவனுக்குச் சிவபூசை செய்தால், அவனுக்குத் தீங்கு உண்டாகும்; மன்னனுக்கு வியாதி தோன்றும்; நாட்டில் பஞ்சம் ஏற்பட்டு அனைவரையும் வாட்டும்.

எனவே, நாட்டில் கோயில் வழிபாடு முறையே நடைபெறுவதோடு, கோயிலையும் நல்ல முறையில் பாதுகாக்க வேண்டும்'' என்கிறார். (திரு.மந். 498 முதல் 502 முடிய உள்ள பாடல் கருத்துகள்)

திருக்கோயிலை எந்த வகையிலும் இழிவுபடுத்தக் கூடாது என்ற திருமூலரின் கருத்து இன்றைய சமுதாயத்திற்குப் பெரிதும் உதவக்கூடிய நீதியாகும்.

அடியவர்களை நிந்தனை செய்யாது ஒழுகுதல்

சித்தத்தைச் சிவன்பால் வைத்து, 'சிவாயநம' என்று நாவாரச் சொல்லிக் கொண்டு, நீறணிந்த கோலத்தவராய் விளங்குபவர்கள் சிவனடியார்கள். அவர்கள் இல்லந்தோறும் இரந்துண்டு வாழ்வர். அத்தகைய சிவனடியார்களைத் தெரிந்தோ, தெரியாமலோ இகழ்ந்து பேசக்கூடாது என்றும், அவ்வாறு இகழ்ந்தால் அவர்கள் நரகத்திற்குச் சென்று துன்புறுவர் என்றும் திருமூலர் எச்சரிக்கிறார். இதனை,

ஆண்டான் அடியவர் ஆர்க்கும் விரோதிகள்
ஆண்டான் அடியவர் ஐயமேற்று உண்பவர்
ஆண்டான் அடியாரை வேண்டாது பேசினோர்
தாம்தாம் விழுவது தாழ்நர காகுமே (திரு. மந். 520)

என்ற பாடல் விளக்குகின்றது.

மனிதரை மரணம் நெருங்கும் காலத்தைப் பற்றியும், திருமூலர் எடுத்துக் கூறுவது சமுதாயம் அறிந்துகொள்ள வேண்டிய கருத்தாகும்.

சுவாசம் வலப் பக்க நாசியிலும் இடப் பக்க நாசியிலும் மாறிமாறி வரும். இவ்வாறு மூன்று அல்லது இரண்டு நாள்களில், மாறிமாறி வராமல், தொடர்ந்து வலப் பக்கமாகவே வந்து கொண்டிருந்தால், அவன் ஒன்றிரண்டு ஆண்டுகளில் இறக்க நேரிடும்.

நாசி வழியே சுவாசம் நடைபெறும் முறை மாறி, வாய்வழி வந்தால், மூன்றாம் நாள் இறந்துபடுவான். ஒருவனுடைய உதடு, பல், நாக்கு முதலான உறுப்புகளில் கருமை நிறம் தோன்றினால், அவன் ஆறாம் நாள் இறந்துவிடக் கூடும் என்பது திருமூலர் தரும் கருத்தாம்.

நன்மை தீமைகட்கு நாமே காரணம்

ஒருவர் மேற்கொள்ளும் செயலினால் நன்மை அல்லது வெற்றி ஏற்படுமானால், அதற்குத் தாமே காரணம் எனக்கூறிக் கொள்வர்; தீமை அல்லது தோல்வி ஏற்படுமானால், அதற்குப் பிறர்மேல் பழிபோடுவர். இது உலகத்தோர் இயல்பு. ஆனால், அஃது உண்மையன்று. அவரவர் செயல்களுக்கு அவரவரே காரணமாவர்.

'தமக்கு மருத்துவர் தாம்' என்பது 'பழமொழி நானூறு' தரும் கருத்தாகும்.

'தீதும் நன்றும் பிறர்தர வாரா' (புறம். 192) என்பது புறநானூற்றுப் புலவர் கணியன் பூங்குன்றனார் கருத்தாகும்.

திருமூலரும், 'நன்மை தீமைகட்கு நாமே காரணம்' என்று கூறுகிறார். இது இன்றைய சமுதாயம் அறிந்து கொள்ள வேண்டிய செய்தியாகும். இதனை,

தானே தனக்குப் பகைவனும் நட்டானும்
தானே தனக்கு மறுமையும் இம்மையும்

தானே தான்செய்த வினைப்பயன் துய்ப்பானும்
தானே தனக்குத் தலைவனும் ஆமே (திரு. மந். 2188)

என்ற பாடல் விளக்குகிறது.

"I am the master of my Fate! I am the leader of my Soul!"

(நானே என் விதிக்குத் தலைவன்! நானே என்னுடைய ஆன்மாவுக்கு வழிகாட்டி!) என்ற ஆங்கிலப் பழமொழியும் ஈண்டு சிந்திக்கத்தக்கது.

ஞானிகள் இறந்தால் அவர்தம் உடலை எரிக்கக்கூடாது

'ஞானிகள் இறந்து விட்டால், அவர்கள் உடலை எரிக்கக்கூடாது; சமாதி செய்து அதில் புதைப்பதே புண்ணியம்; எரித்தால் நாட்டில் மழைவளம் குன்றும்; பஞ்சம் வரும்; அரசர்கள் அரசிழந்து வருந்துவர்' என்று திருமூலர் கூறுகிறார். இதனை,

எண்ணிலா ஞானி உடல்எரி தாவிடில்
அண்ணல்தம் கோயில் அழலிட்ட தாங்கொக்கும்
மண்ணில் மழைவிழா; வையகம் பஞ்சமாம்
எண்ணரு மன்னர் இழப்பார் அரசுமே (திரு. மந். 1874)

என்ற பாடல் விளக்குகிறது.

மேலும், சமாதி எழுப்புவதால் ஏற்படும் நன்மைகள், சமாதி செய்யும் இடங்கள், சமாதியை அமைக்கும் முறை, சமாதிக் குழிக்குச் செய்ய வேண்டிய சடங்குகள், படையல், பூசைமுறை ஆகிய அனைத்தையும் திருமூலர் எடுத்துரைக்கின்றார்.

உயிர் உடலில் நீடித்திருக்கும் வழி

உலகிற் பிறந்துள்ளோர் யாவரும் நீண்ட நாள் வாழவே விரும்புவர்; இறப்பைக் கண்டு அஞ்சுவர். ஆயின், நீடுவாழ்தல்வேண்டிச் செய்ய வேண்டுவன பற்றித் திருமூலர் எடுத்துக் கூறுகின்றார்.

'புணர்ச்சியில் அதிக ஈடுபாடு கொள்ளாமல் இருந்தால், உடலுக்கு அழிவு வராது. விரதம் முதலியவற்றால் உடல் இளைத்தால் உயிர் நிலைக்கும். குறைவாக உணவு உட்கொண்டால் உடலில் உயிர் நெடுநாள் தங்கியிருக்கும்' என்று கூறுகின்றார். இதனை,

அண்டம் சுருங்கில் அதற்கோர் அழிவில்லை
பிண்டம் சுருங்கில் பிராணன் நிலைபெறும்
உண்டி சுருங்கில் உபாயம் பலஉள
கண்டம் கறுத்த கபாலியும் ஆமே (திரு. மந். 715)

என்ற பாடல் விளக்குகின்றது.

அன்புடன் இருத்தல், இன்சொற் பேசுதல், வாய்மையுடன் வாழ்தல், பொறையுடையவனாயிருத்தல், நடுவுநிலை பிறழாமல் இருத்தல், பெரியாரைத் துணையாகக் கொண்டு வாழ்தல், புறங்கூறாது தவிர்த்தல், அவா அறுத்து வாழ்தல், கூடா ஒழுக்கங்களைத் தவிர்த்தல், (பொய், கொலை, களவு, கள்ளுண்ணுதல், காமம் முதலான) பஞ்சமா பாதகங்களுக்கு அஞ்சி ஒதுங்குதல், கல்வி கேள்விகளின் சிறப்புணர்ந்து ஏற்றுக் கொள்ளுதல் மற்றும் யாக்கை, இளமை, செல்வம் முதலானவை நிலையற்றவை என்பது உணர்ந்து ஒழுகுதல் முதலான **தனிமனிதனுக்குக் கூறும் நெறிகள், சமுதாயத்திற்கும் பொருந்தும்.**

அரசருக்குரிய அறிவுரை

அரசன் எவ்வழி மக்கள் அவ்வழி. ஆதலால், அரசனுக்குக் கூறப்படுவது சமுதாயத்திற்கும் பொருந்துமாகலின், அரசநீதி சமுதாயக் கருத்தில் இடம் பெறுகிறது. 'குடி உயரக் கோன் உயரும்' என்ற ஔவையார் கருத்தும்,

நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே (புறம். 312)

வேந்தனும் அல்லவை செய்யான் காக்கும் (புறம். 191)

முதலான புறநானூற்றுக் கருத்துகளும், அரசனுக்கும் சமுதாயத்திற்கும் உள்ள தொடர்பினை விளக்குகின்றன. சமுதாயத்தைக் காக்கும் பெரும்பொறுப்பு உடையனவாகிய அரசனுக்கு, எத்தகைய அறவுணர்வுகள் இருக்க வேண்டுமென்பதைத் திருமூலர் விளக்குகிறார்.

'இராசதோடம்' என்னும் திருமந்திரப் பகுதி, அரசனுக்குரியவற்றைக் கூறுகிறது. திருமூலர் அரசனுக்குக் கூறும் நீதிகளை இரண்டாகப் பகுத்துக் கூறலாம். அவை: அரசன் கடைப்பிடிக்க வேண்டிய தனிப்பட்ட நெறிகள்; அரசன் நாட்டுக்குச் செய்ய வேண்டியவை.

அரசன் கடைப்பிடிக்க வேண்டிய தனிப்பட்ட நெறிகள்

'கலையின் குப்பையும் பலமுதல் கேள்வியும் பயனும் எய்தினா'ராக (கம். ரா. மந். பட. 5) இருக்க வேண்டும் என்று கம்பர் கூறுவதுபோல்,

தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும்
நீங்கா நிலனாள் பவற்கு (திரு. கு. 383)

என்று திருவள்ளுவர் கூறுவதுபோல், அரசன் கல்வி கேள்விகளில் சிறந்தவனாக விளங்க வேண்டும் என்பது திருமூலர் கருத்து.

அரசன் கற்க வேண்டுவனவற்றைக் கற்றுப் பின்பற்ற வேண்டிய அறங்களைப் பின்பற்றித் தவறாது ஒழுகிவர வேண்டும். கல்வியால் அறமும் அறத்தால் ஆட்சிச் சிறப்பும் மேலோங்கும். கல்லாத அரசன், உயிரை அழிக்க வரும் காலனோடு ஒருங்கு வைத்து எண்ணப்படுவான். இதனை,

கல்லா அரசனும் காலனும் நேரொப்பர்
கல்லா அரசனின் காலன் மிகநல்லன் (திரு. மந். 95)

என்னும் பாடலடிகள் விளக்கும்.

அரசன் தான் தாங்கி நிற்கும் அரச வேடத்திற்கு இழுக்கு வராது நடத்தல் வேண்டும். நாட்டில் உள்ள போலி வேடதாரிகளை அடையாளம் கண்டு அகற்றிட வேண்டியதும் அரசன் கடமையாகும்.

பசுக்கள், துறவிகள், பெண்டிர், அறவோர் ஆகியோருக்கு எந்தவிதத் துன்பமும் வராமல் காக்கவேண்டியது அரசன் கடமையாகும். அவற்றைச் செய்யத் தவறும் அரசன் நரககதி அடைவான் என்றும் திருமூலர் எச்சரிக்கிறார்.

இம்மையில் செல்வமும் மறுமையில் முத்தியும் வேண்டும் அரசன், எப்பொழுதும் அறநெறிகளையே பின்பற்றி அரசாள வேண்டும்.

கள்ளுண்ணும் பழக்கமுடைய துறவிகளைக் கண்டறிந்து தண்டிக்க வேண்டியது அரசன் கடமை என்றும் திருமூலர் வற்புறுத்துகின்றார். இதனை,

மால்கொண்டு தேறலை உண்ணும் மருளரை
மேல்கொண்டு தண்டம்செய் வேந்தன் கடனே

(திரு. மந். 103)

என்ற பாடலடிகள் விளக்கும்.

மேலும், போலித் துறவிகள், அடுத்த பிறவியில், அவர்களுக்குரிய தண்டனையை அனுபவிப்பர் என்று விட்டுவிடாமல், அவர்களுக்கு இப்பிறவியிலேயே தக்க தண்டனை கொடுத்துத் திருத்த வேண்டியது அரசன் கடமை என்றும் கூறுகிறார்.

இல்வாழ்வானுக்குரிய சிறப்புச் செய்தி

தனிமனிதனுக்குரிய ஒழுக்க நியதிகளையும் சமுதாயத்திற்குரிய அறச் செயல்களையும் வகுத்துரைத்த திருமூலர், இல்வாழ்வானுக்குத் தரும் சிறப்புச் செய்தி மிகவும் போற்றுதற்குரிய ஒன்றாகும். அஃது, இல்வாழ்வான் தன்னுடைய அன்பு மனைவியோடுகூடி, இல்லற இன்பம் துய்த்தாலும் இறைவன்மீது நாட்டம்கொண்டு இறையன்பு செலுத்துவதும் தவறாகாது என்பதாகும். இக்கருத்தை,

கள்ளவர் கோதையர் காமனோ டாடினும்

உள்ளம் பிரியா ஒருவனைக் காணுமே (திரு. மந். 1601)

என்ற பாடலடிகள் விளக்குகின்றன.

இறைவனை அடையும் முறை

இறைவனை வணங்குவதற்கும் அவனுடைய அருள் வேண்டும். இதனை, 'அவன் அருளாலே அவன் தாள் வணங்கி' என்பார் மாணிக்கவாசகர். மேலும், 'அழுதால் உன்னைப் பெறலாமே' என்றும் அவரே கூறுகின்றார்.

திருமூலரும் வழிபாட்டினால் இறைவனை வெளிப்படுத்தலாம் என்பதை,

நின்று தொழுவன் கிடந்தெம் பிரான்தன்னை

என்றும் தொழுவன் எழில்பரஞ் சோதியைத்

துன்று மலர்தூவித் தொழுமின் தொழுந்தோறும்

சென்று வெளிப்படும் தேவர் பிரானே (திரு. மந். 1473)

என்னும் பாடலில் விளக்குகின்றார்.

இப்பாடலின் பொருளாவது 'நான் இறைவன் திருமுன் நின்று வணங்குவேன்; பூமியில் வீழ்ந்து வணங்குவேன். இவ்வாறு அழகிய பேரொளிப் பிழம்பாகிய இறைவனை எப்போதும் எந்த நாளும் வணங்குவேன். ஆகவே நீங்களும் கொத்துக் கொத்தாக மலர்களை அவன் திருவடிகளில் தூவி வணங்குங்கள். அப்படி வணங்க வணங்க அந்தத் தேவாதி தேவன் தானாக நம்மிடம் வந்து, கண்முன் தோன்றி அருள் செய்வான்' என்பதாகும்.

இறைவன் திருவருளைப் பெறுவதற்கான வழிகள்

சத்புத்திர மார்க்கம், தாச மார்க்கம், சக மார்க்கம், சன் மார்க்கம் என்னும் நான்கும் இறைவன் திருவருளைப் பெறுவதற்கான வழிகளாகும். சத்புத்திர மார்க்கமாவது, இறைவனைத் தந்தையாக எண்ணி, ஆன்மா புத்திரனாக அமைந்து வழிபடும் வழியாகும். திருஞானசம்பந்தர் காட்டிய வழி இதுவே! தாச மார்க்கம் என்பது இறைவனைத் தலைவனாகப் பாவித்து, உயிர்கள் பணியாளராக இருந்து வழிபடும் நெறியாகும். இது திருநாவுக்கரசர் காட்டிய வழி! சக மார்க்கம் என்பது இறைவனைத் தன் தோழன் என்று கொண்டு வழிபடும் வழியாகும். இது சுந்தரர் காட்டிய வழி! சன் மார்க்கம் என்பது இறைவனை ஞானாசாரியனாகக் கொண்டு, ஆன்மா சீடனாக இருந்து வழிபடும் வழியாகும். இது மாணிக்கவாசகர் காட்டிய வழி!

சத்புத்திர மார்க்கம் பற்றித் திருமூலர் கூறுவனவற்றைக் கீழ்க்காணும் பாடல் மூலம் அறியலாம்.

பூசித்தல் வாசித்தல் போற்றல் செபித்திடல்
ஆசற்ற நல்தவம் வாய்மை அழுக்கின்மை
நேசித்திட் டன்னமும் நீசுத்தி செய்தல்மற்
றாசற்ற சற்புத் திரமார்க்கம் ஆகுமே (திரு. மந். 1469)

இதன் பொருள், 'இறைவனைப் பூசை செய்தலும், அவனது புகழ்களையே வாசித்தலும், அவனையே போற்றுதலும், செபம் செய்தலும், குற்றமில்லாத நல்ல தவத்தைச் செய்தலும், சத்தியத்தோடு நடத்தலும், பொறாமைக்கு இடம் இல்லாமல் இருத்தலும், அன்பு கொண்டு அன்னப் பறவைபோல ஆன்ம சுத்தி செய்தலும் மற்றும் பலவாகிய குற்றம் அற்ற செயல்களை மேற்கொள்ளுதலும் சத்புத்திர மார்க்கம் ஆகும்' என்பதாம்.

இதே போன்று பிற மார்க்கங்களுக்கும் திருமூலர் கூறும் செய்திகள் சமுதாயத்திற்கு உதவும் இனிய செய்திகளாகும்.

சமுதாயத்தில் காணப்படும் சில நம்பிக்கைகள் பற்றித் திருமூலர் தரும் செய்திகளாவன

ஒரு சமுதாயத்திலுள்ள மக்கள், தம் வாழ்நாளில் உற்ற அனுபவங்களைக் கொண்டு, சில நம்பிக்கைகளைப் பெற்றார்கள். அவற்றைத் தாமும் நம்பினர். பிறரை நம்பச் செய்வதற்கான கதைகளையும் பாடல்களையும் உருவாக்கினர். சடங்குகளையும் சம்பிரதாயங்களையும் நடத்தினர். அவற்றைக் கண்மூடி வழக்கங்கள் எனப் புறம் தள்ளிவிடுதல் பொருத்தமற்றது. ஏனெனில் அவற்றை உணர்ந்தவர்களுக்கே அவற்றின் உண்மை தெரியவரும். 'உணர்ச்சி வாயில் உணர்வோர் வலித்தே' (தொ.கா. 876) என்பது இலக்கணம்.

நல்வினை–தீவினை, சொர்க்கம்–நரகம், சோதிடம் பற்றிய செய்திகளையும் திருமூலர் கூறியுள்ளார். இவை யாவும் நம்பிக்கையின் பாற்பட்டவை.

திருமூலர், எவரெவர் நரகத்திற்குச் செல்வார், எவரெவர் நரகத்திற்குச் செல்ல மாட்டார் என்று வேறுபடுத்திக் கூறுகின்றார். பஞ்சமாபாதகம் செய்தவர்கள்கூட ஞானகுரு, தூய்மையான பெரியார், காமம் முதலான குற்றம் நீங்கிய அறவோர் ஆகியோருக்குத் தானம் கொடுப்பாராயின் பஞ்சமா பாதகத் தண்டனையிலிருந்து விடுபட்டு, நரகத்தில் சென்று துன்பமுறமாட்டார்கள் என்கிறார். இதனை,

ஆமா றறியான் அதிபஞ்ச பாதகன்
தோமாறும் ஈசற்குந் தூய குரவற்குங்
காமாதி விட்டோர்க்குந் தரல்தந்து கற்பிப்போன்
போமா நரகில் புகான்போதங் கற்கவே (திரு. மந். 490)

இன்றைய சமுதாயத்தில் ஓரிடத்திற்குப் பயணம் புறப்படும்போது ஒருநாளுக்கு, ஒரு திசை சூலம் என்று நம்புகின்ற மக்கள் உள்ளனர். சூலம் உள்ள நாள்களில், அந்தத் திசைகளில் பயணத்தைத் தவிர்த்து விடுவார்கள்.

சனி, திங்கள்–கிழக்குத் திசையில் பயணம் கூடாது. செவ்வாய், புதன்–வடதிசையில் பயணம் கூடாது. ஞாயிறு, வெள்ளி–மேற்குத் திசையில் பயணம் கூடாது. வியாழன்–தென்திசையில் பயணம் கூடாது.

இவ்வாறு கூறும் திருமந்திரம், புறப்படும் ஊருக்குப் பின்பக்கமாகவும் இடப் பக்கமாகவும் அமைந்த திசையில் உள்ள ஊருக்குச் சென்றால் நன்மை விளையும் என்றும், முன்பக்கமாகவும் வலப் பக்கமாகவும் உள்ள ஊருக்குச் சென்றால் தீமை விளையும் என்றும் குறிப்பிடுகிறது. (இக்காலச் சமுதாயத்தில் சிலரே வாரசூலம் பார்க்கின்றனர்).

இக்கருத்தைக் கீழ்க்காணும் பாடல்கள் விளக்குகின்றன.

வாரத்தில் சூலம் வரும்வழி கூறுங்கால்
நேர்ஒத்த திங்கள் சனிகிழக் கேஆகும்
பார்ஒத்த சேய்புதன் உத்தரம் பானுநாள்
நேர்ஒத்த வெள்ளி குடக்காக நிற்குமே (திரு. மந். 777)

தெக்கணம் ஆகும் வியாழத்துச் சேர்திசை
அக்கணி சூலமும் ஆம்இடம் பின்ஆகில்
துக்கமும் இல்லை வலமுன்னே தோன்றிடின்
மிக்கது மேல்வினை மேன்மேல் விளையுமே.

(திரு. மந். 778)

திருக்கோயில்களில் ஆறுகாலப் பூசைகளும் செய்ய வேண்டிய முறைகளும்

பண்டைய தமிழர் ஓராண்டை ஆறு பெரும்பொழுதுகளாகவும் ஒருநாளை ஆறு சிறுபொழுதுகளாகவும் பிரித்து வைத்தனர். வைகறை, காலை, நண்பகல், எற்பாடு, மாலை, யாமம் ஆகிய ஆறு பொழுதுகளும் ஒரு நாளின் கூறுபாடுகள் ஆகும். இந்த ஆறுகால வேளைகளிலும் கோயில்களில் பூசை செய்ய வேண்டும். அப்பூசைகளில் மக்களும் சென்று வழிபாடு செய்ய வேண்டும். இது நம் முன்னோர் கண்ட முடிவு.

ஆறுகாலப் பூசைகள் கோயில்களில் நடைபெறவில்லை என்றால், நாட்டுக்கும் மக்களுக்கும் தீங்கு விளையும். இதனை. திருமூலர் கீழ்க் காணும் பாடல் மூலம் தெளிவுபடுத்துகிறார்.

முன்னவ னார்கோயில் பூசைகள் முட்டிடின்
மன்னர்க்குத் தீங்குள வாரி வளம்குன்றும்
கன்னம் களவு மிகுத்திடும் காசினி .... (திரு. மந். 501)

இதன் பொருள், 'முதல்வனாகிய சிவனின் திருக்கோயில்களில் (ஆறுகால) பூசைகளுக்கு இடையூறு ஏதேனும் நேர்ந்தால், நாட்டை ஆள்கின்ற அரசனுக்கும் அரசாங்கத்திற்கும் தீங்கு உண்டாகும்; குளங்களில் நீர் வளம் குறையும்; வருவாய் குன்றும்; கன்னம், களவுமிகும்' என்பதாகும்.

மேலும், திருக்கோயில்களில் சிவபெருமானுக்குப் பூசைகள் செய்பவர்கள் பேரளவில் சிவாச்சாரியார்களாக இருக்கக்கூடாது. ஒழுக்கம், சமய தீட்சை பெற்றவர்களாக இருக்க வேண்டும். அவ்வாறு இல்லையென்றால் பூசை செய்கிறவர்களும் அவர்களை நியமனம் செய்து அவர்களைக் கண்காணிக்காமல் இருக்கின்ற அரசும் தீங்குறுவர் என்று திருமூலர் எச்சரிக்கின்றார். இதனை,

பேர்கொண்ட பார்ப்பான் பிரான்தன்னை அர்ச்சித்தால்
போர்கொண்ட வேந்தர்க்குப் பொல்லா வியாதியாம்
பார்கொண்ட நாட்டுக்குப் பஞ்சமு மாம்என்றே

(திரு. மந். 502)

என்னும் பாடலடிகள் விளக்குகின்றன.

திருமூலர் காட்டும் வழிபாடுகள்

திருமூலர் திருமந்திரத்தில், திருவம்பலச் சக்கர வழிபாடு, உமாகாந்தன் வழிபாடு, இராஜேஸ்வரி வழிபாடு, வயிரவி வழிபாடு, வயிரவச்

சக்கர வழிபாடு, சாம்பவி மண்டலச் சக்கர வழிபாடு, புவனாபதி சக்கர வழிபாடு, நவாக்கரி சக்கர வழிபாடு ஆகிய வழிபாட்டு நெறிகளை வகுத்துக் காட்டுகிறார்.

வையகம் பயனுற வாழ்வதற்கு இத்தகைய வழிபாட்டு முறைகளைப் பின்பற்றி வழிபாடுகளை மேற்கொள்ளலாம். இவை சமுதாயத்திற்குப் பெரும்பயன் நல்கும்.

இறைவனை அடைவதற்குரிய படிநிலைகள்

திருமூலர், இறைவனை அடைவதற்குரியதான பதினெட்டுப் படிநிலைகளை வகுத்துக் கூறுகின்றார். அவையாவன: 1. சுத்த சைவம், 2. அசுத்த சைவம், 3. மார்க்க சைவம், 4. கடுஞ்சுத்த சைவம், 5. சரியை, 6. கிரியை, 7. யோகம், 8. ஞானம், 9. சன்மார்க்கம், 10. சகமார்க்கம், 11. சற்புத்திர மார்க்கம், 12. தாச மார்க்கம், 13. சலோகம், 14. சாமீபம், 15. சாரூபம், 16. சாயுச்சியம், 17. சத்திநிபாதம், 18. ஆநந்தம் ஆகியவை யாகும்.

இதுவரை காட்டிய யாவும் **திருமூலர் காட்டும் சமுதாய வாழ்வியல்** கல்விக் கருத்துகளாகும்.

இன்றைய மக்கட் சமுதாயம் உய்ய, அந்தத் தவசீலர் வழங்கிய வாழ்வியல் கருத்துகள் நினைந்து மகிழத்தக்கவை; உணர்ந்து பின்பற்றத் தக்கவையாகும்.

இயல் - ஏழு

இயல் ஏழு

தொகுப்புரை

வாழ்வியல் கல்வி

உலகத்தில் பிறந்துள்ள உயிர்களுள் மனிதர்கள் மட்டுமே வாழும் உயிர்கள். பிற உயிர்கள் இயங்கும் உயிர்கள்.

மனித வாழ்வு இகவாழ்வு, பரவாழ்வு எனப்படும். இகவாழ்வினை இல்லறவாழ்வு, துறவற வாழ்வு என இருவகைப்படுத்துகிறோம். இல்லற வாழ்வினை அகவாழ்வு, புறவாழ்வு எனவும் பகுத்துக் காண்பது தமிழர் மரபு.

மனித குலம் மட்டுமே வாழ்வாங்கு வாழ்வது. 'வாழ்வாங்கு வாழ்தல்' என்றால் 'நீண்டகாலம் உயிரோடு இருப்பது' என்பதாகாது. 'வாழவேண்டிய முறைப்படி வாழ்வது' என்பது பொருளாகும்.

மனிதர் மட்டுமே முறைப்படி வாழ்வதற்கு உரியவர். இப்படித்தான் வாழவேண்டும் என்ற வரையறை வகுத்துக்கொண்டு வாழவேண்டியவர். அந்த வரையறையை / இலக்கணத்தை / நெறிமுறையை 'வாழ்வியல் நெறி' என்றும் சுட்டுகிறோம். எப்படியும் வாழலாம் என்பது விலங்கு வாழ்க்கை.

சமயப் பனுவல்கள், புராண இலக்கியங்கள், காப்பியங்கள் இன்ன பிற நூல்கள் மனிதகுலத்தை இன்புறுத்துவதோடு வாழ்வியல் நெறிகளை அறிவுறுத்தவும் செய்கின்றன.

இறையுணர்வு, மனிதநேயம், சகிப்புத்தன்மை, ஒருமையுணர்வு, ஒழுக்க வாழ்வு, தன்னலமறுப்பு, பொதுநல வேட்கை, அன்பு நெறி நிற்றல்,

இன்சொல் பகர்தல், உடலையும் உள்ளத்தையும் கெடுத்துக் கொள்ளும் தீய பழக்க வழக்கங்கள் இன்மை, சாதி சமய மொழி இன வேறுபாடுகளின்றி வாழ்தல், எவ்வுயிரையும் தம்முயிர்போல் எண்ணி இரங்குதல், இயன்றவரை ஒருவருக்கொருவர் உதவி செய்தல் மற்றும், சினம், களவு, சூது, ஏமாற்று, காமம் முதலான தீய பண்புகளிலிருந்து விடுபடுதல் போன்ற வாழ்வியல் நெறிகள் மாந்தர் கடைப்பிடித்து ஒழுகத்தக்கவை.

இத்தகு வாழ்வியல் நெறிகளை மனிதரைச் சூழ்ந்துள்ள இயற்கைப் பொருள்கள்கூட எடுத்து இயம்புவதாகக் கொள்ளலாம். சான்றாக, பூமித்தாய் பொறுமையைக் கற்பிக்கிறாள். காற்று, யாவரோடும் கலந்து பழகும் பண்பினைக் கற்பிக்கிறது. நீரானது விடாமுயற்சியைக் கற்பிக்கிறது. நெருப்பானது, தீய எண்ணங்களைச் சுட்டுப் பொசுக்கும் பண்பினைக் கற்பிக்கிறது. இவ்வாறு கூறிக்கொண்டே செல்லலாம்.

இத்தகு வாழ்வியல் நெறிப்படி வாழ்ந்து, பிறருக்கு உணர்த்திய சான்றோர்களும் இவ்வுலகத்தில் உள்ளனர்; வாழ்வியல் நெறிகளைத் தம் படைப்புகள் மூலம் வழங்கியவர்களும் உள்ளனர்.

சமயப் பனுவல்கள் அறவாழ்வினை முறைப்படுத்துகின்றன. இதனைப்பற்றிய, குன்றக்குடி அடிகளாரின் கீழ்க்காணும் கருத்துகள் சிந்திக்கத்தக்கன.

“வாழ்வாங்கு வாழ்வதென்றால் என்ன? முறையாக உண்டு, உடுத்து வாழ்வதா? இல்லை! வாழ்க்கையின் குறிக்கோளை அடைகிற வழியில் பயனுடைய வாழ்க்கை வாழ்தலே வாழ்வாங்கு வாழ்தல். வாழ்க்கையைப் பொருளொடு கூட்டி, அறத்தொடு அணைத்து, இன்பத்தொடு இணைத்துப் பின்னர், விலகி, வீடுபெறும் வழிநின்று வாழ்வதே முறையான வாழ்க்கை என்னும் வாழ்வியல் கோட்பாட்டை வழங்குவன சமயப் பனுவல்கள் ஆகும்”

தொல்காப்பியர், திருவள்ளுவப் பெருந்தகை முதலானோர் வாழ்வியல் நெறிகளை வளம்பட உரைத்துள்ளனர்.

வாழ்வியல் நெறிகளை வடித்தெடுத்து வழங்குபவர்களுள் சித்தர்பெருமக்களும் சிறப்பிடம் பெறுகின்றனர்.

மானுட ஆற்றல் மகத்தான ஆற்றல். அவ்வாற்றலை வளர்த்துக் கொள்வதற்கும் வாழ்வாங்கு வாழ்வதற்கும் வழிவகுக்கும் சித்தர்கள் காட்டும் வாழ்வியலும் சித்தர்களுள் தனிச்சிறப்பு வாய்ந்த திருமூலர் நெறிகளும் இந்த ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

சித்தர்கள் பற்றிய குறிப்பு

பார்வைக்குப் பித்தர்களைப் போலவும் பக்தர்களைப் போலவும் வாழ்ந்து மறைந்த சித்தர்கள் பலரும், வாழ்வியல் நெறிகளை வகுத்துரைத்துள்ளனர்.

இந்த ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட சித்தர்களின் வாழ்க்கை வரலாற்றுக் குறிப்பும் அவர்தம் வாழ்வியல் நெறிகளும் இங்கு வழங்கப்பெறுகின்றது.

சித்தர்களுள், 1. காலாங்கி நாதர் சீனநாட்டவர். இவர் அந்தரத்தில் சஞ்சரிக்கும் ஆற்றல் மிகு உடலைப் பெற்றவர். 2. போகர் தமிழகத்தில் பிறந்து சீனாவுக்குச் சென்றவர். இவரே சித்த மருத்துவத்தின் தந்தை எனப் போற்றப்படுபவர். 3. கொங்கணச் சித்தர் மூலிகைகளில் செம்பு உலோகம் இருப்பதைக் கண்டறிந்து கூறியவர். 4. கருவூர்ச் சித்தர் போகரின் சீடர். வேம்பின் பயனை இவர் பாடல்கள் சிறப்பித்துக் கூறுகின்றன. 5. இடைக்காட்டுச் சித்தர் சோதிட ஆராய்ச்சியில் வல்லவர். இவரும் போகரின் சீடர். இவர் பாடல்கள் சந்தநயம் மிக்கவை. 6. கமலமுனிச் சித்தர். இவர் தமிழ்நாட்டில் பிறந்து சீனாவுக்குச் சென்று வாழ்ந்தவர்.

7. சட்டை முனிச்சித்தர் சிங்கள நாட்டவர். இவர்பாடல்களில் மருத்துவம் மற்றும் வேதியியல் கருத்துகள் மிளிர்கின்றன. 8. பாம்பாட்டிச் சித்தர். இவர் குண்டலினி சக்தியைப் பாம்பாக உருவகம் செய்து பாடியவராதலால் பாம்பாட்டிச் சித்தர் எனப்பட்டவர். 9. பிண்ணாக்கீசர் அத்திமரப் பொந்தில் வசித்தவர். 'முப்பு சூத்திரம் 17' என்பது இவருடைய படைப்புகளுள் சிறந்தது. 10. குதம்பைச் சித்தர். இவர், குதம்பை என்னும் காதணியை இளமைக்காலத்தில் அணிந்திருந்தார். ஆதலால் குதம்பைச் சித்தர் என அழைக்கப்பட்டார். இவர், பெரிய தத்துவங்களை எளிமையாகப் பாடுவதில் வல்லவர். 11. கடுவெளிச் சித்தர், இவர் மனித உடலை மண்தோண்டியாக உருவகித்தவர். ஆன்மா கடைத்தேற வழிபல கூறியவர். 12. அகப்பேய்ச் சித்தர். இவர், மனத்தை அடக்கி ஆள வழி கூறியவர். இவர் பெயரே, 'மனமாகியபேயை வென்று சித்தியடைந்தவர்' என்ற பொருள்தருகிறது.

13. அழுகண் சித்தர் இவர், தம்மையும் ஊரையும் உலகையும் பார்த்து அழுதுகொண்டேயிருப்பார். ஆதலால் அழுகண் / அழுகணிச் சித்தர் எனப்படுகிறார். இவர் பாடல்கள் வேதாந்தப் புலம்பல்களாக உள்ளன. 14. குருராசச் சித்தர். இவர் திருமூலரின் சீடர். இவர், சித்தர்களின் இயல்புக்கு மாறாக எதனையும் மறைமொழி இன்றி வெளிப்படையாகப் பாடுபவர். இவர் திருமூலரின் நூல்களைப் பாதுகாத்தவர் என்பர். 15. புலிப்பாணிச் சித்தர். இவர் போகரின் சீடர். இவர் சோதிடத்திலும் மருத்துவத்திலும் வல்லவர். இவர் பழனிமுருகனின் திருவுருவச் சிலையை நவபாஷானத்தால் செய்ய உதவியவர் என்பர். 16. சிவவாக்கியர். இவர் பிறக்கும்போதே 'சிவசிவ' என ஒலித்துக்கொண்டே பிறந்தவராதலால் இப்பெயர் பெற்றார். அரியும் சிவனும் ஒன்றெனப் பாடியவர். இவர் சிந்தனைப்

புரட்சியாளர். 17. சுப்பிரமணிய சித்தர். இவரை முருகப்பெருமானின் அவதாரமென்பர். இவர் மகப்பேறு பற்றியும் பிறக்கும் குழந்தையின் எதிர்காலம் பற்றியும் கணித்துக் கூறுவதில் வல்லவர். 18. பட்டினத்துச் சித்தர். இவர் வேதாந்தியாக வாழ்ந்தவர். மனப்பிணி மருத்துவர் எனப் போற்றப்பட்டவர். செல்வம், யாக்கை, இளமை ஆகிய நிலையாமைகளைப் பாடித் தெளிவித்தவர்.

இவர்கள் வகுத்துக் காட்டும் வாழ்வியல் கல்வி மனித சமுதாயம் வாழ்வாங்கு வாழ வழிகாட்டுகின்றன.

சித்தர்கள் அனைவரும் மத சமரசத்தையே வலியுறுத்துகின்றார்கள். மூடநம்பிக்கைகளைப் பலமாகச் சாடும் அவர்களிடம் மத வெறுப்போ, அளவு கடந்த மத வெறியோ இல்லை.

மக்கள் அனைவரும் ஒழுக்கம் தவறாமல் வாழவேண்டும் என்பதை வலியுறுத்திப் பாடியிருக்கின்றார்கள். பொய், சூது, கொலை, குடி, பரத்தமை முதலியவற்றைத் தவறெனக் கண்டிக்கிறார்கள். கூடாவொழுக்கம் உடல்நோயை உண்டாக்கும்; நல்வாழ்வுக்கு உலை வைக்கும். கூடா ஒழுக்கத்தைத் தவிர்ப்பவர்களே யோகப் பயிற்சியில் வெற்றிபெற முடியும், உடல் வலிமையுடன் நீண்ட நாள் வாழ முடியும் என்பதை உணர்ந்து, நல்லொழுக்கத்தைப் போற்றுகின்றார்கள். தீயொழுக்கத்தைக் கண்டிக்கின்றார்கள்.

மக்களுக்குள் பேதம் இல்லை. அவர்களுக்குள் சாதி, மத, இன வேற்றுமை உண்டென்று கூறுவது தவறு. மனிதர்கள் எந்த நிறத்தில் இருந்தாலும், எந்த மொழியைப் பேசினாலும், எந்த நாட்டில் இருந்தாலும், அவர்கள் அனைவரும் ஒரே இனம். 'மக்கள் ஒரே இனம் என்பதே

பழந்தமிழர் கோட்பாடு' என்ற பேருண்மையைச் சித்தர் பாடல்கள் உணர்த்துகின்றன.

திருமூலர் வாழ்க்கைக் குறிப்பு

திருமூலர், சித்தர்களுள் முதல்வர்; முதன்மையானவர். அவர் ஒரு நிறைமொழிமாந்தர்.

என்னைநன் றாக இறைவன் படைத்தனன்
தன்னைநன் றாகத் தமிழ்செய்யு மாறே (திரு. மந். 152)

என்று தம்மை நன்றாக இறைவன் படைத்தது, தமிழ் செய்வதற்காகவே எனக் கூறிய முதற்பாவலர் திருமூலர்.

நான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் (திரு. மந். 147)

என்று மொழிந்த சமுதாயப் பெருநோக்குடைய தத்துவஞானி.

ஒன்றே குலமும் ஒருவனே தேவனும் (திரு. மந். 2066)

எனவும்,

அன்பே சிவம் (திரு. மந். 257)

எனவும் முழங்கிய பொதுநோக்குப் பெரும்புலவர்.

சக்கர வர்த்தி தவராச யோகிஎனும்
மிக்கதிரு மூலன்அருள் மேவுநாள் எந்நாளோ

(தாயு. அடியார் வணக்கம். கண்ணி. 7)

எனத் தாயுமானவத் தயாபரர் பாராட்டிய 'தவராச யோகி' திருமூலர்.

மூவாயிரம் ஆண்டுகள் வாழ்ந்து, ஆண்டுக்கு ஒன்றாக மூவாயிரம் பாடல்களைத் திருமந்திர நூலாகத் தந்த அற்புத முனிவர் திருமூலர்.

'நந்தி' என்று சுட்டப்பெறும் சிவபெருமானின் அருள்பெற்ற சிவகணங்களின் ஒப்பாக வைத்துப் போற்றப்பெறுபவர்.

கயிலாயத்தில் நம்பிரான் சுந்தரர் என்ற பெயரோடு விளங்கியவர். பூலோகத்தில் வந்து அகத்தியர்பால் நட்புக் கொண்டவர் திருமூலர்.

இனி, திருமூலர் வரலாறு பற்றிப் பெரியபுராணம் கூறுமாறு காண்போம்.

திருக்கயிலாயத்தில் நந்தியெம் பெருமான் திருவருள் பெற்ற சிவயோகிகளுள் ஒருவர், அணிமா முதலிய அட்டமா சித்திகளில் வல்லவராக இருந்தார். அவர்தம் பெயரைச் 'சுந்தரன்' என்றும், 'சுந்தரநாதன்' என்றும் பின்னுள்ளோர் குறிப்பிட்டுள்ளனர். அவருக்கு அகத்தியருடன் தங்கியிருக்க வேண்டும் என்ற வேட்கை உண்டாயிற்று. திருக்கயிலையிலிருந்து பூவுலகில் உள்ள பொதிகை மலைக்குப் புறப்பட்ட அவர், திருக்கேதாரம் முதலிய பல தலங்களை வணங்கிக்கொண்டு திருவாவடுதுறைக்கு வருகிறார்.

திருவாவடுதுறையிலிருந்து புறப்பட்டபோது, காவிரிக் கரையில் உள்ள ஒரு பசுங்காட்டிலே, பசுக்கள் புலம்பிக் கொண்டிருந்தன. அவைகளை மேய்த்து வந்த 'மூலன்' என்னும் இடையன், இறந்துவிட்டதுதான் அப்பசுக்களின் அழுகைக்குக் காரணம். பசுக்களின் அழுகையானது சிவயோகியாரின் நெஞ்சைக் கரைத்தது. பசுக்களின் துயரை நீக்க வேண்டும் என்ற கருணையால், தமக்குத் தெரிந்த கூடுவிட்டுக் கூடு பாயும் சக்தியால், தம் உடலை ஓரிடத்தில் பாதுகாப்பாக வைத்துவிட்டு, மூலன் உடம்பில் புகுந்து திருமூலராய் எழுந்தார். பசுக்கள் அழுகை தவிர்த்தன.

மாலைப்பொழுது வந்ததும் பசுக்களைச் சாத்தனூரிலுள்ள வீடுகளில் முறையாகச் சேர்ப்பித்தார். மூலன் என்ற இடையனின் மனைவி, மூலன் உடலில் இருந்த சிவயோகியாரைத் தன்னுடைய கணவன் என நினைத்து,

வீட்டுக்கு வருமாறு அழைத்தாள். தமக்கும் அவளுக்கும் எந்தவிதச் சம்பந்தமும் இல்லை என்று உறுதிப்படுத்திய திருமூலர், அன்றிரவு ஒரு பொதுமடத்தில் தங்கினார்.

மறுநாட் காலையில், இடையன் மனைவிக்கும் ஊர் மக்களுக்கும் உண்மையை உணர்த்தி, தாம் பாதுகாப்பாக வைத்துவிட்டு வந்த தம் உடலைத் தேடினார்; அது கிடைக்கவில்லை. 'சிவாகமங்களின் உண்மைப் பொருளைத் தம் வாயிலாகத் தமிழில் வெளியிட வேண்டி, தம்உடலை மறைத்தது சிவபிரான் திருவருள்' என்பதை ஞான உணர்வினால் திருமூலர் தெளியலானார். அதன் பின்னர் திருவாவடுதுறையில் தங்கி, திருமந்திரத்தை அருளினார்; சிவத்தலங்கள் பல கண்டு வழிபட்டு, இறுதியில் சிதம்பரத்தில் சமாதியானார்.

திருமூலர் அருளிய திருமந்திரம், சைவத் திருமுறைகள் பன்னிரண்டனுள், பத்தாம் திருமுறையாக வைத்துப் போற்றப்பெறுகின்றது. திருமந்திரமானது, 'தமிழ் மூவாயிரம்', 'திருமந்திர மாலை', 'தமிழ் மந்திரம்', 'சுந்தர ஆகமம்' என்ற பெயர்களாலும் சுட்டப்பெறுகிறது.

திருமந்திரம் முப்பது உபதேசம், முந்நூறு மந்திரம், மூவாயிரம் தமிழ்ப் பாக்களைக் கொண்டு விளங்குகிறது.

இந்நூல் பாயிரம் என்னும் தனிப் பகுதியையும் முதல் தந்திரம், இரண்டாம் தந்திரம், மூன்றாம் தந்திரம், நான்காம் தந்திரம், ஐந்தாம் தந்திரம், ஆறாம் தந்திரம், ஏழாம் தந்திரம், எட்டாம் தந்திரம், ஒன்பதாம் தந்திரம் என்று ஒன்பது பிரிவுகளையும் கொண்டுள்ளது.

2. ஆய்வின் முக்கியத்துவம்

உலகத்தில் தோன்றிய உயிர்களுள், மக்கள் மட்டுமே வாழும் உயிர்கள்; பிறவெல்லாம் இயங்கும் உயிர்கள். வாழப்பிறந்த மக்கள்,

வாழ்வாங்கு வாழ நெறிகள் பல உள்ளன. அத்தகு நெறிகளையே 'வாழும் நெறிகள்' அல்லது 'வாழ்க்கைக் கல்வி' எனச் சுட்டுகிறோம். இத்தகைய வாழ்க்கைக் கல்வியைச் சான்றோர் பலர் வகுத்துக் காட்டியுள்ளனர்.

வாழ்வியல் நெறிகளை வகுத்துரைத்தோருள் சித்தர்களும் சிறப்பிடம் பெறுகின்றனர். மக்களாகப் பிறந்து, மக்கள் சக்தி மகத்தான சக்தி என மாநிலத்திற்கு அறிவுறுத்தி, மக்களின் மேம்பட்டவர்களாக வாழ்ந்தும் காட்டியவர்கள் சித்தர்கள். இத்தகைய சித்தர்கள் காட்டும் வாழ்வியல் நெறிகள், மக்களாகப் பிறந்த நமக்குப் பேருதவியாக இருக்கும் என்பதாலும் சித்தர்களுள் தனிச்சிறப்பு வாய்ந்த திருமூலர் அருளிய திருமந்திரத்தில் வாழ்வியல் நெறிகள் வளமாகக் கூறப்பெற்றிருப்பதாலும், அவற்றை, மக்கள் உணர்ந்து பின்பற்றவேண்டும் என்ற மகத்தான குறிக்கோளின் அடிப்படையில், 'சித்தர்கள் காட்டும் வாழ்வியல் கல்வி திருமூலர் ஒரு சிறப்பு நோக்கு' என்னும் தலைப்பில் ஆய்வு மேற்கொள்ளப் பெறுகிறது

இன்றைய தனிமனிதரும் சமுதாயமும் வாழ்க்கைப் போராட்டத்தில் சிக்கித் தவிக்கின்றனர். பொருள் தேடும் வேட்கையில் அறவுணர்வுகளைக் கைவிட்டுப் போட்டிகளால், பொறாமைகொண்டு, பொய்யும் ஏமாற்றும் மலிவாகப் பொங்கிப்பெருகும் சூழல் உள்ளது; பொது நலம் புறக்கணிக்கப்பட்டு, தன்னலம் தலைதூக்கி உள்ளது. அறச் செயல்களைக்கூட வணிக நோக்கில் காணும் அறவிலை வணிகர்கள் பெருகியுள்ளனர். உடல் நலத்தையும் உள நலத்தையும் கெடுத்துக் கொள்ளும் சிந்தனை, சொல், செயல் வெளிப்படும் சமூகச் சூழல் பெருகி உள்ளன.

பல தெய்வ வழிபாடு செய்தல், அதனால் பகையை வளர்த்துக் கொள்ளுதல், மூட நம்பிக்கைகளைக் கைக்கொள்ளுதல், போலிச்

சடங்குகள்பால் பற்றுக்கொள்ளுதல், தெய்வத்தின் பெயரால் உயிர்ப் பலியிடுதல், ஆடம்பரமாகப் பூசைகளையும் விழாக்களையும் மேற்கொள்ளுதல், சமயத்தின் பெயரால் சமுதாயக் கட்டுப்பாடுகளை ஏற்படுத்துதல், மக்களின் அறியாமையைப் பயன்படுத்திப் போலித்தனமான சின்னங்களையும் வேடங்களையும் காட்டி மயக்குதல், உருவ வழிபாடு மற்றும் பொருந்தாத விரதங்கள், பொய்யான சோதிடங்கள் முதலானவற்றை ஏற்றுப் பேணுதல், ஆன்மிக வழி நின்று அருளைப் பெருக்குவதற்குப் பதிலாகப் பொருள்தேடும் புன்மைப் போக்குகள் தலைதூக்க ஆரம்பித்துள்ளன.

மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை முதலான பல ஆசைகளுக்கு ஆட்பட்டுத் துன்புறுதல்; புகை, கஞ்சா, மது போன்ற தீய பழக்கங்களை மேற்கொண்டு உடல்நலத்தைக் கெடுத்துக் கொள்ளுதல்; அருந்துதலிலும் பொருந்துதலிலும் அளவுக்கு அதிகமாக ஈடுபட்டு நோய் நொடிகளைத் தேடிக் கொள்ளுதல்; நோய் வந்துற்றபின் போலியான மருத்துவர்களை நம்பிக் கவர்ச்சியான மருந்துகளைப் போற்றி இறப்பைத் தழுவுதல்; பொய், களவு, வஞ்சம், ஏமாற்று, அடுத்துக்கெடுத்தல், புறங்கூறல், பிறன்மனை இச்சை, பொருந்தாக் காமம் முதலான தனிமனித ஒழுக்கக் கேடுகளால் மனித மாண்பைத் தாழ்வுறச் செய்தல்; தன்னல விழைவு காரணமாகப் பொதுநலம் பேணாமை; மனித நேயத்தை வளர்க்காமை; மொழி, இனம், சாதி, செய்தொழில், சமயம் காரணமாகத் தனிமனித வேற்றுமைகளை வளர்த்துக் கொள்ளுதல்; அதனால் போரும் பூசலும் மேற்கொள்ளுதல், இன்னபிற குறைபாடுகளால் தனிமனித வாழ்க்கை தடுமாறிக் கொண்டிருக்கிறது.

தனிமனிதர் பலர் சேர்ந்ததுதான் ஒரு குடும்பம். பல குடும்பத்தின் கூட்டமைப்புதான் ஒரு சமுதாயம். எனவே, தனிமனிதரின் நடத்தைக் கோலங்கள், சமுதாயத்திற்கும் பொருந்தும். ஆயினும் ஒரு தவறான பழக்கமோ அல்லது நம்பிக்கையோ ஒரு சமுதாயத்தின் வலிமையால்

நடைமுறைப்படுத்தப்பட்டு, அதுவே வழக்கமாகவும் மரபாகவும் மாறிவிடும். அத்தகைய சமுதாயச் சீர்கேடுகள் பல இன்று நிலவி வருகின்றன. அவை, தெய்வம் பலப்பல சொல்லிப் பகைத் தீயை வளர்த்தல், சமயங்கள் கூறுகின்ற உண்மையான தத்துவங்களை அறியாமலிருத்தல், சடங்குகளும் சம்பிரதாயங்களுமே சமயநெறி எனப் போற்றுதல், மதத் தலைவர்களின் பெயராலும் வழிபாட்டுத் தலங்களின் பெயராலும் சமயச் சின்னங்களின் பெயராலும் பிணக்குகளை ஏற்படுத்திக் கொண்டு போராடுதல், சமயங்களின் பெயரால் ஆடம்பரமான விழாக்கள், விருந்துகள், கேளிக்கை நிகழ்ச்சிகள் ஆகியவற்றை நிகழ்த்துதல், அவற்றையும் பொருளீட்டும் ஒரு வணிக வாய்ப்பாகக் கருதிச் செயல்படுதல், நவீனம் என்ற பெயரில் உணவு நெறி, உடலோம்பும் நெறி, விருந்தோம்பும் பண்பு, சுற்றம் தழுவுதல், சகிப்புத்தன்மை முதலான நம் பாரம்பரியப் பண்பாட்டிற்கே உலைவைத்தல், கொல்லா நெறியும் பொய் சொல்லா நெறியும் மனித சமுதாயத்திற்கு மட்டுமே உரியன என்பதை மறந்து மயங்குதல், வாய்மையும் தூய்மையும் கொண்ட தொண்டு நெறியே தூயநெறி என்னும் மெய்ம்மையைப் புறந்தள்ளிப் பொதுத்தொண்டு என்ற பெயரில் தமது ஆசாபாசங்களுக்கு வழி வகுத்துக் கொள்ளுதல், நீதி, நேர்மை, நியாயம் போன்ற அறவுணர்வுகளுக்கு உரிய மாண்பினை நிலைகுலையச் செய்தல், ஆணாதிக்க உணர்வால் பெண்ணடிமை பேணல் முதலானவை சமுதாய வாழ்க்கைப் பிறழ்வுகளாகப் பெருகிக்கிடக்கின்றன.

இத்தகைய வாழ்க்கை நெறிப் பிறழ்வுகள் இல்லாமல், வாழ வேண்டிய முறைப்படி வாழ்ந்து வளம் பல பெற்றி , வாழ்க்கைக் கல்வியைப் புகட்டும் இலக்கியங்கள் பல தமிழ்மொழியில் உள்ளன. அவற்றுள்

சித்தர்களும் சித்தர்களுள் முதன்மையானவருமான திருமூலரும் வழங்கியுள்ள வாழ்வியல் கல்விக் கருத்துகள் வருங்காலச் சமுதாயத்திற்கு வழிகாட்டுகின்றன. ஆதலின், 'சித்தர்கள் காட்டும் வாழ்வியல் கல்வி திருமூலர் ஒரு சிறப்பு நோக்கு' என்னும் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

3. ஆய்வின் நோக்கங்கள்

அ. பொதுநோக்கங்கள்

1. சாதி வெறி, சமய வெறி, இன வெறி, மொழி வெறிகளினால் இவ்வுலகில் ஏற்படும் பூசல்கள் நீங்கி ஒருமையுணர்வு தோன்ற, சித்தர்கள் கூறுவனவற்றை விளக்குதல்.

2. 'மக்களிடையே பிரிவினை பேசுதல், உண்மைக்கும் இயற்கைக்கும் மாறானது' என்ற சித்தர்கள் தத்துவம் நன்மை பயக்கும் என எடுத்துக் காட்டுதல்.

3. மதவெறுப்போ, அளவு கடந்த மதவெறியோ இல்லாது, மத சமரசத்தையே வலியுறுத்தும் சித்தர்கள் கோட்பாடு, இன்றைய உலகிற்குப் பெரிதும் தேவை என்பதை விளக்குதல்.

4. 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்', 'மனிதகுலம் மனித இனம் ஒன்றே' என்னும் உயரிய கோட்பாடுகள், உலகில் தழைக்கச் சித்தர்கள் காட்டும் வாழ்வியற் கல்வி, இளைய தலைமுறைக்குப் பெரிதும் தேவை என்பதை வலியுறுத்தல்.

5. இக்கால மனிதன் தன்னைப் பண்படுத்திக் கொள்ளப் பெரிதும் துணை செய்வன சித்தர் கல்விமுறைகள் என்பதனை இளந்தலை முறையினருக்கு எடுத்துக்காட்டுதல்.

6. உடம்பை வளர்க்கும் உபாயங்களைச் சித்தர் கல்வி கூறுமாறு விளக்குதல்.

7. வடமொழி–தென்மொழிச் சண்டையை நீக்கச் சித்தர் கல்வி உதவும் என்பதை உணர்த்துதல்.

8. இன்றைய மனிதகுலம் மாண்புற்றுத் திகழப் பெரிதும் துணை செய்வன சித்தர் கல்வி என்பதை எடுத்துக் காட்டுதல்.

9. உடலைக் காத்து உயிரை வளர்க்கும் உபாயங்களை அறிய சித்தர் கல்வி உதவும் என்பதை உணர்த்துதல்.

10. சித்தர்கள் மக்களாய்ப் பிறந்து, மனித நிலையிலிருந்தும் மேம்பட்டவர்கள் என்பதைத் தெரிவித்தல்.

11. சித்தர்கள் மருத்துவ அறிஞர்களாகவும் ஆன்மிகப் புரட்சியாளர்களாகவும் சமுதாயச் சீர்திருத்தவாதிகளாகவும் விளங்கியவர்கள் என்பதை எடுத்துக் காட்டுதல்.

12. பொய், சூது, குடி, கொலை, பரத்தமை முதலான தீய ஒழுக்கங்களை விடுத்து நல்லொழுக்கம் பேணவேண்டுமெனக் குரல் கொடுத்த சித்தர் நெறியை விளக்குதல்.

13. சித்தர்கள் கொள்கைகளும் தத்துவங்களும் நாட்டில் பரவினால் மக்களுக்குள் அன்பும் ஒற்றுமையும் ஓங்கும் என வலியுறுத்தல்.

14. சித்தர்கள் மனித ஆற்றலின் மகத்துவத்தை, மன்பதைக்கு உணர்த்தியவர்கள் என்பதை விளக்குதல்.

15. மனிதனின் அடுத்த பரிணாம வளர்ச்சியைக் கண்டவர்கள் சித்தர்கள் என்பதை எடுத்துக் காட்டுதல்.

16. ஓர் இனம், ஒரு மொழி, ஒரு மதம், ஒரு நாடு என்ற குறுகிய கண்ணோட்டமின்றி, மனிதகுலம் முழுமைக்கும் நன்மை தரும் கருத்துகளைத் தந்தவர்கள் சித்தர்கள் என்பதை விளக்குதல்.

17. சித்தர்கள் தாம் அறிந்திருந்த சாகாக் கலை, உடல் அழியாநிலை,

அண்ட வெளியில் சஞ்சரித்தல், இருந்த இடத்திலிருந்தே உலகத்தின் எந்த மூலையில் எது நடந்தாலும் அறிந்து கொள்ளும் ஆற்றல் முதலான சித்த ஆற்றல்களையும் அவற்றுக்கான பயிற்சிகளையும் இக்கால இளம் தலைமுறையினருக்கு விளக்குதல்.

18. உடலையும் உள்ளத்தையும் பேணும் நெறிகளுள் சுயகட்டுப்பாடே சிறந்த நெறி என்னும் சித்தர்கள் கல்வியை யாவருக்கும் எடுத்துக் காட்டுதல்.

19. சித்தர்கள் பின்பற்றிய உடலோம்பும் முறைகளைக் கையாண்டால், உடலை வச்சிரம்போல் ஆக்கிக்கொள்ளலாம் என்பதை உணர்த்துதல்.

20. இந்திய நாடு பல்வகை மரபினரையும் இனத்தவரையும், மதத்தவரையும் மொழியினரையும் கொண்ட நாடு. எனினும் வேற்றுமையில் ஒற்றுமை என்னும் ஒருமைப்பாட்டு உணர்வோடு ஒன்றுபட்டு நிற்கின்றது. இதுபோன்ற நாடுகளில் சமய ஒற்றுமை, வகுப்பு ஒற்றுமை, இன ஒற்றுமை, மொழி ஒற்றுமை போன்றவை மிகவும் இன்றியமையாதவை யாகின்றன. இந்நிலையில் சித்தர்கள் காட்டும் நெறிகள், எவ்வாறெல்லாம் உதவியாக இருக்க முடியும் என்பதை ஆய்ந்து அறிவுறுத்துதல்.

ஆ. சிறப்பு நோக்கங்கள்

1. சித்தர்களுள் முதலாமவரும் முதன்மையானவரும் திருமூலர் ஆவார். ஆதலின் திருமூலர் காட்டும் வாழ்வியல் கல்வி சிறப்புடையது என விளக்குதல்.

2. திருமூலர், இல்வாழ்வில் கொள்ளத்தக்க நெறிகளையும், தள்ளத்தக்க செயல்களையும் எடுத்துக் கூறுவதால், அவருடைய நெறிகள் சிறப்புடையன என எடுத்துக் காட்டுதல்.

3. இல்லற மேன்மையோடு, துறவறச் சிறப்பையும் திருமூலர்

எடுத்துரைப்பதால், அக்கருத்துகளைச் சிறப்பாக எடுத்துரைத்தல்.

4. உலக இயக்கமும் மனித வாழ்க்கையும் ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்துள்ள தன்மைகளை, திருமந்திரம் கூறுகிறது என்பதை விளக்குதல்.

5. பக்தர்கள், ஞானிகள், அரசர்கள், அந்தணர்கள், வணிகர்கள், வேளாளர்கள், ஆத்திகர், நாத்திகர் முதலான பல திறப்பட்டவருக்கும் நல்வழி காட்டுவதால், திருமந்திரம் காட்டும் வாழ்வியல் கல்வி சிறப்புப் பெறுகிறது என விளக்குதல்.

6. 'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்', 'நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்', 'அன்பே சிவம்', 'நடமாடும் கோயில்களான மக்களுக்குச் செய்யும் தொண்டே படமாடும் கோயிலான பரமனுக்கு உவப்பாகும்' என்பன போன்ற உலகப் பொதுநோக்குச் சிந்தனைகளைத் தந்தவர் திருமூலர் என்பதைப் பறைசாற்றுதல்.

7. படைப்பின் நோக்கம் பிறருக்கு உதவுதல், எளிய அறச் செயல்களை மேற்கொள்ளுதல் முதலான மனித நேயக் கருத்துகளைத் திருமூலர் வலியுறுத்துகிறார் என்பதை உணர்த்துதல்.

8. கொல்லாமை, புலால் மறுத்தல், அவா அறுத்தல், புறங்கூறாமை, வாய்மை பேணுதல் முதலான அறவுணர்வுகளைத் திருமூலர் கூறுமாறு விளக்குதல்.

9. இல்லறத்தான் விலக்குவதற்குரிய பரத்தையர் தொடர்பு, பிறன்மனை நயத்தல் ஆகியவற்றைத் திருமூலர் எவ்வாறு கண்டிக்கிறார் என்பதை யாவர்க்கும் விளங்கவைத்தல்.

10. 'அகத்தவம்' எனப் போற்றப்படும் அட்டாங்க யோகங்களையும் அவற்றின் பயன்கள் மற்றும் செய்முறைகள் ஆகியவற்றையும், முதன்

முதலாகவும் சிறப்பாகவும் செந்தமிழில் கூறியவர் திருமூலர் என்பதைப் பறைசாற்றுதல்.

11. கேசரி யோகம், பரியங்க யோகம், அமுரிதாரணை, சந்திர யோகம், மந்திர யோகம் ஆகிய யோகங்கள் குறித்துத் திருமூலர் விளக்குமாறு எடுத்துரைத்தல்.

12. அட்டமா சித்திகள் பற்றியும் அவற்றை அடையும் மார்க்கங்கள் பற்றியும் திருமூலர் தருவனவற்றை இக்காலத்தவருக்கு எடுத்துக் கூறுதல்.

13. பிரம்மச்சரியம், கிரஹஸ்தம், வானப் பிரஸ்தம், துறவறம் என எந்நிலையில் இருப்போர்க்கும் ஏற்ற கருத்துகளைத் திருமூலர் கூறுமாறு எடுத்துரைத்தல்.

14. 'பிறவிக் கடலைக் கடக்க உதவிடும் பெருந்தெப்பம் திருமந்திரம்' என்பதை விளக்குதல்.

15. ஔவையாரின் கருத்தாகிய, 'திருக்குறள், நான்மறை, மூவர் தேவாரம், அகத்தியர் திரட்டு, மாணிக்கவாசகரின் திருக்கோவையார், திருவாசகம் ஆகியவற்றோடு ஒத்த சிறப்புடையது திருமந்திரம்' என்பதை மெய்ப்பித்தல்.

16. திருமந்திரம் வாழ்வியல் நூலாக மட்டுமல்லாமல் சிவமாய், சிவகதிக்கு வித்துமாய், அடியார்களுக்கு மேம்பட்ட பொருளுமாய் விளங்குகிறது என்பதை மெய்ப்பித்தல்.

17. இறைக்கோட்பாடு, உடலும் உடலோம்பலும், தனிமனித ஒழுகலாறுகள், சமுதாய ஒழுகலாறுகள் ஆகியவற்றைத் திருமூலர் கூறும் முறையில் விளக்குதல்.

18. திருமூலர் காட்டும் வாழ்வியல் கல்வியை, இக்கால இளையோர் அறிந்து பின்பற்ற வேண்டும் என்பதை வலியுறுத்தல்.

இத்தகைய சிறப்பு நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டும் இந்த ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது.

4. ஆய்வு முறை

இந்த ஆய்வு, வரலாற்று அடிப்படையில் சித்தர்கள் வரலாறு மற்றும் சித்தர் பாடல்களையும், குறிப்பாக, திருமூலர் பற்றியும் கிடைக்கப்பெற்றுள்ள பிரதிகளையும் படைப்புகளுக்கான உரை விளக்கங்களையும் துணையாகக் கொண்டு மேற்கொள்ளப்பெற்றுள்ளது.

5. ஆய்வு முடிவுகள்

ஒன்றே குலமும் ஒருவனே தேவனும் (திரு. மந். 2066)

சாதிகுலம் எங்கட் கில்லை (காக. பு. 66)

சாதியாவது ஏதடா? (சிவ. வா. 68)

ஆண்சாதி பெண்சாதி யாரும் இருசாதி
வீண்சாதி மற்றவெல்லாம் (குத. சி.137)

எனப் பலவாறு முழங்கியதன் மூலம் சமயவெறி, சாதிவெறி, இனவெறி முதலான ஒருமைப்பாட்டுக்கு உலை வைக்கும் கருத்துகளுக்குச் சித்தர்கள் முடிவுகட்டி இருக்கிறார்கள் என்பதை அறிகிறோம்.

நட்டகல்லும் பேசுமோ நாதன் உள்ளிருக்கையில்
(சிவ. வா. 496)

உளியிட்ட கற்சிலையில் உண்டோ உணர்ச்சி (பா. பா. சி. 92)

என்பன போன்ற கருத்துகளால் உருவ வழிபாட்டை வெறுத்தவர்கள் சித்தர்கள் என்பதை உணருகிறோம்.

கோபம், பொறாமை, கொடுஞ்சொல் வன்கோள்இவை
பாபத்துக் கேதுவடி (குத. சி. 87)

கள்ளங்கள் காமங்கள் கொலைகள் கபடங்கள்

பள்ளத்தில் தள்ளுமடி (குத. சி. 87)

சொல்லரும் சூதுபொய் மோசம் – செய்தால்
சுற்றத்தை முற்றாய்த் துடைத்திடும் நாசம் (கடு. சி. 2)

என்று கூறும் கருத்துகளால், மனித குலத்துக்குப் பெரிதும் தேவை இத்தகைய வாழ்வியல் நெறிகள் என்பதை உணர முடிகிறது.

கஞ்சா புகைகுடி யாதே – வெறி
காட்டி மயங்கியே கள்குடியாதே (கடு. சி. 29)

என்று கூறும் சித்தர் பாடல் மூலம், இக்கால இளந்தலைமுறையினர் தம்மைப் பண்படுத்திக் கொள்ள, சித்தர்கள் காட்டும் வாழ்வியல் கல்வி தேவை என்பதைக் காணமுடிகின்றது.

கொல்லா விரதம், குளிர்பசி நீக்குதல்
நல்ல விரதமடி (குத. சி. 128)

என்று கூறுவதன் மூலம், உண்மையான நோன்புக்கு இலக்கணம் என்ன என்பதை, இக்கால எக்குலத்தோரும் அறிந்துகொள்ள வாய்ப்பளிக்கிறது.

..... வேதபுரா ணங்காவ் யங்கள்,
மந்திரங்கள் கோடானு கோடி என்றும்
சொல்லுவார் கோவிலென்றும் தீர்த்தமென்றும்
திருடர்கள்தான் அலைந்தலைந்து திரிவார்

(காக. பு. 22)

என்று பாடி, புராணம், கோவில், தீர்த்தம், மந்திரம் ஆகியவற்றைச் சாடுவதன் மூலம், சித்தர்களின் பகுத்தறிவுக் கொள்கை வெளிப்படுகிறது.

'வேதியியலின் தந்தை' என்று சொல்லிப் பாராட்டும் அளவுக்குப் பெருமைபெற்ற போகர், மனிதனுடைய உடம்பிலுள்ள இரத்த அணுக்கள்,

தசைஅணுக்கள், எலும்பணுக்கள், நரம்பணுக்கள் எல்லாம் முதிர்ச்சியடையாமல் இருப்பதற்கான வழிகளைக் கண்டறிந்து கூறியுள்ளார் என்பதை இக்காலத்தோர் அறியமுடிகிறது.

'துத்தநாகத்தை ஈயமாக்கவும், ஈயத்தை வெள்ளியாக்கவும், வெள்ளியைச் செம்பாக்கவும், செம்பைத் தங்கமாக்கவும் செடி கொடிகளின் சத்தால் முடியும்' என்று சித்தர்கள் கூறுவது, இக்கால வேதியியலாளர்களின் கவனத்தை ஈர்க்க வல்லவை!'

சித்தராகிய கொங்கணவர் 'செங்கீரை, அவுரி, ஓரிதழ்த் தாமரை, சிறுகீரை முதலான பதினைந்து மூலிகைகளில் செம்பு இருக்கிறது' என்று கண்டு சொன்னவர் என்பதை அறியமுடிகிறது.

இக்கால வல்லரசுகள், காப்புரிமை கொள்ளத் துடிக்கும் வேம்பின் பயனை நூற்றுக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே உலகத்துக்குச் சொன்னவர் சித்தர் கருவூரார் ஆவார். 'வேம்பின் கொழுந்தைக் கிள்ளி, இருபத்தேழு நாள்கள் உண்டு வந்தால், உண்டவரைப் பாம்பு கடித்தால் விஷம் ஏறாது. ஒரு மாதம் தின்றுவந்தால் குஷ்டநோய்கூடப் பறந்தோடி விடும்' என்ற மருத்துவக் குறிப்புகள், சித்தர்கள் தரும் முத்தான கருத்துகளாகும் என்பதை உணருகிறோம்.

நாட்டில் பஞ்சம் வந்தால், ஆடு மாடு போன்ற விலங்கினங்களும் மக்களும் எப்படி உயிர் வாழலாம் என்பதைச் செய்முறைப்படுத்திக் காட்டியவர் இடைக்காடர் என்னும் சித்தராவார் என்பதை அறிய முடிகிறது.

எட்டி பழுத்தாலும் என்ன – காசு
ஈயாத லோபிகள் வாழ்ந்தாலும் என்ன

(கல். சி. 138)

என்பன போன்ற சித்தர் பாடல்களால் 'பிறருக்கு ஈந்து உவப்புக்கொள்ளாத கருமிகள் வாழ்ந்தாலும் பயனில்லை, இறந்தாலும் இழப்பு இல்லை' என்பன போன்ற வாழ்வியல் நெறிகளை உணருகிறோம்.

நெஞ்சு மலையாதே – அகப்பேய்
நீஒன்றும் சொல்லாதே (அக. சி. 1)

என்று பாடி 'மனஅடக்கமே துன்பம் போக்கும் உயரிய நெறி' என்பன போன்ற வாழ்வியல் கருத்துகள் சித்தர்களால் வெளிப்படுத்தப்படுகின்றன என்பதை உணர்ந்து கொள்கிறோம்.

சுந்தரானந்தச் சித்தர் என்பவர், மக்கள் பலரால் விரும்பப்படுகின்ற ஜாதகப் பலன்கள், இன்ன மாதம், இன்ன நாளில் பிறக்கும் குழந்தையின் சிறப்பியல்புகள் ஆகியவற்றைக் கூறுவதோடு, தென்னை, மா, பலா, வாழை, அவரை, துவரை, நெல், கரும்பு போன்ற பயிர்வகைகளைப் பயிர் செய்வதற்கான நாள் விவரங்களையும் மனையடி சாத்திரத்தையும் விளங்கக் கூறி, இக்கால மக்களின் வாழ்க்கை மேம்பாட்டிற்கு அன்றைக்கே வித்திட்டுள்ளார் என்பதை அறிகிறோம்.

'சட்டைமுனிச் சித்தர்' படைத்த நூல்கள், அவருடைய மனிதாபிமானத்தை வெளிப்படுத்துவனவாக உள்ளன. மனித குலம் மேம்பாடு அடைய வேண்டும் என்பதை நோக்கமாகக் கொண்ட அவருடைய நூல்களுள் 'சட்டைமுனி வாத காவியம்' என்பது, வேதியியல் அற்புதங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது. மருந்தை அரைப்பது, குகைகள் செய்து புடம்போடுவது, அளவற்ற ஆற்றலை உடைய ரச மணிகளை உருவாக்குவது, பல்வேறு சித்த மருந்துகளைச் செய்வது ஆகியவற்றையெல்லாம் சட்டைமுனிச் சித்தர், தம்முடைய நூல்களில் ஆழமாகவும் அகலமாகவும் கூறியுள்ளார் என்பதை உணருகிறோம்.

சித்தர்களுள் முதலாமவரும் முதன்மையானவருமான திருமூலர், 'அன்புதான் கடவுள்' என்பதை அகிலத்துக்கு உணர்த்தியவர் என்பதை அறிகிறோம்.

'நடமாடும் கோயிலாகிய மக்களுக்குச் செய்யும் தொண்டுதான் இறைவனுக்கு உவப்பைத் தரும்' என்னும் உயர்ந்த தத்துவத்தை உலகத்துக்கு எடுத்துரைத்தவர் திருமூலர் என்பதை உணருகிறோம்.

தெய்வம் பல என்று சொல்லிப் பகைத் தீயை வளர்ப்போருக்குக் கூறுவதுபோல் 'ஒருவனே தேவன்' என்று உரத்த குரலில் எடுத்து முழங்கியவர் திருமூலர் என்பதை விளங்கிக்கொள்ள முடிகிறது.

'உயிர் நிலைக்க உடம்பு வலுவோடும் பொலிவோடும் திகழ வேண்டும். அத்தகைய உடம்பில்தான் உண்மையான அறிவும் தோன்றும்' என்பதை உணர்ந்து, உடம்பை வளர்க்கும் உபாயங்களை உரைத்தவர் திருமூலர், என்பதை விளங்கிக்கொள்கிறோம்.

அட்டாங்க யோகம் என்னும் மிகச்சிறந்த யோகங்கள், அவற்றைச் செய்யும் முறைகள், அவற்றின் பயன்கள் ஆகியவற்றோடு கேசரி யோகம், பரியங்க யோகம், அமுரிதாரணை, சந்திர யோகம், மந்திர யோகம் ஆகியவற்றை நல்ல தமிழில் நாட்டுக்கு உரைத்தவர் திருமூலரே என்பதை அறியமுடிகிறது.

இத்தகைய யோகப் பயிற்சியைப் பெற விரும்புவோர், தீய ஒழுக்கங்களைக் கைவிட்டு, நல்ல ஒழுக்கங்களைப் பின்பற்ற வேண்டும் என்பதைத் திருமூலர் உணர்த்துமாறு பெறப்படுகிறது.

கரு உருவாகும் முறை, ஆண் குழந்தை மற்றும் பெண் குழந்தை

பிறப்பதற்கான காரணம், பிறக்கும் குழந்தை ஊனத்தோடு பிறப்பதற்கான காரணம் முதலான மகப்பேறு மருத்துவத்திற்கு உரிய நுட்பமான கருத்துகளை எடுத்துரைத்தவர் திருமூலரே என்பதை அறிய முடிகிறது.

இறப்பைத் தவிர்க்கும் இனிய மருந்து பிராணாயாமம் என்பதையும் 'பெண் மயல் கெட்டால் பேரட்டுச் சித்தியாம்' என்பன போன்ற உயர் நெறிகளை உணர்த்தியவர் திருமூலரே என்பதையும் அறிய முடிகிறது.

திருமூலர், அரசன் கடைப்பிடிக்க வேண்டிய தனிப்பட்ட நெறிகளையும், நாட்டை ஆளுவதில் பின்பற்ற வேண்டிய பொதுநெறிகளையும் கூறுமாறு உணர முடிகின்றது.

இல்லறத்தார்க்கும் துறவறத்தார்க்கும் உரிய நெறிகளை விதந்தோதிய பெருமைக்குரியவர் திருமூலர் என்பதை அறிகிறோம்.

சிவ வழிபாடு, சக்தி வழிபாடு, திருவம்பலச் சக்கர வழிபாடு, உமாகாந்தன் வழிபாடு, இராஜேஸ்வரி வழிபாடு, வயிரவி வழிபாடு, வயிரவச் சக்கர வழிபாடு, சாம்பவி மண்டலச் சக்கர வழிபாடு, புவனாபதிச் சக்கர வழிபாடு, நவாக்கரிச் சக்கர வழிபாடு ஆகிய வழிபாட்டு முறைகளைத் திருமூலர் கூறுமாறு அறிய முடிகிறது.

அன்புநெறி, ஆசையை விடுதல், அகந்தையை ஒழித்தல், களவு செய்யாமை, கொல்லாமை, உயிர்ப்பலி வெறுத்தல், மலையான பாதகங்களாகிய கொலை, களவு, காமம், கள், பிறன்மனை விரும்புதல் ஆகியவற்றிலிருந்து விடுபடுதல், பரத்தையர் தொடர்பு விலக்குதல் முதலான தீய ஒழுக்கங்களை நீக்கி வாழவேண்டும் என்பதை திருமூலர் உணர்த்துமாறு உணருகின்றோம்.

இன்சொல் பேசுதல், ஈகை செய்தல், எளிய அறச் செயல்களை மேற்கொள்ளுதல், கல்வி கற்றல், கேள்வியறிவு பெறுதல், நடுவுநிலைமை

பிறழாமல் இருத்தல், பெரியாரைத் துணைக்கொள்ளுதல், வாய்மை பேணுதல், புறங்கூறாதிருத்தல், பொறையுடைமை பேணுதல் இன்ன பிற வாழ்வியல் நெறிகளையும் திருமூலர் எடுத்துக்கூறுகிறார் என்பதை அறிகிறோம். அடுத்து, இந்த ஆய்வின் பயன்பாடுகள் பற்றிக் காண்போம்.

6. ஆய்வின் பயன்பாடுகள்

மனித ஆற்றல் மாபெரும் ஆற்றல். ஒவ்வொரு மனிதனுக்கு உள்ளும் ஆற்றல்கள் பல புதைந்து கிடக்கின்றன. அத்தகைய ஆற்றலை அகழ்ந்து எடுப்பதே கல்வியின் தலையாய நோக்கம் என்பதை உணர்ந்த இக்காலக் கல்வியாளர்கள் கல்வித் துறையை, மனிதவள மேம்பாட்டுத் துறை எனப் பிரகடனப்படுத்திச் செயல்படுத்தி வருகின்றார்கள். இத்தகைய மனித ஆற்றல், மாபெரும் ஆற்றல் என்பதைச் சமுதாயத்திற்கு உணர்த்திய பேரறிவாளர்கள் சித்தர்கள் என்பதை அறிந்து சித்தர் கல்வியை ஏற்றுக் கொள்ளுதல்.

சித்தர்கள், தம் சித்தத்தைச் சிவன்பால் வைத்ததோடு, உலக ஜீவன்கள்பாலும் வைத்து வாழ்வியல் நெறிகளை வகுத்துச் சொன்ன சமுதாயப் பற்றாளர்கள் என்பதை அறிதல்; அவர் நெறிநிற்றல்.

மனித உடலில் 72 ஆயிரம் நாடிகள் உள்ளன. மனிதர்களை வாட்டும் நோய் நொடிகளும் அத்தனை உள்ளன. அந்நோய்களை நீக்க வல்ல ஒரே மருத்துவம், சித்த மருத்துவம் என்பதை உணர்த்திய மாமேதைகள் சித்தர்கள் என்பதைப் புரிந்துகொள்ளுதல். அதனை மேற்கொள்ள முனைதல்.

உயிர்ப் பறவையின் கூடாகவும் உணர்வுகளின் வீடாகவும் விளங்கும் உடலை, ஊறு வாராமல் காத்துக்கொள்ள வேண்டும் என்பதற்காகப் பல இருக்கை முறைகளையும் அட்டாங்க யோகம் முதலான பல யோகங்களையும் உருவாக்கித் தந்த உயிர் வளர் கலைஞர்கள் சித்தர்களே என்பதைத் தெரிந்து கொள்ளுதல்.

சாகாக் கலை என்னும் வாழ்க்கைக் கலையை உலகோர்க்கு உணர்த்தியதோடு, தாமும் வாழ்ந்துகாட்டிய தவசீலர்கள் சித்தர்கள் என்பதை உணர்ந்தும், அந்த யோகநெறிகளைக் கைக்கொண்டும் வாழ்தல்.

இல்லறத்தார், துறவறத்தார் ஆகிய இருதிறத்தார்க்கும் வாழ்வியல் நெறிகளை வகுத்துரைத்த வாழ்வியல் ஆசான்கள், சித்தர்கள் என்பதை அறிந்து பின்பற்றுதல்.

உண்மையான பக்திக்கும் போலியான பக்திக்கும் வேறுபாடு உணர்த்திய ஆன்மிக ஞானிகள் சித்தர்களே என்பதை அறிந்து, அவர்தம் வழிநின்று ஒழுகுதல்.

உருவ வழிபாடு, ஆரவாரச் சடங்குகள், பொருந்தாத சம்பிரதாயங்கள், மூடநம்பிக்கைகள் முதலானவற்றை எடுத்துக்காட்டி, பக்தி நெறியில் புத்தொளி பாய்ச்சிய புரட்சிப் பக்தியாளர்கள் சித்தர்கள் என்பதை உணர்ந்து தெளிதல்.

வான்வெளிச் செல்லுதல், கூடு விட்டுக் கூடு பாய்தல், செம்பைப் பொன்னாக்குதல் முதலான சித்து விளையாட்டுகளைச் செய்து, அவற்றின் மூலம் மக்களை ஈர்த்து, ஒழுக்க நெறிகளையும் உடலோம்பும் முறைகளையும் மக்களுக்குக் கற்றுக் கொடுத்த உளவியல் நிபுணர்கள் சித்தர்கள் என்பதை உணர்ந்து, அவர்தம் நெறிகளை மேற்கொள்ளுதல்.

செம்பு காணப்படும் மூலிகைகளைக் கண்டறிந்தும், செம்பைப் பொன்னாக்கும் வேதியியல் விஞ்ஞானத்தை அறிந்தும் கூறிய விஞ்ஞானிகள், சித்தர்கள் என்பதை அறிந்து கொள்ளுதல்.

'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்பதை உணர்ந்து, சாதி சமயச் சண்டைகளைத் தவிர்த்து ஒருமைப்பாடுடன் வாழ முற்படுதல்.

'நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்னும் பொதுநோக்குப் பெற்று உயர்தல்.

எளிய அறச் செயல்களை அறிந்து பின்பற்றுதலும், இன்சொல் பேசுதலும் அறமெனக் கைக்கொள்ளுதல்.

மக்களுக்குச் செய்யும் தொண்டே இறைவனுக்குச் செய்யும் தொண்டு என்பதை உணர்ந்து, சமுதாயத் தொண்டாற்றும் மனப்பான்மையை வளர்த்துக் கொள்ளுதல்.

ஒழுக்க நெறியே உடலையும் உயிரையும் ஓம்பும் நெறி என்பதை அறிந்து பின்பற்றி ஒழுகி, வாழ்க்கையைச் செம்மையாக்கிக் கொள்ள இயலும்.

பகுத்தறிவு வழி நின்று பொய்யான சடங்குகளையும் போலியான சம்பிரதாயங்களையும் புறந்தள்ளி, உண்மையான பக்தி நெறியை உணர்தலும் பின்பற்றலும் இயலும்.

பட்டங்களால் பெறும் அறிவினைவிட பட்டறிவால் (அனுபவத்தினால்) பெறுகின்ற அறிவே உயர்ந்தது என்பதைச் சித்தர்கள் வாயிலாக உணர்ந்து பின்பற்றுதல் இயலும்.

சித்தர்கள் தத்துவம், சித்தர்கள் கல்வி நாட்டில் பரவினால், மக்களிடையே அன்பும் ஒற்றுமையும் வளரும்.

மக்கள் சமுதாயம் பிரிவினைவாதத்தைக் கைவிட்டு, எல்லாரும் ஒரே குலமாக, ஒரே இனமாக வாழ்கின்ற சமுதாயநெறி தழைக்கும்.

மக்கள் தம்மைத்தாமே உணர்ந்து, தன்னம்பிக்கையைப் பெருக்கிக்கொண்டு வாழ்ந்து வளம் பல பெறுவர்.

மனித நேயமும் சமத்துவமும் சகோதரத்துவமும் பெருகி, ஓர் உலகு என்னும் இன்றைய கோட்பாடு வெற்றி பெறச் சித்தர்கள் காட்டும் வாழ்வியல் கல்விக் கருத்துகள் பெரிதும் தேவை என்பதே இவ்வாய்வின் வெளிப்பாடும் பயன்பாடும் ஆகும்.

வாழ்வியல் கல்வித் தலைப்பினையொட்டி மேற்கொள்ளக்கூடிய ஆய்வுக்கான ஆலோசனைகள்:

1. வாழ்வியல் கல்வி திருமூலர் – திருவள்ளுவர் ஓர் ஒப்பாய்வு.
2. திருமந்திரமும் திருவருட்பாவும் வழங்கும் வாழ்வியல் கல்வி ஓர் ஒப்பீடு
3. பட்டினத்துச் சித்தரின் வாழ்வியல் கல்விக் கோட்பாடுகள்.

நூற்பட்டியல்

முதன்மை நூல்கள்

இராமச்சந்திரன், எஸ்.பி. (1999). *சித்தர்கள் வரலாறு.* சென்னை: தாமரை நூலகம்.

இராமநாத பிள்ளை, ப. (1972). (உரை) *திருமந்திரம் மூவாயிரம்.* (7ஆம் பதிப்பு), (இரண்டு தொகுதிகள்), சென்னை : சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.

இராமநாதன், அரு. (1959). (பதி) ***பதினெண்சித்தர் பெரிய ஞானக் கோவை என வழங்கும் சித்தர் பாடல்கள்.*** சென்னை : பிரேமா பிரசுரம்.

கோவேந்தன், த. (பதி) (1976). ***சித்தர் பாடல்கள்.*** சென்னை : பூம்புகார் பிரசுரம்.

வரதராஜன், ஜி. (1989). (உரை) *திருமந்திர விரிவுரை.* (இரண்டாம் பதிப்பு) (மூன்று தொகுதிகள்) சென்னை : பழனியப்பா பிரதர்ஸ்.

பதிப்பாசிரியர், (1995). ***சித்தர் பாடல்கள்.*** சென்னை : ஸ்ரீ செண்பகா வெளியீடு.

பிறநூல்கள்

அருணாசலக்கவுண்டர், கு. (1976). ***சித்தர் பாடலும் அவர்தம் தத்துவமும்.*** சென்னை : பூம்புகார் பிரசுரம்.

இரத்தின சபாபதி, வை. (2004). ***திருமூலர் திருமந்திரத்தில் அத்வைத வேதாந்தக் கொள்கை.*** சென்னை : ஆதிசங்கர அத்வைத ஆய்வுமையமலர்.

இராசாராம், சொ.சி. (1989). *வள்ளுவரும் வாழ்வியலும்.* மதுரை : திருவள்ளுவர் பதிப்பகம்.

இராசாராம், துரை. (2000). *திருமூலர் வாழ்வும் வாக்கும்.* சென்னை : நர்மதா பதிப்பகம்.

இராமகிருட்டினன், ந.புலவர். (2000). *திருமூலரின் சிவானந்த சிந்தனைகள்.* சென்னை : மணிவாசகர் பதிப்பகம்.

இராமகிருட்டினன், ந.புலவர். (2004). *திருமூலரும் சிவயோகமும்.* சென்னை : மணிவாசகர் பதிப்பகம்.

இராமலிங்க அடிகள். (2002). *மனுமுறை கண்ட வாசகம்,* சென்னை : மணிவாசகர் பதிப்பகம்.

இராமலிங்க அடிகள். (2002). *ஜீவகாருண்ய ஒழுக்கம்.* சென்னை : மணிவாசகர் பதிப்பகம்.

கண்ணகி கலைவேந்தன். (பதி) (2004). *தொல்காப்பியம் பொருளும் வாழ்வியலும்.* திருவையாறு : ஔவையார் கோட்டம்.

கருவூர் கன்னல். (1992). *வள்ளுவரின் வாழ்வியல் சிந்தனைகள்.* கருவூர் : தமிழ்ப்பாசறை வெளியீடு.

கலியபெருமாள், த.பி. (1986). *திருமந்திரம் காட்டும் கொள்கைகள்.* எம்.பில். ஆய்வேடு, சென்னைப் பல்கலைக்கழகம்.

கலியாண சுந்தரனார், திரு.வி. (1959). *தமிழ்ச்சோலை அல்லது கட்டுரைத் திரட்டு.* (இரண்டு தொகுதி), சென்னை : சாது அச்சுக்கூடம்.

கிருஷ்ணன், வேம்பத்தூர். (1999). *சத்தியச்சித்தர்.* சென்னை : அலங்கார் பப்ளிகேஷன்ஸ்.

குன்றக்குடி அடிகளார். (1975). *வானொலியில் தவத்திரு குன்றக்குடி அடிகளார்.* சென்னை : கலைவாணி புத்தகாலயம்.

கோமதி, இல. (1993). *சித்தர் பாடல்களில் சீர்திருத்தக் கருத்துகள்.* எம்.பில். ஆய்வேடு, சென்னைப் பல்கலைக்கழகம்.

கௌசல்யா விஜயன், ஜி. (1996). *திருமந்திரத்தில் வாழ்வியல் சிந்தனைகள்.* வேலூர் : விஜயன் பதிப்பகம்.

கௌசல்யா விஜயன், ஜி. (1998). *திருமந்திர வாழ்க்கை.* வேலூர் : விஜயன் பதிப்பகம்.

சாரங்கபாணி, ஏ.ஆர். (1996). *சித்தநெறி. (இரண்டு பாகம்).* சென்னை : மணிவாசகர் பதிப்பகம்.

சாரங்கபாணி, இரா. (2003). *சங்கத்தமிழ்வளம்.* சிதம்பரம் : மெய்யப்பன் பதிப்பகம்.

சிங்காரவேலுமுதலியார், ஆ. (1998). *அபிதான சிந்தாமணி.* சென்னை : ஏசியன் எடுகேசனல் சர்வீசஸ்.

சிதம்பரனார், சாமி. (1988). *சித்தர்கள் கண்ட விஞ்ஞான தத்துவம்.* சென்னை : சிவகாமி சிதம்பரனார், இலக்கிய நிலையம்.

சுத்தானந்த பாரதியார், யோகி. (2001). *திருமந்திர விளக்கம்.* சென்னை : மணிவாசகர் பதிப்பகம்.

சுப்பிரமணியன், நா. (2002). *திருமூலர் திருநெறி.* காரைக்குடி : பொன்முடி பதிப்பகம்.

சுவாமிநாதன், ப. (2002). *திருமந்திரம் காட்டும் வாழ்வியல் நெறிகள்.* திருவாவடுதுறை : திருஆவடு துறை ஆதீன வெளியீடு.

செயப்பிரகாசு நாராயணன், புது. (1994). *சித்தக்கலை.* கோலாலம்பூர்–மலேசியா : மூன்றாம் உலகத் தமிழர் மாநாட்டு மலர்.

தம்மண்ண செட்டியார், என்.சி. (2003). *திருமூலர் திருமந்திரத்தில் மந்திர யந்திர ஞானயோகங்கள்.* சென்னை : நர்மதா பதிப்பகம்.

தெய்வநாயகம், சி.கோ. (2003). *சித்தர் சிந்தனைகள்.* சென்னை : மணிவாசகர் பதிப்பகம்.

தேவநாத சுவாமிகள், ஸ்ரீ. (1998). *பதினெட்டுச் சித்தர்களின் வாழ்வும் வாக்கும்.* சென்னை : நர்மதா பதிப்பகம்.

பதிப்பாசிரியர். (1949). *சீவக சிந்தாமணி.* (5 ஆம் பதிப்பு), சென்னை : கபீர் அச்சுக் கூடம்.

பதிப்பாசிரியர். (1956). *நற்றிணை.* சென்னை : சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.

பதிப்பாசிரியர். (1962). *திருமந்திரக் கட்டுரை. (கர்ப்பக்கிரியை).* திருவாவடுதுறை: திருவாவடுதுறை ஆதீனவெளியீடு.

பதிப்பாசிரியர். (1963). *திருநாவுக்கரசு நாயனார் தேவாரத் திருப்பதிகங்கள்.* தருமபுரம் : தருமபுர ஆதீன வெளியீடு.

பதிப்பாசிரியர். (1964). *திருமந்திர மாநாட்டு மலர்.* திருவாவடுதுறை : திருவாவடுதுறை ஆதீனவெளியீடு.

பதிப்பாசிரியர். (1965). *குமரேச சதகம்.* சென்னை : சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.

பதிப்பாசிரியர். (1965). *குறுந்தொகை*------------

பதிப்பாசிரியர். (1965). *யசோதர காவியம்.* (2 ஆம் பதிப்பு), தூத்துக்குடி : முருகன் இலக்கியக் கழகம்.

பதிப்பாசிரியர். (1967). *தொல்காப்பியம்.* சென்னை : சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.

பதிப்பாசிரியர். (1969). *கலித்தொகை*------------

பதிப்பாசிரியர். (1969). *சிலப்பதிகாரம்*------------

பதிப்பாசிரியர். (1969). *மணிமேகலை*------------

பதிப்பாசிரியர். (1973). *திருக்குறள்.* ------------

பதிப்பாசிரியர். (1976). *கம்பராமாயணம்.* சென்னை : கம்பன் கழகம்.

பதிப்பாசிரியர். (1981). *பாரதியார் கவிதைகள்.* சென்னை : வானதி பதிப்பகம்.

பதிப்பாசிரியர். (1992). *தாயுமானவர் பாடல்கள்.* சென்னை : மணிவாசகர் பதிப்பகம்.

பதிப்பாசிரியர். (1994). *திருவாசகம் தெளிவுரை.* சென்னை : சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.

பதிப்பாசிரியர். (1995). *தமிழ் நீதிச் செல்வம்.* சென்னை : சாந்தா பதிப்பகம்.

பதிப்பாசிரியர். (1996). *புறநானூறு.*
சென்னை : சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.

பதிப்பாசிரியர். (1998). *குண்டலகேசி.*
சென்னை : வர்த்தமானன் பதிப்பகம்.

பதிப்பாசிரியர். (1998). *வளையாபதி------------*

பாரதி, செ. (1989). *பட்டினத்தார் பாடல்களில் வாழ்வியல் கருத்துகள்.*
எம்.பில். ஆய்வேடு,
சென்னைப் பல்கலைக்கழகம்.

மயில்வாகனன் சிதம்பரம். (2001). *பெரிய புராணம் சமூகப் பார்வை.*
(2 தொகுதி)
சிதம்பரம் : மெய்யப்பன் பதிப்பகம்.

மாணிக்கவாசகம், இரா. (1982). *நம்நாட்டுச் சித்தர்கள்.*
சென்னை : அன்னை அபிராமி பதிப்பகம்.

மாணிக்கவாசகம், இரா. (1982). *திருமந்திர ஆராய்ச்சி.*
சென்னை : அன்னை அபிராமி பதிப்பகம்.

மெய்யப்பன். (பதி) (1999). *சித்தர் தத்துவம்.*
சென்னை : மணிவாசகர் பதிப்பகம்.

வரதராசன், மு.வ., (1979). *திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம்.*
சென்னை : தாயக வெளியீடு.

வசந்தா, இரா. (1986). *சிவவாக்கியர் பாடல்கள்–ஓர் ஆய்வு.*
எம்.பில். ஆய்வேடு,
சென்னைப் பல்கலைக்கழகம்.

விசுவநாதம், கி.ஆ.பெ. (1980). *குறள் காட்டும் வாழ்வு.* தமிழ்நாடு, மதுரை : ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டு மலர்.

விவேகானந்தர். (1996). *கீதை சொல்லும் பாதை.* சென்னை : ஸ்ரீ இராமகிருஷ்ணா மடம் வெளியீடு.

வேலுச்சாமி, க. (1980). *"திருமந்திரம் காட்டும் சைவசித்தாந்தம்".* ஆய்வுக்கோவை – 12. (பக். 207–312).

சித்தர்கள் காட்டும் வாழ்வியல் கல்வி
திருமூலர் ஒரு சிறப்பு நோக்கு

இந்த ஆய்வேடு,
சென்னைப் பல்கலைக்கழகக் கல்வியியல் துறையின்
முனைவர் பட்டத்திற்காகச் சமர்ப்பிக்கப்படுகிறது

ஆய்வாளர்
இ.கோமதிநாயகம், எம்.ஏ., எம்.எட்.

நெறியாளர்
முனைவர் து. குமரன், எம்.ஏ., எம்.எட்., பிஎச்.டி.,
பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர்

கல்வியியல் துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை – 600 005
ஏப்ரல் 2005

இயல் ஏழு

தொகுப்புரை

வாழ்வியல் கல்வி

உலகத்தில் பிறந்துள்ள உயிர்களுள் மனிதர்கள் மட்டுமே வாழும் உயிர்கள். பிற உயிர்கள் இயங்கும் உயிர்கள்.

மனித வாழ்வு இகவாழ்வு, பரவாழ்வு எனப்படும். இகவாழ்வினை இல்லறவாழ்வு, துறவற வாழ்வு என இருவகைப்படுத்துகிறோம். இல்லற வாழ்வினை அகவாழ்வு, புறவாழ்வு எனவும் பகுத்துக் காண்பது தமிழர் மரபு.

மனித குலம் மட்டுமே வாழ்வாங்கு வாழ்வது. 'வாழ்வாங்கு வாழ்தல்' என்றால் 'நீண்டகாலம் உயிரோடு இருப்பது' என்பதாகாது. 'வாழவேண்டிய முறைப்படி வாழ்வது' என்பது பொருளாகும்.

மனிதர் மட்டுமே முறைப்படி வாழ்வதற்கு உரியவர். இப்படித்தான் வாழவேண்டும் என்ற வரையறை வகுத்துக்கொண்டு வாழவேண்டியவர். அந்த வரையறையை / இலக்கணத்தை / நெறிமுறையை 'வாழ்வியல் நெறி' என்றும் சுட்டுகிறோம். எப்படியும் வாழலாம் என்பது விலங்கு வாழ்க்கை.

சமயப் பனுவல்கள், புராண இலக்கியங்கள், காப்பியங்கள் இன்ன பிற நூல்கள் மனிதகுலத்தை இன்புறுத்துவதோடு வாழ்வியல் நெறிகளை அறிவுறுத்தவும் செய்கின்றன.

இறையுணர்வு, மனிதநேயம், சகிப்புத்தன்மை, ஒருமையுணர்வு, ஒழுக்க வாழ்வு, தன்னலமறுப்பு, பொதுநல வேட்கை, அன்பு நெறி நிற்றல்,

இன்சொல் பகர்தல், உடலையும் உள்ளத்தையும் கெடுத்துக் கொள்ளும் தீய பழக்க வழக்கங்கள் இன்மை, சாதி சமய மொழி இன வேறுபாடுகளின்றி வாழ்தல், எவ்வுயிரையும் தம்முயிர்போல் எண்ணி இரங்குதல், இயன்றவரை ஒருவருக்கொருவர் உதவி செய்தல் மற்றும், சினம், களவு, சூது, ஏமாற்று, காமம் முதலான தீய பண்புகளிலிருந்து விடுபடுதல் போன்ற வாழ்வியல் நெறிகள் மாந்தர் கடைப்பிடித்து ஒழுகத்தக்கவை.

இத்தகு வாழ்வியல் நெறிகளை மனிதரைச் சூழ்ந்துள்ள இயற்கைப் பொருள்கள்கூட எடுத்து இயம்புவதாகக் கொள்ளலாம். சான்றாக, பூமித்தாய் பொறுமையைக் கற்பிக்கிறாள். காற்று, யாவரோடும் கலந்து பழகும் பண்பினைக் கற்பிக்கிறது. நீரானது விடாமுயற்சியைக் கற்பிக்கிறது. நெருப்பானது, தீய எண்ணங்களைச் சுட்டுப் பொசுக்கும் பண்பினைக் கற்பிக்கிறது. இவ்வாறு கூறிக்கொண்டே செல்லலாம்.

இத்தகு வாழ்வியல் நெறிப்படி வாழ்ந்து, பிறருக்கு உணர்த்திய சான்றோர்களும் இவ்வுலகத்தில் உள்ளனர்; வாழ்வியல் நெறிகளைத் தம் படைப்புகள் மூலம் வழங்கியவர்களும் உள்ளனர்.

சமயப் பனுவல்கள் அறவாழ்வினை முறைப்படுத்துகின்றன. இதனைப்பற்றிய, குன்றக்குடி அடிகளாரின் கீழ்க்காணும் கருத்துகள் சிந்திக்கத்தக்கன.

‘‘வாழ்வாங்கு வாழ்வதென்றால் என்ன? முறையாக உண்டு, உடுத்து வாழ்வதா? இல்லை! வாழ்க்கையின் குறிக்கோளை அடைகிற வழியில் பயனுடைய வாழ்க்கை வாழ்தலே வாழ்வாங்கு வாழ்தல். வாழ்க்கையைப் பொருளொடு கூட்டி, அறத்தொடு அணைத்து, இன்பத்தொடு இணைத்துப் பின்னர், விலகி, வீடுபெறும் வழிநின்று வாழ்வதே முறையான வாழ்க்கை என்னும் வாழ்வியல் கோட்பாட்டை வழங்குவன சமயப் பனுவல்கள் ஆகும்’’

தொல்காப்பியர், திருவள்ளுவப் பெருந்தகை முதலானோர் வாழ்வியல் நெறிகளை வளம்பட உரைத்துள்ளனர்.

வாழ்வியல் நெறிகளை வடித்தெடுத்து வழங்குபவர்களுள் சித்தர்பெருமக்களும் சிறப்பிடம் பெறுகின்றனர்.

மானுட ஆற்றல் மகத்தான ஆற்றல். அவ்வாற்றலை வளர்த்துக் கொள்வதற்கும் வாழ்வாங்கு வாழ்வதற்கும் வழிவகுக்கும் சித்தர்கள் காட்டும் வாழ்வியலும் சித்தர்களுள் தனிச்சிறப்பு வாய்ந்த திருமூலர் நெறிகளும் இந்த ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

சித்தர்கள் பற்றிய குறிப்பு

பார்வைக்குப் பித்தர்களைப் போலவும் பக்தர்களைப் போலவும் வாழ்ந்து மறைந்த சித்தர்கள் பலரும், வாழ்வியல் நெறிகளை வகுத்துரைத்துள்ளனர்.

இந்த ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட சித்தர்களின் வாழ்க்கை வரலாற்றுக் குறிப்பும் அவர்தம் வாழ்வியல் நெறிகளும் இங்கு வழங்கப்பெறுகின்றது.

சித்தர்களுள், 1. காலாங்கி நாதர் சீனநாட்டவர். இவர் அந்தரத்தில் சஞ்சரிக்கும் ஆற்றல் மிகு உடலைப் பெற்றவர். 2. போகர் தமிழகத்தில் பிறந்து சீனாவுக்குச் சென்றவர். இவரே சித்த மருத்துவத்தின் தந்தை எனப் போற்றப்படுபவர். 3. கொங்கணச் சித்தர் மூலிகைகளில் செம்பு உலோகம் இருப்பதைக் கண்டறிந்து கூறியவர். 4. கருவூர்ச் சித்தர் போகரின் சீடர். வேம்பின் பயனை இவர் பாடல்கள் சிறப்பித்துக் கூறுகின்றன. 5. இடைக்காட்டுச் சித்தர் சோதிட ஆராய்ச்சியில் வல்லவர். இவரும் போகரின் சீடர். இவர் பாடல்கள் சந்தநயம் மிக்கவை. 6. கமலமுனிச் சித்தர். இவர் தமிழ்நாட்டில் பிறந்து சீனாவுக்குச் சென்று வாழ்ந்தவர்.

7. சட்டை முனிச்சித்தர் சிங்கள நாட்டவர். இவர்பாடல்களில் மருத்துவம் மற்றும் வேதியியல் கருத்துகள் மிளிர்கின்றன. 8. பாம்பாட்டிச் சித்தர். இவர் குண்டலினி சக்தியைப் பாம்பாக உருவகம் செய்து பாடியவராதலால் பாம்பாட்டிச் சித்தர் எனப்பட்டவர். 9. பிண்ணாக்கீசர் அத்திமரப் பொந்தில் வசித்தவர். 'முப்பு சூத்திரம் 17' என்பது இவருடைய படைப்புகளுள் சிறந்தது. 10. குதம்பைச் சித்தர். இவர், குதம்பை என்னும் காதணியை இளமைக்காலத்தில் அணிந்திருந்தார். ஆதலால் குதம்பைச் சித்தர் என அழைக்கப்பட்டார். இவர், பெரிய தத்துவங்களை எளிமையாகப் பாடுவதில் வல்லவர். 11. கடுவெளிச் சித்தர், இவர் மனித உடலை மண்தோண்டியாக உருவகித்தவர். ஆன்மா கடைத்தேற வழிபல கூறியவர். 12. அகப்பேய்ச் சித்தர். இவர், மனத்தை அடக்கி ஆள வழி கூறியவர். இவர் பெயரே, 'மனமாகியபேயை வென்று சித்தியடைந்தவர்' என்ற பொருள்தருகிறது.

13. அழுகண் சித்தர் இவர், தம்மையும் ஊரையும் உலகையும் பார்த்து அழுதுகொண்டேயிருப்பார். ஆதலால் அழுகண் / அழுகணிச் சித்தர் எனப்படுகிறார். இவர் பாடல்கள் வேதாந்தப் புலம்பல்களாக உள்ளன. 14. குருராசச் சித்தர். இவர் திருமூலரின் சீடர். இவர், சித்தர்களின் இயல்புக்கு மாறாக எதனையும் மறைமொழி இன்றி வெளிப்படையாகப் பாடுபவர். இவர் திருமூலரின் நூல்களைப் பாதுகாத்தவர் என்பர். 15. புலிப்பாணிச் சித்தர். இவர் போகரின் சீடர். இவர் சோதிடத்திலும் மருத்துவத்திலும் வல்லவர். இவர் பழனிமுருகனின் திருவுருவச் சிலையை நவபாஷானத்தால் செய்ய உதவியவர் என்பர். 16. சிவவாக்கியர். இவர் பிறக்கும்போதே 'சிவசிவ' என ஒலித்துக்கொண்டே பிறந்தவராதலால் இப்பெயர் பெற்றார். அரியும் சிவனும் ஒன்றெனப் பாடியவர். இவர் சிந்தனைப்

புரட்சியாளர். 17. சுப்பிரமணிய சித்தர். இவரை முருகப்பெருமானின் அவதாரமென்பர். இவர் மகப்பேறு பற்றியும் பிறக்கும் குழந்தையின் எதிர்காலம் பற்றியும் கணித்துக் கூறுவதில் வல்லவர். 18. பட்டினத்துச் சித்தர். இவர் வேதாந்தியாக வாழ்ந்தவர். மனப்பிணி மருத்துவர் எனப் போற்றப்பட்டவர். செல்வம், யாக்கை, இளமை ஆகிய நிலையாமைகளைப் பாடித் தெளிவித்தவர்.

இவர்கள் வகுத்துக் காட்டும் வாழ்வியல் கல்வி மனித சமுதாயம் வாழ்வாங்கு வாழ வழிகாட்டுகின்றன.

சித்தர்கள் அனைவரும் மத சமரசத்தையே வலியுறுத்துகின்றார்கள். மூடநம்பிக்கைகளைப் பலமாகச் சாடும் அவர்களிடம் மத வெறுப்போ, அளவு கடந்த மத வெறியோ இல்லை.

மக்கள் அனைவரும் ஒழுக்கம் தவறாமல் வாழவேண்டும் என்பதை வலியுறுத்திப் பாடியிருக்கின்றார்கள். பொய், சூது, கொலை, குடி, பரத்தமை முதலியவற்றைத் தவறெனக் கண்டிக்கிறார்கள். கூடாவொழுக்கம் உடல்நோயை உண்டாக்கும்; நல்வாழ்வுக்கு உலை வைக்கும். கூடா ஒழுக்கத்தைத் தவிர்ப்பவர்களே யோகப் பயிற்சியில் வெற்றிபெற முடியும், உடல் வலிமையுடன் நீண்ட நாள் வாழ முடியும் என்பதை உணர்ந்து, நல்லொழுக்கத்தைப் போற்றுகின்றார்கள். தீயொழுக்கத்தைக் கண்டிக்கின்றார்கள்.

மக்களுக்குள் பேதம் இல்லை. அவர்களுக்குள் சாதி, மத, இன வேற்றுமை உண்டென்று கூறுவது தவறு. மனிதர்கள் எந்த நிறத்தில் இருந்தாலும், எந்த மொழியைப் பேசினாலும், எந்த நாட்டில் இருந்தாலும், அவர்கள் அனைவரும் ஒரே இனம். 'மக்கள் ஒரே இனம் என்பதே

பழந்தமிழர் கோட்பாடு' என்ற பேருண்மையைச் சித்தர் பாடல்கள் உணர்த்துகின்றன.

திருமூலர் வாழ்க்கைக் குறிப்பு

திருமூலர், சித்தர்களுள் முதல்வர்; முதன்மையானவர். அவர் ஒரு நிறைமொழிமாந்தர்.

என்னைநன் றாக இறைவன் படைத்தனன்
தன்னைநன் றாகத் தமிழ்செய்யு மாறே (திரு. மந். 152)

என்று தம்மை நன்றாக இறைவன் படைத்தது, தமிழ் செய்வதற்காகவே எனக் கூறிய முதற்பாவலர் திருமூலர்.

நான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் (திரு. மந். 147)

என்று மொழிந்த சமுதாயப் பெருநோக்குடைய தத்துவஞானி.

ஒன்றே குலமும் ஒருவனே தேவனும் (திரு. மந். 2066)

எனவும்,

அன்பே சிவம் (திரு. மந். 257)

எனவும் முழங்கிய பொதுநோக்குப் பெரும்புலவர்.

சக்கர வர்த்தி தவராச யோகிஎனும்
மிக்கதிரு மூலன்அருள் மேவுநாள் எந்நாளோ

(தாயு. அடியார் வணக்கம். கண்ணி. 7)

எனத் தாயுமானவத் தயாபரர் பாராட்டிய 'தவராச யோகி' திருமூலர்.

மூவாயிரம் ஆண்டுகள் வாழ்ந்து, ஆண்டுக்கு ஒன்றாக மூவாயிரம் பாடல்களைத் திருமந்திர நூலாகத் தந்த அற்புத முனிவர் திருமூலர்.

'நந்தி' என்று சுட்டப்பெறும் சிவபெருமானின் அருள்பெற்ற சிவகணங்களின் ஒப்பாக வைத்துப் போற்றப்பெறுபவர்.

கயிலாயத்தில் நம்பிரான் சுந்தரர் என்ற பெயரோடு விளங்கியவர். பூலோகத்தில் வந்து அகத்தியர்பால் நட்புக் கொண்டவர் திருமூலர்.

இனி, திருமூலர் வரலாறு பற்றிப் பெரியபுராணம் கூறுமாறு காண்போம்.

திருக்கயிலாயத்தில் நந்தியெம் பெருமான் திருவருள் பெற்ற சிவயோகிகளுள் ஒருவர், அணிமா முதலிய அட்டமா சித்திகளில் வல்லவராக இருந்தார். அவர்தம் பெயரைச் 'சுந்தரன்' என்றும், 'சுந்தரநாதன்' என்றும் பின்னுள்ளோர் குறிப்பிட்டுள்ளனர். அவருக்கு அகத்தியருடன் தங்கியிருக்க வேண்டும் என்ற வேட்கை உண்டாயிற்று. திருக்கயிலையிலிருந்து பூவுலகில் உள்ள பொதிகை மலைக்குப் புறப்பட்ட அவர், திருக்கேதாரம் முதலிய பல தலங்களை வணங்கிக்கொண்டு திருவாவடுதுறைக்கு வருகிறார்.

திருவாவடுதுறையிலிருந்து புறப்பட்டபோது, காவிரிக் கரையில் உள்ள ஒரு பசுங்காட்டிலே, பசுக்கள் புலம்பிக் கொண்டிருந்தன. அவைகளை மேய்த்து வந்த 'மூலன்' என்னும் இடையன், இறந்துவிட்டதுதான் அப்பசுக்களின் அழுகைக்குக் காரணம். பசுக்களின் அழுகையானது சிவயோகியாரின் நெஞ்சைக் கரைத்தது. பசுக்களின் துயரை நீக்க வேண்டும் என்ற கருணையால், தமக்குத் தெரிந்த கூடுவிட்டுக் கூடு பாயும் சக்தியால், தம் உடலை ஓரிடத்தில் பாதுகாப்பாக வைத்துவிட்டு, மூலன் உடம்பில் புகுந்து திருமூலராய் எழுந்தார். பசுக்கள் அழுகை தவிர்த்தன.

மாலைப்பொழுது வந்ததும் பசுக்களைச் சாத்தனூரிலுள்ள வீடுகளில் முறையாகச் சேர்ப்பித்தார். மூலன் என்ற இடையனின் மனைவி, மூலன் உடலில் இருந்த சிவயோகியாரைத் தன்னுடைய கணவன் என நினைத்து,

வீட்டுக்கு வருமாறு அழைத்தாள். தமக்கும் அவளுக்கும் எந்தவிதச் சம்பந்தமும் இல்லை என்று உறுதிப்படுத்திய திருமூலர், அன்றிரவு ஒரு பொதுமடத்தில் தங்கினார்.

மறுநாட் காலையில், இடையன் மனைவிக்கும் ஊர் மக்களுக்கும் உண்மையை உணர்த்தி, தாம் பாதுகாப்பாக வைத்துவிட்டு வந்த தம் உடலைத் தேடினார்; அது கிடைக்கவில்லை. 'சிவாகமங்களின் உண்மைப் பொருளைத் தம் வாயிலாகத் தமிழில் வெளியிட வேண்டி, தம்உடலை மறைத்தது சிவபிரான் திருவருள்' என்பதை ஞான உணர்வினால் திருமூலர் தெளியலானார். அதன் பின்னர் திருவாவடுதுறையில் தங்கி, திருமந்திரத்தை அருளினார்; சிவத்தலங்கள் பல கண்டு வழிபட்டு, இறுதியில் சிதம்பரத்தில் சமாதியானார்.

திருமூலர் அருளிய திருமந்திரம், சைவத் திருமுறைகள் பன்னிரண்டனுள், பத்தாம் திருமுறையாக வைத்துப் போற்றப்பெறுகின்றது. திருமந்திரமானது, 'தமிழ் மூவாயிரம்', 'திருமந்திர மாலை', 'தமிழ் மந்திரம்', 'சுந்தர ஆகமம்' என்ற பெயர்களாலும் சுட்டப்பெறுகிறது.

திருமந்திரம் முப்பது உபதேசம், முந்நூறு மந்திரம், மூவாயிரம் தமிழ்ப் பாக்களைக் கொண்டு விளங்குகிறது.

இந்நூல் பாயிரம் என்னும் தனிப் பகுதியையும் முதல் தந்திரம், இரண்டாம் தந்திரம், மூன்றாம் தந்திரம், நான்காம் தந்திரம், ஐந்தாம் தந்திரம், ஆறாம் தந்திரம், ஏழாம் தந்திரம், எட்டாம் தந்திரம், ஒன்பதாம் தந்திரம் என்று ஒன்பது பிரிவுகளையும் கொண்டுள்ளது.

2. ஆய்வின் முக்கியத்துவம்

உலகத்தில் தோன்றிய உயிர்களுள், மக்கள் மட்டுமே வாழும் உயிர்கள்; பிறவெல்லாம் இயங்கும் உயிர்கள். வாழப்பிறந்த மக்கள்,

வாழ்வாங்கு வாழ நெறிகள் பல உள்ளன. அத்தகு நெறிகளையே 'வாழும் நெறிகள்' அல்லது 'வாழ்க்கைக் கல்வி' எனச் சுட்டுகிறோம். இத்தகைய வாழ்க்கைக் கல்வியைச் சான்றோர் பலர் வகுத்துக் காட்டியுள்ளனர்.

வாழ்வியல் நெறிகளை வகுத்துரைத்தோருள் சித்தர்களும் சிறப்பிடம் பெறுகின்றனர். மக்களாகப் பிறந்து, மக்கள் சக்தி மகத்தான சக்தி என மாநிலத்திற்கு அறிவுறுத்தி, மக்களின் மேம்பட்டவர்களாக வாழ்ந்தும் காட்டியவர்கள் சித்தர்கள். இத்தகைய சித்தர்கள் காட்டும் வாழ்வியல் நெறிகள், மக்களாகப் பிறந்த நமக்குப் பேருதவியாக இருக்கும் என்பதாலும் சித்தர்களுள் தனிச்சிறப்பு வாய்ந்த திருமூலர் அருளிய திருமந்திரத்தில் வாழ்வியல் நெறிகள் வளமாகக் கூறப்பெற்றிருப்பதாலும், அவற்றை, மக்கள் உணர்ந்து பின்பற்றவேண்டும் என்ற மகத்தான குறிக்கோளின் அடிப்படையில், 'சித்தர்கள் காட்டும் வாழ்வியல் கல்வி திருமூலர் ஒரு சிறப்பு நோக்கு' என்னும் தலைப்பில் ஆய்வு மேற்கொள்ளப் பெறுகிறது

இன்றைய தனிமனிதரும் சமுதாயமும் வாழ்க்கைப் போராட்டத்தில் சிக்கித் தவிக்கின்றனர். பொருள் தேடும் வேட்கையில் அறவுணர்வுகளைக் கைவிட்டுப் போட்டிகளால், பொறாமைகொண்டு, பொய்யும் ஏமாற்றும் மலிவாகப் பொங்கிப்பெருகும் சூழல் உள்ளது; பொது நலம் புறக்கணிக்கப்பட்டு, தன்னலம் தலைதூக்கி உள்ளது. அறச் செயல்களைக்கூட வணிக நோக்கில் காணும் அறவிலை வணிகர்கள் பெருகியுள்ளனர். உடல் நலத்தையும் உள நலத்தையும் கெடுத்துக் கொள்ளும் சிந்தனை, சொல், செயல் வெளிப்படும் சமூகச் சூழல் பெருகி உள்ளன.

பல தெய்வ வழிபாடு செய்தல், அதனால் பகையை வளர்த்துக் கொள்ளுதல், மூட நம்பிக்கைகளைக் கைக்கொள்ளுதல், போலிச்

சடங்குகள்பால் பற்றுக்கொள்ளுதல், தெய்வத்தின் பெயரால் உயிர்ப் பலியிடுதல், ஆடம்பரமாகப் பூசைகளையும் விழாக்களையும் மேற்கொள்ளுதல், சமயத்தின் பெயரால் சமுதாயக் கட்டுப்பாடுகளை ஏற்படுத்துதல், மக்களின் அறியாமையைப் பயன்படுத்திப் போலித்தனமான சின்னங்களையும் வேடங்களையும் காட்டி மயக்குதல், உருவ வழிபாடு மற்றும் பொருந்தாத விரதங்கள், பொய்யான சோதிடங்கள் முதலானவற்றை ஏற்றுப் பேணுதல், ஆன்மிக வழி நின்று அருளைப் பெருக்குவதற்குப் பதிலாகப் பொருள்தேடும் புன்மைப் போக்குகள் தலைதூக்க ஆரம்பித்துள்ளன.

மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை முதலான பல ஆசைகளுக்கு ஆட்பட்டுத் துன்புறுதல்; புகை, கஞ்சா, மது போன்ற தீய பழக்கங்களை மேற்கொண்டு உடல்நலத்தைக் கெடுத்துக் கொள்ளுதல்; அருந்துதலிலும் பொருந்துதலிலும் அளவுக்கு அதிகமாக ஈடுபட்டு நோய் நொடிகளைத் தேடிக் கொள்ளுதல்; நோய் வந்துற்றபின் போலியான மருத்துவர்களை நம்பிக் கவர்ச்சியான மருந்துகளைப் போற்றி இறப்பைத் தழுவுதல்; பொய், களவு, வஞ்சம், ஏமாற்று, அடுத்துக்கெடுத்தல், புறங்கூறல், பிறன்மனை இச்சை, பொருந்தாக் காமம் முதலான தனிமனித ஒழுக்கக் கேடுகளால் மனித மாண்பைத் தாழ்வுறச் செய்தல்; தன்னல விழைவு காரணமாகப் பொதுநலம் பேணாமை; மனித நேயத்தை வளர்க்காமை; மொழி, இனம், சாதி, செய்தொழில், சமயம் காரணமாகத் தனிமனித வேற்றுமைகளை வளர்த்துக் கொள்ளுதல்; அதனால் போரும் பூசலும் மேற்கொள்ளுதல், இன்னபிற குறைபாடுகளால் தனிமனித வாழ்க்கை தடுமாறிக் கொண்டிருக்கிறது.

தனிமனிதர் பலர் சேர்ந்ததுதான் ஒரு குடும்பம். பல குடும்பத்தின் கூட்டமைப்புதான் ஒரு சமுதாயம். எனவே, தனிமனிதரின் நடத்தைக் கோலங்கள், சமுதாயத்திற்கும் பொருந்தும். ஆயினும் ஒரு தவறான பழக்கமோ அல்லது நம்பிக்கையோ ஒரு சமுதாயத்தின் வலிமையால்

நடைமுறைப்படுத்தப்பட்டு, அதுவே வழக்கமாகவும் மரபாகவும் மாறிவிடும். அத்தகைய சமுதாயச் சீர்கேடுகள் பல இன்று நிலவி வருகின்றன. அவை, தெய்வம் பலப்பல சொல்லிப் பகைத் தீயை வளர்த்தல், சமயங்கள் கூறுகின்ற உண்மையான தத்துவங்களை அறியாமலிருத்தல், சடங்குகளும் சம்பிரதாயங்களுமே சமயநெறி எனப் போற்றுதல், மதத் தலைவர்களின் பெயராலும் வழிபாட்டுத் தலங்களின் பெயராலும் சமயச் சின்னங்களின் பெயராலும் பிணக்குகளை ஏற்படுத்திக் கொண்டு போராடுதல், சமயங்களின் பெயரால் ஆடம்பரமான விழாக்கள், விருந்துகள், கேளிக்கை நிகழ்ச்சிகள் ஆகியவற்றை நிகழ்த்துதல், அவற்றையும் பொருளீட்டும் ஒரு வணிக வாய்ப்பாகக் கருதிச் செயல்படுதல், நவீனம் என்ற பெயரில் உணவு நெறி, உடலோம்பும் நெறி, விருந்தோம்பும் பண்பு, சுற்றம் தழுவுதல், சகிப்புத்தன்மை முதலான நம் பாரம்பரியப் பண்பாட்டிற்கே உலைவைத்தல், கொல்லா நெறியும் பொய் சொல்லா நெறியும் மனித சமுதாயத்திற்கு மட்டுமே உரியன என்பதை மறந்து மயங்குதல், வாய்மையும் தூய்மையும் கொண்ட தொண்டு நெறியே தூயநெறி என்னும் மெய்ம்மையைப் புறந்தள்ளிப் பொதுத்தொண்டு என்ற பெயரில் தமது ஆசாபாசங்களுக்கு வழி வகுத்துக் கொள்ளுதல், நீதி, நேர்மை, நியாயம் போன்ற அறவுணர்வுகளுக்கு உரிய மாண்பினை நிலைகுலையச் செய்தல், ஆணாதிக்க உணர்வால் பெண்ணடிமை பேணல் முதலானவை சமுதாய வாழ்க்கைப் பிறழ்வுகளாகப் பெருகிக்கிடக்கின்றன.

இத்தகைய வாழ்க்கை நெறிப் பிறழ்வுகள் இல்லாமல், வாழ வேண்டிய முறைப்படி வாழ்ந்து வளம் பல பெற்றிட, வாழ்க்கைக் கல்வியைப் புகட்டும் இலக்கியங்கள் பல தமிழ்மொழியில் உள்ளன. அவற்றுள்

சித்தர்களும் சித்தர்களுள் முதன்மையானவருமான திருமூலரும் வழங்கியுள்ள வாழ்வியல் கல்விக் கருத்துகள் வருங்காலச் சமுதாயத்திற்கு வழிகாட்டுகின்றன. ஆதலின், 'சித்தர்கள் காட்டும் வாழ்வியல் கல்வி திருமூலர் ஒரு சிறப்பு நோக்கு' என்னும் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

3. ஆய்வின் நோக்கங்கள்

அ. பொதுநோக்கங்கள்

1. சாதி வெறி, சமய வெறி, இன வெறி, மொழி வெறிகளினால் இவ்வுலகில் ஏற்படும் பூசல்கள் நீங்கி ஒருமையுணர்வு தோன்ற, சித்தர்கள் கூறுவனவற்றை விளக்குதல்.

2. 'மக்களிடையே பிரிவினை பேசுதல், உண்மைக்கும் இயற்கைக்கும் மாறானது' என்ற சித்தர்கள் தத்துவம் நன்மை பயக்கும் என எடுத்துக் காட்டுதல்.

3. மதவெறுப்போ, அளவு கடந்த மதவெறியோ இல்லாது, மத சமரசத்தையே வலியுறுத்தும் சித்தர்கள் கோட்பாடு, இன்றைய உலகிற்குப் பெரிதும் தேவை என்பதை விளக்குதல்.

4. 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்', 'மனிதகுலம் மனித இனம் ஒன்றே' என்னும் உயரிய கோட்பாடுகள், உலகில் தழைக்கச் சித்தர்கள் காட்டும் வாழ்வியற் கல்வி, இளைய தலைமுறைக்குப் பெரிதும் தேவை என்பதை வலியுறுத்தல்.

5. இக்கால மனிதன் தன்னைப் பண்படுத்திக் கொள்ளப் பெரிதும் துணை செய்வன சித்தர் கல்விமுறைகள் என்பதனை இளந்தலை முறையினருக்கு எடுத்துக்காட்டுதல்.

6. உடம்பை வளர்க்கும் உபாயங்களைச் சித்தர் கல்வி கூறுமாறு விளக்குதல்.

7. வடமொழி–தென்மொழிச் சண்டையை நீக்கச் சித்தர் கல்வி உதவும் என்பதை உணர்த்துதல்.

8. இன்றைய மனிதகுலம் மாண்புற்றுத் திகழப் பெரிதும் துணை செய்வன சித்தர் கல்வி என்பதை எடுத்துக் காட்டுதல்.

9. உடலைக் காத்து உயிரை வளர்க்கும் உபாயங்களை அறிய சித்தர் கல்வி உதவும் என்பதை உணர்த்துதல்.

10. சித்தர்கள் மக்களாய்ப் பிறந்து, மனித நிலையிலிருந்தும் மேம்பட்டவர்கள் என்பதைத் தெரிவித்தல்.

11. சித்தர்கள் மருத்துவ அறிஞர்களாகவும் ஆன்மிகப் புரட்சியாளர்களாகவும் சமுதாயச் சீர்திருத்தவாதிகளாகவும் விளங்கியவர்கள் என்பதை எடுத்துக் காட்டுதல்.

12. பொய், சூது, குடி, கொலை, பரத்தமை முதலான தீய ஒழுக்கங்களை விடுத்து நல்லொழுக்கம் பேணவேண்டுமெனக் குரல் கொடுத்த சித்தர் நெறியை விளக்குதல்.

13. சித்தர்கள் கொள்கைகளும் தத்துவங்களும் நாட்டில் பரவினால் மக்களுக்குள் அன்பும் ஒற்றுமையும் ஓங்கும் என வலியுறுத்தல்.

14. சித்தர்கள் மனித ஆற்றலின் மகத்துவத்தை, மன்பதைக்கு உணர்த்தியவர்கள் என்பதை விளக்குதல்.

15. மனிதனின் அடுத்த பரிணாம வளர்ச்சியைக் கண்டவர்கள் சித்தர்கள் என்பதை எடுத்துக் காட்டுதல்.

16. ஓர் இனம், ஒரு மொழி, ஒரு மதம், ஒரு நாடு என்ற குறுகிய கண்ணோட்டமின்றி, மனிதகுலம் முழுமைக்கும் நன்மை தரும் கருத்துகளைத் தந்தவர்கள் சித்தர்கள் என்பதை விளக்குதல்.

17. சித்தர்கள் தாம் அறிந்திருந்த சாகாக் கலை, உடல் அழியாநிலை,

அண்ட வெளியில் சஞ்சரித்தல், இருந்த இடத்திலிருந்தே உலகத்தின் எந்த மூலையில் எது நடந்தாலும் அறிந்து கொள்ளும் ஆற்றல் முதலான சித்த ஆற்றல்களையும் அவற்றுக்கான பயிற்சிகளையும் இக்கால இளம் தலைமுறையினருக்கு விளக்குதல்.

18. உடலையும் உள்ளத்தையும் பேணும் நெறிகளுள் சுயகட்டுப்பாடே சிறந்த நெறி என்னும் சித்தர்கள் கல்வியை யாவருக்கும் எடுத்துக் காட்டுதல்.

19. சித்தர்கள் பின்பற்றிய உடலோம்பும் முறைகளைக் கையாண்டால், உடலை வச்சிரம்போல் ஆக்கிக்கொள்ளலாம் என்பதை உணர்த்துதல்.

20. இந்திய நாடு பல்வகை மரபினரையும் இனத்தவரையும், மதத்தவரையும் மொழியினரையும் கொண்ட நாடு. எனினும் வேற்றுமையில் ஒற்றுமை என்னும் ஒருமைப்பாட்டு உணர்வோடு ஒன்றுபட்டு நிற்கின்றது. இதுபோன்ற நாடுகளில் சமய ஒற்றுமை, வகுப்பு ஒற்றுமை, இன ஒற்றுமை, மொழி ஒற்றுமை போன்றவை மிகவும் இன்றியமையாதவையாகின்றன. இந்நிலையில் சித்தர்கள் காட்டும் நெறிகள், எவ்வாறெல்லாம் உதவியாக இருக்க முடியும் என்பதை ஆய்ந்து அறிவுறுத்துதல்.

ஆ. சிறப்பு நோக்கங்கள்

1. சித்தர்களுள் முதலாமவரும் முதன்மையானவரும் திருமூலர் ஆவார். ஆதலின் திருமூலர் காட்டும் வாழ்வியல் கல்வி சிறப்புடையது என விளக்குதல்.

2. திருமூலர், இல்வாழ்வில் கொள்ளத்தக்க நெறிகளையும், தள்ளத்தக்க செயல்களையும் எடுத்துக் கூறுவதால், அவருடைய நெறிகள் சிறப்புடையன என எடுத்துக் காட்டுதல்.

3. இல்லற மேன்மையோடு, துறவறச் சிறப்பையும் திருமூலர்

எடுத்துரைப்பதால், அக்கருத்துகளைச் சிறப்பாக எடுத்துரைத்தல்.

4. உலக இயக்கமும் மனித வாழ்க்கையும் ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்துள்ள தன்மைகளை, திருமந்திரம் கூறுகிறது என்பதை விளக்குதல்.

5. பக்தர்கள், ஞானிகள், அரசர்கள், அந்தணர்கள், வணிகர்கள், வேளாளர்கள், ஆத்திகர், நாத்திகர் முதலான பல திறப்பட்டவருக்கும் நல்வழி காட்டுவதால், திருமந்திரம் காட்டும் வாழ்வியல் கல்வி சிறப்புப் பெறுகிறது என விளக்குதல்.

6. 'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்', 'நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்', 'அன்பே சிவம்', 'நடமாடும் கோயில்களான மக்களுக்குச் செய்யும் தொண்டே படமாடும் கோயிலான பரமனுக்கு உவப்பாகும்' என்பன போன்ற உலகப் பொதுநோக்குச் சிந்தனைகளைத் தந்தவர் திருமூலர் என்பதைப் பறைசாற்றுதல்.

7. படைப்பின் நோக்கம் பிறருக்கு உதவுதல், எளிய அறச் செயல்களை மேற்கொள்ளுதல் முதலான மனித நேயக் கருத்துகளைத் திருமூலர் வலியுறுத்துகிறார் என்பதை உணர்த்துதல்.

8. கொல்லாமை, புலால் மறுத்தல், அவா அறுத்தல், புறங்கூறாமை, வாய்மை பேணுதல் முதலான அறவுணர்வுகளைத் திருமூலர் கூறுமாறு விளக்குதல்.

9. இல்லறத்தான் விலக்குவதற்குரிய பரத்தையர் தொடர்பு, பிறன்மனை நயத்தல் ஆகியவற்றைத் திருமூலர் எவ்வாறு கண்டிக்கிறார் என்பதை யாவர்க்கும் விளங்கவைத்தல்.

10. 'அகத்தவம்' எனப் போற்றப்படும் அட்டாங்க யோகங்களையும் அவற்றின் பயன்கள் மற்றும் செய்முறைகள் ஆகியவற்றையும், முதன்

முதலாகவும் சிறப்பாகவும் செந்தமிழில் கூறியவர் திருமூலர் என்பதைப் பறைசாற்றுதல்.

11. கேசரி யோகம், பரியங்க யோகம், அமுரிதாரணை, சந்திர யோகம், மந்திர யோகம் ஆகிய யோகங்கள் குறித்துத் திருமூலர் விளக்குமாறு எடுத்துரைத்தல்.

12. அட்டமா சித்திகள் பற்றியும் அவற்றை அடையும் மார்க்கங்கள் பற்றியும் திருமூலர் தருவனவற்றை இக்காலத்தவருக்கு எடுத்துக் கூறுதல்.

13. பிரம்மச்சரியம், கிரஹஸ்தம், வானப் பிரஸ்தம், துறவறம் என எந்நிலையில் இருப்போர்க்கும் ஏற்ற கருத்துகளைத் திருமூலர் கூறுமாறு எடுத்துரைத்தல்.

14. 'பிறவிக் கடலைக் கடக்க உதவிடும் பெருந்தெப்பம் திருமந்திரம்' என்பதை விளக்குதல்.

15. ஔவையாரின் கருத்தாகிய, 'திருக்குறள், நான்மறை, மூவர் தேவாரம், அகத்தியர் திரட்டு, மாணிக்கவாசகரின் திருக்கோவையார், திருவாசகம் ஆகியவற்றோடு ஒத்த சிறப்புடையது திருமந்திரம்' என்பதை மெய்ப்பித்தல்.

16. திருமந்திரம் வாழ்வியல் நூலாக மட்டுமல்லாமல் சிவமாய், சிவகதிக்கு வித்துமாய், அடியார்களுக்கு மேம்பட்ட பொருளுமாய் விளங்குகிறது என்பதை மெய்ப்பித்தல்.

17. இறைக்கோட்பாடு, உடலும் உடலோம்பலும், தனிமனித ஒழுகலாறுகள், சமுதாய ஒழுகலாறுகள் ஆகியவற்றைத் திருமூலர் கூறும் முறையில் விளக்குதல்.

18. திருமூலர் காட்டும் வாழ்வியல் கல்வியை, இக்கால இளையோர் அறிந்து பின்பற்ற வேண்டும் என்பதை வலியுறுத்தல்.

இத்தகைய சிறப்பு நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டும் இந்த ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது.

4. ஆய்வு முறை

இந்த ஆய்வு, வரலாற்று அடிப்படையில் சித்தர்கள் வரலாறு மற்றும் சித்தர் பாடல்களையும், குறிப்பாக, திருமூலர் பற்றியும் கிடைக்கப்பெற்றுள்ள பிரதிகளையும் படைப்புகளுக்கான உரை விளக்கங்களையும் துணையாகக் கொண்டு மேற்கொள்ளப்பெற்றுள்ளது.

5. ஆய்வு முடிவுகள்

ஒன்றே குலமும் ஒருவனே தேவனும் (திரு. மந். 2066)

சாதிகுலம் எங்கட் கில்லை (காக. பு. 66)

சாதியாவது ஏதடா? (சிவ. வா. 68)

ஆண்சாதி பெண்சாதி யாரும் இருசாதி
வீண்சாதி மற்றவெல்லாம் (குத. சி.137)

எனப் பலவாறு முழங்கியதன் மூலம் சமயவெறி, சாதிவெறி, இனவெறி முதலான ஒருமைப்பாட்டுக்கு உலை வைக்கும் கருத்துகளுக்குச் சித்தர்கள் முடிவுகட்டி இருக்கிறார்கள் என்பதை அறிகிறோம்.

நட்டகல்லும் பேசுமோ நாதன் உள்ளிருக்கையில்
(சிவ. வா. 496)

உளியிட்ட கற்சிலையில் உண்டோ உணர்ச்சி (பா. பா. சி. 92)

என்பன போன்ற கருத்துகளால் உருவ வழிபாட்டை வெறுத்தவர்கள் சித்தர்கள் என்பதை உணருகிறோம்.

கோபம், பொறாமை, கொடுஞ்சொல் வன்கோள்இவை
பாபத்துக் கேதுவடி (குத. சி. 87)

கள்ளங்கள் காமங்கள் கொலைகள் கபடங்கள்

பள்ளத்தில் தள்ளுமடி (குத. சி. 87)

சொல்லரும் சூதுபொய் மோசம் – செய்தால்
சுற்றத்தை முற்றாய்த் துடைத்திடும் நாசம் (கடு. சி. 2)

என்று கூறும் கருத்துகளால், மனித குலத்துக்குப் பெரிதும் தேவை இத்தகைய வாழ்வியல் நெறிகள் என்பதை உணர முடிகிறது.

கஞ்சா புகைகுடி யாதே – வெறி
காட்டி மயங்கியே கள்குடியாதே (கடு. சி. 29)

என்று கூறும் சித்தர் பாடல் மூலம், இக்கால இளந்தலைமுறையினர் தம்மைப் பண்படுத்திக் கொள்ள, சித்தர்கள் காட்டும் வாழ்வியல் கல்வி தேவை என்பதைக் காணமுடிகின்றது.

கொல்லா விரதம், குளிர்பசி நீக்குதல்
நல்ல விரதமடி (குத. சி. 128)

என்று கூறுவதன் மூலம், உண்மையான நோன்புக்கு இலக்கணம் என்ன என்பதை, இக்கால எக்குலத்தோரும் அறிந்துகொள்ள வாய்ப்பளிக்கிறது.

..... வேதபுரா ணங்காவ் யங்கள்,
மந்திரங்கள் கோடானு கோடி என்றும்
சொல்லுவார் கோவிலென்றும் தீர்த்தமென்றும்
திருடர்கள்தான் அலைந்தலைந்து திரிவார்

(காக. பு. 22)

என்று பாடி, புராணம், கோவில், தீர்த்தம், மந்திரம் ஆகியவற்றைச் சாடுவதன் மூலம், சித்தர்களின் பகுத்தறிவுக் கொள்கை வெளிப்படுகிறது.

'வேதியியலின் தந்தை' என்று சொல்லிப் பாராட்டும் அளவுக்குப் பெருமைபெற்ற போகர், மனிதனுடைய உடம்பிலுள்ள இரத்த அணுக்கள்,

தசைஅணுக்கள், எலும்பணுக்கள், நரம்பணுக்கள் எல்லாம் முதிர்ச்சியடையாமல் இருப்பதற்கான வழிகளைக் கண்டறிந்து கூறியுள்ளார் என்பதை இக்காலத்தோர் அறியமுடிகிறது.

'துத்தநாகத்தை ஈயமாக்கவும், ஈயத்தை வெள்ளியாக்கவும், வெள்ளியைச் செம்பாக்கவும், செம்பைத் தங்கமாக்கவும் செடி கொடிகளின் சத்தால் முடியும்' என்று சித்தர்கள் கூறுவது, இக்கால வேதியியலாளர்களின் கவனத்தை ஈர்க்க வல்லவை!'

சித்தராகிய கொங்கணவர் 'செங்கீரை, அவுரி, ஓரிதழ்த் தாமரை, சிறுகீரை முதலான பதினைந்து மூலிகைகளில் செம்பு இருக்கிறது' என்று கண்டு சொன்னவர் என்பதை அறியமுடிகிறது.

இக்கால வல்லரசுகள், காப்புரிமை கொள்ளத் துடிக்கும் வேம்பின் பயனை நூற்றுக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே உலகத்துக்குச் சொன்னவர் சித்தர் கருவூரார் ஆவார். 'வேம்பின் கொழுந்தைக் கிள்ளி, இருபத்தேழு நாள்கள் உண்டு வந்தால், உண்டவரைப் பாம்பு கடித்தால் விஷம் ஏறாது. ஒரு மாதம் தின்றுவந்தால் குஷ்டநோய்கூடப் பறந்தோடி விடும்' என்ற மருத்துவக் குறிப்புகள், சித்தர்கள் தரும் முத்தான கருத்துகளாகும் என்பதை உணருகிறோம்.

நாட்டில் பஞ்சம் வந்தால், ஆடு மாடு போன்ற விலங்கினங்களும் மக்களும் எப்படி உயிர் வாழலாம் என்பதைச் செய்முறைப்படுத்திக் காட்டியவர் இடைக்காடர் என்னும் சித்தராவார் என்பதை அறிய முடிகிறது.

எட்டி பழுத்தாலும் என்ன – காசு
ஈயாத லோபிகள் வாழ்ந்தாலும் என்ன

(கல். சி. 138)

என்பன போன்ற சித்தர் பாடல்களால் 'பிறருக்கு ஈந்து உவப்புக்கொள்ளாத கருமிகள் வாழ்ந்தாலும் பயனில்லை, இறந்தாலும் இழப்பு இல்லை' என்பன போன்ற வாழ்வியல் நெறிகளை உணருகிறோம்.

நெஞ்சு மலையாதே – அகப்பேய்
நீஒன்றும் சொல்லாதே (அக. சி. 1)

என்று பாடி 'மனஅடக்கமே துன்பம் போக்கும் உயரிய நெறி' என்பன போன்ற வாழ்வியல் கருத்துகள் சித்தர்களால் வெளிப்படுத்தப்படுகின்றன என்பதை உணர்ந்து கொள்கிறோம்.

சுந்தரானந்தச் சித்தர் என்பவர், மக்கள் பலரால் விரும்பப்படுகின்ற ஜாதகப் பலன்கள், இன்ன மாதம், இன்ன நாளில் பிறக்கும் குழந்தையின் சிறப்பியல்புகள் ஆகியவற்றைக் கூறுவதோடு, தென்னை, மா, பலா, வாழை, அவரை, துவரை, நெல், கரும்பு போன்ற பயிர்வகைகளைப் பயிர் செய்வதற்கான நாள் விவரங்களையும் மனையடி சாத்திரத்தையும் விளங்கக் கூறி, இக்கால மக்களின் வாழ்க்கை மேம்பாட்டிற்கு அன்றைக்கே வித்திட்டுள்ளார் என்பதை அறிகிறோம்.

'சட்டைமுனிச் சித்தர்' படைத்த நூல்கள், அவருடைய மனிதாபிமானத்தை வெளிப்படுத்துவனவாக உள்ளன. மனித குலம் மேம்பாடு அடைய வேண்டும் என்பதை நோக்கமாகக் கொண்ட அவருடைய நூல்களுள் 'சட்டைமுனி வாத காவியம்' என்பது, வேதியியல் அற்புதங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது. மருந்தை அரைப்பது, குகைகள் செய்து புடம்போடுவது, அளவற்ற ஆற்றலை உடைய ரச மணிகளை உருவாக்குவது, பல்வேறு சித்த மருந்துகளைச் செய்வது ஆகியவற்றையெல்லாம் சட்டைமுனிச் சித்தர், தம்முடைய நூல்களில் ஆழமாகவும் அகலமாகவும் கூறியுள்ளார் என்பதை உணருகிறோம்.

சித்தர்களுள் முதலாமவரும் முதன்மையானவருமான திருமூலர், 'அன்புதான் கடவுள்' என்பதை அகிலத்துக்கு உணர்த்தியவர் என்பதை அறிகிறோம்.

'நடமாடும் கோயிலாகிய மக்களுக்குச் செய்யும் தொண்டுதான் இறைவனுக்கு உவப்பைத் தரும்' என்னும் உயர்ந்த தத்துவத்தை உலகத்துக்கு எடுத்துரைத்தவர் திருமூலர் என்பதை உணருகிறோம்.

தெய்வம் பல என்று சொல்லிப் பகைத் தீயை வளர்ப்போருக்குக் கூறுவதுபோல் 'ஒருவனே தேவன்' என்று உரத்த குரலில் எடுத்து முழங்கியவர் திருமூலர் என்பதை விளங்கிக்கொள்ள முடிகிறது.

'உயிர் நிலைக்க உடம்பு வலுவோடும் பொலிவோடும் திகழ வேண்டும். அத்தகைய உடம்பில்தான் உண்மையான அறிவும் தோன்றும்' என்பதை உணர்ந்து, உடம்பை வளர்க்கும் உபாயங்களை உரைத்தவர் திருமூலர், என்பதை விளங்கிக்கொள்கிறோம்.

அட்டாங்க யோகம் என்னும் மிகச்சிறந்த யோகங்கள், அவற்றைச் செய்யும் முறைகள், அவற்றின் பயன்கள் ஆகியவற்றோடு கேசரி யோகம், பரியங்க யோகம், அமுரிதாரணை, சந்திர யோகம், மந்திர யோகம் ஆகியவற்றை நல்ல தமிழில் நாட்டுக்கு உரைத்தவர் திருமூலரே என்பதை அறியமுடிகிறது.

இத்தகைய யோகப் பயிற்சியைப் பெற விரும்புவோர், தீய ஒழுக்கங்களைக் கைவிட்டு, நல்ல ஒழுக்கங்களைப் பின்பற்ற வேண்டும் என்பதைத் திருமூலர் உணர்த்துமாறு பெறப்படுகிறது.

கரு உருவாகும் முறை, ஆண் குழந்தை மற்றும் பெண் குழந்தை

பிறப்பதற்கான காரணம், பிறக்கும் குழந்தை ஊனத்தோடு பிறப்பதற்கான காரணம் முதலான மகப்பேறு மருத்துவத்திற்கு உரிய நுட்பமான கருத்துகளை எடுத்துரைத்தவர் திருமூலரே என்பதை அறிய முடிகிறது.

இறப்பைத் தவிர்க்கும் இனிய மருந்து பிராணாயாமம் என்பதையும் 'பெண் மயல் கெட்டால் பேரட்டுச் சித்தியாம்' என்பன போன்ற உயர் நெறிகளை உணர்த்தியவர் திருமூலரே என்பதையும் அறிய முடிகிறது.

திருமூலர், அரசன் கடைப்பிடிக்க வேண்டிய தனிப்பட்ட நெறிகளையும், நாட்டை ஆளுவதில் பின்பற்ற வேண்டிய பொதுநெறிகளையும் கூறுமாறு உணர முடிகின்றது.

இல்லறத்தார்க்கும் துறவறத்தார்க்கும் உரிய நெறிகளை விதந்தோதிய பெருமைக்குரியவர் திருமூலர் என்பதை அறிகிறோம்.

சிவ வழிபாடு, சக்தி வழிபாடு, திருவம்பலச் சக்கர வழிபாடு, உமாகாந்தன் வழிபாடு, இராஜேஸ்வரி வழிபாடு, வயிரவி வழிபாடு, வயிரவச் சக்கர வழிபாடு, சாம்பவி மண்டலச் சக்கர வழிபாடு, புவனாபதிச் சக்கர வழிபாடு, நவாக்கரிச் சக்கர வழிபாடு ஆகிய வழிபாட்டு முறைகளைத் திருமூலர் கூறுமாறு அறிய முடிகிறது.

அன்புநெறி, ஆசையை விடுதல், அகந்தையை ஒழித்தல், களவு செய்யாமை, கொல்லாமை, உயிர்ப்பலி வெறுத்தல், மலையான பாதகங்களாகிய கொலை, களவு, காமம், கள், பிறன்மனை விரும்புதல் ஆகியவற்றிலிருந்து விடுபடுதல், பரத்தையர் தொடர்பு விலக்குதல் முதலான தீய ஒழுக்கங்களை நீக்கி வாழவேண்டும் என்பதை திருமூலர் உணர்த்துமாறு உணருகின்றோம்.

இன்சொல் பேசுதல், ஈகை செய்தல், எளிய அறச் செயல்களை மேற்கொள்ளுதல், கல்வி கற்றல், கேள்வியறிவு பெறுதல், நடுவுநிலைமை

பிறழாமல் இருத்தல், பெரியாரைத் துணைக்கொள்ளுதல், வாய்மை பேணுதல், புறங்கூறாதிருத்தல், பொறையுடைமை பேணுதல் இன்ன பிற வாழ்வியல் நெறிகளையும் திருமூலர் எடுத்துக்கூறுகிறார் என்பதை அறிகிறோம். அடுத்து, இந்த ஆய்வின் பயன்பாடுகள் பற்றிக் காண்போம்.

6. ஆய்வின் பயன்பாடுகள்

மனித ஆற்றல் மாபெரும் ஆற்றல். ஒவ்வொரு மனிதனுக்கு உள்ளும் ஆற்றல்கள் பல புதைந்து கிடக்கின்றன. அத்தகைய ஆற்றலை அகழ்ந்து எடுப்பதே கல்வியின் தலையாய நோக்கம் என்பதை உணர்ந்த இக்காலக் கல்வியாளர்கள் கல்வித் துறையை, மனிதவள மேம்பாட்டுத் துறை எனப் பிரகடனப்படுத்திச் செயல்படுத்தி வருகின்றார்கள். இத்தகைய மனித ஆற்றல், மாபெரும் ஆற்றல் என்பதைச் சமுதாயத்திற்கு உணர்த்திய பேரறிவாளர்கள் சித்தர்கள் என்பதை அறிந்து சித்தர் கல்வியை ஏற்றுக் கொள்ளுதல்.

சித்தர்கள், தம் சித்தத்தைச் சிவன்பால் வைத்ததோடு, உலக ஜீவன்கள்பாலும் வைத்து வாழ்வியல் நெறிகளை வகுத்துச் சொன்ன சமுதாயப் பற்றாளர்கள் என்பதை அறிதல்; அவர் நெறிநிற்றல்.

மனித உடலில் 72 ஆயிரம் நாடிகள் உள்ளன. மனிதர்களை வாட்டும் நோய் நொடிகளும் அத்தனை உள்ளன. அந்நோய்களை நீக்க வல்ல ஒரே மருத்துவம், சித்த மருத்துவம் என்பதை உணர்த்திய மாமேதைகள் சித்தர்கள் என்பதைப் புரிந்துகொள்ளுதல். அதனை மேற்கொள்ள முனைதல்.

உயிர்ப் பறவையின் கூடாகவும் உணர்வுகளின் வீடாகவும் விளங்கும் உடலை, ஊறு வாராமல் காத்துக்கொள்ள வேண்டும் என்பதற்காகப் பல இருக்கை முறைகளையும் அட்டாங்க யோகம் முதலான பல யோகங்களையும் உருவாக்கித் தந்த உயிர் வளர் கலைஞர்கள் சித்தர்களே என்பதைத் தெரிந்து கொள்ளுதல்.

சாகாக் கலை என்னும் வாழ்க்கைக் கலையை உலகோர்க்கு உணர்த்தியதோடு, தாமும் வாழ்ந்துகாட்டிய தவசீலர்கள் சித்தர்கள் என்பதை உணர்ந்தும், அந்த யோகநெறிகளைக் கைக்கொண்டும் வாழ்தல்.

இல்லறத்தார், துறவறத்தார் ஆகிய இருதிறத்தார்க்கும் வாழ்வியல் நெறிகளை வகுத்துரைத்த வாழ்வியல் ஆசான்கள், சித்தர்கள் என்பதை அறிந்து பின்பற்றுதல்.

உண்மையான பக்திக்கும் போலியான பக்திக்கும் வேறுபாடு உணர்த்திய ஆன்மிக ஞானிகள் சித்தர்களே என்பதை அறிந்து, அவர்தம் வழிநின்று ஒழுகுதல்.

உருவ வழிபாடு, ஆரவாரச் சடங்குகள், பொருந்தாத சம்பிரதாயங்கள், மூடநம்பிக்கைகள் முதலானவற்றை எடுத்துக்காட்டி, பக்தி நெறியில் புத்தொளி பாய்ச்சிய புரட்சிப் பக்தியாளர்கள் சித்தர்கள் என்பதை உணர்ந்து தெளிதல்.

வான்வெளிச் செல்லுதல், கூடு விட்டுக் கூடு பாய்தல், செம்பைப் பொன்னாக்குதல் முதலான சித்து விளையாட்டுகளைச் செய்து, அவற்றின் மூலம் மக்களை ஈர்த்து, ஒழுக்க நெறிகளையும் உடலோம்பும் முறைகளையும் மக்களுக்குக் கற்றுக் கொடுத்த உளவியல் நிபுணர்கள் சித்தர்கள் என்பதை உணர்ந்து, அவர்தம் நெறிகளை மேற்கொள்ளுதல்.

செம்பு காணப்படும் மூலிகைகளைக் கண்டறிந்தும், செம்பைப் பொன்னாக்கும் வேதியியல் விஞ்ஞானத்தை அறிந்தும் கூறிய விஞ்ஞானிகள், சித்தர்கள் என்பதை அறிந்து கொள்ளுதல்.

'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்பதை உணர்ந்து, சாதி சமயச் சண்டைகளைத் தவிர்த்து ஒருமைப்பாடுடன் வாழ முற்படுதல்.

'நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்னும் பொதுநோக்குப் பெற்று உயர்தல்.

எளிய அறச் செயல்களை அறிந்து பின்பற்றுதலும், இன்சொல் பேசுதலும் அறமெனக் கைக்கொள்ளுதல்.

மக்களுக்குச் செய்யும் தொண்டே இறைவனுக்குச் செய்யும் தொண்டு என்பதை உணர்ந்து, சமுதாயத் தொண்டாற்றும் மனப்பான்மையை வளர்த்துக் கொள்ளுதல்.

ஒழுக்க நெறியே உடலையும் உயிரையும் ஓம்பும் நெறி என்பதை அறிந்து பின்பற்றி ஒழுகி, வாழ்க்கையைச் செம்மையாக்கிக் கொள்ள இயலும்.

பகுத்தறிவு வழி நின்று பொய்யான சடங்குகளையும் போலியான சம்பிரதாயங்களையும் புறந்தள்ளி, உண்மையான பக்தி நெறியை உணர்தலும் பின்பற்றலும் இயலும்.

பட்டங்களால் பெறும் அறிவினைவிட பட்டறிவால் (அனுபவத்தினால்) பெறுகின்ற அறிவே உயர்ந்தது என்பதைச் சித்தர்கள் வாயிலாக உணர்ந்து பின்பற்றுதல் இயலும்.

சித்தர்கள் தத்துவம், சித்தர்கள் கல்வி நாட்டில் பரவினால், மக்களிடையே அன்பும் ஒற்றுமையும் வளரும்.

மக்கள் சமுதாயம் பிரிவினைவாதத்தைக் கைவிட்டு, எல்லாரும் ஒரே குலமாக, ஒரே இனமாக வாழ்கின்ற சமுதாயநெறி தழைக்கும்.

மக்கள் தம்மைத்தாமே உணர்ந்து, தன்னம்பிக்கையைப் பெருக்கிக்கொண்டு வாழ்ந்து வளம் பல பெறுவர்.

மனித நேயமும் சமத்துவமும் சகோதரத்துவமும் பெருகி, ஓர் உலகு என்னும் இன்றைய கோட்பாடு வெற்றி பெறச் சித்தர்கள் காட்டும் வாழ்வியல் கல்விக் கருத்துகள் பெரிதும் தேவை என்பதே இவ்வாய்வின் வெளிப்பாடும் பயன்பாடும் ஆகும்.

வாழ்வியல் கல்வித் தலைப்பினையொட்டி மேற்கொள்ளக்கூடிய ஆய்வுக்கான ஆலோசனைகள்:

1. வாழ்வியல் கல்வி திருமூலர் – திருவள்ளுவர் ஓர் ஒப்பாய்வு.
2. திருமந்திரமும் திருவருட்பாவும் வழங்கும் வாழ்வியல் கல்வி ஓர் ஒப்பீடு
3. பட்டினத்துச் சித்தரின் வாழ்வியல் கல்விக் கோட்பாடுகள்.